மண்டலம்-10ல், Tmt. T. Jayanthi அவர்கள் புதிய கதவு எண்.47, பழைய எண்.22, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600033 T.S.No.25/1, Block No.23, மாம்பலம் கிராமத்தில் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ல் PPA/WDCN10/02734/2022 நாள். 14.03.2022 ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக கோடம்பாக்கம் நெடுஞ்சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி கோடம்பாக்கம் நெடுஞ்சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தம் 23.51 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Tmt. T. Jayanthi அவர்கள் புதிய கதவு எண்.47, பழைய எண்.22, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை 600033 T.S.No.25/1, Block No.23, மாம்பலம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தம் 23.51 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN14/00333/2017*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *18.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.61 **பொருள் எண்.20**

தானப்பத்திரம் ரத்து

மண்டலம்-14ல் திரு. *R. Veeraraghavan and 2 others* மனை உட்பிரிவு வேண்டி திட்ட அனுமதி விண்ணப்பம் *SD/WDCN14/00333/2017* நாள் 18.07.2017ன்படி அளித்துள்ளார்கள். திட்ட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட இடம் சர்வே எண்.8/*E*, *9/K* ஆவணங்களின் படி சர்வே எண்.8/4 மற்றும் 9/10, பட்டாவின் படி பாலவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ளது.

மனைஉட்பிரிவு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க வேண்டி சிறப்பு அதிகாரி (மன்றத்தின்) அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து சாலைக்கான நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக ஆவணம் எண்.121/2019 நாள் 02.01.2019 பத்திரம் பதிவு செய்யப்பட்டது. தானமாக சாலைக்கான நிலங்களை பதிவு செய்யப்பட்ட பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனிடையே திரு. *R. Veeraraghavan & 2 others* ஆகியோர் தற்பொழுது நிலத்தினை மனைஉட்பிரிவு செய்ய இயலவில்லை என்பதனால், பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரத்தை ரத்து செய்ய ஆவண செய்யுமாறு கோரிக்கை அளித்தார்கள்.

திரு. *R. Veeraraghavan & 2 others* ஆகியோரின் கோரிக்கை மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு கருத்துரை கேட்டு 20.08.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் 11.03.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

1) *The copy of the orders made in W.P.Nos.11386/2020 & W.M.P.No.13890/2020.*
2) *The details of action taken by the Joint Sub Register – II, Neelangarai with regard to the orders of the above Writ Petition and*
3) *The copy of the representation of the applicant.*

அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் கேட்கப்பட்ட விவரங்களுக்கு இவ்வலுவலக 29.03.2022 நாளிட்ட கடிதத்தில் உரிய தகவல் அளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 12.04.2022 கடிதத்தில் *Thiru. R. Veeraraghavan and 2 others* அவர்களின் கோரிக்கை தொடர்பாக குறிப்பிட்ட கருத்துரை அனுப்புமாறு அரசு துணை செயலாளர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக கீழ் கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி அளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம் ஒப்புதல் வழங்கப்படாத நிலையில், சாலைக்காக தானமாக அளிக்கப்பட்ட நிலத்தினை *Thiru. R. Veeraghavan and 2 others* கேட்டுக் கொண்டதற்கு இணங்க தானப்பத்திரம் எண்.121/2019 நாள் 02.01.2019 னை ரத்து செய்து சாலைக்கான நிலத்தினை மீண்டும் *Thiru. R. Veeraghavan and 2 others* அவர்களுக்கு அளிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி அளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம் ஒப்புதல் வழங்கப்படாத நிலையில் அதனை மேற்கொண்டு தொடர்வதற்கு திரு. *R. Veeraraghavan and 2 others* இயலாத நிலையில் இருப்பதாலும், அவர்களின் கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு சாலைக்கென தானமாக அளித்த பத்திரம் எண்.121/2019 நாள் 02.01.2019 னை ரத்து செய்யலாம் என கருதப்படுகின்றது.

எனவே, அரசு துணை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் கேட்கப்பட்ட குறிப்பிட்ட கருத்துரைக்கு, மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி அளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம் ஒப்புதல் வழங்கப்படாத நிலையில் அதனை மேற்கொண்டு தொடர்வதற்கு திரு. *R. Veeraraghavan and 2 others* இயலாத நிலையில் இருப்பதாலும் அவர்களின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு சாலைக்கென தானமாக அளித்த பத்திரம் எண்.121/2019 நாள்.02.01.2019னை ரத்து செய்யலாம் என்று தெரிவிக்க நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.5.ந.க.எண்.5270/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.62 **பொருள் எண்.21**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56-ல் பவளகாரன் தெருவில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மிகவும் சிதிலமடைந்து உள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56-ல் எண். 120, பவளகாரன் தெரு, மண்ணடி, சென்னை-600001 என்ற முகவரியில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய கட்டிடத்தில் உதவி பொறியாளர் (GCC - மின்சாரம் துறை) அலுவலகம், உணவுப்பொருள் பாதுகாப்பு அலுவலகம், அம்மா உணவகம், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி மையம் அலுவலகம் மற்றும் அரசு இ சேவை மையம் அலுவலகம் ஆகியவை இவ்வளாகத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் அபாயகரமானதாகவும் உள்ளது. இக்கட்டிடத்தில் உள்ள அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் மற்றும் இவ்வலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கும் கட்டிடம் மிகவும் சிதலமடைந்து இருப்பதால், பொது மக்களின் நலன் கருதி அக்கட்டிடத்தை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டப்பட உள்ளது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) தரை தளம்	= 318.00 சதுர மீட்டர்
(ii) முதல் தளம்	= 318.00 சதுர மீட்டர்
கட்டிடத்தின் மொத்த பரப்பளவு	= 636.00 சதுர மீட்டர்
தற்போதைய புத்தக மதிப்பு	= ரூ. 3984.42

எனவே, மண்டலம்-5, வார்டு-56க்கு உட்பட்ட எண். 120, பவளகாரன் தெரு. மண்ணடி, சென்னை-600001 என்ற முகவரியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

வ.து.ந.க.எண்.ஜி1/ 6743/2008

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.63 **பொருள் எண்.22**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - சொத்துவரி பொது சீராய்வு அரசாணை வெளியிடப்பட்டது - சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள - பொது மக்கள் கருத்துக்கள்/ ஆட்சேபணைகள் பெற மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - ஆட்சேபணைகள் / கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டது - சொத்துவரி பொது சீராய்வினை நடைமுறைப்படுத்திட மன்றத்தின் அனுமதி.

அரசாணை (நிலை) எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A. IV) துறை, நாள் 30.03.2022 ல்

15-வது மத்திய நிதி ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) குறித்த அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், ஒன்றிய அரசின், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களின் வாயிலாக நிதியினை பெற தகுதிநிலை நிபந்தனையாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் தொடர்பாக அறிவிக்கை வெளியிட வேண்டும் என தெரிவித்துள்ளது.

அரசாணை (நிலை) எண்.73, மற்றும் 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A.IV) துறை, நாள் 19.07.2018 மற்றும் 26.07.2018ல், பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள வேண்டுமென ஆணையிட்டது. இதனையடுத்து, அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M.A. IV) துறை, நாள் 19.11.2019ல், மேற்கண்ட அரசாணையின்படி மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி பொது சீராய்வு நிறுத்தி வைக்கப்படுவதாகவும், சொத்துவரி பொது சீராய்வு தொடர்பான சிக்கல்களை கூர்ந்தாய்வு செய்ய குழு ஒன்று அமைக்கப்படுவதாகவும், அக்குழுவின் அறிக்கை பெறப்படும் வரை சொத்துவரி பொது சீராய்வு நிறுத்தி வைக்கப்படுவதாகவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி, குழுவானது தனது அறிக்கையில் சென்னை மாநகராட்சியில் 1998 ஆம் ஆண்டும், இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2008- ஆம் ஆண்டும், சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில், நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் சொத்துவரி சீராய்வினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் சட்ட வரையரைக்குட்பட்டு கீழ்கண்டவாறு மேற்கொள்ள பரிந்துரைத்துள்ளது.

1. குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத பிற இனங்களுக்கு, கீழ்கண்ட உயர்வு காரணியை தற்போது நடைமுறையிலுள்ள அடிப்படை தெரு கட்டணத்துடன் பெருக்கி, அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

வரி விதிப்பு இனங்கள்	முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு	2011 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு
	உயர்வு காரணி	உயர்வு காரணி
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 600 சதுரஅடி வரை	1.50	1.25

குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 601 சதுர அடி முதல் 1200 சதுர அடி வரை	1.75	1.50
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 1201 சதுர அடி முதல் 1800 சதுர அடி வரை	2.00	1.75
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 1801 சதுர அடி முதல்	2.50	2.00
தொழிற்சாலை	2.00	1.75
குடியிருப்பு அல்லாத பகுதி	2.50	2.00
சிறப்பு வகை கட்டிடங்கள் (தங்கும் விடுதி, கல்யாண மண்டபம், மருத்துவமனை, திரையரங்கம்)	குடியிருப்பு அல்லாத பகுதி இணையாக வரி விதிக்கப்பட வேண்டும்.	குடியிருப்பு அல்லாத பகுதி இணையாக வரி விதிக்கப்பட வேண்டும்.
தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்கள்	2.00	1.75

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் பகுதிகளில் உள்ள சிறப்பு வகை கட்டிடங்களுக்கு (1. தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல் 2. கல்யாண மண்டபம், 3. திரையரங்கம், 4. மருத்துவமனை) அவைகள் வசூலிக்கும் கட்டணம்/வாடகை அடிப்படையில் விதிக்கப்பட்டு வரும் சொத்துவரிக்கு பதிலாக, குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு விதிக்கப்பட்டு வரும் சொத்துவரி போல் கட்டிடத்தின் பரப்பளவிற்கேற்ப குடியிருப்பு அல்லாத அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) சொத்துவரி நிர்ணயம் செய்து, அதன் அடிப்படையில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.
3. சதுர அடிக்கு ரூ. 0.50 பைசா என்ற அடிப்படை கட்டணத்தில் விதிக்கப்பட்டு வரும் காலிமனை சொத்துவரியானது, சதுர அடிக்கு ரூபாய் 1.00 என்று அடிப்படை கட்டணத்தில் விதிக்கப்படவேண்டும். மேலும், கட்டிடங்கள் கட்டப்படும் மனைகளில், மூன்றில் இரண்டு பங்கு நிலம் கட்டுமானம் ஏதும் கட்டப்படாமல் இருப்பின், அவ்வினங்களுக்கு கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் சொத்துவரியுடன், மீதமுள்ள இரண்டு பங்கு நிலத்திற்கு கூடுதலாக காலிமனை வரியும் சேர்த்து விதிக்கப்படவேண்டும்.
4. சென்னை மாநகரில் ஆண்டு மதிப்பானது அடிப்படை தெரு கட்டணத்தின் அடிப்படையிலும், இன்னும் பிற நகரங்களில் மண்டல அடிப்படை மதிப்பிலும் கணக்கிடப்படுகிறது. சொத்துவரியானது ஆண்டு மதிப்பில் குறிப்பிட்ட சதவீதமாகும். ஒவ்வொரு நகரமும் தற்போதைய கட்டண வீதத்தை (ஆண்டு மதிப்பில் விதிக்கப்படும் வரி) தள வீதமாக அறிவிக்க வேண்டும்.
5. கடந்த 5 ஆண்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் அல்லது 6 சதவீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி உயர்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

இதனையடுத்து, சொத்துவரி பொது சீராய்வினை மேற்கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, *Schedule - IV, Taxation Rules, Part 1-A. Rule* 3(3)ன் படி மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என்பதன் அடிப்படையில்

மேற்குறிப்பிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு சொத்துவரி பொது சீராய்வினை மேற்கொள்ளவும்,

சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.292/2018, நாள் 10.04.2018ல் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, தற்போது குடியிருப்பு அடிப்படைத்

தெரு கட்டணத்தில் விதிக்கப்படும் சொத்துவரியுடன் கூடுதலாக 60 சதவீதம் மிகைவரி விதிக்கப்படுவதற்கு பதிலாக, குடியிருப்பு அடிப்படை தெரு கட்டணத்தில் *(BSR)* 1.6 மடங்கு என சொத்துவரி விதிக்கவும், அதனையடுத்து தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு மேற்கண்ட காரணி அடிப்படையில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும்.

மேலும், பொது சீராய்வின் போது கட்டிடத்தின் வயதுகேற்ப கழிவுகள் அனுமதித்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும். தற்போது அரசு ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி உயர்வு மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவித்துள்ள நிலையில், கட்டிட வயதுகேற்ப கழிவினை அனுமதிப்பதில், தேவையற்ற முரண்பாடுகளை களையும் முகமாக "சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது சொத்துவரி மறுமதிப்பீடு ஆணை நடைமுறைப் படுத்தப்பட்ட காலம் இவற்றில் எது பின்னரோ அதனை அடிப்படையாக கொண்டு கட்டிடத்தின் கழிவினை இறுதி செய்து" கீழ்கண்டவாறு கழிவு அனுமதித்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும்,

தேய்மானம் அனுமதிக்கப்படும் காலம்	கழிவு அனுமதி
புதிய மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 மார்ச் மாதம் வரை கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 மார்ச் மாதம் வரை மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	10 சதவீதம்
புதிய மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 ஏப்ரல் முதல் 2007 மார்ச் வரையிலான காலத்திற்குள் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 ஏப்ரல் முதல் 2007 மார்ச் வரையிலான காலத்திற்குள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	6 சதவீதம்
புதிய மதிப்பீடு கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2007 ஏப்ரல் முதல் 2017 மார்ச் வரையிலான காலத்திற்குள் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2007 ஏப்ரல் முதல் 2017 மார்ச் வரையிலான காலத்திற்குள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	3 சதவீதம்
புதிய மதிப்பீடு கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2017 ஏப்ரல் முதல் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2017 ஏப்ரல் முதல் செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	இல்லை

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919. பிரிவு 98-Aன்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் அரசிதழ் மற்றும் நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிட்டு பொதுமக்களின் ஆட்சேபணை / கருத்துக்கள் பெற மன்றத் தீர்மானம் எண்.39/2022, நாள் 09.04.2022 வாயிலாக மன்றம் அனுமதி வழங்கியது. இதனையடுத்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் நாளிதழ் மற்றும் அரசிதழ் எண்.218, நாள் 11.04.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனையடுத்து, பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகள்/ கருத்துக்கள் ஆகியவையும் அதற்கான பதில்களும் பின்வருமாறு:

ஆட்சேபணை வ. எண்.	மனுதாரர்/அமைப்புகளின், பெயர் (திரு/திருமதி), முகவரி விவரம், ஆட்சேபணை/கருத்துக்கள் விவரம் மற்றும் ஆட்சேபணைகளுக்கான பதில் விவரம்
1	பெ.தி.ஜெயகுமார்/பெ.தி.தேவன், 18/36, கரிகாலன் தெரு , ஆதம்பாக்கம், சென்னை - 88, நாள் 15.03.2022
<u>ஆட்சேபணை 1:-</u> மண்டலம்-12ல் உள்ள கோட்டம்-161 பகுதியானது முந்தைய ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியாகும். இப்பகுதிக்கு விதிக்கப்பட்ட சொத்து வரியானது, மாம்பலம், இரங்கநாதன் தெரு, போயஸ் கார்டன், போட்கிளப் சாலை, அடையாறு, அண்ணா சாலை, ஆகிய பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள வரியை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. இவ்வரி விதிப்பினை குறைப்பதற்காக, இது குறித்து, ஏற்கனவே 15.02.2022 தேதியிட்ட கோரிக்கை மனு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் ஆகியோருக்கும் அளித்துள்ளோம்.	
<u>ஆட்சேபணை-1-க்கான பதில்:-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-12-ல் உள்ள முந்தைய ஆலந்தூர் நகராட்சி உட்பட), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.	
2	மரு.ப்பி.சோலை, தலைவர், அம்பத்தூர் ஏழாவது மண்டல ஒருங்கிணைந்த குடியிருப்போர் நல வாழ்வு சங்கம், எண்.51/9, ஓரகடம் சாலை, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை-53, நாள் 06.04.2022
<u>ஆட்சேபணை 2:-</u> Ambattur township had been obsolete when Chennai Corporation and taken its power as a local bodies in 2011. GCC did not implement its property tax as levied in other zone within the city limit. We request you to clear the anomaly which deviates from other city limits and fix the taxation and street values from the year 2011 before the revision of property tax 2022 by the Government.	
<u>ஆட்சேபணை-2-க்கான பதில்:-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-7-ல் உள்ள முந்தைய அம்பத்தூர் நகராட்சி உட்பட), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு	

காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.	
3	கமலா நகர் குடியிருப்போர் நல வாழ்வு சங்கம், எண்.15/31,, கமலா நகர், திருவொற்றியூர் , சென்னை-600 019, நாள் 06.04.2022
	<u>ஆட்சேபணை 3:-</u> திருவொற்றியூர் பகுதியானது 2011ல் நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக மாற்றம் பெற்றதிலிருந்து, 2016ல் புதிய வரி உயர்வு அமல்படுத்தப்பட்டது, விரிவாக்கப்பட்ட மாநகராட்சி பகுதியான , திருவொற்றியூருக்கு அண்ணா நகர் பகுதியை விட கூடுதல் வரி விதிக்கப்பட்டது . இதை சீரமைக்க கோரி பலமுறை கோரிக்கை வைத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், ஏப்ரல் -2022 முதல் தேதியிலிருந்து 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை வீட்டு வரி உயர்த்தப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள சுங்க சாவடிக்கு தெற்கு பகுதியில் உள்ளது போன்று வரியினை போன்று எங்கள் பகுதிகளுக்கும் சீரமைக்க வேண்டுகிறோம்.
	<u>ஆட்சேபணை- 3-க்கான பதில்:-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-1-ல் உள்ள முந்தைய திருவொற்றியூர் நகராட்சி உட்பட),, முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.
4	இ.ந.சுதர்சனம், தலைவர், ஊருணி மையம், எண்.22/9, திருமூர்த்தி தெரு, ராம்நகர், அம்பத்தூர், சென்னை-53, நாள் 07.04.2022
<u>ஆட்சேபணை 4:-</u> அம்பத்தூர் நகராட்சியானது 2010-11 ஆண்டில் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது . சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு, சொத்துக்களை அளந்து, ஒரு சதுர அடிக்கு வீட்டு உபயோகத்திற்கு ரூ.2.10 முதல் ரூ.2.70 வரையும் , வணிக வணிகவளாகங்களுக்கு சதுர அடிக்கு ரூ.7.10 முதல் 7.50 வரையும் சொத்துவரி ஏற்றம் செய்யப்பட்டது . இந்த வரி ஏற்றம் 2017 -2018 முதல் அமுலானது . மேலும் இத்துடன் IDC (Infrastracture Development Charge) என்ற தொகையையும் வசூலித்தார்கள். இதனால் பழைய வரியைவிட சுமார் 12 மடங்குவரை உயர்ந்தது. (பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வரி ஏற்றம் செய்யப்படவில்லை என்னும் கருத்து இவர்களுக்கு பொருந்தாது) . பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலத்தில் (Zone-7) உள்ள வீடுகள் /வணிக வளாகங்களுக்கான தற்போது உள்ள சொத்து வரிவிதிப்பில் அண்ணா நகர் , அடையார் , மைலாப்பூர் போன்ற வளர்ச்சியடைந்த மிக அதிகமான சொத்து மதிப்புடைய (Guide line value) மண்டலங்களை விட பல மடங்கு அம்பத்தூர் மண்டலத்தில் வரிவிதிப்பு அதிகமாக விதிக்கப்பட்டுள்ளது. அண்ணாநகர் போன்ற வளர்ந்த பகுதிகளின் சொத்து மதிப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை, அம்பத்தூர் பகுதியுடன் ஒப்பீடு செய்ய இயலாது.	

முரண்பாடாக விதிக்கப்பட்ட வரிகளை அடிப்பைடயாக கொண்டு, தற்போது மேலும் வரி ஏற்றம் செய்வது என்பது முறையாக வரி செலுத்தும் அனைத்து தரப்பினரையும் பாதிக்கும். அம்பத்தூர் மண்டலத்திற்கும் மற்ற மணடலங்களை போன்றே அதே அளவுகோல் அடிப்படையில், சீராய்வு செய்து ஏற்றதாழ்வு இல்லாமல் அனைத்து சொத்துகளுக்கும், சொத்து வரியை சீர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.	
<u>ஆட்சேபணை- 4-க்கான பதில்:-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-7-ல் உள்ள முந்தைய அம்பத்தூர் நகராட்சி உட்பட), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.	
5	ட்டி.மணவாளன், தலைவர், திருநகர் வீட்டின் உரிமையாளர்கள் நலச்சங்கம், 4/63, திரு நகர், 2வது தெரு, திருவொற்றியூர், சென்னை-600 019, நாள் 07.04.2022
<u>ஆட்சேபணை 5 :-</u> சென்னை மாநகராட்சி திருவொற்றியூர், வார்டு-5 திருநகரில் மட்டும் பாரபட்சத்துடன் வரி உயர்வு மற்றும் முன்தேதியிட்ட நிலுவை தொகையும் விதிக்கப்பட்டுள்ளது. திருநகரின் பக்கத்தில் உள்ள தெரு மற்றும் நகர்களில் இந்த வரி உயர்வு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிடுகிறது. திருநகர் பகுதிக்கு விதிக்கப்பட்ட அதிகப்படியான வரியை குறைக்கவும், முன்தேதியிட்ட வரி நிலுவை தொகை விதிப்பை ரத்து செய்ய வேண்டும்.	
<u>ஆட்சேபணை -5க்கான பதில் :-</u> பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் (மண்டலம்-1, முந்தைய திருவொற்றியூர் உட்பட) வரிமதிப்பீடு குறைவாக செய்யப்பட்ட இனங்கள் கண்டறிந்து, திருத்திய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறே, மண்டலம்-1, வார்டு-5ல் உள்ள திருநகர் பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கும் திருத்திய வரிமதிப்பீடு மேற்கொண்டு சட்ட விதிகளின்படி(CCMC Act 1919, Section 137B), சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மண்டலம்-1ல் அமைந்துள்ள திருநகர் மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளிலும், வரி மதிப்பீடு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்ட இனங்கள் கண்டறியப்பட்டு, திருத்திய வரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். இப்பணியானது பெருநகர சென்னை மாநகராட்சியின் அன்றாட பணிகளில் ஒன்றாகும்	
6	திருமதி.பூங்கொடி ஜெகதீஸ்வரன், மாமன்ற உறுப்பினர், வார்டு-163, மண்டலம்-12, எண்.8/19, நியுகாலனி, பிரதான சாலை, ஆதம்பாக்கம், சென்னை-88, நாள் 07.04.2022
<u>ஆட்சேபணை 6:-</u> ஆலந்தூர் மண்டலத்தின் அனைத்து தெருக்களுக்கும், சொத்துவரி, குடிநீர் வரி போன்ற வரிகள் மற்ற மண்டலங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. அண்ணாநகர், அடையார், போயஸ்கார்டன், திருவான்மியூர் மற்றும் பெசன்ட் நகர் போன்ற பகுதிகளை விட ஆலந்தூர் பகுதிக்கான வரிகள் மிக உயர்ந்துள்ளது. இதனை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுத்து முறையான வரி செலுத்த உதவ வேண்டும்.	
<u>ஆட்சேபணை -6க்கான பதில் :-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட	

உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-12-ல் உள்ள முந்தைய ஆலந்தூர் நகராட்சி உட்பட), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது.

இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.

7	எல்.சுந்தரராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வட சென்னை மாவட்ட குழு, எ.பி. நினைவகம், 52, குக்ஸ் சாலை, சென்னை-600 012, நாள் 09.04.2022

<u>ஆட்சேபணை 7:-</u>

தமிழ்நாடு அரசு மாநகராட்சி , நகராட்சி , பேரூராட்சிகளில் சொத்துவரி விகிதங்களை 25 சதவீதம் முதல் 150 சதவீதம் வரை உயர்த்தி அறிவிப்பாணை வெளியிட்டுள்ளது .

கொரோனா பெருந்தொற்றாலும் , அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும் மீள முடியாத நிலையில், அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு, வேலையின்மை, உட்பட பல காரணங்களால் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கும் வகையில் சொத்து வரி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றாக, இதர வரிகளை கறாராக வசூலிக்கவும் , வருவாயை உருவாக்கவும் மாநகராட்சி நிர்வாகம் முயற்சிக்க வேண்டும் . மேலும் , பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் ஒன்றிய மாநில அரசுகள் வசூலிக்கும் அனைத்து வரிகளிலும் குறிப்பிட்ட தொகையை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

சொத்து வரி உயர்வினை பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றக் கூடாது. சொத்து வரி உயர்வை மறுபரிசீலனை செய்து திரும்ப பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

<u>ஆட்சேபணை-7க்கான பதில் :-</u>

உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள்/சேவைகளை வழங்குவதற்கும், மத்திய /மாநில அரசு திட்டங்களை, செயல்படுத்துவதற்கும், மத்திய/மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவிகள், மானியம் போன்றவை பெறுவது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாகும்.

மேலும், மத்திய அரசின் 15வது நிதிக்குழுவானது தனது பரிந்துரையில், 2022-23ம் நிதியாண்டு முதல் மத்திய அரசின் மானியத்தை பெற வேண்டுமெனில், 2021-2022 ஆம் ஆண்டு முதல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சொத்துவரி தள வீதங்களை (Floor Rates) அறிவிக்கை செய்ய வேண்டும் எனவும், அதன்தொடர்ச்சியாக, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கேற்ப வசூல் திறனை தொடர்ச்சியாக மேம்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் மக்களின் சேவைப்பணிகளுக்கு, மத்திய/மாநில அரசின் நிதி உதவி அவசியம் என்பதாலும், உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகட்டமைப்பு வலுவாக்க, வரி வருவாய் இனங்கள் பங்கு முக்கியம் என்பதாலும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமானதாக கருதப்படுகிறது.

தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும், சொத்துவரி உயர்வு நிர்ணயம் செய்யப்படும். இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வரி உயர்வானது, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட

பகுதிகளுக்கு குறைவான அளவிலேயே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, அதிக நிலுவை வரி செலுத்த வேண்டிய இனங்கள் கண்டறிந்து, தாக்கீது வழங்குதல், சொத்தின் உரிமையாளர்/வாடகைதாரரிடம் சொத்துவரி வசூலித்தல் ஆகிய நடவடிக்கைகள் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919ன்படி எடுக்கப்பட்டு, நிலுவை வரி வசூலிக்கப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது நிர்ணயம் செய்யப்படும் சொத்துவரி உயர்வானது, ஏழை, எளிய நடுத்தர பகுதி வாழ் மக்கள் பாதிக்கப்படா வண்ணம், சொத்துக்களின் பரப்பளவிற்கேற்ப மாமன்றத்தின் அனுமதியுடன் குறைவான அளவிலேயே நிர்ணயம் செய்யப்படும்.	
8	திரு.வி.ஜானகிராமன், எண். 128/51, S R P கோயில் தெரு (தெற்கு), ஜவஹர் நகர், சென்னை – 600 082, நாள்: 12.04.2022
<u>ஆட்சேபணை 8 :-</u> சொத்தின் வாடகை மதிப்பு, அமைவிடம், நிலத்தின் பரப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு திருத்திய சொத்துவரி மதிப்பீட்டு ஆணை வழங்க வேண்டும்.	
<u>ஆட்சேபணை- 8க்கான பதில் :-</u> சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919ன்படி, நியாயமான வாடகை மதிப்பினை அடிப்படையாக கொண்டு சொத்துவரி விதிக்கப்படுகிறது. தற்போது, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, முந்தைய சென்னை மாநகராட்சி பகுதி மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அமைவிடங்களுக்கு, பொது சீராய்வுக்காக வழங்கப்பட்டுள்ள வரி உயர்வு காரணிகளைக் கொண்டு, மாமன்றத்தின் அனுமதியுடன், அடிப்படை தெரு கட்டணம் நிர்ணயம் செய்து, சொத்துவரி பொது சீராய்வு மதிப்பீட்டு ஆணைகள் வழங்கப்படும்.	
9	ப்பி.நாகராஜன், 57/4, பாரதியார் தெரு, வண்ணிய தேனாம்பேட்டை, சென்னை-600 018, நாள்: 12.04.2022
<u>ஆட்சேபணை 9 :-</u> அதிக அகலம் கொண்ட பிரதான தெருவில், குறுகிய அகலம் கொண்ட சில குறுக்கு தெருக்களுக்கும் (சந்து), பிரதான தெருவின் பெயரிலேயே அமைந்துள்ளன. இவ்வகையான தெருக்களுக்கு (ஒரே பெயரில் அமையப்பெற்ற குறுகலான குறுக்கு தெருக்களுக்கும், பிரதான தெருக்களுக்கும்) ஒரே மாதிரியான அடிப்படை தெரு கட்டணம் நிர்ணயிப்பது பொருத்தமற்றது.	
<u>ஆட்சேபணை -9க்கான பதில் :-</u> அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணி அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும், அடிப்படை தெரு கட்டணத்தை கொண்டு சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படும். வாடகை மதிப்பின் அடிப்படையில், ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை தெரு கட்டணங்களை கொண்டு, தற்போது பொது சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது.	
10	என்.கேசவன், பொது செயலாளர், கிழக்கு கடற்கரை சாலை குடியிருப்போர் நலச் சங்கம், 1/66, பாரதி நகர், பாலவாக்கம் சென்னை-41, நாள் 16.04.2022
<u>ஆட்சேபணை: 10:-</u> விரிவாக்கப்பட்ட பகுதிகளில் (கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், பனையூர், நீலாங்கரை, உத்தண்டி) ஊராட்சி செய்து கொடுத்த வசதிகளைத்தான் கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம். பாதாள சாக்கடை, குடிநீர், மழைநீர் அகற்றும் கால்வாய், சாலை மேம்பாடு இல்லை என்பதால், மைலாப்பூர், தி.நகர் போன்ற பகுதிகளில் விதிக்கப்படும் வீட்டு	

வரியை விட பாதியாக குறைக்க வேண்டும். மேற்படி வசதிகளை செய்தபின் வரியை உயர்த்தி கொள்ள வேண்டும். வீட்டை அளவீடு செய்து வரிவிதிப்பு மேற்கொள்ள வேண்டும். 40 ஆண்டுகள் பழமையான வீடுகளுக்கு வீட்டு வரியில் 20 சதவீதம் குறைக்க வேண்டும். ஓடு/தகர வீடுகளுக்கு வரி குறைக்க வேண்டும்.	
<u>ஆட்சேபணை – 10க்கான பதில்:-</u> உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள்/சேவைகளை வழங்குவதற்கும், மத்திய /மாநில அரசு திட்டங்களை செயல்படுத்துவதற்கும், மத்திய/மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவிகள், மானியம் போன்றவை பெறுவது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாகும். உள்ளாட்சி அமைப்புகளில் மக்களின் சேவைப்பணிகளுக்கு, மத்திய/மாநில அரசின் நிதி உதவி அவசியம் என்பதாலும், உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகட்டமைப்பு வலுவாக்க வரி வருவாய் இனங்கள் பங்கு முக்கியம் என்பதாலும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமானதாக கருதப்படுகிறது. தற்போது, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் சொத்துவரி உயர்வு நிர்ணயம் செய்யப்படும். இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வரி உயர்வில், தற்காலிக கூரை வீடுகளை பொறுத்தமட்டில், ஏற்கனவே நடைமுறையில் உள்ளதன் அடிப்படையில் 20% கழிவு அனுமதிக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு, உயர்வு காரணி குறைவான அளவிலேயே, அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே, மாமன்றத்தின் அனுமதியுடன் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும். கட்டிடத்தின் வயதுக்கேற்ப சலுகைகள் மாமன்றத்தின் அனுமதியுடன் தீர்மானிக்கப்படும்.	
11	எ.அருன்குமார், எஸ்.ஆச்சல்குமார், எஸ்.அர்ச்சனா, 15/8, முதல் குறுக்கு தெரு, சி.ஐ.டி, காலனி, மயிலாப்பூர், சென்னை-4, நாள் 17.04.2022
<u>ஆட்சேபணை 11 : -</u> கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா நோய் தொற்று (Covid 19) காரணமாக நிதிநிலைமை கடுமையாக பாதிக்கப்பட்டு, தற்போது தான் நிதிநிலைமை சீராக உயர்ந்து வருகிறது. தற்போது திடீரென (22-23) சொத்துவரி உயர்வு அறிவிக்கப்பட்டது. வரி உயர்வு அவசியம் என்றாலும், மிகுதியாக உயர்த்த வேண்டாம், சென்னை நகரை பொறுத்தவரையில், I.குடியிருப்புகளுக்கு 600 சதுர அடி – 25% 601 -1200 சதுர அடி – 50% 1201 -1800 சதுர அடி – 75% 1801 சதுர அடிக்கு மேல் . 100% எனவும், II. வணிக குடியிருப்புகளுக்கு, 150 % உயர்வுக்கு பதிலாக 75% சதவீதம் உயர்த்தலாம். 5 ஆண்டுகளுக்கு பிறகு 150 % உயர்த்தலாம். கோவிட்-19 காலத்திற்கு பிறகு மேற்கண்ட சதவீதத்தின்படி வரி தொகையினை நிர்ணயம் செய்வது நல்லது. இதனுடன் பரப்பளவு/அமைவிடம் நிலத்தின் மதிப்பினை சேர்க்க கூடாது. அவ்வாறு சேர்த்தால் மிக அதிக தொகையாக விடும் இதனை எங்களால் தாங்க இயலாது.	

எனவே, மேற்குறிப்பிட்ட குறைந்த சதவீதத்தின் அடிப்படையில் சொத்துவரி உயர்வினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.	
ஆட்சேபணை -11 க்கான பதில் :- தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் வரி உயர்வு நிர்ணயம் செய்யப்படும். இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களை ஒப்பீடும்போது சொத்துவரி சீராய்விற்கு பின்னரும் சொத்துவரி குறைவாக விதிக்கப்பட உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நிர்ணயிக்கப்படும் சொத்துவரி உயர்வானது, மாமன்றத்தால் தீர்மானிக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானிக்கப்படும் வரி உயர்வு சதவீதத்தின் அடிப்படையிலேயே, குடியிருப்புகள்/குடியிருப்பு அல்லாத இனங்களுக்கு, சொத்துவரி சீராய்வு நடைமுறைப்படுத்தப்படும்.	
12	எம்.ஏ. பாத்திமா ஹலிமா, எஸ்.எம். சித்தி கதீஜா, புதிய எண்.68, ப.எண்.47, முத்துமாரி செட்டி தெரு, சென்னை -600 001, நாள்: 18.04.2022
ஆட்சேபணை 12 :- எண்.16(70) தாத்தா முத்தையப்பன் தெரு , கொத்தவால் சாவடி, சௌகார்பேட்டை, சென்னை -01 . 05-057-06593-000 வீட்டிற்கான சொத்துவரி விதிப்பானது பலமுறை உயர்த்தப்பட்டுவிட்டது. ஏற்கனவே மாநகராட்சி வீட்டுவரி விதிப்பு உயர்த்தப்பட்ட பின்பு, மீண்டும் வரி ஏற்றம் செய்வதை தவிர்க்க கோருகிறோம்.	
ஆட்சேபணை- 12க்கான பதில் :- சொத்துவரி மறு மதிப்பீடு என்பது, மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவது ஆகும். பொது சீராய்வு என்பது அனைத்து மதிப்பீடுகளுக்கும் சொத்துவரி உயர்வு மேற்கொள்வது ஆகும். எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.	
13	எஸ்.எஸ்.எம். உவைஸ்னா லெப்பை, எஸ்.எஸ்.எம். சதக்கத்துல்லாஹ, புதிய எண்.68, ப.எண்.47 முத்துமாரிசெட்டி தெரு , சென்னை -01, நாள்: 18.04.2022
ஆட்சேபணை 13 :- எங்கள் வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு (05-060-02326-000), பொது சீராய்வின் மூலம் 1/89-90 முதல் அரையாண்டிற்கு ரூபாய் 6437/- லிருந்து ரூபாய் 11,010/- ஆக உயர்த்தப்பட்டது. அதாவது 71% விழுக்காடுகள் ஒரு அரையாண்டிற்கு அபரிமிதாக வரி ஏற்றம் செய்யப்பட்டுள்ளது . எனவே , ஏற்கனவே மாநகராட்சி வீட்டுவரி விதிப்பு உயர்த்தப்பட்ட பின்பு, மீண்டும் வரி ஏற்றம் செய்வதை தவிர்க்க கோருகிறோம்.	
ஆட்சேபணை- 13க்கான பதில் :- சொத்துவரி மறு மதிப்பீடு என்பது, மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவது ஆகும். பொது சீராய்வு என்பது அனைத்து மதிப்பீடுகளுக்கும் சொத்துவரி உயர்வு மேற்கொள்வது ஆகும். எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.	

14	என்.எம்.ஏ. முஹம்மது மொஹிதீன், புதிய எண்.68, ப.எண்.47, முத்துமாரிசெட்டி தெரு, சென்னை -01, நாள்: 18.04.2022

<u>ஆட்சேபணை 14 :-</u>

எங்கள் அடுக்குமாடி வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு (10-131-06239-000), பொது சீராய்வின் மூலம் 1/20-21 முதல் அரையாண்டிற்கு ரூபாய் 2840/- லிருந்து ரூபாய் 3,785/- ஆக உயர்த்தப்பட்டது. அதாவது 33% விழுக்காடுகள் ஒரு அரையாண்டிற்கு அபரிமிதாக வரி ஏற்றம் செய்யப்பட்டுள்ளது . எனவே, ஏற்கனவே மாநகராட்சி வீட்டுவரி விதிப்பு உயர்த்தப்பட்ட பின்பு, மீண்டும் வரி ஏற்றம் செய்வதை தவிர்க்க கோருகிறோம்.

<u>ஆட்சேபணை-14க்கான பதில் :-</u>

சொத்துவரி மறு மதிப்பீடு என்பது, மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவது ஆகும். பொது சீராய்வு என்பது அனைத்து மதிப்பீடுகளுக்கும் சொத்துவரி உயர்வு மேற்கொள்வது ஆகும்.

எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.

15	ஜாவியத்துல்ஃபாஸியத்துல் ஷாதுலிய்யா, (தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது), புதிய எண்.68, ப.எண்.47 முத்துமாரிசெட்டி தெரு, சென்னை -01, நாள்: 18.04.2022

<u>ஆட்சேபணை 15 :-</u>

எண்.21(11), முப்தி அமீருல்லா சாஹிப் தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005, என்ற முகவரியில் எங்கள் வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு (09-114-02300-000), பொது சீராய்வின் மூலம் 1/20-21 முதல் அரையாண்டிற்கு ரூபாய் 283/- லிருந்து ரூபாய் 2,540/- ஆக உயர்த்தப்பட்டது. அதாவது 900% விழுக்காடுகள் ஒரு அரையாண்டிற்கு அபரிமிதாக வரி ஏற்றம் செய்யப்பட்டுள்ளது .

எனவே, ஏற்கனவே மாநகராட்சி வீட்டுவரி விதிப்பு உயர்த்தப்பட்ட பின்பு, மீண்டும் வரி ஏற்றம் செய்வதை தவிர்க்க கோருகிறோம்.

<u>ஆட்சேபணை-15க்கான பதில் :-</u>

சொத்துவரி மறு மதிப்பீடு என்பது, மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவது ஆகும். பொது சீராய்வு என்பது அனைத்து மதிப்பீடுகளுக்கும் சொத்துவரி உயர்வு மேற்கொள்வது ஆகும்.

எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.

16	எஸ்.சுரேஷ், செயலாளர், பொது நலச் சங்கங்களின் கூட்டமைப்பு . அம்பத்தூர், எண்.99, கிரெசன்ட் சாலை, திருவேங்கட நகர், அம்பத்தூர், சென்னை-600 053, நாள்: 18.04.2022

<u>ஆட்சேபணை 16 :-</u>

அம்பத்தூர் நகராட்சியாக இருந்தபோது சொத்துவரி உயர்த்தப்பட்டது, முந்தைய சென்னை மாநகராட்சியைக் காட்டிலும் அதிகபட்ச சொத்துவரி செலுத்தப்பட்டு வந்தது.

2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன் இணைந்த பிறகும் அதிகபட்ச சொத்துவரி செலுத்தப்பட்டு வந்தது.

மாநகராட்சியானது, முந்தைய சென்னை மாநகரட்சி பகுதிக்கு ஏற்றாற்போல் அம்பத்தூர் சொத்துவரியினை சீரமைக்கவில்லை, மீண்டும் அதிகபட்ச சொத்துவரி உயர்வு முன்மொழிவு செய்துள்ளது. இந்த உயர்வு, குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி உயர்வுக்கும் வழி வகுக்கும்.

முந்தைய சென்னை மாநகராட்சி போன்று விளையாட்டு திடல், நடைபாதைகள் ,மழைநீர் வடிகால் மற்றும் மின்விநியோகம் (Underground Cable) போன்ற வசதிகள் ஏதும் அம்பத்தூர் மண்டலத்தில் இல்லை.

மண்டலம்-7, கோட்டம்-81, திருவேங்கடம் நகர் உட்பட அம்பத்தூர் பகுதிவாழ் நடுத்தர மக்கள் அனைவருக்கும், இந்த வரி உயர்வு சுமையாக இருக்கூடும் என்பதால், என்பதால் இந்த சொத்துவரி உயர்வினை தள்ளிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.	
<u>ஆட்சேபணை-16க்கான பதில் :-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-7-ல் உள்ள முந்தைய அம்பத்தூர் நகராட்சி உட்பட), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும்.	
17	கே. மகேந்திரன், பொது செயலாளர், பாரதி நகர் யூத் எக்ஸ்னோரா, 1/66, பாரதி நகர், பாலவாக்கம், சென்னை-41, நாள்: 18.04.2022
<u>ஆட்சேபணை 17 :-</u> ஊராட்சி (பாலவாக்கம்) செய்து கொடுத்த வசதிகளைத்தான் கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம். பாதாள சாக்கடை, குடிநீர், மழைநீர் அகற்றும் கால்வாய், சாலை மேம்பாடு இல்லை என்பதால், மைலாப்பூர், தி.நகர் போன்ற பகுதிகளில் விதிக்கப்படும் வீட்டு வரியை விட பாதியாக குறைக்க வேண்டும். வசதிகளை செய்தபின் வரியை உயர்த்தி கொள்ள வேண்டும். வீட்டை அளவீடு செய்து வரிவிதிப்பு மேற்கொள்ள வேண்டும். 40ஆண்டுகள் பழமையான வீடுகளுக்கு வீட்டு வரியில் 20 சதவீதம் குறைக்க வேண்டும். ஓடு/தகர வீடுகளுக்கு வரி குறைக்க வேண்டும்.	
<u>ஆட்சேபணை-17க்கான பதில் :-</u> உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள்/சேவைகளை வழங்குவதற்கும், மத்திய /மாநில அரசு திட்டங்களை, செயல்படுத்துவதற்கும், மத்திய/மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவிகள், மானியம் போன்றவை பெறுவது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவசியமாகும். உள்ளாட்சி அமைப்புகளில் மக்களின் சேவைப்பணிகளுக்கு, மத்திய/மாநில அரசின் நிதி உதவி அவசியம் என்பதாலும், உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகட்டமைப்பு வலுவாக்க வரி வருவாய் இனங்கள் பங்கு முக்கியம் என்பதாலும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமானதாக கருதப்படுகிறது. தற்போது, அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள உயர்வு காரணிகளின்படியும் சொத்துவரி உயர்வு நிர்ணயம் செய்யப்படும். இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் வரி உயர்வில், தற்காலிக கூரை வீடுகளை பொறுத்தமட்டில், ஏற்கனவே நடைமுறையில் உள்ளதன் அடிப்படையில் 20% கழிவு அனுமதிக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட (பாலவாக்கம் உட்பட) பகுதிகளுக்கு, உயர்வு காரணி குறைவான அளவிலேயே, அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே, மாமன்றத்தின் அனுமதியுடன் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும். கட்டிடத்தின் வயதுக்கேற்ப சலுகைகள் மாமன்றத்தின் அனுமதியுடன் தீர்மானிக்கப்படும்.	

18	ப்பி.இளங்கோவன், 11/2157, முல்லை நகர், 9 வது தெரு, அண்ணா நகர்,சென்னை-40, நாள் 18.04.2022

ஆட்சேபணை 18:-

Petition Objecting to the present Tax Revision

I beg to bring the following for your kind consideration and request you to amount the tax order suitably.

1.It is agreed by the Govt. that during the last few years 97% all people have become poor or pamper.

a) Is this the right time to increase the take like what is levied

2. There is revision of GDP increase you will agree that most of the GDP increase was due to the 3% of people whose wealth has increased manifolds inspite of the pandemic and 97% becoming poor . co-relation of GDP with tax is absolutely false.

2 (a) Kindly reconsider and scrap this logic is arriving at the tax increasing

3.The city is split into core area and extended area already the tax in core area is about 400-500% of the extended area.

The so called facility available in the core area were created b y the taxes. Paid by the citizens of the core area and the citizen of extended area never were taxed like the core area.

It is appropriate to levy more tax in the extended area based on the land used for building so that additions all facility could be created or the Govt should cross subsidise the cost of provision of additional facility.

Expecting the core area to pay for the extended area is unfair and illogical , unjust.

Taxes should not be levied just because somebody direct the corporation to do so(namely the union Govt).

4.Is this a need to tax to run the administration and create facility is the corporation area.

Is there any deficit in the budget and, if all tax dues have been collected.

What portion of the deficit is going to be covered by the new tax.

What portion of the new tax is going to be used for the core area and for the extended area.

Is it not fair to correct this by reducing the tax in core area.

Is it not fair extended area at par with the core area and the excess tax be used for the extended area itself.

5. Kindly also with hold, to check if the record of properties available with the corporation is in line with the reality.

There are houses in the city measuring > 2000 sqft and still paying Rs.400/- for six months as tax.

Kindly direct the bill collectors to do a quick and audit of the area and the properties and submit a factual report, based on which taxes can be calculated.

I am convised, correction of improper assessment of properties will filed another 30-50% to the existing tax.

Consolidating the whole

1. Please with hold tax increase till a from audit is carried out and the real taxable extent could be arrived at.

2. Withdraw the GDP class in future taxation calculation.

3.Till all facilities are created in the extended area, let them pay for the improvement , or let the good subsidise . Not burden the people living in the core area.

4.Please check for the need toincrease tax, viz-viz the tax collected and still to be collected.

5.Crores of people having lost their job in the last couple of years, please give them breathes to rebuild their standing.

Kindly Acknowledge and let me have a feed back on my petition

Why should there be 3 labs as the tax is going to be based on built-up area

Water tax is also going to increase Please consider.

ஆட்சேபணை-18க்கான பதில்:-

15th Central Finance Commission in its report has recommended that to qualify for any grants for urban local bodies from 2022-23 onwards, States will have to appropriately notify floor rates in the year 2021-22 and thereafter show consistent improvement in collection in tandem with the growth rate of the State's own GSDP.

Accordingly, in G.O. number 53, Government has accepted recommendations of the

Property Tax Committee and prescribed increase factors for Chennai core city and rest of Tamil Nadu including added areas of Chennai. As per committee recommendations, the increase factors have been kept different for core city and added areas because in 2008, general revision has already been done once for these areas while general revision has not happened for Chennai core city since 1998. With respect to collection of tax demand, GCC is taking all necessary steps to increase its collection and has provided various methods for assesses to pay their taxes easily sitting in the comfort of their home including net banking, UPI, BBPS, etc. GCC has also undertaken a detailed GIS survey to identify and assess unassessed and underassessed properties.	
19	யு.நாசர்கான், எண். 20/50, 1 வது தெரு, அண்ணாமலை நகர், மேட்டுபாளையம், மேற்கு மாம்பலம், சென்னை-33, நாள்: 25.04.2022
<u>ஆட்சேபணை 19:</u> 01.04.2022 முதல் சொத்துவரி 150% சதவீதம் உயர்வு செய்வதாக அரசால், அறிவிக்கப்பட்டது. 8 ஆண்டுகளுக்கு முன்பு தனது வணிக கட்டிடத்திற்கு வரி நிர்ணயிக்கப்பட்டதால், 150% சதவீதம் வரி உயர்வு நியாயமற்றது. இந்த உயர்வை கைவிட வேண்டும். சொத்துவரியினை 10% என்ற அளவில் உயர்வு செய்ய பரிசீலிக்க வேண்டுகிறேன்.	
<u>ஆட்சேபணை-19-க்கான பதில் :</u> சொத்துவரி மறு மதிப்பீடு என்பது, மதிப்பீடுகளில் உள்ள குறைபாடுகளை களைந்து ஒழுங்குபடுத்துவது ஆகும். பொது சீராய்வு என்பது அனைத்து மதிப்பீடுகளுக்கும் சொத்துவரி உயர்வு மேற்கொள்வது ஆகும். எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.	
20	ப்பி. முரளிதரன், செயலாளர், Nanganallur Eastern Sector Residents' Welfare Association 10/8, 22 வது தெரு, சென்னை-600 061, நாள்: 22.04.2022
21	பு.ஸ்ரீதர்பாபு, துணை தலைவர், Federation of Nanganallur Welfare Associations, 5th Main Road, Lakshmi Nagar, நாள்: 25.04.2022
22	ஆர்.பாலசுப்பிரமணியம், செயலாளர், தில்லை கங்கா நகர் மக்கள் நல மன்றம், 5A, 21வது தெரு, தில்லை கங்கா நகர், சென்னை-600 061, நாள் 26.04.22
<u>ஆட்சேபணை 20 21 & 22:-</u> 1) பெருநகர சென்னை மாநகராட்சியுடன் 2011 ஆம், ஆலந்தூர் பகுதி இணைக்கப்பட்டது. 2) 2008 ஆம் ஆண்டில், இணைக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை தெரு கட்டண விகிதம் ரூ.1.25 லிருந்து ரூ.4வரை திருத்தப்பட்டது. 1998ஆம் ஆண்டில், முந்தைய சென்னை மாநகர பகுதிகளில் அடிப்படை தெரு கட்டணம் 0.25 லிருந்து 1.5 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 3) 2022ல் அரசு பிறப்பித்த ஆணையின்படி, இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு 50 சதவீதம் அடிப்படை தெரு கட்டணம் உயர்த்தி, 1.88லிருந்து 6 வரை என்றும், பழைய சென்னை மாநகராடசி பகுதிகளுக்கு 75 சதவீதம் விழுக்காடு உயர்த்தி, 0.43 லிருந்து 2.67 வரை என்றும் வரையரை செய்யப்பட்டுள்ளது (600-1200 சதுர அடி கட்டிட பகுதி). 4) எங்கள் பகுதியில் (நங்கநல்லூர், ஆதம்பாக்கம்) 600சதுர அடி கொண்ட வீட்டிற்கு ரூபாய் 400 முதல் 800 வரை வீட்டு வரியாக செலுத்துபவர்கள் இனி ரூ.3200 லிருந்து 6400 வரை செலுத்த நேரிடும். இது 8 மடங்காக (800%) உயர்ந்து நிற்கிறது. சென்னைப் பகுதிகளில் 700லிருந்து 1500வரைதான் செலுத்த நேரிடும். முக்கால் மடங்கு (75%) மட்டுமே உயரும் 5) 2008 ஆம் ஆண்டு வழிகாட்டி மதிப்பு அடிப்படையில், சென்னை முக்கிய பகுதிகளுக்கு அடிப்படை தெரு கட்டணம் (BSR) கணக்கில் எடுக்காத நிலையில், ஆலந்தூர் நகராட்சி நடைமுறைப்படுத்தாத, தவறான அடிப்படை தெரு கட்டணத்தின்படி (BSR), எங்களுக்கு வீட்டு	

வரி நிர்ணயம் செய்வது சரியானது அல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது. 6) இணைக்கப்பட்ட பகுதிகள், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகள் என்ற வேறுபாடு இல்லமால், பெருநகர சென்னை மாநகரட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தற்போதைய நில வழிகாட்டி மதிப்பின்படி, ஒரே சீரான வரியினை விதிக்க வேண்டும். 7) சென்னை வாசிகளுக்கு இணையாக எங்களுக்கு வீட்டு வரியினை நிர்ணயிக்க வேண்டும்.	
<u>ஆட்சேபணை 20, 21 & 22-க்கான பதில் :-</u> தற்போது அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளுக்கு (மண்டலம்-12-ல் உள்ள முந்தைய ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட நங்கநல்லூர், ஆதம்பாக்கம் போன்ற பகுதிகள்), முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளை விட குறைந்த அளவிலேயே சொத்துவரி உயர்வு காரணி பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில், அதிக பட்ச அடிப்படை தெரு கட்டணம் உள்ள இனங்களுக்கு, அந்தந்த உள்ளாட்சி பகுதிக்கு அருகில் இருக்கும், முந்தைய சென்னை மாநகராட்சி பகுதியின் அடிப்படை தெரு கட்டணத்தைவிட, குறைவாக மன்றத்தின் அனுமதியுடன் நிர்ணயம் செய்யப்படும். தற்போதைய சொத்துவரி சீராய்வில், ஆட்சேபணை மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வரி உயர்வு 800% என்ற அளவிற்கு நிர்ணயிக்கப்பட வாய்ப்பில்லை.	
23	தலைவர், Parsn Guruprasad Residential Complex Owners Association, 432 (ப.எண். 204), டி டி கே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-18, நாள் 26.04.2022
எனவே, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு மதிப்பீட்டினையும், சொத்துவரி பொது சீராய்வினையும் தொடர்புபடுத்துவது ஏற்புடையதாக கருதப்படாது. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது அவசியமாகும்.

மாண்புமிகு நீதிமன்றம் மற்றும் வரிவிதிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால், குறிப்பிட்ட சொத்துவரி மதிப்பீடுகள் தொடர்பாக ஆணைகள் வழங்கப்பட்டு இருப்பின், அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் 2011 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து அதிகளவில் ஆட்சேபணைகள்/ கருத்துக்கள் பெறப்பட்ட நிலையிலும், 2018 ஆம் ஆண்டு மேற்கொண்ட பொது சீராய்வினை அடுத்து பெறப்பட்ட கருத்துக்கள், தற்போது சீராய்வின் போது கருத்தில் கொண்டு தீர்வு செய்யும் முகமாக, இணைக்கப்பட்ட மண்டலங்களில் சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் தலைமையில் கூடுதல் வருவாய் அலுவலர், மண்டல செயற்பொறியாளர்கள் மண்டலம் - 1,3,7,11 & 12, வட்டார உதவி வருவாய் அலுவலர்கள், உதவி வருவாய் அலுவலர்கள் மண்டலம் - 1,3,7, 11 & 12 ஆகியோர் அடங்கிய குழு ஒன்று முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 19.04.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி அமைத்து அறிக்கை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்குழுவானது தனது அறிக்கையில், இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அடங்கிய மண்டலங்களான திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், போரூர் மற்றும் ஆலந்தூர் ஆகியவற்றில் உள்ள முந்தைய நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள சில அடிப்படை தெரு கட்டணங்கள், முந்தைய சென்னை மாநகராட்சி மண்டலங்களை விட அடிப்படை தெருக் கட்டணம் அதிகமாக உள்ளது என சொத்து உரிமையாளர்கள் ஆட்சேபணைகள் தெரிவித்து உள்ளனர் என குறிப்பிட்டு, இவற்றிற்கு, அருகாமையில் அமைந்துள்ள முந்தைய சென்னை மாநகராட்சி மண்டலங்களை விட அடிப்படை தெரு கட்டணங்கள் அதிகளவில் இல்லாதவாறு தற்போது பொது சீராய்வில் உயர்வு காரணி, நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில், சொத்துவரி பொது சீராய்வினை 2022 -23 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு முதல் அதாவது 1/2022-23 மேற்கொள்ள,

1. குழுவின் பரிந்துரையினை ஏற்று

(அ) முந்தைய திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், போரூர் மற்றும் ஆலந்தூர் மண்டலங்களில் அடங்கிய, முந்தைய நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் சில பகுதிகளில் உள்ள குடியிருப்பு இனங்களுக்கு, சொத்துவரி பொது சீராய்வில் உயர்வு செய்யப்படும் அடிப்படை தெரு கட்டணமானது அருகாமையிலுள்ள முந்தைய சென்னை மாநகராட்சி மண்டலங்களில் அதிகப்படியாக நிர்ணயம் செய்யப்படவுள்ள அடிப்படை தெரு கட்டணத்திற்கு மிகாமலும், தற்போதுள்ள அடிப்படை தெரு கட்டணத்தை விட குறைவாக இல்லாதவாறு சொத்துவரி பொது சீராய்வுக்கான உயர்வு காரணி நிர்ணயம் செய்யவும், இதனடிப்படையில் அப்பகுதிகளின் பிற இனங்களான குடியிருப்பு அல்லாதவை, தொழிற்சாலைகள் மற்றும் கல்விநிறுவன கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு சொத்துவரி பொது சீராய்வுக்கான உயர்வு காரணி நிர்ணயம் செய்யவும்,

(ஆ) மேற்கண்ட தெருக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் உயர்வு காரணியை தவிர்த்து மீதமுள்ள முந்தைய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளிலுள்ள குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத பிற இனங்களுக்கு, கீழ்கண்ட அட்டவணையில் வரிவிதிப்பு இனங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையே 'உயர்வு காரணி'யை தற்போது நடைமுறையிலுள்ள அடிப்படை தெரு கட்டணத்துடன் *(BSR)* பெருக்கி *(Existing Basic Street Rate X Increase Factor)* அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு முதல் அதாவது 1/2022-23 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும்,

வரி விதிப்பு இனங்கள்	முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு	2011 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு
	உயர்வு காரணி	உயர்வு காரணி
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 600 சதுரஅடி வரை	1.50	1.25
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 601 சதுர அடி முதல் 1200 சதுர அடி வரை	1.75	1.50
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 1201 சதுர அடி முதல் 1800 சதுர அடி வரை	2.00	1.75
குடியிருப்பு கட்டிடங்கள் பரப்பளவு 1801 சதுர அடி முதல்	2.50	2.00
தொழிற்சாலை	2.00	1.75
குடியிருப்பு அல்லாத பகுதி	2.50	2.00
சிறப்பு வகை கட்டிடங்கள் (தங்கும் விடுதி, கல்யாண மண்டபம், மருத்துவமனை, திரையரங்கம்)	குடியிருப்பு அல்லாத பகுதி இணையாக வரி விதிக்கப்பட வேண்டும்.	குடியிருப்பு அல்லாத பகுதி இணையாக வரி விதிக்கப்பட வேண்டும்.
தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்கள்	2.00	1.75

சொத்துவரி சீராய்வின் போது எளிமையாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் சொத்துவரி பொது சீராய்வு அறிவிப்புகளை பெற, தற்போதைய சொத்துவரியினை மேற்குறிப்பிட்ட விரிவிதிப்பு இனங்களுக்கு முறையே குறிப்பிடப்பட்டுள்ள 'உயர்வு காரணி'யை கொண்டு பெருக்கி அதன் அடிப்படையில் சொத்துவரி பொது சீராய்வினை மேற்கொள்ளவும், அவ்வாறு நிர்ணயிக்கப்படும் அரையாண்டு சொத்து வரி, அடுத்து வரும் ரூபாய் 5 (உதாரணம்: ரூபாய் 1091 என வருமாயின் அதனை ரூபாய் 1095 எனவும், ரூ.1096 என வருமாயின் அதனை ரூபாய் 1100) என *roundoff* செய்து ஆணை வழங்கவும் .

சொத்துவரி பொது சீராய்வுக்கு பின்னர் வரிகுறைவாக மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் கண்டறியப்படின் அவை நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் விதிகளின்படி திருத்தியமைத்து ஆணை வழங்கவும்.

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் பகுதிகளில் உள்ள சிறப்பு வகை கட்டிடங்களுக்கு (1. தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல் 2. கல்யாண மண்டபம், 3. திரையரங்கம், 4. மருத்துவமனை) அவைகள் வசூலிக்கும் கட்டணம்/வாடகை அடிப்படையில் விதிக்கப்பட்டு வரும் சொத்துவரிக்கு பதிலாக, குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு விதிக்கப்பட்டு வரும் சொத்துவரி போல், கட்டிடத்தின் பரப்பளவிற்கேற்ப குடியிருப்பு அல்லாத அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) சொத்துவரி நிர்ணயம் செய்து, அதன் அடிப்படையில் நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும், (சிறப்பு வகை கட்டிட உரிமையாளர்கள் 2021-2022-ன் இரண்டாம் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தியவர்களுக்கு, சொத்துவரி பொது சீராய்வினை நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் மேற்கொள்ளவும் மற்றும் சொத்துவரியினை 2021-2022 இரண்டாம் அரையாண்டு வரை செலுத்தாதவர்கள் 2021-2022 இரண்டாம் அரையாண்டு வரை செலுத்திய பின்னர், அக்கட்டிடங்களுக்கு கட்டிடத்தின் பரப்பளவிற்கேற்ப குடியிருப்பு அல்லாத அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) 2022-23 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி நிர்ணயம் செய்து, அதன் அடிப்படையில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும்)

மற்றும்

இனிவருங்காலங்களில் தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல், கல்யாண மண்டபம், திரையரங்கம், மருத்துவமனை ஆகிய இனங்களுக்கு மேற்கொள்ளப்படும் புதிய சொத்துவரி மதிப்பீடுகள், மறுமதிப்பீடுகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை 2/2021-22 வரை சிறப்பு வகை கட்டிடத்தின் அடிப்படையிலும், அதன் பின்னர் நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு விதிக்கப்பட்டு வரும் சொத்துவரி போல் கட்டிடத்தின் பரப்பளவிற்கேற்ப தற்போது பொது சீராய்விற்கு பின்னர் நிர்ணயம் செய்யப்படவுள்ள புதிய குடியிருப்பு அல்லாத அடிப்படை தெரு கட்டணத்தில் (BSR) மேற்கொள்ளவும்,

3. காலிமனை வரியானது, 600 சதுர அடிக்கு கீழ் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்படவுள்ள அடிப்படை தெரு கட்டணத்தில் 50 சதவீதம் என நிர்ணயம் செய்யவும், வணிகரீதியாக உபயோகப்படுத்தப்படும் காலிமனைகளுக்கான மதிப்பீடுகளுக்கு 600 சதுரஅடிக்கு கீழேயுள்ள கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்படும் அடிப்படை தெரு கட்டணத்தில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும், இவ்விரு இனங்களுக்கும் காலிமனை வரி குறைந்தபட்சமாக சதுரஅடிக்கு ரூ.0.50 மற்றும் அதிகப்பட்சமாக ரூ.1.00 என நிர்ணயம் செய்யவும்.

காலிமனைகளில் கட்டப்படும் கட்டிடங்களில், கட்டிடத்தின் பரப்பளவில் இரண்டு மடங்கை விட, மீதமுள்ள காலியாக உள்ள நிலத்தின் அளவீடுகளுக்கு காலிமனை

வரியும் சேர்த்து விதிக்கவும், (எ.கா) ஆயிரம் சதுர அடி நிலத்தில் 300 சதுர அடி பரப்பளவு உள்ள கட்டிடம் கட்டப்படுமாயின், *300x2=600* சதுர அடி தவிர்த்து மீதமுள்ள 400 சதுர அடி காலிமனைக்கு, காலிமனை வரி விதிக்கப்பட வேண்டும். இதனை நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-*23* முதல் நடைமுறைப்படுத்தவும்,

4. சென்னை மாநகரில் ஆண்டு மதிப்பானது அடிப்படை தெரு கட்டணத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. சொத்துவரியானது ஆண்டு மதிப்பில் குறிப்பிட்ட சதவீதமாகும். ஒவ்வொரு நகரமும் தற்போதைய கட்டண வீதத்தை (ஆண்டு மதிப்பில் விதிக்கப்படும் வரி) தள வீதமாக அறிவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 99(2)ன்படி ஆண்டு மதிப்பில் 9 சதவீதம் பொது வரியாகவும், 2.5 சதவீதம் கல்வி வரியாகவும் மற்றும் 0.90 சதவீதம் நூலகத் தீர்வை என 12.40 சதவீதம் அரையாண்டு சொத்துவரியாக விதிக்கப்பட்டு வருகிறது. இதனை சொத்துவிதிப்புக்கான தள வீதமாக *(Floor Rates)* கருதவும்,

5. தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு, தற்போது குடியிருப்பு தெரு கட்டணத்தில் விதிக்கப்படும் சொத்துவரியுடன் கூடுதலாக 60 சதவீதம் மிகைவரி (Surcharge) விதிக்கப்படுவதற்கு பதிலாக, குடியிருப்பு அடிப்படை தெரு கட்டணத்தில் *(BSR) 1.6* மடங்கு என சொத்துவரி விதிக்கவும், ஏற்கனவே மிகைவரி விதிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிதி உதவி பெற்று இயங்கும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி அடிப்படையில் செயல்படும் கல்வி நிறுவன மதிப்பீடுகளுக்கு சொத்துவரி பொது சீராய்வின் போது மிகைவரியினை நீக்கி அதனை சொத்துவரியில் கணக்கில் கொண்டும் வரும் நிலையில் அம்மதிப்பீடுகளில் மிகைவரியினை நீக்கம் செய்து, அதன் பினனர் அட்டவணையில் குறிப்பிட்டவாறு உயர்வு காரணியை கொண்டு சொத்துவரி பொது சீராய்வினை நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-*23* முதல் மேற்கொள்ளவும்,

6. கடந்த 5 ஆண்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் *(GSDP)* சராசரி வளர்ச்சி வீதம் அல்லது 6 சதவீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் அடிப்படை தெரு கட்டணத்தை உயர்த்தி அடுத்துவரும் ஒவ்வொரு நிதி ஆண்டின் முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி உயர்வு மேற்கொள்ளவும்,

7. பொது சீராய்வின் போது கட்டிடத்தின் வயதுகேற்ப கழிவுகள் அனுமதித்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படவேண்டும், கட்டிட வயதுகேற்ப கழிவினை அனுமதிப்பதில், தேவையற்ற முரண்பாடுகளை களையும் முகமாக " சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பின்னர் சொத்துவரி மறுமதிப்பீடு மேற்கொள்ளப்படாத இனங்களில் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தின் அடிப்படையில் கட்டிடத்தின் வயதினை முடிவு செய்யவும், சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பின்னர் மறு மதிப்பீடு செய்யப்பட்ட/செய்யப்படும் இனங்களில், ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிட பரப்பளவிற்கு முந்தைய மதிப்பீடு அடிப்படையில் கட்டிட கழிவினை இறுதி செய்யவும் அதன் பின்னர் மறுமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு இருப்பின் அவ்வாணை/அவ்வாணைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தின் அடிப்படையில் கட்டிடத்தின் கழிவினை இறுதி செய்து" கீழ்கண்டவாறு கழிவு அனுமதித்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும்,

தேய்மானம் அனுமதிக்கப்படும் காலம்	கழிவு அனுமதி
புதிய மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 மார்ச் மாதம் வரை கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 மார்ச் மாதம் வரை மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	10 சதவீதம்
புதிய மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 ஏப்ரல் முதல் 2007 மார்ச் வரையிலான காலத்திற்குள் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 1997 ஏப்ரல் முதல் 2007 மார்ச் வரையிலான காலத்திற்குள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	6 சதவீதம்
புதிய மதிப்பீடு கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2007 ஏப்ரல் முதல் 2017 மார்ச் வரையிலான காலத்திற்குள் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2007 ஏப்ரல் முதல் 2017 மார்ச் வரையிலான காலத்திற்குள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	3 சதவீதம்
புதிய மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2017 ஏப்ரல் முதல் கட்டப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை மற்றும் மறு மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிவிப்புகளில் 2017 ஏப்ரல் முதல் செய்யப்பட்ட கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளவை	இல்லை

8. பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளிலுள்ள தொழிற்சாலை இனங்களுக்கு சொத்துவரி சீராய்வுயானது தற்போது அடிப்படை தெரு கட்டணத்தில் முறையே 1.75 மற்றும் 2.00 என உயர்வுகாரணி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், சொத்து வரி விதிப்புகள் கட்டிடங்கள் உபயோகம் அடிப்படையில் விதிக்கப்படுவதால், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநகரத்தால், தொழிற்சாலை சட்டம் 1948-ன்படி உரிமம் வழங்கப்பட்ட இனங்களுக்கு மட்டுமே "தொழிற்சாலை உபயோகம்" என்பதன் அடிப்படையில் சொத்துவரி சீராய்வு மற்றும் புதிய சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும்,

9. இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள குடியிருப்பு / குடியிருப்பு அல்லாத/ தொழிற்சாலை / தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் இயங்கி வரும் சுயநிதி வகுப்பு கட்டிடங்கள் / காலிமனைகள் ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்படும் புதிய/மறு/திருத்திய சொத்துவரி மதிப்பீடுகள் அனைத்தும் 2/2021-2022 வரை தற்போதைய அடிப்படை தெரு கட்டணம் அடிப்படையில் மேற்கொள்ளவும், நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல், பத்தி-1ன்படி உயர்வு காரணியை

கொண்டு நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை தெரு கட்டணங்களை, புதிய அடிப்படை தெரு கட்டணமாக நிர்ணயித்து சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளவும், அவ்வாறு கணக்கிடும் நிகழ்வில் நிர்ணயிக்கப்படும் அரையாண்டு சொத்து வரியானது, அடுத்து வரும் ரூபாய் 5 (உதாரணம்: ரூபாய் 1091 என வருமாயின் அதனை ரூபாய் 1095 எனவும், ரூ.1096 என வருமாயின் அதனை ரூபாய் 1100) என *roundoff* செய்து ஆணை வழங்கவும் .

10. சொத்து வரி பொது சீராய்வு தொடர்பாக உரிய நாளது தேதி வரை பெறப்பட்ட கருத்துருக்கள், ஆட்சேபணைகள் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதில்களை அனுப்பவும்,

மேற்கண்ட 1 முதல் 10 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

R.D.C.No.TL/7630/2013-21

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *26.04.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.64 **பொருள் எண்.23**

Greater Chennai Corporation – Revenue Department - Trade Licence – Issuance of Trade Licence for SPA, Massage & Beauty Parlour –Terms and Conditions – Rules Framed and inclusion of above New Trades in Schedule-VI of CCMC Act 1919 – For approval.

Consequent to the Writ Petitions filed in the Hon'ble High Court, to bring the following New Trades in CCMC Act 1919;

1) Hair Cutting Saloon & Beauty Parlour, Without partition or room;
2) Beauty Parlour, Spa or Massage Parlour, With partition or room or sauna or Bathing facilities

the Government in its G.O(Ms) No.15, Municipal Administration and Water Supply (M.C.1) Department, dated.31.01.2019 have ordered to notify them in the Government Gazette to bringing them inforce.

Accordingly, a Government Gazette No. 38, dated 31.01.2019 was published. Following this, a set of terms and conditions have been prescribed for these trades and published them in the Government Gazette vide Gazette No. 9, dated 27.02.2019

Against the terms and conditions, Writ Petitions have been filed. The Hon'ble Court in a Writ Petition 1854/2021, has ordered to revisit the conditions. While ordering so, the Hon'ble Court has not stayed the operation of Gazette.

In view of the direction of Hon'ble Court, it has been decided to revise the conditions prescribed for the above trade selectively as follows.

S. No	Nature of Trade	Conditions imposed earlier	Revised Conditions proposed now
1)	Hair Cutting Saloon & Beauty Parlour, without partition or room;	1) Possessing of requisite Technical qualifications by the traders and employee. 2) NOC from Police and NOC from Zonal Health Officer/GCC. 3)Other General Conditions.	The Clause of qualification and NOC are dispense with. However other general conditions to be applied.
2)	Beauty Parlour with partition or room or sauna or bathing facilities,Spa or Massage parlour		No Changes are necessitated, but to continue the Conditions already published.

While perusing action so, the Hon'ble Court in the same Writ Petition on 03.03.2022, has ordered the following;

" ..... As prayed for by the learned counsel for the Chennai City Corporation, let these matters be listed 18.03.2022. It is not only to re-visit the Notification for issuance of the licence, the matter would be examined for all angles which may not only be regarding the conditions for grant of licence, but whether it can be brought by way of rule or bye-laws in accordance with the provisions of the Chennai City Municipal Corporation Act...."

After a detailed examination of the subject, it is decided to bring a separate set of Rules for these trades and to include them in the CCMC Act 1919 under a separate head with a approval of Government.

DRAFT RULES

"Chennai City Municipal Corporation Licensing of Hair Cutting Saloon, Beauty Parlour, Spa and Massage Parlour Rules, 2022"

1. Short title, extent and Commencement- (a) These rules may be called Chennai City Municipal Corporation Licensing of Hair Cutting Saloon, Beauty Parlour, Spa and Massage Parlour Rules, 2022
(b) It extends to the territorial jurisdiction of Greater Chennai Corporation
(c) It shall come into force at once

2. Definitions.-(1)In these rules, unless the context otherwise requires:

a) "Act" means the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919)
b) "Council" means the Council of Chennai Municipal Corporation.,
c) "Commissioner" mean the Commissioner of Greater Chennai Corporation
d) "License" means a license granted under Rule 3 and Rule 7
e) "Zone" means any one of administrative Zones of Greater Chennai Corporation
f) "Zonal Officer" means the Zonal Assistant Commissioner of the Zone concerned

(2) Words and expressions used, but not defined in these Rules shall have the meanings respectively assigned to them in the Act,

3. Grant of licence for Hair Cutting Saloon & Beauty Parlour without partition or room

(1) No place within the limits of the city shall be used as a Hair Cutting Saloon & Beauty Parlour without partition or room without a license obtained under Section 287 of the Act from the Commissioner and except in accordance with conditions specified in Rule 6

4. Form and manner of making application for license

(1) Every application for a license under Rule 3 shall be made in Form – 'A'
(2) The application shall be submitted by the applicant, duly signed to the Zonal Officer of the Zone concerned or on the GCC website
(3) The application shall be accompanied by a fee according to the classification given below:

(a) Rs. 200/- in case of a Non A/C Hair cutting saloon or Beauty Parlour without Partition or room.
(b) Rs. 500/- in case of an A/C Hair cutting saloon or Beauty Parlour without Partition or room

5. Scrutiny and Grant of License

(1) Every application made under Rule 4 shall be scrutinized by the License Inspector including spot inspection of the premises and put up to the committee constituted with Government service departments under a "Single Window System".

(2) The following shall be the members of the Committee:

(a) Chairman – Zonal Officer
(b) Convener – Assistant Revenue Officer

(c) Member – Zonal Executive Engineer
(d) Member – Traffic Inspector concerned
(e) Member – Fire Officer
(f) Member – Zonal Health Officer
(g) TNPCB – Superintendent

(3) The Committee shall meet every month to dispose the licence applications received

6 Conditions for grant of licence under Rule 3

(1) No person shall use any premises as a Hair Cutting saloon and Beauty parlour without partition or room unless:-

a) it is constructed of masonry, or of such other durable material as may be approved by the Commissioner, and

b) every part thereof is constructed of non-inflammable material.

(2) Every person in charge of such premises shall cause every part of the flooring in such premises to be paved or otherwise made impervious and drained to the satisfaction of the commissioner and such flooring shall, at all times, be kept in good order and repair.

(3) Uniforms and identity Cards to be maintained for all staff concerned.

(4) The officials for Greater Chennai Corporation / Police officers shall be permitted to inspect the trade premises in the event of if any complaints against the trade are received.

(5) Opening and closure Timings to be followed as specified by the Labour Department, Govt. of Tamil Nadu.

(6) He/ She shall cause every part of the internal surface of the walls and ceiling of every building upon such premises to be painted properly.

(7) He/ She shall provide suitable covered receptacles in suitable places in such premises for the deposit of all refuse matter and shall cause such receptacles to be emptied at least once in every twenty-four hours in a hygienic manner.

(8) He/ She shall provide in such shops a sufficient supply of potable and wholesome water for the visitors.

(9) First aid kit shall be kept in the premises.

(10) He/ She shall provide suitable means of drainage upon or in connection with such premises and shall cause the same to be maintained, at all times in good order.

(11) He/ She shall provide suitable means of ventilation and lighting upon or in connection with such premises and shall cause the same to be maintained, at all times in good order.

(12) He/ She shall provide in such premises a sufficient supply of water.

(13) No person suffering from an infectious or contagious diseases shall carry on the business of a barber or be employed in or assist in the carrying on of such business.

(14) Every employee working in such premises shall wear a clean proper dress when attending on any customer.

(15) Every employee shall wash his hands thoroughly with soap and water before and after serving each customer.

(16) The instruments used for a customer shall be thoroughly cleaned and disinfected before using it to the another customer.

(17) Every shaving mug and brush shall be thoroughly rinsed in hot water after each use.

(18) At the end of every day, every brush, towel and comb used in the premises shall be sterilized by being immersed in boiling water or disinfected in such disinfectant as may be approved by the Commissioner.

(19) Safety of customers should be given priority while using cosmetics at any point it should not cause any skin allergies.

(20) No person shall spit in such premises except in such receptacles or places as are provided for the purpose.

(21) No person suffering from any infectious or contagious disease shall be admitted or be served on such premises.

7. Grant of licence for SPA, Massage parlour and Beauty Parlour with partition or room or sauna or Bathing facilities

(1) No place within the limits of the city shall be used as a SPA, Massage Parlour or Beauty Parlour with partition or room or sauna or Bathing facilities without a license obtained under Section 287 of the Act from the Commissioner and except in accordance with conditions specified in Rule 10

8. Form and manner of making application for license

(1) Every application for a license under Rule 7 shall be made in Form – 'B'

(2) The application shall be submitted by the applicant, duly signed to the City Revenue Officer, Greater Chennai Corporation or on the GCC website

(3) The application shall be accompanied by a fee according to the classification given below:

(a) Rs. 2500/- for Beauty Parlour with partition or room or sauna or bathing facilities /Spa/Massage parlour up to 500 Sq. feet.

(b) Rs. 5000/- for Beauty Parlour with partition or room or sauna or bathing facilities /Spa/Massage parlour from 501 Sq.feet to 1000 Sq. feet.

(c) Rs. 7500/- for Beauty Parlour with partition or room or sauna or bathing facilities /Spa/Massage parlour above 1000 Sq. feet.

9. Scrutiny and Grant of License

(1) The City Revenue Officer shall scrutinize every application made under Rule 7 himself or through an Assistant Revenue Officer authorized by the Commissioner including spot inspection of the premises.

(2) The City Revenue Officer shall then forward the application to the Commissioner, Greater Chennai Police and the City Health Officer, Greater Chennai Corporation for a "No Objection Certificate".

(3) On receipt of both the NOCs and on satisfying himself that the applicant may be given License to operate Beauty Parlour with partition or room or sauna or bathing facilities/Spa/Massage parlour, the City Revenue Officer shall approve the license.

10.Conditions for grants of licence under Rule 7

(1) The licensee should possess a degree offered by any of the recognized universities in.

a. Physiotherapy (BPT) with 4 years duration and 6 months compulsory internship; OR
b. B.Sc., (Occupational Therapy); OR
c. M.Sc., (Occupational Therapy); OR
d. Diploma in Physiotherapy with 3 years duration.

(2) The masseur or masseuse should possess a certificate in

a. Occupational therapy with one year duration offered by any of the recognized universities; OR
b. Acupressure therapy; OR
c. Acupressure yoga science; OR
d. Acupressure and Magneto therapy.

11. General Conditions to be followed by a licensee under Rule 7

1. The external doors of the massage/spa establishment to be kept open during the working hours.

2. Minimum lighting facilities and ventilation to be provided in each room or enclosure where the massage services are to be provided.

3. The Massage services are not to be provided behind locked doors.

4. Uniforms and identity Cards to be maintained for all staff concerned.

5. CCTV Cameras with recording facility should be provided at the entry and exit points without prejudice to the privacy of the clients and employees.

6. Engaging in any form of sexual activity in the premises of the massage / spa establishment shall be prohibited.

7. Register for clients shall be maintained.

8. The officials from Greater Chennai Corporation/Police officers shall be permitted to inspect the trade premises in the event of if any complaints against the trade are received.

9. Opening and closure Timings of the Massage centre/spa shall be followed as specified by the Labour Department , Govt. of Tamil Nadu.

10. The premises of Massage/Beauty parlour with partition of room/Spa should be constructed of masonry, or of such other material as may be approved by the Commissioner.

11. Every part thereof should be constructed of non-inflammable material.

12. Every person in charge of such premises shall cause every part of the flooring in such premises to be paved or otherwise made impervious and drained to the satisfaction of the commissioner and such flooring shall at all times be kept in good order and repair.

13. He/ She shall provide suitable means of drainage upon or connection with such premises and shall cause the same to be maintained at all times in good order.

14. He/ She shall cause every part of internal surface of the walls and ceiling of every building upon such premises to be painted properly.

15. He/ She shall provide suitable covered receptacles in suitable places in such premises for the deposit of all refuse matter and shall cause such receptacles to be emptied at least once in every twenty four hours in a hygienic manner.

16. He/ She shall provide in such shops a sufficient supply of potable and wholesome water, to the visitors.
17. Every person or operator working in such premises shall wash his hands thoroughly with soap and water before and after servicing each customer.
18. Razors shall be a single use and other instruments used for a customer shall be rendered safe immediately after such use by being thoroughly cleansed and dipped for one minute or such longer time as may from time to time be fixed by the Commissioner, in boiling water or disinfected in a disinfectant approved by him.
19. Every utensil used for servicing the customer shall be thoroughly rinsed in hot water after each occasion of use.
20. At the end of every day, every utensil used in the premises shall be sterilized by being immersed in boiling water or disinfected in such disinfectant as may be approved by the Commissioner.
21. First aid kit shall be possessed in the premises.
22. No person shall spit, wash his mouth, smoke or chew inside premises.
23. No person suffering from any contagious or infectious disease shall carry on the business.
24. No banned products as prescribed under Government of Tamil Nadu should be displayed or exposed for sale or use to the customers.
25. The operator shall ensure that all appliances /devices/lotion/ creams used should not in any manner cause allergic reactions or physical injury to the customers.
26. Fire safety norms shall be followed as prescribed.
27. A common register should be maintained for Inspecting authorities to register their observations.

12. Failure to obtain License or Violation of conditions of the license

(1) If any premises within the limits of the city is used as a Hair Cutting Saloon & Beauty Parlour or Spa or Massage Parlour without a license obtained under Section 287 of the Act and Rule 3 and Rule 7 above from the Commissioner or if any of the Conditions specified in Rules 6 ,10 and 11 are found to be violated, the Commissioner shall take action against the person involved in the trade under section 379-A of the Act.

In view of revision of terms and conditions as proposed above, the two categories of trade above may be included in the Schedule-VI of CCMC Act 1919 along with the terms and conditions framed under Head of **"Chennai City Municipal Corporation Licensing of Hair Cutting Saloon, Beauty Parlour, Spa and Massage Parlour Rules, 2022".**Subject approval by Council and Government.

Hence,

1) to include the two categories of new trades namely 1) Hair Cutting Saloon & Beauty Parlour without partition or room; 2) Beauty Parlour with partition or room or sauna or Bathing facilities, Spa or Massage Parlour, in Schedule-VI of CCMC Act 1919,

2) to frame the above Rules Under Head of “Chennai City Municipal Corporation Licensing - Hair Cutting Saloon, Beauty Parlour, Spa or Massage Parlour Rules 2022”,in CCMC Act 1919
3) to address the Government requesting for approval on the proposal above.

Sl.No 1 to 3 above, approval of the Council requested, through Standing Committee (Taxation & Finance).

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

****

R.D.C.No.GIS/5892/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *07.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.65 **பொருள் எண்.24**

Greater Chennai Corporation – Revenue Department – Tamil Nadu Innovation Initiative (TANII) 2022-2023 – State Innovation Fund - Establishing GIS Division in Greater Chennai Corporation – To send the proposal to Government for Administrative Sanction and sanction of grant – For approval.

Wherein Greater Chennai Corporation has submitted a proposal for "Establishing GIS Division in Greater Chennai Corporation" under the Tamil Nadu Innovation Initiative (TANII) 2022-23 – State Innovation Fund at a total project cost of Rs. 827.97 Lakhs to State Planning Commission as detailed below.

TABLE – 1

A. Recurring

(i) Staff Cost				1st Year	2nd Year	3rd Year	4th Year
Sl.No	Name of the Post	No.of posts	salary (per month)	salary (for 12 months)	Salary for 2nd year (Increment of 5% for each year)	Salary for 3rd year (Increment of 5% for each year)	Salary for 4th year (Increment of 5% for each year)
1	GIS Project Manager	1	100000	12,00,000	12,60,000	13,23,000	13,89,150
2	Application Center GIS expert	2	75000	18,00,000	18,90,000	19,84,500	20,83,725
3	GIS Expert (Zone)	15	50000	90,00,000	94,50,000	99,22,500	1,04,18,625
			Total	1,20,00,000	1,26,00,000	1,32,30,000	1,38,91,500
(ii) Other Cost							
sl. No	Name	No.of Zones	Charges (per Month)	Charges (for 12 months)			
4	Transport Charges (Exclusive Vehicle for DGPS survey, Property and Utility updation for zone 1 to 15	15	5,17,5000	62,10,000	65,20,500	68,46,525	71,88,851.25
Note: Vehicle Hir3e charges (Rs.1500/day/zone) x 15 zones =22,500/- per Day. Rs.22,500 per day x 23 working days = Rs.5,17,500/- per month							
B.Non-recurring							
(iii) Other							
Sl.No	Name	No.of Zones	charges (per month)	Charges (for 12 months)			
5	Consumables for DGPS instruments SIM recharge-32 No's catridges for Printer & Plotter and other stationery	-	-	10,00,000	10,50,000	11,02,500	11,57,625
Grand Total				1,92,10,000	2,01,70,500	2,11,79,025	2,22,37,976.25
						Total Rs.	8,27,97,501.25

Objective:

The main objective of the proposed GIS division in GCC is that to strengthen the institutional capacity, improve revenue collection and inform decision making for capital works.

Administrative Setup:

- The GIS division will operate under the administrative control of Deputy Commissioner - Revenue and Finance. The divisional in-charge would report to the DC - R&F or any of his/her nominated officers in GCC.

- Once this division is established, all geo-location based services within GCC will be operated and maintained with the help and support from this GIS control room.

Proposed GIS Division Overview:

GIS Expert team (**outsourcing**)

- GIS Project Manager - 01
- Application Center GIS expert - 02
- GIS Expert (Zone wise) - 15

Support team (**in-house**):

- GIS Expert (Headquarters)(GIS Cell) - 02
- Assessment Officer (GPS Survey - 2 / Zone) - 30
- Junior Engineer (GPS Survey – 2 / Zone) - 30
- I.T. Expert - 01
- MIS Expert - 01

Roles and Responsibilities:

- To update the GIS base maps with necessary geo-referencing, ground verification, etc., as required for all the Regions of Greater Chennai Corporation using existing ortho-rectified satellite imageries/drone imagery.

- To update the property and utility databases on daily basis to keep the GIS database up-to-date and update the spatial database with Geo ID creation using DGPS.

- To assist R&F department of GCC in increasing revenue by providing un-assessed, under assessed related data through GIS database assessment.

The Member Secretary, State Planning Commission have recommended proposal and forwarded the same to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat vide letter dated.02.02.2022, for necessary action & sanction of funds as detailed below:

TABLE - 2

Tamil Nadu Innovation Initiatives(TANNI) for 2022 - 23 (Round-I)							
S.No	Department	Implementing Agency	Name of the Projects	Recommended Outlay (RS. In lakhs)			
				1 st Year	2nd Year	3rd Year	Total
1	Municipal Administration and Water Supply	Greater Chennai Corporation	Establishing GIS Division in Greater Chennai Corporation	192.10	201.70	434.17	**827.97**

The GCC has sent the proposal to State Planning Commission for “Establishing GIS Division in Greater Chennai Corporation” for a period of 4 years with an estimated cost of Rs.827.97 Lakhs under State Innovative scheme, TANII - 2022-23 (Round-I). After appraisal of the proposal with related secretaries to Government and Head of the Departments, the State Planning Commission had recommended the project for a period of 3 years with the total cost of Rs.827.97 Lakhs to Government as per Table – 2.

Budget for the year 2022–23, Demand No. 34, MAWS Department budget publication – 034–02 – Commissioner of Municipal Administration, page no:41, under State Innovation Fund for “Establishing Geographical Information System (GIS) Division

in Greater Chennai Corporation" have been sanctioned for three years with an estimated cost of Rs.827.97 Lakhs.

In this regard, request may be sent to CMA, Government of Tamil Nadu to obtain Administrative sanction for implementation of the project and orders of the Government to sanction a Total Grant of Rs. 827.97 Lakhs for three years under Tamil Nadu Innovation Initiative (TANII) 2022-23 – State Innovation Fund for "Establishing GIS Division in Greater Chennai Corporation".

Hence,

1. To address the government to accord the Administrative Sanction for implementation of the project "Establishing GIS Division in Greater Chennai Corporation" and to get a grant of Rs.827.97 Lakhs for 3 years as stated in the table – 2, under Tamil Nadu Innovation Initiative (TANII) 2022-2023 – State Innovation Fund.
2. To implement the project of "Establishing GIS Division in Greater Chennai Corporation" through Competitive Bidding as per the Tamil Nadu Tender Transparency Act.
3. To implement the above project by IT cell, Electrical Department after getting Administrative Sanction from government.

Sl.No. 1 to 3 above, approval of the Council requested through Standing Committee(Taxation and Finance).

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.5.ந.க.எண்.3504/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.66 **பொருள் எண்.25**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு - 55 , அப்பு மேஸ்திரி தெரு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையை (UPHC) கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 5, பகுதி – 13, வார்டு – 55 க்கு உட்பட்ட அப்பு மேஸ்திரி தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) இயங்கி வருகிறது. தற்போது பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ள இக்கட்டிடம் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்து அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) கட்டிடம் இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்களின் 2021-2022 ஆம் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை மற்றும் முதல் தளம் = 17.10 மீ X 10 மீ = 171 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ.1,20,000/-

எனவே, மண்டலம்-5, வார்டு – 55, அப்பு மேஸ்திரி தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/11500/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.67 **பொருள் எண்.26**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர் (மி) அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.

கண்காணிப்பு பொறியாளர் (மி) அவர்களின் 07.04.2022 நாளிட்ட குறிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்துறையில் பணிபுரியும் திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர் (மி) (தலைமையிடம்) அவர்கள் 30.06.2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அரசின் ஒப்புதல் வேண்டி அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப, மன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் உதவி பொறியாளராக 19.06.1989 அன்று பணியில் சேர்ந்து 19.06.1989ல் பணிவரன்முறைபடுத்தப்பட்டு 19.06.1991 அன்று தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். பின்னர் 12.09.2006 பிற்பகல் முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 12..09.2006ல் உறுதியாக்கம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 17.01.2013 பிற்பகல் முதல் கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு பெற்று அப்பதவியில் 07.01.2013ல் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 17.02.2016 பிற்பகல் முதல் கண்காணிப்பு பொறியாளராக (மின்சாரம்) பணிபுரிந்து வருகிறார். தனியரின் பிறந்த நாள் 09.06.1962ஆகும்.

தனியர், பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் 23.01.1991 அன்று பணியமர்த்தப்பட்டு 09.04.2022 அன்று 31 ஆண்டுகள், 2 மாதங்கள், 17 நாட்கள் பணிபுரிந்து வருகிறார். மேலும் , தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இது நாள் வரை பணியில் இருந்துள்ள காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கிய தணிக்கைத் தடை மற்றும் முன்பண நிலுவை பெற வேண்டி கீழ்கண்ட மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கு குறிப்பு அனுப்பி மண்டலங்கள்/ துறைகளின் அறிக்கைகள் பெறப்பட்டனஅதன் விவரங்கள் அட்டவணை-1ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.:-

அட்டவணை-1

வ. எண்	பணிபுரிந்த காலம்	பதவி	பழைய மண்டலம்	புதிய மண்டலம்
1.	19.06.1989 முதல் 08.07.1991 வரை	உதவி பொறியாளர்	பழைய மண்டலம் - 8	புதிய மண்டலம் - 9
2.	09.07.1991 முதல் 31.08.1991 வரை	உதவி பொறியாளர்	பழைய மண்டலம் - 6	புதிய மண்டலம் - 9
3.	02.08.1991 முதல் 28.06.1995 வரை	உதவி பொறியாளர்	பழைய மண்டலம் - 9	புதிய மண்டலம் - 13
4.	29.06.1995 முதல் 11.09.2006 வரை	உதவி பொறியாளர்	பழைய மண்டலம் - 6	புதிய மண்டலம் - 9
5.	12.09.2006 முதல் 05.03.2008 வரை	உதவி செயற் பொறியாளர்	பழைய மண்டலம் - 10	புதிய மண்டலம் - 13
6.	06.03.2008 முதல் 19.08.2011 வரை	உதவி செயற் பொறியாளர்	பழைய மண்டலம் - 8	புதிய மண்டலம் - 10
7.	19.08.2011 முதல் 06.09.2011 வரை	உதவி செயற் பொறியாளர்	பழைய மண்டலம் - 7	புதிய மண்டலம் - 9
8.	07.09.2011 முதல் 19.12.2011 வரை	உதவி செயற் பொறியாளர்	பழைய மண்டலம் - 9	புதிய மண்டலம் -13

9.	19.12.2011 முதல் 16.01.2013 வரை	உதவி செயற் பொறியாளர்	-	புதிய மண்டலம் - 14
10.	17.01.2013 முதல் 30.03.2015 வரை	கோட்ட மின் பொறியாளர் / தெற்கு	மின்துறை / த.இ	
11.	30.03.2015 முதல் 14.09.2015 வரை	கோட்ட மின் பொறியாளர் / மி	மண்டல அலுவலர் (பொ) / மண்டலம் -10	
12.	14.09.2015 முதல் 16.02.2016 வரை	கோட்ட மின் பொறியாளர்	கண்காணிப்பு பொறியாளர் (பொ) / D/D - வட்டார அலுவலகம் /வடக்கு	
13.	17.02.2016 முதல் 24.08.2016 வரை	கண்காணிப்பு பொறியாளர் / மி	கண்காணிப்பு பொறியாளர்/வடக்கு வட்டார அலுவலகம்	
14.	24.08.2016 முதல் 28.10.2016 வரை	கண்காணிப்பு பொறியாளர் / மி	கண்காணிப்பு பொறியாளர் / சிறப்பு திட்டம்	
15.	28.10.2016 முதல் 26.09.2019 வரை	கண்காணிப்பு பொறியாளர் / மி	கண்காணிப்பு பொறியாளர் / வடக்கு வட்டார அலுவலகம்	
16.	26.09.2019 முதல் 03.10.2019 வரை	கண்காணிப்பு பொறியாளர் / மி	கண்காணிப்பு பொறியாளர் / தெற்கு/ வடக்கு வட்டார அலுவலகம்	
17.	03.10.2019 முதல் 18.07.2021 வரை	கண்காணிப்பு பொறியாளர்/மி	கண்காணிப்பு பொறியாளர் / தலைமையிடம் பணிமாற்று அடிப்படையில் வடக்கு வட்டார அலுவலகம்	
18.	18.07.2021 முதல் இது நாள் வரை	கண்காணிப்பு பொறியாளர்/மி	மின்துறை / தலைமையிடம்	

துறைகள் / மண்டல அலுவலர்களின் பல்வேறு நாளிட்ட கடிதங்களில், தனியர் உதவி மின் பொறியாளர், உதவி கோட்ட மின் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் (மி) ஆக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதும் நிலுவையில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்க 14.02.2022 நாளிட்ட அறிக்கையில் தனியர் "உறுப்பினர் இல்லை " எனவும், தனியர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என, விழிப்பு அலுவலர் அவர்களின் 07.04.2022 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 17.02.2022 நாளிட்ட கடிதத்தில் திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) அவர்கள் உதவி மின் பொறியாளர், உதவி கோட்ட மின் பொறியாளர், கோட்ட மின் பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் (மி) ஆக துறைகள் / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி பின்வரும் அட்டவணை-II கண்டுள்ளவாறு 3 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தணிப்பொறுப்பில் தொகை ரூ.38,394/- நிலுவையில் உள்ளது என்றும், கீழ்கண்ட தணிக்கைத்தடை பத்திகளை நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2020 - 2021, 2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும்.

அன்னார் மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண

நிலுவை எதுமில்லை என்பதற்கான சான்று மண்டல அலுவலர் / துறைத் தலைவரிடமிருந்து பெற்று கோப்பில் இணைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-II

வ. எண்	மண்டலம் / துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட்படுத்தப்பட்டத் தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) பொறுப்பாக்கும் தொகை ரூ.
1.	மின்துறை	2012 -13	12 வ.எ.2	5520	1	5520
2.		2014 -15	8 வ.எ.1,6	1800	1	1800
3		2019 -20	25 (i)ல் வ.எ.1ல் (வ.எ.2)	31074	1	31074
மொத்தம்			3	38394	–	38394

மேற்படி, வரிசை எண் 1 மற்றும் 3 ஆகிய பத்திகளுக்கு முறையே 03/2017- 18/108378, நாள் 01.03.2018, 03/2021-22/1340783, நாள் 25.03.2022, செலான் எண்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு, 25.03.2022 அன்று தணிக்கை கலந்தாய்வு கூட்டத்தில் பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வரிசை எண் 2 ற்கான தணிக்கை பத்தி 17.03.2022 நாளிட்ட இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடிதத்தில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) அவர்கள் 06.04.2022 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில் தான் கடந்த 19.06.1989 முதல் உதவி மின் பொறியாளராக சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து, தற்போது கண்காணிப்பு பொறியாளராக பணிபுரிந்து 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுகிறேன் எனவும், ஓய்வுக்கு பின்னர் தனக்கு வழங்கப்படும் பணிக்கால பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஓரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது தனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் எனவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மி) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2022 ஒய்வு பெறவுள்ளார். தனியர் தற்போது வகிக்கும் பதவி நிலை – 1A ஆகும். நிலை 1A பதவியில் ஒய்வு பெற அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.

மேலும், 2020 – 2021, 2021 – 2022 மற்றும் 2022 – 2023 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்று நிபந்தனைக்குட்பட்டு, திரு.ஆர்.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர்(மின்சாரம்) அவர்களை 30.06.,2022 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு செல்ல அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

* * * * * *

க.துந.க.எண்.இ5/9856/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 17.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.68 **பொருள் எண்.27**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - திரு.R.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் (கல்வி அலுவலர் (பொ)) அவர்கள் 31.05.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் பணிபுரியும் திரு.R.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் (ம) கல்வி அலுவலர் (பொ) அவர்கள் 31.05.2022 அன்று வயதுமுதிர்வு ஒய்வு பெறவுள்ளார்.

தனியர், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வாயிலாக, நேரடி நியமனம் மூலம் முதுகலை பட்டதாரி ஆசிரியராக 20.06.1986 அன்று சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் பணிபுரிந்துள்ள பணி விவரம் கீழ்கண்டவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வ. எண்	பணிபுரிந்த காலம்	வகித்த பதவி மற்றும் பணிபுரிந்த பள்ளி
1	20.06.1986 முதல் 31.10.1991 வரை	முதுகலை பட்டதாரி ஆசிரியர், C.H.S.S, T.H. Road, சென்னை
2	01.11.1991 முதல் 05.08.2004 வரை	முதுகலை பட்டதாரி ஆசிரியர், C.B.H.S.S, நுங்கம்பாக்கம், சென்னை
3	06.08.2004 முதல் 19.10.2004 வரை 20.10.2004 முதல் 19.02.2007 வரை	தலைமை ஆசிரியர் (பொ) தலைமை ஆசிரியர், C.H.S.S, T.H. Road, சென்னை
4	19.02.2007 முதல் 06.06.2007 வரை	தலைமையாசிரியர், C.H.S.S, விருகம்பாக்கம், சென்னை
5	07.06.2007 முதல் 29.06.2012 வரை	தலைமை ஆசிரியர், C.H.S.S, புலியூர், சென்னை
6	29.06.2012 முதல் 30.11.2012 (பி.ப) வரை	தலைமை ஆசிரியர் C.H.S.S, மேற்கு மாம்பலம், சென்னை
7	30.11.2012(பி.ப.) முதல் 13.04.2018 வரை	உதவி கல்வி அலுவலர் கல்வித்துறை, தலைமையிடம்
8	14.04.2018 முதல் இந்நாள் வரை	கூடுதல் கல்வி அலுவலர் மற்றும் கல்வி அலுவலர் (பொ)/ கல்வித் துறை, / தலைமையிடம்

அரசாணை எண்.131, தமிழ்நாடு அரசு (கல்வித்துறை), நாள் 01.02.1991ன் அடிப்படையில், அரசு கடித எண்.103, பள்ளிக்கல்வித்துறை நாள். 01.06.2005 ன்படி தெளிவுரை அளிக்கப்பட்டுள்ள அரசு கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் கல்வித்துறையின் பொது நிர்வாக பணிகள் குறித்து மாநகராட்சி பல்வேறு குழுக்களுக்கு அனுப்ப தேவையில்லை என தெரிவித்து, ஏற்கனவே சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு சென்னை மாநகராட்சி பள்ளிகளை நிர்வகிக்க ஆணையிடப்பட்டுள்ளதையே வலியுறுத்தப்பட்டுள்ளதால், கூடுதல் கல்வி அலுவலர் ஓய்வு பெறும் அதிகாரத்தினை ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண்.181 நாள்.06.10.2009 - ன்படி, அதிகார பகிர்ந்தளிப்பு கீழ் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	பதவியின் பெயர்	அதிகார பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைக்கப்படும் பொருள்கள்	தற்போதுள்ள அதிகாரம் யாரிடம்	இனிவரும் காலங்களில் அதிகாரம் பகிர்ந்தளிப்பு செய்ய வேண்டியது
1.	கூடுதல் கல்வி, வருவாய் மற்றும் சுகாதார அலுவலர்கள், சட்ட அலுவலர்கள் மன்றச் செயலர், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், தலைமை பூச்சியியல் கட்டுப்பாட்டு அலுவலர்	1. பணி நியமணம்	மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெற வேண்டும் .	சென்னை மாநகராட்சி மன்றம்
		2. பணிஓய்வு	மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.	சென்னை மாநகராட்சி மன்றம்
		3. வெளிநாடு செல்ல அனுமதி	மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.	சென்னை மாநகராட்சி மன்றம்

இதில் கூடுதல் கல்வி அலுவலர் அவர்களின் பணி ஓய்வு, மன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களின் 14.04.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி திரு.R.பாரதிதாசன், உதவி கல்வி அலுவலர் அவர்களின் பெயர் முன்னிலையில் இடம் பெற்றுள்ள தேர்ந்தோர் பெயர் பட்டியலின் படி சென்னை மாநகராட்சி கூடுதல் கல்வி அலுவலர் ஆக பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 22.12.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.R.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் / கல்வி அலுவலர் (பொ), பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2022 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெற உள்ளார். முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி, வகுப்பு I B ன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கூடுதல் கல்வி அலுவலர் பதவியின் (IB) ஓய்வு பெறும் அதிகாரத்தினை மன்றத்திற்கு பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு பள்ளி தலைமையாசிரியர்களின் கடிதங்களின்படி, தனியர் பணிபுரிந்த பள்ளிகளில் 20.06.1986 முதல் 30.11.2012 வரையிலான காலத்தில் தனியர் மீது தணிக்கை தடை, முன்பண நிலுவை, ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனத் தலைமையாசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறை/ தலைமையிடம் (ம) சத்துணவு பிரிவில், திரு.R.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுலவர் (ம) கல்வி அலுவலர் (பொ) அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் பணிபுரிந்த காலத்தில், தனியர் மீது தணிக்கைத் தடை / ஒழுங்கு நடவடிக்கை முன்பண நிலுவை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, அலுவலர்கள் கூட்டுறவு சங்க செயலாளர் அவர்களின் 28.01.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ளார் எனவும், அன்னார் மீது கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 02.01.2022 நாளிட்ட குறிப்பில், தனியர் முதுகலை பட்டதாரி ஆசிரியர் , தலைமையாசிரியர்(பொ), தலைமையாசிரியர், உதவி கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர் மற்றும் கல்வி அலுவலர்(பொ) ஆகிய பதவிகளில் பணிபுரிந்த காலங்களில் 1997-1998 ஆம் ஆண்டு முதல் 2019 – 2020 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, நிலுவை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மேலும், *2020 - 2021, 2021*-2022 (ம) 2022-*2023* ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால், வெளியிடப்படவில்லை. மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும், தனியர் பணியாற்றிய காலத்தில், ஏதேனும் தணிக்கைத்தடைபத்திகள் எழுப்பப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின், அப்பத்திகளுக்கு தனியரே முழு பொறுப்பாவார் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கல்வித்துறை சார்த்த தணிக்கைத்தடை பத்திகளுக்கு பொறுப்பு அலுலவர் (கூட்டுப்பொறுப்பு (ம) தனிப்பொறுப்பு) மற்றும் நிதியிழப்பு குறித்து , தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, நிர்வாக ரீதியாக, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், தனியர் பணிபுரிந்த காலங்களில் பணியில் சேர்ந்த நாள்முதல் ஓய்வு பெறும் நாளான 31.05.2022 வரை தணிக்கைத்தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்றும் மற்றும் பணப்பொறுப்புள்ள பதவியில் தனியரால் பெறப்பட்ட முன்பணதொகைகளுக்கான விவரங்களை பகுதி கணக்கு குழுமத்திலிருந்து பெற்று அத்தொகைகள் அனைத்தும் நேர்செய்யப்பட்டு, தனியரைப்பொறுப்பாக்கும் முன்பணத்தொகை நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று துறை / மண்டலம் சார்ந்த தணிக்கைத் தடைகளுக்கு அந்தந்த மண்டலம் சார்ந்த நிர்வாகத்திடமிருந்து தணிக்கைச்சான்று, இன்மை அறிக்கை *(NOC)* பெறப்பட வேண்டும். இப்பொருள் குறித்து சம்மந்தப்பட்ட துறை தலைவர் / மண்டல அலுலவர் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்புத்துறை அவர்களின் *11*.03.2022 நாளிட்ட கடிதத்தில், கீழ் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

The Government in Letter No.12679/FR –III/ 2005 -2 P& AR (FR-III) Dept. dated 26.04.2005 have issued instructions to all Secretaries to Govertnment / Head of the Departments that the departmental authorities need not get clearance from the DAVC in respect of normal retirement on superannuation of the Government Servents.

பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 04.05.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம் (கல்வி) அவர்களின் 09.05.2022 நாளிட்ட கடிதத்தில், திரு.*R*.பாரதிதாசன், (கூடுதல் கல்விஅலுலவர்) கல்வி அலுவலர் (பொ) அவர்கள் பள்ளியில் பணிபுரிந்த காலத்தில் 20.06.1986 முதல் 30.11.2012 வரை தணிக்கைத் தடை நிலுவை ஏதுமில்லை மற்றும், கல்வித்துறையில் பணிபுரியும் காலத்தில் 30.11.2012 முதல் இந்நாள் வரை தனியர் மீதான முன்பண தொகை ரூ.5,04,49,736/- (ரூபாய் ஐந்து கோடியே நான்கு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எழு நூற்று முப்பத்து ஆறு மட்டும்) நிலுவையில் உள்ளது என தெரிவித்து, அதற்கான விவரப்பட்டியல் இணைத்து அனுப்பப்பட்டது. இத்தொகை நேர் செய்யப்படாமல் உள்ளது.

மேற்கண்ட நிலுவையில் உள்ள முன்பணம் தற்போது நடைபெற்று வரும் மாதிரிப்பள்ளிகள் அமைப்பதற்கும், மாணவ/மாணவியர்களின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித்தொகை வழங்கவும் பெறப்பட்டதாகும். இது தொடர் நடவடிக்கை என்பதால் கல்வித்துறையில் கல்வி அலுவலர் (பொ) அவர்கள் ஓய்வுபெற்ற பின் அப்பணியிடத்தில் பணியேற்கும் கல்வி அலுவலர் அவர்களால் மேற்கண்ட முன்பண நிலுவைத்தொகை நேர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திரு.R.பாரதிதாசன், கூடுதல் கல்வி அலுவலர் (ம) கல்வி அலுவலர் (பொ) பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள் மீது தணிக்கைத் தடைபத்திகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் அரசு/ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவற்றிக்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்படுத்தி, தனியரை 31.05.2022 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனகுழு மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கபடுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/2400/2019

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.69 **பொருள் எண்.28**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2019-2020 ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு பெற்ற தலைமை பொறியாளர்கள் - பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானத்தின் (எண்.144/2019,நாள்:26.02.2019)படி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, தலைமைப் பொறியாளர் பதவி உயர்வுக்கு 15.01.2019-ஐ அறுதி நாளாக கொண்ட 2019-2020-ஆம் ஆண்டிற்கு உத்தேச காலிப்பணியிடங்கள் 6 என அறிவித்து, தலைமைப்பொறியாளர் பதவிக்கு முழு தகுதி பெற்ற கீழ்குறிப்பிட்ட அட்டவணை – 1ல் கண்டுள்ள 6 (ஆறு) கண்காணிப்பு பொறியாளர்கள் பெயர்கள் அடங்கிய தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அத்தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள கண்காணிப்புப் பொறியாளர்களை, முதுநிலைப்படி தலைமைப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் காலியாகவுள்ள தலைமைப் பொறியாளர் பணியிடங்களில் பணியமர்வு செய்யவும் கீழ்கண்ட 6 கண்காணிப்பு பொறியாளர்களுக்கு தேர்ந்த பட்டியல்படி, இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடவும் அரசாணை எண்.103, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.01.03.2019 பெறப்பட்டது.

அட்டவணை - 1

வ. எண்.	கண்காணிப்புப் பொறியாளர் பெயர்	தலைமை பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்	பணியில் ஓய்வு பெறும் நாள்
1.	எஸ்.ராஜேந்திரன் கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்)	01.03.2019மு.ப	28.02.2025
2.	திரு.எஸ்.காளிமுத்து (பூங்கா, விளையாட்டுத் திடல்)	01.03.2019மு.ப	30.04.2023
3.	திரு.கே.சின்னசாமி (கட்டடத்துறை) (வயது முதிர்வு ஓய்வு நாள்.31.05.2019)	01.03.2019மு.ப	தனியர் 31.05.2019 வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார்
4.	திரு.எல்.நந்தகுமார் (மழைநீர் வடிகால் துறை)	01.03.2019மு.ப	31.05.2023
5.	திரு.எம்.முருகன் மத்திய வட்டார அலுவலகம் (வயது முதிர்வு ஓய்வு நாள்.31.03.2019)		தனியர் 31.03.2019 வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார்
6.	திரு.பி.துரைசாமி (வடக்கு வட்டார அலுவலகம்)	01.06.2019மு.ப	31.08.2022

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 01.03.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி மேற்படி, அட்டவணை – 1ல் கணடுள்ள 6 நபர்கள் கொண்ட இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி, தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 5ல் கண்டுள்ள திரு. எம். முருகன் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.03.2019 ஒய்வு பெற்ற காரணத்தால், மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 5ல்கண்டுள்ள நபரை தவிர,

வரிசை எண். 1,2,3 மற்றும் 4ல் கண்டுள்ள கண்காணிப்பு பொறியாளர்களுக்கு தலைமை பொறியாளர் பதவியில் பணியமர்வு செய்யப்பட்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 01.06.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மேற்படி அட்டவணை – 1ல் கணடுள்ள தெரிவுப்பட்டியலில் வரிசை எண். 6ல் இடம் பெற்றுள்ள கண்காணிப்பு பொறியாளர் திரு. பி. துரைசாமி அவர்களுக்கு 01.06.2019 அன்று தலைமை பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணியமர்வு செய்யப்பட்டார்.

பொதுத்துறையின் பொ.து.ந.க.எண்.ஈ13/சிறப்பு/2022, நாள்.25.04.2022, குறிப்பில் மேற்படி அட்டவணை – 1ல் கண்டுள்ள பட்டியலில் தலைமை பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, 2019-2020 ஆம் ஆண்டில் தலைமை பொறியாளர் பதவியில் பணியமர்வு செய்யப்பட்ட 5 நபர்களுக்கு அப்பதவியில் பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறைபடுத்தபட வேண்டும். மேலும், தலைமை பொறியாளர் பதவி வகைப்படுத்தப்படாத பதவி என்பதால், அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த மன்றத் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

கடந்த 2013-2014 ஆண்டில் தலைமைப் பொறியாளர் பதவி வகித்த 1) திரு.வி.சி.ராஜசேகரன் மற்றும் 2) திரு.ஆர்.சீனிவாசன் ஆகியோரின் பணிவரன்முறை மன்றத்தின் வாயிலாக ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றி பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிவரன்முறை செய்யப்பட்டது.

எனவே, 2019-20 ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவி உயர்வு பெற்ற கீழ்கண்ட 5 நபர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைபடுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	தலைமை பொறியாளர்களின் பெயர்கள்	தலைமை பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்.	பணிவரன்முறைப் படுத்தப்பட வேண்டிய நாள்.	ஒழுங்கு நடவடிக்கை விவரம்
1.	எஸ்.ராஜேந்திரன் தலைமை பொறியாளர் (பொது)	01.03.2019மு.ப	01.03.2019மு.ப	ஏதும் இல்லை
2.	திரு.எஸ்.காளிமுத்து தலைமை பொறியாளர் (கட்டடம் (ம) பாலங்கள்	01.03.2019மு.ப	01.03.2019மு.ப	ஏதும் இல்லை
3.	திரு.கே.சின்னசாமி (கட்டடத்துறை) **(வயது முதிர்வு ஓய்வு நாள்.31.05.2019)**	01.03.2019மு.ப	01.03.2019மு.ப	ஏதும் இல்லை
4.	திரு.எல்.நந்தகுமார் தலைமை பொறியாளர்(பூங்கா)	01.03.2019மு.ப	01.03.2019மு.ப	ஏதும் இல்லை
5.	திரு.பி.துரைசாமி தலைமை பொறியாளர்(திட்டம்)	01.06.2019மு.ப	01.06.2019மு.ப	ஏதும் இல்லை

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/824/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.70 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை -சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள சென்னை அரசினர் தோட்டம் (ஓமந்தூரார் மருத்துவ வளாகம் உள்) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அவர்களின் 11/04/2022 நாளிட்ட நேர்முக அரசு கடிதத்தில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னையில் திருவுருவச்சிலை அமைத்திட, அண்ணா சாலை, சென்னை அரசினர் தோட்டம் (ஓமந்தூரார் மருத்துவ வளாகம் உள்) Opp to The mall / P.ORR & Sons – என்ற இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கையினை உச்ச நீதிமன்ற வழக்கு Special Leave to Appeal (Civil) No.8519/2006- ல் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு உட்பட்டு உள்ளதா என்ற விவரத்தினையும் சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து தடையின்மை சான்றிதழ்களை பெற்றும் அரசுக்கு வரும் 18.04.2022-க்குள் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட 16.04.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட பொருள் தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர மன்ற தீர்மானத்துடன் தடையின்மை சான்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வலுவலக 18.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம் -05 அவர்களை மேற்கண்ட பொருள் தொடர்பாக விரிவான அறிக்கையினை இத்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-05 அவர்களின் 19.04.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட பொருளின் தொடர் நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட இடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிலை அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் அண்ணா சாலையில் அமைந்துள்ள ஓமந்தூரார் மருத்துவ வளாகத்தில் உட்பகுதி Mall /P.ORR & Sons எதிர் பக்கத்தில் அமைந்துள்ளது. மேலும், இந்த இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடம் இங்கு சிலை நிறுவுவதால் பொது மக்களுக்கோ அல்லது போக்குவரத்திற்கோ இடையூறாக ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, அரக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்களுக்கு, நோயாளிகள் மற்றும் போக்குவரத்து இடையூறு இல்லாமல் இருப்பதால் தேர்வு செய்யப்பட்ட ஓமந்தூரார் மருத்துவ வளாகம் உள் Opposite to the Mall /P.ORR & Sons என்ற இடத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையை அமைக்க எந்தவித தடையும் இல்லையென தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-05 சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள சென்னை அரசினர் தோட்டம் (ஓமந்தூரார் மருத்துவ வளாகம் உள்) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்கியமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/345/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.71 **பொருள் எண்.30**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - 06.09.2021 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு - ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணிமேரி கல்லூரி வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்க அனுமதி

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நினைவகங்கள்)த்துறை அவர்களின் 17.12.2021 நாளிட்ட நேர்முக அரசு கடிதத்தில், வங்க கவி ரவீந்தரநாத் தாகூர் அவர்களுக்கு இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அரசின் சார்பாக திருவுருவச்சிலை அமைக்கலாம் என 19.05.2021 அன்று நடைபெற்றக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, 17.12.2021 நாளிட்ட நேர்முகக்கடிதத்தில் அன்னாருக்கு திருவுருவச்சிலை அமைத்தல் தொடர்பாக வரைபடத்துடன் கூடிய திட்ட மதிப்பீட்டினை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மேலொப்பத்துடன் அனுப்புமாறும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற ஏதுவாக, ஐந்து மாதிரி வரைபடங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சூழ்நிலையில் கடந்த 06.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்ற பேரவைக்கூட்டத்தொடரில் 2021-2022-ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக்கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்திய திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணிமேரி கல்லூரியில் திருவுருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவித்ததின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் 09.02.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை இராணிமேரி கல்லூரி வளாகத்தில் ரவீந்திரநாத் தாகூர் அவர்களது திருவுருவச்சிலை அமைக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடத்தில் திருவுருவச்சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நகரமன்ற தீர்மானத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

01.03.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம் -09 அவர்களை மேற்கண்ட பொருள் தொடர்பாக விரிவான அறிக்கையினை இத்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் / மண்டல அலுவலர், மண்டலம்-09 அவர்களிடமிருந்து பெறப்பட்ட 19.042022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இடத்தின் மீது உரிய அறிக்கை அளிக்க ஏதுவாக சிலை நிறுவ உள்ள இடம் கடந்த 12.04.2022 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாகும். இவ்விடத்தில் பொதுப்பணித்துறைக்கான கட்டிடம் அமைந்துள்ள வளாகம் உள்ளது. இந்த வளாகத்தின் உட்பகுதியில் சிலை நிறுவ இருக்கும் இடமானது பொதுமக்களுக்கோ அல்லது போக்குவரத்துக்கோ இடையூறு ஏற்படாத வகையில் உள்ளது என்றும், இந்த வளாகத்தில் வங்க கவி திரு.ரவீந்தரநாத் தாகூர் அவர்களின் திருவுருவ சிலை நிறுவுவதற்கு உரிய மன்ற தீர்மானம் நிறைவேற்றி நடடிவக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-09ல் அமைந்துள்ள ராணி மேரி கல்லூரி வளாகத்தில் வங்க கவி திரு.ரவீந்தரநாத் தாகூர் திருவுருவ சிலை அமைக்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/396/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.72 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - 06.09.2021 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள் தாய்நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகள் உள்ளிட்ட பலருக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் திருவுருவச்சிலைகள் நிறுவுதல் - சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்க அனுமதி.

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நினைவகங்கள்)த்துறை அவர்களின் 17.12.2021 நாளிட்ட நேர்முக அரசு கடிதத்தில், கடந்த 06.09.2021 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக்கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூறும் வகையில், அன்னாருக்கு சென்னையில் திருவுருவச்சிலை ரூ.10 இலட்சத்தில் அமைக்கப்படும் என்று அறிவித்த அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்கும்பொருட்டு, சென்னை மாவட்டத்தில் உரிய இடத்தினை தேர்வு செய்து, அவ்விடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கை பெற்று விரிவான அறிக்கையை உடன் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டதின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் 09.02.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டப வளாகத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது திருவுருவச்சிலை அமைக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடத்தில் திருவுருவச்சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நகரமன்ற தீர்மானத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

01.03.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம் -13 அவர்களை மேற்கண்ட பொருள் தொடர்பாக விரிவான அறிக்கையினை இத்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-13 அவர்களின் 19.04.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இனத்தின் மீது உரிய அறிக்கை அளிக்க சிலை நிறுவ இருக்கும் இடம் 18.04.2022 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாகும், இந்த இடம் பொதுப்பணித்துறை கட்டிடம் அமைந்துள்ள வளாகம், இந்த வளாகத்தின் உட்பகுதியில் சிலை நிறுவ இருக்கும் இடம் பொதுமக்களுக்கோ அல்லது போக்குவரத்துக்கோ இடையூறு ஏற்படாத வகையில் உள்ளது என்றும், இந்த வளாகத்தில் மறைந்த சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு திருவுருவச்சிலை நிறுவுவதற்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றிட உரிய நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-13ல் அமைந்துள்ள சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டப வளாகத்தில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களது திருவுருவச்சிலை அமைக்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/397/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.73 **பொருள் எண்.32**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கை அறிவிப்பு - இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்க அனுமதி.

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நினைவகங்கள்)த்துறை அவர்களின் 17.12.2021 நாளிட்ட நேர்முக அரசு கடிதத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 06.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவித்த அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, சென்னை அண்ணா பல்கலை கழகத்தின் வளாகத்தில் உரிய இடத்தினை தேர்வு செய்து, அவ்விடத்திற்கான புலத்தணிக்கை அறிக்கை மற்றும் அன்னாரது குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்ற புகைப்படத்தை உரிய பரிந்துரையுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டதின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் 09.02.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை கிண்டியில் உள்ள சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்களது திருவுருவச்சிலை அமைக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி இடத்தில் திருவுருவச்சிலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நகரமன்ற தீர்மானத்தை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

01.03.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம், மண்டல அலுவலர், மண்டலம் -13 அவர்களை மேற்கண்ட பொருள் தொடர்பாக விரிவான அறிக்கையினை இத்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்-13 அவர்களின் 19.04.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட இனத்தின் மீது உரிய அறிக்கை அளிக்க சிலை நிறுவ இருக்கும் இடம் 18.04.2022 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாகும், இந்த இடம் பொதுப்பணித்துறை கட்டிடம் அமைந்துள்ள வளாகம் இந்த வளாகத்தின் உட்பகுதியில் சிலை நிறுவ இருக்கும் இடம் பொதுமக்களுக்கோ அல்லது போக்குவரத்துக்கோ இடையூறு ஏற்படாத வகையில் உள்ளது என்றும், இந்த வளாகத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர். ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச்சிலை நிறுவுவதற்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றிட உரிய நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்-13ல் அமைந்துள்ள சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் திருவுருவ சிலை அமைக்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.10.ந.க.எண்.அ3/43.16/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.74 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 10 - பகுதி - 29, வார்டு - 128 -- பகுதி வாழ் மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மறைந்த நகைச்சுவை நடிகர், சின்ன கலைவானர், கலைமாமணி, பத்மஸ்ரீ திரு, விவேக் அவர்கள் நினைவாக - அவர்தம் வாழ்ந்த பகுதியான பத்மாவதி நகர் பிரதான சாலையினை " சின்ன கலைவாணர் விவேக் சாலை" என பெயர் மாற்றம் செய்திட பரிந்துரை செய்து அரசுக்கு முன்மொழிவினை அனுப்பியதற்கு பின்னேற்பு அனுமதி.

திரையுலகில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நகைச்சுவை நடிகராக வலம் வந்த சின்ன கலைவானர், கலைமாமணி, பத்மஸ்ரீ திரு, விவேக் அவர்கள் கடந்த 17.04.2021 அன்று இம்மண்ணுலகை விட்டு மறைந்தார். அன்னாரின் நினைவாக அவர்தம் வசித்து வந்த பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 10, பகுதி – 29, வார்டு – 128ல் அமைந்துள்ள பத்மாவதி நகர் பிராதன சாலையினை அப்பகுதி வாழ் மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அவர்தம் நினைவாக மறைந்த நடிகர் விவேக் அவர்களின் பெயரினை மாற்றம் செய்திட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் மறைந்த திரைப்பட நகைச்சுவை நடிகர் சின்ன கலைவானர், கலைமாமணி, பத்மஸ்ரீ திரு, விவேக் அவர்களின் நினைவாக, அவர்தம் புகழினை பறை சாற்றும் வகையில் அவர் மறைந்து ஓராண்டு நிறைவடைந்த நிலையில் அன்னாரின் நினைவாக அவர்தம் வசித்த வந்த பத்மாவதி நகர் பிரதான சாலையினை **விவேக் தெரு** என பெயர் மாற்றம் செய்திட மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

தற்சமயம் பார்வையில் கண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் திரு பூச்சி S. முருகன், துணைத்தலைவர் தென் இந்திய நடிகர் சங்கம் அவர்களின் 18.04.2022 நாளிட்ட கடிதத்தில் மறைந்த நகைச்சுவை நடிகர் விவேக் அவர்களை பெருமைபடுத்தும் வகையில் அவர்தம் நினைவாக எதேனும் ஒரு சாலை அல்லது தெருவுக்கு அவர்தம் பெயரை சின்ன கலைவாணர் விவேக் சாலை எனபெயர் சூட்டி பெருமை படுத்துமாறு கோரியுள்ளார்.

எனவே மறைந்த நடிகர் விவேக் அவர்கள் வாழ்ந்து வந்த பத்மாவதி நகர் பிரதான சாலையினை "**சின்ன கலைவாணர் விவேக் சாலை**" என பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து அரசிற்கு முன்மொழிவினை அனுப்பியதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/509/2009
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.75 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம் -9, வார்டு -126, மயிலாப்பூர் கிராமம், பிளாக் எண்.97, புல எண்.4424 பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி (பொது) நிலம் பரப்பளவு 1100 சதுர அடி நிலத்தினை பாரதி நகர் (சின்னக்காரக் குட்டை) திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிமையினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்ய அனுமதி.

மண்டலம் -9, வார்டு -126, மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டம், மயிலாப்பூர் கிராமம் புல ண்.4424 பகுதியில் அடங்கியுள்ள 1100 சதுர அடி பரப்பளவுடைய சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்பாடு கொண்ட பாரதிநகர் (சின்னக்காரக் குட்டை) திட்டப்பகுதி நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 19.10.2009, 08.07.2010, 16.06.2010, 30.09.2011, 21.01.2012, 13.05.2013 மற்றும் 01.10.2019 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

9-வது மண்டல அலுவலரின் 23.10.2019 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட நிலத்தினை உதவி பொறியாளர், கோட்டம்-126 மூலம் கள ஆய்வு செய்யப்பட்டதில் இந்நிலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 05.04.2022 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்கண்ட பாரதி நகர் (சின்னக்காரகுட்டை) திட்டப்பகுதியானது பல்வேறு புல எண்களை உள்ளடக்கி வாரியத்தால் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நில உரிமை மாற்றம் செய்ய கோரிய பரப்பளவான 1100 சதுர அடி புலமானது இவ்வலுவக வருவாய் நிலப்பதிவேட்டில் மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.97, புல எண்.4424, பரப்பளவு 7 மனை 1080 ச.அடி, உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சி (பொது) எனவும், பயன்பாட்டு காலத்தில் சாலை என பதிவாகியுள்ளதாகவும், இப்புலத்தில் மூன்று மனைகள் மற்றும் வழிபாதை அமைந்துள்ளதாகவும், இப்புலத்தில் ஒதுக்கீடுதாரர்களால் சிமெண்ட் சீட்டிலான கூரை வேயப்பட்டும், கட்டிடம் கட்டப்பட்டும் கடந்த 20 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது எனவும், ஆகையால் மேற்படி நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிமையினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்ய மன்றத்தின் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-9, வார்டு – 126, சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம் (ம) கிராமம், பிளாக் எண்.97, புல எண்.4424 பகுதியிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்பாடு கொண்டுள்ள 16 ஏர்ஸ் 61 சதுர மீட்டர் மொத்த விஸ்தீரணத்தில் 1100 ச.அடி நிலத்தினை பாரதி நகர் (சின்னக்காரக்குட்டை) திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிமையினை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்யும் பொருட்டு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள சாலைகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் திறந்தவெளி நிலங்கள் (பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டப்பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டின் கீழ் சாலைகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலேயே இருக்கும்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.க.கு.ந.க.எண். அ8/439/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.76 **பொருள் எண்.35**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) 01.04.2022 முதல் 30.06.2022 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1 % (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) என நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.

அரசாணை(நிலை) எண்.109, நிதி (படிகள்)த்துறை நாள்:19.04.2022ல், தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதிக்கு (2022-2023) 01.04.2022 முதல் 30.06.2022 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% என (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.Ms.No.109, Dated 19th April, 2022.

(subakiruthu, Chithirai -6, Thiruvalluvar Aandu 2053)

ABSTRACT

Provident Fund- General Provident Fund (Tamil Nadu) - Rate of interest for the financial year 2022- 2023 - with effect from 01.04.2022 to 30.06.2022 - Orders - Issued.

Read the following:-

1. G.O.Ms.No.125,Finance (Allowances)Department, dated 28.04.2021.
2. G.O.Ms.No.173,Finance (Allowances)Department, dated 19.07.2021.
3. G.O.Ms.No.238,Finance (Allowances)Department, dated 26.10.2021.
4. G.O.Ms.No.29, Finance (Allowances)Department, dated 27.01.2022.
5. From the Government of India, Ministry of Finance, Departmentof Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(4)-B(PD)/2022, dated: 01.04.2022.

-oOo-

ORDER:

In the Government Order first, second, third and fourth read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of G.P.F. (TN) during the financial year 2021- 2022 as detailed below:

Sl.No.	Quarter	Period	Rate of Interest
1.	I	01-04-2021 to 30-06-2021	7.1%
2.	II	01-07-2021 to 30-09-2021	7.1%
3.	III	01-10-2021 to 31-12-2021	7.1%
4.	IV	01-01-2022 to 31-03-2022	7.1%

2. The Government of India, in its resolution fifth read above, announced that during the Financial year 2022-2023, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent)with effect from 1st April-2022 to 30th June 2022(Q1).

3. The Government now directs that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st April-2022 to 30th June 2022(Q1).

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

(BY ORDER OF THE GOVERNOR)

N. MURUGANANDAM

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

எனவே, பொது வருங்கால வைப்பு நிதி *01.04.2022* முதல் *30.06.2022* வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் *7.1%* (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணை(நிலை) எண்.*109*, நிதி (படிகள்)த்துறை நாள்:19.04.2022ஐ, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.12.வ.து.ந.க.எண்.ஆர்1/ 001/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 06.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.77 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 12- பகுதி - 35 -கோட்டம் - 158ல் உள்ள கிழக்கு குளக்கரை தெரு, சென்னை -89ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் இடத்தில் கட்டப்பட்டுள்ள தலா 110 சதுரடி கொண்ட நான்கு கடைகளை கோரியது - காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் வாணிப கழகத்திற்கு நந்தம்பாக்கம் 1 (02OD101SK) மற்றும் நந்தம்பாக்கம் 2 (02OD102SK) ஆகிய இரண்டு கடைகளுக்கு ஒப்படைத்து வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.

மேலாண்மை இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் அவர்களின் 23.11.2021 நாளிட்ட கடிதத்தில், நந்தம்பாக்கம் சரகத்திற்குட்பட்ட நந்தம்பாக்கம் 1 (02OD101SK) மற்றும் நந்தம்பாக்கம் 2 (02OD102SK) ஆகிய நியாயவிலை கடைகள் எண்.10, ஐ.டி.பி.எல் வளாகம், நந்தம்பாக்கம், சென்னை-89ல் செயல்பட்டு வந்த நிலையில் அவ்விடத்தினை மூன்று மாத காலத்திற்குள் காலி செய்து தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கோட்டம் - 158, கிழக்கு குளக்கரை தெருவில் அமைந்துள்ள கட்டிடங்களை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் மற்றும் முதன்மை செயலர் / ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்களின் 03.01.2022 நாளிட்ட கடிதத்தில், பொது விநியோகத் திட்டம் என்பது அரசு சார்ந்த முக்கியமான செயல்பாடு என்பதாலும், பொது விநியோகத்திட்டம் எவ்வித தொய்வின்றியும் பொது மக்கள் அத்தியாவசிய பொருட்கள் பெறுவதில் எவ்வித பாதிப்பு ஏற்படாவண்ணம் செயல்பட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களை உடனடியாக மேற்காணும் பண்டகசாலைக்கு ஒதுக்கீடு செய்ய ஆவண செய்யுமாறு மண்டல அலுவலர்/ம-12 அவர்களுக்கு பரிந்துரைத்துள்ளார்.

மண்டல அலுவலர் அவர்களின் 03.01.2022 நாளிட்ட கடிதத்தின்படி மேற்கண்ட முகவரியில் கட்டப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தலா 110 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள முறையே N12-N158-313-01G, N12-N158-313-02G, N12-N158-313-10G & N12-N158-313-04G ஆகிய நான்கு கடைகளை நந்தம்பாக்கம் 1 (02OD101SK) மற்றும் நந்தம்பாக்கம் 2 (02OD102SK) ஆகிய கடைகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று வாடகை நிர்ணயம் செய்து காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் அவர்களுக்கு ஒப்படைக்க ஆவண செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

' முதன்மை செயலர் / ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 14.11.2014 நாளிட்ட செயல்முறை ஆணையின் படி பத்தி எண்.9ல் வணிக வளாக வாடகை தொடர்பாக கடை ஒதுக்கீடு முதல் முறையாக செய்யப்படும்போது ஆணையர்/மன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண். 312/2013, நாள் - 22.05. 2013ன்படி பொதுமக்கள் நலன்கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நியாய விலை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யும்போது மாத வாடகை சதுரடிக்கு ரூ.5/. வீதம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே , பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் – 12 , பகுதி – *35* , கோட்டம் – *158* , கிழக்கு குளக்கரை தெரு, சென்னை -89ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் இடத்தில் கட்டப்பட்டுள்ள தலா *110* சதுரடி கொண்ட முறையே *N12-N158-313-01G, N12-N158-313-02G, N12-N158-313-10G & N12-N158-313-04G* ஆகிய நான்கு கடைகளை நந்தம்பாக்கம் 1 *(02OD101SK)* மற்றும் நந்தம்பாக்கம் 2 *(02OD102SK)* ஆகிய கடைகளுக்கு காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட் மாத வாடகை சதுரடிக்கு ரூ.***5/. (5****x440=2200/-)*** வீதம் & சரக்கு மற்றும் சேவை வரி தனி என நிர்ணயம் செய்வதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.நீ.வ.து.நக.எண்.பி2/2070/2021
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.78 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை .. மண்டலம்- 12 மற்றும் 14 ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி --சிப்பம்- M12, M19 மற்றும் M24 க்கு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணிஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

அரசாணை எண். 80, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) , நாள். 23.02.2021ல், விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி கோவளம் வடிநிலப்பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க ரூ.1714 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும், கோவளம் வடிநிலப்பகுதி (M1 & M2 Component) பணிகள் மேற்கொள்வதற்காக (Design, Management Consultant) M/s. GITEC-IGIP India Pvt Ltd (JV) M/s. GITEC-IGIP GmbH (JV) M/s. Mukesh & Associates (JV) M/s. NK Buildcon Pvt Ltd என்ற நிறுவனத்தை KfW வங்கி நியமித்துள்ளது. இந்நிறுவனம் சிப்பம் -M12, M19 & M24 ல் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க வடிவமைப்பு அளிக்கப்பட்டது. அதன்படி. மண்டலம்-12 மற்றும் 14ல் உள்ள பல்வேறு தெருக்களில் சிப்பம் -M12, M19 & M24 ல் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பம் கோர KfWயின் அனுமதி 05.03.2021 அன்று பெறப்பட்டது. அதன் படி , கோவளம் வடிநிலப்பகுதி (M1 & M2 Component) கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், பணிகள் துரிதமாக மேற்கொள்வதற்காக 3 சிப்பங்களாக தொகுத்து KfW வழிகாட்டுதல்களின்படி ரூ.150 கோடியில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு , 15.12.2021 அன்று ஒப்பந்த புள்ளிகள் 3 சிப்பங்களுக்கு கோரப்பட்டது.

இவ்வொப்பந்தப்புள்ளி 17.12.2021 அன்று ஆங்கில செய்தித் தாளான "தி இந்து", &"Business Standard", தமிழ் செய்தித்தாளான "முரசொலி, மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்பாக Pre bid meeting 05.01.2022 அன்று நடைபெற்றது. அதில் ஒப்பந்ததாரர்கள் பணியின் தொடர்பாக கேட்ட வினாக்களுக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 27.01.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 3 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதில் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்களை KfWக்கு அனுப்பப்பட்டது. மேலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் திறக்க KfWவின் அனுமதி 23.03.2022 அன்று பெறப்பட்டது. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் 25.03.2022 அன்று திறக்கப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

(அட்டவணை-I)

வ-எண்	கோப்பு எண்.	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் 2020-21 ஆம் ஆண்டு அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	பி3/2070-1 /2022 சிப்பம்-M12	வி.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	58,89,34,054.44	67,67,98,815.00	(+)14.92	(+)3.64
		க்ரௌவுன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ்		68,38,86,200.00	(+)16.12	(+)4.72
		குருமூர்த்தி இன்ஜீனியரீங் எண்டர்பிரைசஸ்		தகுதி பெறவில்லை		
2.	பி3/2070-2 /2022 சிப்பம்-M19	ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ	28,65,63,798.43	31,58,27,273.00	(+)10.21	(-)0.41
		சன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்		31,71,96,040.00	(+)10.69	(+)0.02
		சி.எம்.கே ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்		33,86,06,657.00	(+)18.16	(+)6.77
		குருமூர்த்தி இன்ஜீனியரீங் எண்டர்பிரைசஸ்		34,35,22,240.00	(+)19.88	(+)8.32
		டி.எம்.சுப்ரமணியம் அண்டு கோ JV பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், P.பாஸ்கர்		தகுதி பெறவில்லை		
3	பி3/2070-3 /2022 சிப்பம்M24	சி.எம்.கே ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்	58,57,32,878.48	67,28,25,968.00	(+)14.87	(+)3.63
		RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்		தகுதி பெறவில்லை		
		குருமூர்த்தி இன்ஜீனியரீங் எண்டர்பிரைசஸ்		தகுதி பெறவில்லை		

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விவரப்பட்டியல் மற்றும் ஒப்பந்தபுள்ளி தொகை கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அட்டவணை-II)

வ. எண்	கோப்பு எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள்	பணியின் 2020-21 ஆம் ஆண்டு அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைப்படி	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைப்படி
1	பி3/2070-1 /2022 சிப்பம் -M12	வி.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	58,89,34,054.44	67,67,98,815.00	(+)14.92	(+)3.64

2	பி3/2070-2 /2022 சிப்பம் -M19	ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ	28,65,63,798.43	31,58,27,273.00	(+)10.21	(-)0.41
3	பி3/2070-3 /2022 சிப்பம்M24	சி.எம்.கே .ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்	58,57,32,878.48	67,28,25,968.00	(+)14.87	(+)3.63

இந்த மூன்று ஒப்பந்ததாரர்களில் ஒப்பந்த புள்ளி தொகை 2020- 21 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 10.21 % முதல் (+) 14.92 % வரை ஆகும் மற்றும் இது 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (-)0.41% முதல் (+)3.64% ஆகும்.

மேற்கண்ட இந்த மூன்று சிப்பங்களுக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை 12.04.2022 அன்று துணை ஆணையர் (பணிகள்) தலைமையிலான ஒப்பம் (Tender Scrutiny Committee) ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், KfW வழிகாட்டுதல்களின்படி, ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு செய்ய இயலாததாலும், 2021-22 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் செலவு மற்றும் பொருள் செலவு 10% அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதங்கள் ஏற்கலாம்.

எனவே,

1) சிப்பம்- M12, மண்டலம்- 12 மற்றும் 14 ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். வி.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ. 67,67,98,815/- க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கியமைக்கும்,

2) சிப்பம்- M19, மண்டலம்- 14ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ. 31,58,27,273/- க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கியமைக்கும்,

3) சிப்பம்- M24, மண்டலம்- 14 ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சி.எம்.கே .ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ. 67,28,25,968/- க்கு பணி ஏற்பு கடிதம் வழங்கியமைக்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0699/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.79 **பொருள் எண்.38**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை .. மண்டலம்-10, வார்டு-136ல் உள்ள கண்ணதாசன் சாலை மற்றும் சிவபிரகாசம் சாலையில் 1200x1200 மி.மீ. அளவில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டது -- குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.என்.என்.இன்ஜினியரிங் அவர்களுக்கு பணிஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

அரசாணை நிலை எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.01.2022ன் படி 2019 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது, 19.09.2019 அன்று 140.20 மிமீ, 18.10.2019 அன்று 132 மிமீ மற்றும் 01.12.2019 அன்று 112 மிமீ கனமழை காரணமாக பல இடங்களில் மழைநீர் தேக்கம் காணப்பட்டது. தமிழ்நாடு அரசு வெள்ள கண்காணிப்பு ஐ.ஏஎஸ் அதிகாரிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அளவில் மற்றும் மழைநீர் வடிகால் துறை பொறியாளர்களால் நியமிக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால் பழுதுபார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதால், கடுமையாக பாதிக்கப்பட்ட இடங்களாக 6 இடங்கள் (27 சாலைகள்) கண்டறியப்பட்டு ரூ.2628.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 9 மற்றும் 10ல் உள்ள வார்டு – 114, 116, 121, 128 மற்றும் 129ல் உள்ள பல்வேறு சாலைகளில் / தெருக்களில் ஏற்கனவே உள்ள பழைய மழைநீர் வடிகால் இடித்து 900x900 மி.மீ. மற்றும் 1200x1200 மி.மீ. அளவில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 5 சிப்பங்களாக மழைநீர் வடிகால் துறை மூலம் I&A (Infrastructure and Amenities) திட்டத்தின் கீழ் 5 பணிகளுக்ககான ஒப்ப ஏற்பு கடிதம் 01.04.2022 அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு-136ல் உள்ள கண்ணதாசன் சாலை மற்றும் சிவபிரகாசம் சாலையில் 1200x1200 மி.மீ. அளவில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு ரூ.203.70 இலட்சம் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ள இரு உறைகள் முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 01/04/2022 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான "தி டைம்ஸ் ஆப் இந்தியா", தமிழ் நாளிதழான "விடுதலை" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு (e-tender) முறையில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 09/04/2022 அன்று மாலை 3.30 மணியளவில் ஒப்பத்திற்கு ஒரு ஒப்பப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. எனவே பெறப்பட்ட ஒப்பத்திற்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் தொழில் நுட்ப ஆவணங்கள் பரிசீலக்கப்பட்டதில், அவர் தகுதி பெற்றதால், ஒப்பந்தாரரின் நிதி ஆவணம் 13/04/2022 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

(அட்டவணை-I)

வ-எண்	கோப்பு எண்.	ஒப்பத்தில் பங்கு அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 ஆண்டு அலுவலக விலைப்	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	B2/0699/2022	என்.என்.இன்ஜினியரிங்	1,95,56,114.88	2,03,57,915.59	(+)4.10	(-)6.57

திருவாளர்கள்- என்.என்.இன்ஜினியரிங் அவர்களின் ஒப்பத் தொகையானது 2020-21ஆம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) விலைவிவரப்படி அலுவலக மதிப்பீட்டு தொகையை விட (+)4.10% அதிகமாக இருப்பதால் ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு பேச்சுவார்தை நடத்தப்பட்டதில், ஒப்பந்ததாரர் விலைக் குறைப்பு செய்து அளித்த ஒப்பப்புள்ளியின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-II)

வ. எ ண்	கோப்பு எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்த தாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	B2/0699/ 2022	என்.என்.இன்ஜினியரிங்	1,95,56,114.88	(+)4.10	2,03,18,803.36	(+)3.90	(-)6.75

எனவே, திருவாளர்கள்- என்.என்.இன்ஜினியரிங் அவர்களின் ஒப்பத் தொகையானது 2020-21ம் ஆண்டு அலுவலக விலைப்படி (+3.90%) அதிகமான விலைப்புள்ளி அளித்துள்ளார். ஆனால் 2021-22ம் ஆண்டு அலுவலக விலைப்படி (-6.75%) குறைவு என்பதால் ஒப்பந்ததாரர் பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்புக்கொண்ட ஒப்பதொகையான் ரூ.2,03,18,803.36க்கு பணியாணை வழங்க ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவற்றின்படி, 2020-21ம் ஆண்டு அலுவலக விலைப்படி (+3.90%) அதிகமான விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்- என். என். இன்ஜினியரிங் அவர்களுக்கு பணியாணை வழங்க 20.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது.

எனவே,

1) "Infrastructure and Amenities" (I&A Fund) மண்டலம்-10, வார்டு-136ல் உள்ள கண்ணதாசன் சாலை மற்றும் சிவபிரகாசம் சாலையில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு திருவாளர்கள்- என். என். இன்ஜினியரிங் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.2,03,18,803.36க்கும் ஒப்பம் ஒப்புதல் அளித்து பணி ஏற்பு கடிதம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2) மேற்காணும் பணிக்கான ஒப்பந்ததாரருக்கு "Infrastructure and Amenities (I&A Fund) திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.நீ.வ.து.நக.எண்.பி2/0120/2021
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.80 **பொருள் எண்.39**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை .. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) உலக வங்கி நிதியின் கீழ் - மண்டலம்- 4,5,6,8,9,10 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணி - உலக வங்கி நிதியின் கீழ் ரூ.120 கோடி (ரூ.34.98 கோடி கடனாகவும், ரூ.73.02 கோடி மான்யமாகவும் மற்றும் ULB பங்களிப்பு தொகை ரூ.12.00 கோடி) பெறுவதற்கு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உடன்படிக்கையில் இடம் பெறவும், நிறைவேற்றலுக்கும் பின்னேற்பு அனுமதி

அரசாணை எண். 432, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.2021ன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 4,5,6,8,9,10 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNUSDF) மூலம் உலக வங்கியில் கடன் பெற்று பணி மேற்கொள்ள கீழ்கண்டவைகளுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட்டது.

Sl. No	Means of Finance	Amount (Rs.in crores)
1.	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	34.98
2.	Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNSUDP.	73.02
3.	ULB Contribution	12.00
	Total	**120.00**

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) மூலம் உலக வங்கியின் கடன் பெறுவதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையின் மூலம் 22.07.2021 அன்று கடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) அவர்களின் 25.11.2021 நாளிட்ட கடிதத்தில் சில நிபந்தனைகளின்படி ரூ.34.98 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்- 4,5,6,8,9,10 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உலக வங்கியின் மூலம் கடன் அனுமதி (Loan Sanction letter) வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (PSGF) அவர்களின் 25.11.2021 நாளிட்ட கடிதத்தில் சில நிபந்தனைகளின்படி ரூ.73.02 கோடி மற்றும் ULB பங்களிப்பு தொகை ரூ.12.00 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 4,5,6,8,9,10 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உலக வங்கியின் மூலம் மானியமாக (Grant) வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகாட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் (TNUDF) கீழ் உலக வங்கி மூலம் கடன் பெறுவதற்கான பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (Terms and Conditions) உடன்படிக்கையில் இடம் பெறவும், நிறைவேற்றலுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

(I) Terms and Conditions of Loan Sanction

1. **Amount of Loan**
   Rs.34.98 crores (Rupees Thirty four crores and ninety eight lakhs only)

2. **Project:**
   SWD Missing Links sub-project in Greater Chennai Corporation

3. **Project Cost:**
   Rs.120.00 crores (Rupees One hundred and twenty crores only)

4. **Rate of Interest:**
   8.60% p.a. (at quarterly rests)

5. **Principal Moratorium:**
   Nil

6. **Repayment Period:**
   12 years (24 semi – annual installments)

7. **Financing Plan:**

Sl. No	Means of Finance	Amount (Rs.in crores)
1.	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	34.98
2.	Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNSUDP.	73.02
3.	ULB Contribution	12.00
	Total	**120.00**

8. **Completion Period:**
   The project should be completed within 12 months from the date of work order.

9. **Last date of withdrawal:**
   Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

10. **Special terms & Conditions:**

    (a) Procurement Guidelines:
    The selection of contractors and procurement of goods and services shall be as per provisions of the existing IBRD procurement guidelines and would need appropriate sanctions from competent authorities. The GCC would undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

    (b) ULB Contribution:
    The ULB shall contribute an amount of Rs.12.00 crores (Rupees Twelve crores only) equivalent to 10.00% of the project cost during the construction period.

    (c) Operation & Maintenance:
    The ULB shall carry out the O&M from its general funds.

(d) Project Account:
The ULB shall open a separate "Project Account" for the sub-project assisted under TNSUDP in the Books of Accounts of the ULB.

(e) Loan from others:
The ULB shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's loan without obtaining prior written approval from TNUIFSL.

(f) Environmental and Social Frame work:
The ULB shall implement the sub-project according to the Environmental and Social Management Framework (ESMF) developed by TNUIFSL.

(g) The ULB shall honour the debt service payment from its general fund on the respective due date(s) prescribed by TNUDF. If the ULBs fail to honour the debt service of the respective due date, the same shall be recovered from the State Finance Commission Devolution Grant through the Director/Commissioner of Municipal Administration.

11. The ULB shall place the terms and condition of Term Loan Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the council.

12. The ULB shall enter into the following before availing the Term Loan.

i) Term Loan Agreement (Draft Loan Agreement is enclosed as Annexure-1)
ii) Tripartite Agreement for operation of Designated Project Account (Draft Tripartite Agreement is enclosed as Annexure-2)

13. The sanction should not be construed as giving rise to any binding obligation on the part of TNUDF unless, the ULB completes the loan documentation within 90 days from the date of receipt of this letter or such further time as may be allowed by TNUDF in its sole discretion.

(II) Conditions of Grant Sanction:

1. Amount of Grant:
Rs.73.02 crores (Rupees Seventy three crores and two lakhs only)

2. Project:
SWD Missing Links sub-project in Greater Chennai Corporation

3. Project Cost:
Rs.120.00 crores (Rupees One hundred and twenty crores only)

4. Financing Plan:

Sl. No	Means of Finance	Amount (Rs.in crores)
1.	Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP	34.98
2.	Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNSUDP.	73.02
3.	ULB Contribution	12.00
	Total	**120.00**

5. **Completion Period:**
The project should be completed within 12 months from the date of work order.

6. **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of acceptance of Grant terms & conditions.

7. **Special terms & Conditions:**

(1) Procurement Guidelines:

The ULB shall adhere to the provisions / guidelines of the International Bank for Reconstruction and Development for procurement of works, goods and services. The Corporation shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.

(2) Statement of Expenditure & Progress Reports:

The ULB shall provide Monthly Progress Reports and Statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

(3) Environmental and Social Frame work:

The ULB shall implement the project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

8. The ULB shall place the terms and conditions of Capital Grant Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the Council within 90 days from the date of receipt of this letter.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 4,5,6,8,9,10 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகளில் விடுப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியகம் *(TNUDF)* கீழ் உலக வங்கி மூலம் கடன் பெறுவதற்கு, கடன் அனுமதி கடிதத்துடன் *(Loan Sanction Letter)*, கடன் பத்திரம் *(Loan Agreement)*, முத்தரப்பு ஒப்பந்த பத்திரம் *(Tripartite Agreement)* மற்றும் மானியம் அனுமதி கடிதத்துடன் *(Grant Sanction letter)*, மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் *(Terms and Conditions)* உடன்படிக்கையில் இடம் பெறவும், நிறைவேற்றலுக்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பா.து.ந.க.எண்.பி3/1093/2017

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.81 **பொருள் எண்.40**

பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம் - 10, வார்டு - 127ல் காளியம்மன் கோவில் தெருவில் விருகம்பாக்கம் - அரும்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதியதாக பாலம் அமைக்கும் பணி - திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பம் வழங்கப்பட்டது - தனியார் நிலங்கள் கையகப்படுத்துதல் காரணமாக பணி துவக்கப்படவில்லை - ஒப்பந்தத்தை ரத்து செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு-127ல் காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதியதாக பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.4.81 கோடி தொகைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. ஒப்பம் தீர்வு செய்ய தேவையான அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.44/2019, நாள்.04.02.2019ன்படி மன்ற ஒப்புதலுடன் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்ப ஏற்பு கடிதம் 07.02.2019 அன்று வழங்கப்பட்டது.

காளியம்மன் சாலையானது பாலம் அமையவுள்ள பகுதியில் மிகவும் குறுகலாக இருப்பதால், இச்சாலையை அகலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு சாலை அகலப்படுத்துவதற்கு 947.70ச.மீ பரப்பளவுள்ள தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அரசு கூடுதல் தலைமை செயலர், நிதித்துறை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மேற்படி நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மூலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இது தவிர, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்திற்கு சொந்தமான குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை, மேற்படி நிலங்களை கையகப்படுத்தப்பட்ட பின்னர், அவ்விடத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் இப்பணிக்கு ஒப்ப ஏற்புக் கடிதம் அளித்து மூன்றாண்டுகள் கடந்த நிலையிலும், புதிய பாலம் அமைக்கும் பணியினை துவங்க இயலாத நிலை உள்ளது. மேலும், ஒப்பந்ததாரரால் அளிக்கப்பட்ட பிணை வைப்புத் தொகைக்கான வங்கி உத்திரவாதமும் காலாவதியாகிவிட்டது.

எனவே, காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கு வழங்கப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்யவும், இப்பணிக்கு தேவையான தனியார் நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மூலம் கையகப்படுத்தி, பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைத்த பின்னர் மீண்டும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி இப்பணியை மேற்கொள்ளலாமென கருதப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-10, வார்டு-127ல் காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யவும்,
2. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மூலம் இப்பாலப்பணிக்கான தனியார் நிலங்களை கையகப்படுத்தி, பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைத்த பின்னர் இப்பணிக்கு மீண்டும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.தெ.செ.வா.ப.ந.க.எண். S1 /045/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.82 **பொருள் எண்.41**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப்பொறியியல் துறை - தென்சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 11, 12, 13, 14, 15 மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் மற்றும் இதர பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள்ஆகியவற்றிற்கு ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரை தேவைப்படுகின்ற டீசல் கொள்முதல் செய்தல் - திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி.

இயந்திரப் பொறியியல் துறையில் தென்சென்னை வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-11 முதல் 15 வரை பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை சமன் செய்யும் பணிகளுக்காகவும் 94 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான (கனரக / இலகுரக, டிப்பர் லாரிகள், தண்ணீர் லாரி, லோடர், புல்டோசர், எஸ்கவேட்டர் மற்றும் இதர) வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 94 வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), தெற்கு வட்டாரத்தில் மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இவை தவிர தெற்குவட்டார அலுவலக அதிகாரிகள் மற்றும் மண்டலம்-11 முதல் 15 வரையில் அதிகாரிகளுக்கான ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் பணிகள், அலுவலக மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்காக பாராமரிக்கப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் மழைக்காலங்களில் நீர் இறைக்கும் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான டீசல் மண்டலம் 13ல் எரிபொருள் (டீசல்) வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

மன்றத் தீர்மான எண். 180/78, நாள். 28.02.78ன் படி, டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102, நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதன்படி, சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்;956/2021, நாள்:01.01.2022 ன்படி, மண்டலம்11 முதல் 15க்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை 3 மாத காலத்திற்கு 245 KL கொள்முதல் செய்ய Rs.2,14,72,883/- நிர்வாக அனுமதி பெறப்பட்டு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலே கூறப்பட்டுள்ள, நிர்வாக அனுமதி மார்ச் 2022 வரை பெறப்பட்டுள்ளதால், நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான 275 நாட்களுக்கு மண்டலம் 13 லாரி

நிலைய எரிபொருள் வழங்கும் நிலையத்தில் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையிலான வாகனங்களுக்கு தேவையான டீசல் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

கடந்த ஏப்ரல் 2021 முதல் பிப்ரவரி 2022 வரையிலான காலத்திற்கு நாளொன்றுக்கு 2745 லிட்டர் டீசல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயந்திரப்பொறியியல்துறை 24.02.2022 நாளிட்ட சுற்றறிக்கையின்படி 15 மண்டலங்களில் தனியார் மூலம் கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்காக ஒப்பந்தத்தை திருத்தியமைக்கப்பட்டு மண்டலம் 1,2,3,7,11,12,14&15 - ல் கட்டிட இடிபாடுகளை பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்கள் மூலம் அகற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மண்டலம் 11, 12, 14&15ல் கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்கு கூடுதல் வாகனங்கள் வடக்கு மற்றும் மத்திய வட்டார பணிமனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிற வட்டார அலுவலகங்களில் இருந்து கனரக மற்றும் சிறியரக லோடர் வாகனங்கள் என 11 வாகனங்கள் தென்சென்னை வாகன வட்டாரத்தில் உள்ள மண்டலம் 11 முதல் 15 வரை லாரி நிலைய பயன்பாட்டுக்கு பெறப்பட்டுள்ளது. இதனால் தென் சென்னை வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரை பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 83ல் இருந்து 94 ஆக உயர்ந்துள்ளது. இதனால் தெற்கு வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர பணிக்கும் தோராயமாக நாளொன்றிற்கு 3000லிட்டர் டீசல் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் 13 லாரி நிலையத்தில் டீசல் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் தற்போதைய டீசல் எரிபொருளின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளி பின்வருமாறு:

நிறுவனம்	பொருள் விவரம்	1 KL க்கான தொகை (01.03.2022) நிலவரப்படி ரூபாய்	275 நாட்களுக்கு தேவையான மொத்த கிலோ லிட்டர்
திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம்	டீசல்	ரூ-100484.99/- விற்பனை (அனைத்து வரிகள் உட்பட)	நாளொன்றிற்க்கு 3000 லிட்டர் வீதம் 275 நாட்களுக்கு 275 x3000=825 KL தோராயமாக=825 KL
மொத்த தொகை		825 KL X RS 100484.99= ரூ. 8,29,00,117/-	

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை மூலம் செலுத்த வேண்டும் எனவும், திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான 275 நாட்களுக்கு, தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களில் பராமரிக்கப்படும் வாகனங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்காகவும் தேவையின் அடிப்படையில் டீசல் எரிபொருள் மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்க தோராயமாக கணக்கிடப்பட்ட 825 கிலோ லிட்டர் டீசலை (தோராயமாக) மொத்த தொகையான **ரூ.8,29,00,117/-**

(ரூபாய் எட்டு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து நூற்று பதினேழு மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மண்டலம் 11 முதல் 15 வரை துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை சமன் செய்யும் பணிகளுக்காகவும் கொசு மருந்து புகை பரப்பும் பணிகளுக்கும் அலுவலக மற்றும் மருத்துவமணை பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்களுக்கும் மற்றும் இதர அன்றாட முக்கிய பணிகளுக்கும் டீசல் மிக அவசியம் தேவையென்பதால், மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தற்போதைய தேவைகேற்ப தென்சென்னை வாகன பணிமனைக்கு உட்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்காகவும் தேவையின் அடிப்படையில் ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான காலத்திற்கு எரிபொருள் (டீசல்) கொள்முதல் செய்ய 18/03/2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆனதால், பிணை வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் 2022 – 23 ஆம் ஆண்டுக்காக வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-11, 12, 13, 14, 15 ல் பராமரிக்கப்படும் வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் உபகரணங்களுக்கும், தெற்கு வட்டார ஆய்வு வாகனங்களுக்கும், கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரங்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்களின் பயன்பாட்டிற்காக மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான 275 நாட்களுக்கு 825 கிலோ லிட்டர் டீசல் எரிபொருளை மொத்த தொகையான **ரூ.8,29,00,117/-** (ரூபாய் எட்டு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து நூற்று பதினேழு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள விலைக்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2 மத்திய அரசு நிறுவனமான திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் கோரிய படி ஏப்ரல் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை திருவாளர் BPCL (மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கிடவும்,

3 மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற டீசல் எரிபொருளை மொத்த தொகையான **ரூ.8,29,00,117/-** க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4 இதற்கான செலவினை *2022 - 2023* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்:*230-20-03-06* – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

5 திருவாளர்.பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்.

மேற்கண்ட 1முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்: டி5/0054/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.83 **பொருள் எண்.42**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப்பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு பெட்ரோல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி.

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும் மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் 203 எண்ணிக்கையிலான ஆய்வு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட வாகனங்களில், 14 வாகனங்கள் பெட்ரோல் மூலம் இயங்கும் ஆய்வு வாகனங்கள்.

இந்த, 14 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) வழங்க புதுபேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் பெட்ரோல் சேமிக்கும் கிடங்கு அமைக்கப்பட்டு பெட்ரோல் வழங்கப்பட்டு வரப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் பெட்ரோல் வழங்கும் மையம் ஆய்வு வாகன பணிமனையில் மட்டுமே உள்ளது.

மேலும், ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு, 14 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் **180** கிலோலிட்டர் பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

பெட்ரோல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92/2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102, நாள்.07.11.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண்.486/01 நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய பெட்ரோல் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை 03.03.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளியின் அடிப்படையில் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு தேவையான

பெட்ரோல் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மொத்த தொகை கீழ்கண்டவாறு கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 கிலோ லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை (12 மாதங்கள்)
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்	பெட்ரோல்	ரூ.1,06,215.00/- (நாள் : 03.03.2022)	180 கிலோ லிட்டர்.
மொத்த தொகை	180 கி.லி. x ரூ. 1,06,215.00/- = ரூ. 1,91,18,700.00/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு லட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூறு மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் எனவும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், ஆய்வு வாகனங்களுக்கும், மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு தோரயமாக கணக்கிடப்பட்ட, 180 கிலோ லிட்டர் பெட்ரோலை தோராய மொத்த தொகையான ரூ. 1,91,18,700 /- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒரு லட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூறு மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துக்கொள்ளலாம். இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

அதன்படி, ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரையிலான நிதியாண்டிற்கு ஆய்வு வாகனப்பணிமனையில் 14 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் தேவைப்படும் பெட்ரோலை கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டி சமர்பிக்கப்பட்ட குறிப்பில் துணை ஆணையர் (வ(ம)நி) அவர்கள் மேற்கண்ட அட்டவணையில் ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரையிலான நிதியாண்டிற்கு கெள்முதல் செய்ய கோரப்பட்ட பெட்ரோல் அளவினை குறைத்து கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டதற்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டடது.

வாகனங்களின் வகை	கோரப்பட்ட பெட்ரோல் அளவு	அனுமதிக்கப்பட்ட பெட்ரோல் அளவு
ஆய்வுவாகனத்திற்கு கூடுதல் தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) தோராயமாக	ஒரு வருடத்திற்கு 180 கி.லி	ஒரு வருடத்திற்கு 150 கி.லி

மேற்கண்ட படி ஏப்ரல் 2022 முதல் மார்ச்2023 வரையிலான ஒருவருட காலத்திற்கு ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் வழங்கும் மையத்திற்கு பெட்ரோல் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்ட மொத்த அளவான 150 கிலோ லிட்டருக்கான

செலவீனம் ரூ1,59,32,250./- (ஒரு கிலோ லிட்டர் ரூ,106215. வீதம் 150X106215) என கணக்கிடப்படுகிறது.

மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆனதால், பிணை வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் 2022 – 23 ஆம் ஆண்டுக்காக வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

எனவே,

1. ஆய்வு வாகனப்பணிமனையில் 14 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள 12 மாதங்களுக்கு தேவைப்படுகின்ற 150 கிலோ லிட்டர் பெட்ரோல் எரிபொருளை திருவாளர்.இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மொத்த தொகையான **ரூ.** 1,59,32,250.00 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒன்பது லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) அல்லது கொள்முதல் செய்யும் போது அப்போது அமலில் உள்ள விலைக்கு கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஆணை பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மத்திய அரசு நிறுவனமான திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் கோரிய படி ஏப்ரல் 2022 முதல் மார்ச் **2023** வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை மத்திய அரசு நிறுவனம் திருவாளர். IOCL நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கிடவும்,
3. ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் வழங்கும் நிலையத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற பெட்ரோல் எரிபொருளை மொத்த தொகையான ரூ1,59,32,250/-க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4. இதற்கான செலவினை 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
5. திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ஆ.வா.ந.எண்.டி5 /0053/ 2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.84 **பொருள் எண்.43**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப்பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி எதிர்நோக்கி தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி.

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும் மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் 203 எண்ணிக்கையிலான ஆய்வு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தலைமை நிலைய உயரதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கும், சுகாதாரத்துறை மற்றும் இதர வாகனங்களுக்கும் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வழங்க புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் மூலம் டீசல் சேமிக்கும் கிடங்கு (Diesel bunk) பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட, 203 வாகனங்களில், 195 வாகனங்கள் டீசல் மூலம் இயங்கும் வாகனங்கள். இந்த 195 வாகனங்களில், வட்டார / மண்டல அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட 90 வாகனங்களுக்கு பயண நேரம் மற்றும் எரிபொருள் சேமிக்கும் பொருட்டு அந்தந்த வட்டாரத்தில்/மண்டலத்தில் அமைந்துள்ள பணிமனைகளில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது. தலைமை நிலைய உயரதிகாரிகள், சுகாதாரத்துறை மற்றும் இதரத்துறை ஆய்வு பயன்பாடிற்காக செயல்படும் 105 வாகனங்களுக்கு, புதுபேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது.

மேலும், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம்-9, 10-ல் உள்ள லாரி நிலையத்தின் 55 வாகனங்களுக்கு கடந்த நவம்பர்-2019 முதலும், 6 எண்ணிகையிலான டிராக்டர் மூலம் இயங்கக்கூடிய கடற்கரை சுத்தப்படுத்தும் இயந்திரத்திற்கு டிசம்பர் - 2018 முதல் ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது.

ஆகையால், ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு மேற்குறிப்பிட்ட 105 ஆய்வு வாகனங்கள், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் 9 மற்றும் 10ல் உள்ள 55 வாகனங்கள், 6 சிறப்பு உபகரணங்கள் மற்றும் 6 எண்ணிகையிலான கடற்கரை சுத்தப்படுத்தும் இயந்திரம் ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக 720 கிலோலிட்டர் டீசல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

மண்டலம்-9, 10 லாரி நிலைய வாகனத்திற்கு தோராயமாக தேவைப்படும் எரிபொருள் (டீசல்) (ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை)	30000 è X 12 மாதம் 360 ».è
ஆய்வுவாகனத்திற்கு கூடுதல் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) தோராயமாக (ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை)	25000 è X 12 மாதம் 300 ».è
எதிர்நோக்கும் கூடுதல் கொள்முதல் - பருவ காலம், நீர் வெளியேற்றி விசை இயந்திரம், ஜெனரேட்டர் இயந்திரம் மற்றும் இதர அத்தியாவசிய மழைகால பணிகள்) (12 மாத காலத்திற்கு)	60 ».è
மொத்த தோராய தேவை	**720 ».è**

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட

கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண்.486/01 நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய டீசல் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் 03.03.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளியின் அடிப்படையில் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள 12 மாதங்களுக்கு தேவையான 720 கிலோ லிட்டர் டீசல் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மொத்த தொகை கீழ்கண்டவாறு கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 கிலோ லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை (12 மாதங்கள்)
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்	டீசல்	ரூ 99,930.00 (நாள் : 11.02.2021)	720 கிலோ லிட்டர்.
மொத்த தொகை	720 கி.லி. x ரூ. 99,930.00 = **ரூ. 7,19,49,600/-** (ரூபாய் ஏழு கோடியே பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், ஆய்வு வாகன பணிமனியில் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 நிதியாண்டிற்கு ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 9, 10 ல் பராமரிக்கப்பட்டு வரப்படுன்ற வாகனங்களுக்கும் வழங்க தோரயமாக கணக்கிடப்பட்ட 720 கிலோ லிட்டர் டீசலை தோராய மொத்த தொகையான ரூ.***7,19,49,600*** (ரூபாய் ஏழு கோடியே பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துக்கொள்ளவும். இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

அதன்படி, ஆய்வு வாகன பணிமனையில் ஏப்ரல்'2022 முதல் மார்ச்'2023 வரை உள்ள நிதியாண்டிற்கு ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 9, 10ல் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்ற வாகனங்களுக்கும் தேவைப்படும் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி கொள்முதல்செய்ய நிர்வாக அனுமதி வேண்டி

சமர்பிக்கப்பட்ட குறிப்பில் துணை ஆணையர் (வ(ம)நி) அவர்கள் மேற்கண்ட அட்டவணையில் மாதமொன்றிற்கு ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 9,10 வாகனங்களுக்கும் வழங்குவதற்கு கோரப்பட்ட டீசல் அளவினை குறைத்து கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டதற்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டடது.

வாகனங்களின் வகை	கோரப்பட்ட டீசல் அளவு	அனுமதிக்கப்பட்ட டீசல் அளவு
மண்டலம்-9, 10 லாரி நிலைய வாகனத்திற்கு தோராயமாக தேவைப்படும் எரிபொருள் (டீசல்)	ஒரு மாதத்திற்கு 30000 லிட்டர் வீதம் ஒரு வருடத்திற்கு 360 ».è	ஒரு மாதத்திற்கு 25000 லிட்டர் வீதம் ஒரு வருடத்திற்கு 300 ».è
ஆய்வுவாகனத்திற்கு கூடுதல் தேவைப்படும் எரிபொருள் (டீசல்)	ஒரு மாதத்திற்கு 25000 லிட்டர் வீதம் ஒரு வருடத்திற்கு 300 ».è	ஒரு மாதத்திற்கு 18000 லிட்டர் வீதம் ஒரு வருடத்திற்கு 216 ».è
எதிர்நோக்கும் கூடுதல் கொள்முததல் – பருவகாலம், நீர் வெளியேற்றி விசை இயந்திரம், ஜெனரேட்டர் இயந்திரம் மற்றும் இதர அத்தியாவசிய மழைகால பணிகள்)	ஒரு வருடத்திற்கு 60 ».è	ஒரு வருடத்திற்கு 60 ».è
மொத்த தோராய தேவை	**720 ».è**	**576 ».è**

மேற்கண்ட படி ஏப்ரல் 2022 முதல் மார்ச்2023 வரையிலான ஒருவருட காலத்திற்கு ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் மையத்திற்கு டீசல் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்ட மொத்த அளவான 576 கிலோ லிட்டருக்கான செலவீனம் ரூ,5,75,59,680/ (ஒரு கிலோ லிட்டர் ரூ,99930. வீதம் 576 *X 99930)* என கணக்கிடப்படுகிறது.

மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆனதால், பிணை வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் *40-41-10* மற்றும் கணக்கு குறியீட்டு எண் *230-20-03-06* எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் 2022 – 23 ஆம் ஆண்டுக்காக வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

எனவே,

1. ஆய்வு வாகன பணிமனையில் ஆய்வு வாகனங்கள் மற்றும் மண்டலம் 9, 10ல் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்ற வாகனங்களுக்கும் ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை உள்ள ஒரு வருட காலத்திற்கு தேவைப்படுகின்ற 576 கிலோ லிட்டர் டீசலை திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மொத்த தொகையான ரூ.***5,75,59,680/-*** (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்தைந்து இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) அல்லது கொள்முதல் செய்யும் போது அப்போது அமலில் உள்ள விலைக்கு கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஆணை பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மத்திய அரசு நிறுவனமான திருவாளர்.இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் கோரிய படி ஏப்ரல் *2022* முதல் மார்ச் ***2023*** வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை மத்திய அரசு நிறுவனம் திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு *RTGS* மூலம் முன்பணமாக வழங்கிடவும்,

3 ஆய்வு வாகன பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற டீசல் எரிபொருளை மொத்த தொகையான **ரூ. *5,75,59,680/-*** க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு *RTGS* மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4 இதற்கான செலவினை *2022 - 2023* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்:*230-20-03-06* – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

5 திருவாளர்.இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கும், **துணை ஆணையர்(வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 18.03.2022 நாளிட்ட மேற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அளவுப்படி மட்டும் டீசல் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன்,** நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்.9/0432/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.85 **பொருள் எண்.44**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - பொதுசுகாதாரம் பூச்சி தடுப்பு துறை சார்ந்த மண்டலம் - 1 முதல் 15 வரையுள்ள அனைத்து பகுதிகளில் கொசு ஒழிக்கும் வகையில் புகைபரப்பும் பணிக்காக - பெரிய புகைப்பரப்பும் இயந்திரங்களை எடுத்துச் செல்ல - 68 எண்ணிக்கையிலான TATAACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகைமுறையில் பணியமர்த்த ஒப்பம் கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கு - மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். M/s. Dhamodharan Engineering Enterprises நிறுவனத்தாரிடமிருந்து 68 எண்ணிக்கையில் TATAACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகை முறையில் பணி அமர்த்த பணி ஆணை வழங்கஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகர நல அலுவலர் அவர்களின் கடிதத்தில் 15 மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொசு தொல்லை கட்டுப்படுத்த புகைபரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இக்கொசு ஒழிப்பு பணியில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களை எடுத்துச்செல்லும் 82 எண்ணிக்கை வாகனங்களை வாடகை முறையில் பணியமர்த்த (*Tata Ace*) , இயந்திர பொறியியல் துறையின் மூலம் ஒப்பம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அப்பணியானது 24.01.2022 அன்றுடன் பணி முடிவுற்றது என்றும், மேலும் ஒப்ப தொகையில் 24%ற்கு கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இப்பணியானது முடிவுறும் தருவாயில் உள்ளதாகவும், எனவே, புகைப்பரப்பும் பணியின் அவரசம் மற்றும் அவசியம் கருதி பெரிய புகைப்பரப்பும் இயந்திரங்களை எடுத்து செல்ல 68 வாகனங்களை *(Tata Ace or Equivalent)* மேலும் ஓராண்டிற்கு வாடகை முறையில் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், கொசு உற்பத்தியை தடுத்திட, புகைப்பரப்பும் இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்கு அமர்த்தப்படும் ஆட்டோக்கள் தினமும் தோராயமாக 5 மணி நேரம் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கிலோ மீட்டர் வேறுபடுவதால், சராசரியாக 30 கி.மீ தூரத்திற்கு இயக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கென பயன்படுத்தப்படும் *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகை செலவீனத்தை கணக்கு தலைப்பு எண் *30 - 32* - 02 கணக்கு குறியீட்டு எண்.230-*80-04*-00ன் கீழ் தலைமையிடம் பூச்சி தடுப்பு துறை மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

புகைப்பரப்பும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் பெரிய புகைப்பரப்பும் இயந்திரங்களை எடுத்து செல்ல 68 எண்ணிக்கையிலான *Tata Ace* அல்லது அதற்கு இணையான வாகனங்களை வாடகை முறையில் பணியமர்த்தலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணிக்கென *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனத்தை நாளொன்றுக்கு 5 மணி நேரம் மற்றும் 30 கி.மீ தூரம் வரை இயக்குவதற்கான வாடகைத் தொகையானது ரூ. 945/- *(GST @ 5%)* வீதம் 68 எண்ணிக்கையிலான வாகனங்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ஓராண்டு காலத்திற்கு ரூ. 1,92,78,000/- *(GST @ 5%)* தோராய மதிப்பீட்டில் *(68 x 945x 25 x12)* (வார விடுமுறை நாட்களை தவிர்த்து) வாடகை முறையில் பணியமர்த்த, மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.03.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டு குறுகிய கால மின்னணு ஒப்பம் கோர ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்பப் படிவங்கள் இலவச இறக்கம் செய்யும் பொருட்டு

கணினியில் ஏற்றம் செய்யப்பட்டது. குறுகிய கால மின்னணு ஒப்பம் 31.03.2022 அன்று திறக்கப்படுவதாக வெளியிடப்பட்ட நிலையில் ஒப்பந்ததாரரின் கோரிக்கைக்கிணங்க ஒப்பம் 29.03.2022 அன்று ஒத்தி வைக்கப்பட்டது.

குறுகிய கால மின்னணு ஒப்பம் 07.04.2022 அன்று திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் கீழ்கண்ட 3 ஒப்பந்ததாரர்கள் ஒப்பத் தொகையினை வங்கி இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1) *Ms. Dhamodharan Engineering Enterprises,*
2) *M/s. Jayvee & co*
3) *M/s. Sri Venkateswara Engineers.*

மேற்கண்ட 3 நிறுவனங்களின் தொழில் நுட்ப ஆவணங்களை ஒப்பம் சீராய்வு குழுவினரால் சீராய்விற்கு உட்படுத்தப்பட்டதில் *M/s. Jayvee & co* மற்றும் *M/s. Sri Venkateswara Engineers* ஆகிய இரண்டு நிறுவனத்தாரும் இவ்வொப்பத்திற்கு தேவையான தொழில்நுட்ப தகுதி ஆவணங்களை சமர்ப்பிக்காத காரணத்தினால், இவ்விரண்டு நிறுவனங்களும் தகுதியற்றதாக கருதப்பட்டு இந்நிறுவனங்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

திருவாளர்கள். *Ms. Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் மட்டும் இவ்வொப்பத்திற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்ததுடன், இந்த ஒப்பத்திற்கு தேவையான அனைத்து தொழில் நுட்ப தகுதிகளையும் (*Technical Eligible*) பெற்றிருந்தார்.

எனவே, இந்நிறுவனத்தின் ஒப்பம் தகுதியானதாக கருதப்பட்டு இந்நிறுவனத்தின் நிதி ஒப்பம் 22.04.2022 அன்று திறக்கப்பட்டது. அதில், திருவாளர்கள். *Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் கீழ்கண்ட வாறு விலைப்புள்ளி வழங்கியுள்ளார்.

Sl.No.	*Name of the Company*	*Type of Vehicle*	*Hire Charges for 5 Hrs 30 Kms (Inclu. GST @ 5%) (Rs.)*	*Hire charges per Extra Hour (Inclu. GST @ 5%) (Rs.)*	*Hire Charges per Extra Kms (Inclu. GST @ 5%) (Rs.)*
1	*M/s.Dhamodharan Engineering Enterprises*	*TATA Ace or Equivalent Vehicle*	*834.75/-*	*210/-*	*10.50/-*

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் 5 மணி நேரம் 30 கி.மீட்டருக்கு ரூ. 834.75/-, கூடுதல் மணி நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 210/- மற்றும் கூடுதல் கி.மீட்டருக்கு ஒரு கி.மீட்டருக்கு ரூ. 10.50/- என விலை புள்ளி வழங்கியிருந்த நிலையில், இந்நிறுவனத்தினை மேலும் விலைக்குறைப்பு செய்யுமாறு 22.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரப்பட்டது.

திருவாளர்கள். *Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் தங்களது 22.04.2022 நாளிட்ட கடிதத்தில் தாங்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிலையில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளார். எனவே, இறுதி விலைப்பட்டியல் கீழ்க்கண்டுள்ளவாறு,

Sl. No.	Description	Type of Vehicle	Hire Charges Quoted By Ms. Dhamodharan Engineering Enterprises (Inclu. GST @ 5%)		
			Before Negotiation Rs.	Negotiated amount if any Rs.	After Negotiation Rs.
1	Hire Charges for 5 Hrs 30 Kms	Tata Ace Or Equivalent Vehicles	834.75/-	-	834.75/-
2	Hire Charges Extra Kms		10.50./-	-	10.50./-
3	Hire charges Extra Hour		210/	-	210/

மேற்கண்ட அட்டவணையின்படி, *Ms. Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் 68 எண்ணிக்கையிலான *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களை வாடகை முறையில் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியான , (Inclu. *GST @ 5%*) *5* மணி நேரம் 30 கி.மீட்டருக்கு. ரூ.834.75/- மற்றும் கூடுதல் மணி நேரத்திற்கு ரூ.210/- மற்றும் கூடுதல் கி.மீட்டருக்கு ரூ.10.50/- என வழங்கியுள்ளனர். இதன்படி 68 வாகனங்களை ஓராண்டு காலத்திற்கு வாடகைக்கு அமர்த்த ஏற்படக்கூடிய தோராய செலவீனம் ரூ. 1,*70,28,900/- (GST* சேர்த்து) (ரூ.834.75 *x 68 x 25 x 12)* ஆகும். இத்தொகையானது தோராய மதிப்பீட்டு தொகையான ரூ. 1,92,78,000/- விட 11.67 % குறைவு ஆகும்.

எனவே திருவாளர்கள், *Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் அளித்துள்ள விலைபுள்ளியினை ஏற்று இந்நிறுவனத்திடமிருந்து *TATA ACE* அல்லது அதற்கு இணையான வகை வாகனங்களை *68* எண்ணிக்கைக்கு மிகாமல் மேற்கண்ட வாகனங்களை தேவைக்கேற்ப வாடகை முறையில் அமர்த்தலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் ஒப்ப கூர்தாய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 22.04.2022 நாளிட்ட ஒப்புதல் பெறப்படுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணிக்கென பயன்படுத்தப்படும் *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகை செலவீனத்தை சுகாதார துறை கணக்கு தலைப்பு எண். 30 – *32 - 02 /* கணக்கு குறியீட்டு எண். 230 – *800* – 400 என்ற தலைப்பின் கீழ், தலைமையிடம், பூச்சி தடுப்பு துறை மூலம் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசு தொல்லையை கட்டுப்படுத்த மண்டலம் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள குறுகிய தெருக்களிலும், குடிசைப் பகுதிகளிலும் புகைப்பரப்பும் பணியை மேற்கொள்வதற்கு புகைபரப்பும் இயந்திரங்களை (*Vehicle Mountable Plus Fog Machine*) எடுத்துச் செல்ல 68 எண்ணிக்கையிலான *(TATA Ace or Equivalent Vehicles)* வாகனங்களை ஒரு ஆண்டு காலத்திற்கு, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரி வாகனங்களை வாடகை முறையில் **ரூ. 1,92,78,000/-** *(GST* சேர்த்து) தோராய மதிப்பீட்டில் பணியமர்த்த, மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு, மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) மண்டலம் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள குறுகிய தெருக்களிலும், குடிசைப் பகுதிகளிலும் புகைப்பரப்பும் பணியை மேற்கொள்வதற்கு புகைபரப்பும் இயந்திரங்களை எடுத்துச் செல்ல 68 எண்ணிக்கையிலான ஆட்டோக்களை ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகை முறையில் பணியமர்த்த கோரப்பட்ட ஒப்பத்தில்குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *Dhamodharan Engineering Enterprises* நிறுவனத்தார் வழங்கியுள்ள கீழ்கண்ட விலை புள்ளியை ஏற்கவும்,

Sl.No.	*Description*	*Type of Vehicle*	*Inclu .GST @ 5%*
1	*Hire Charges for 5 Hrs 30 Kms*	*Tata Ace or Equivalent Vehicles*	*834.75/-*
2	*Hire Charges Extra Kms*		*10.50/-*
3	*Hire charges Extra Hour*		*210/*

3) இனம் ‘ 1" மற்றும் “ 2 “ ஏற்பின், மண்டலம் - 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், புகைப்பரப்பும் பணிக்கு 68 எண்ணிக்கையில் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு (TATA Ace or Equivalent Vehicles) வாகனங்களை ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகை முறையில் மேற்கண்ட விலை விகிதத்தில் மொத்த தொகையான ரூ.1,70,28,900/-க்கு (GST சேர்த்து) மிகாமல் வழங்க திருவாளர்கள். Ms. Dhamodharan Engineering Enterprises நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும்,

வ.எண்.	மண்டலம்	வாகன §களின் எண்ணிக்கை
01	I	2
02	II	3
03	III	3
04	IV	5
05	V	6
06	VI	5
07	VII	4
08	VIII	6

வ.எண்.	மண்டலம்	வாகன §களின் எண்ணிக்கை
09	IX	6
10	X	6
11	XI	4
12	XII	4
13	XIII	6
14	XIV	4
15	XV	4
	மொத்தம்	***68***

4) திருவாளர்கள். Ms.Dhamodharan Engineering Enterprises நிறுவனத்திடமிருந்து ஒப்ப விதிகளின்படி, தோராய மதிப்பீட்டினைக் காட்டிலும் விலை புள்ளி 11.67 % குறைவாக வழங்கியுள்ளதால், மொத்த ஒப்பத் தொகையில் 3% பாதுகாப்புத் தொகையாக ரூ. 5,10,867/-ம் மொத்த ஒப்பத் தொகையில் 2 % கூடுதல் பாதுகாப்புத் தொகையாக ரூ.3,40,578/-ம் ஆக மொத்தத் தொகையாக ரூ.8,51,445/- பெற்றுக்கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,

5) இப்பணிக்கென பயன்படுத்தப்படும் TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகை செலவீனத்தை சுகாதார துறை கணக்கு தலைப்பு எண். 30 – 32 - 02 / கணக்கு குறியீட்டு எண். 230 – 800 – 400 என்ற தலைப்பின் கீழ், தலைமையிடம், பூச்சி தடுப்பு துறை மூலம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

* * * * * *

பூ.து.ந.க.எண்.பி2/2022-27/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.86 **பொருள் எண்.45**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பந்தப்புள்ளி - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 24.08.2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தின் போது மாண்புமிகு நகர்புற நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது. "பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால், இக்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகர கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் சிங்கார சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு, இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், வேறு பல திட்டங்களை இணைத்து இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன".

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் (Project Sanctioning and Monitoring Committee) கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் TUFIDCO அவர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் (Convener) ஆவார்கள்.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலமாக மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தும் பணிகள் என 46 எண்ணிக்கையிலான பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் (TUFIDCO) கூர்ந்து ஆய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO), திட்ட அறிக்கையில் உள்ள மதிப்பீட்டில் உள்ள சரத்துகளை முழுமையாக கூர்ந்து ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் பரிந்துரை செய்யப்பட்டது.

அதன்படி 17.12.2021 மற்றும் 11.01.2022 அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு (Project Sanctioning and Monitoring Committee) கூட்ட அறிக்கைகளின்படி 2021-22 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

Name of the Project	No.of works	Proposed Project Cost by GCC	Appraised Project cost by TUFIDCO	Singara Chennai 2.0 Share FY 2021-22
		(Rupees in Lakhs)		
Green Field (Park) Development / mprovement	28	2767.15	2442.79	2442.79
Play Field Development / Improvement	8	569.25	538.39	538.39
Play Field	10	872.15	718.80	718.80
Total	**46**	**4208.55**	**3699.98**	**3699.98**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் *46* பணிகளுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, *43* பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு பணிக்கான ஒப்பம் பரிசீலனையில் உள்ளது.

மீதமுள்ள 2 பணிகளுக்கு மின்னணு முறையில் *(e-tender)* ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்.*06.04.2022* என ஒப்ப அறிவிப்பு *Deccan Chronicle*, முரசொலி நாளிதழ்களில் *22.03.2022* அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் *24.03.2022* அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, *06.04.2022* அன்று ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் பரீசிலனை செய்யப்பட்டது. தொழில்நுட்ப தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

(அட்டவணை-I)

Sl. No.	File No / PARK.C.No	No. of Participants	Name of the L1 contractor	Work value Rs.	Quoted amount Rs.	Quoted %
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P2/2022-27/ 2021	1	Vasanth Enterprises	58,42,535.76	60,06,126.77	(+) 2.80 %
2	P2/2022-45/ 2021	2	Vasanth Enterprises	19,35,320.03	19,83,703.03	(+) 2.50 %

இதன் தொடர்ச்சியாக, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான இறுதி ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-II)

S. No	File No / PARK.C.No.	Name of the Bidder (L1)	Originally Quoted %	2020-21 (SOR) % Offered After Negotiation finally quoted %	2020-21 (SOR) % Offered After Negotiation (including 12% GST) (Rs.)	Comparative % of tender with current SOR 2021-22 (in %)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P2/2022-27/ 2021	Vasanth Enterprises	(+) 2.80%	(+) 1.90 %	59,53,543.94	(-) 6.51%
2	P2/2022-45/ 2021	Vasanth Enterprises	(+) 2.50%	(+) 1.90 %	19,72,091.11	(-) 6.71%

மேற்கண்டவற்றின் அடிப்படையில், இப்பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்க முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

எனவே, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

த.தொ.மை.ந.க.எண்.சி2/152/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.87 **பொருள் எண்: 46**

பெருநகர சென்னை மாநகராட்சி - தகவல் தொழில்நுட்ப மையம் - மின்னணு ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பாதுக்காப்பிற்கான கண்காணிப்பு கேமரா (CCTV) நிர்பயா நிதியின் கீழ் அமைக்கும் பணி குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்க அனுமதி.

1	செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள்	பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பாதுகாப்பிற்கான கண்காணிப்பு கேமரா (CCTV) நிர்பயா நிதியின் கீழ் அமைக்கும் பணி.
2	தோராய மதிப்பு	%. 5,46,60,827/-
3	தேவைப்படும் இடம்	பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள்
4	நிர்வாக அனுமதியின் விவரம்	சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்: 122/2022, நாள்: 25.01.2022
5 m M	ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி	-
	மாநகராட்சி வெளியீட்டில்	27.01.2022 பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர்
	பத்திரிக்கைகள்	ஆங்கில நாளிதழ்: The Hindu, தமிழ் நாளிதழ்: தி-இந்து நாள்: 26.01.2022
6	ஒப்பப்புள்ளி பதிவிறக்கம் செய்ய இறுதி நாள்	17.03.2022, 03.00. P.M
7	ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்த்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா	ஆம்
8	ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (ஒப்பம் திறக்கப்பட்ட நாள்)	17.03.2022, 03.00 P.M வரை ஒப்பங்கள் பெறப்பட்டு, 18.03.2022, 03.15 P.M அன்று திறக்கபட்டது.
9	ஒப்பத்தில் பங்கேற்க	https://tntenders.gov.in இணைய தளத்தின் மூலம் மின் ஒப்பத்தில் பங்கேற்கலாம். ID 2022_CoC_222709_1
10	செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை	ரூ. 5,46,608/ -
11	ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் விவரங்கள் - M/s. Bon Ton Software Private Limited, M/s. KS Smart Solutions Private Limited, M/s. I-Net Secure Labs Private Limited மற்றும் M/s. Iyal Technologies ஒப்பங்கள் 18.03.2022 அன்று திறக்கப்பட்டது. M/s. KS Smart Solutions Private Limited மற்றும் M/s. I-Net Secure Labs Private Limited ஒப்பந்ததாரர் பக்கம் 951-ல் அட்டவணையிடப்பட்டுள்ளபடி தொழில்நுட்ப ஆவணங்களை அளித்து தேர்ச்சி பெற்றுள்ளனர்.	

தொழில்நுட்ப ஒப்பத்தில் தேர்ச்சி பெற்றுள்ள M/s. KS Smart Solutions Private Limited மற்றும் M/s. I-Net Secure Labs Private Limited அவர்களின் ஒப்பப்புள்ளி திறப்பதற்கான அனுமதி 31.03.2022 அன்று மேற்பார்வை பொறியாளர்/மின்சாரம் அவர்களிடமிருந்து பெறப்பட்டது. மின்னணு ஒப்பப்புள்ளி 04.04.2022 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

12	ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் ஒப்பத் தொகை விவரங்கள்

S.N.	Description of Work	Quantity in No's (A)	DEPARTMENT RATE			M/s. KS Smart Solutions Private Limited			M/s. I – Net Secure Labs Private Limited		
						QUOTED RATE			QUOTED RATE		
			Unit Rate Rs. (B)	GST 18% in Rs. (C	Total Amount (Inclusive of GST) in Rs D=(B+C)*A	Unit Rate Rs. (E)	GST 18% in Rs. (F)	Total Amount (Inclusive of GST) in Rs G= (E+F)*A	Unit Rate Rs. (H)	GST 18% in Rs. (I)	Total Amount (Inclusive of GST) in Rs J= (H+I)*A
1	5 MP IP CAMERAS	636	16000.00	2880.00	12007680.00	9500.00	1710.00	7129560.00	9000.00	1620.00	6754320.00
2	27 INCH MONITOR	159	25000.00	4500.00	4690500.00	18600.00	3096.00	3449664.00	14900.00	2682.00	2795538.00
3	8 CHANNEL NVR	159	12500.00	2250.00	2345250.00	8900.00	1602.00	1669818.00	6600.00	1188.00	1238292.00
4	8 TB HDD (SURVEILLANCE GRADE)	159	28000.00	5040.00	5253360.00	23000.00	4140.00	4315260.00	16000.00	2880.00	3001920.00
5	8 PORT PoE SWITCH	159	22600.00	4068.00	4240212.00	17500.00	3150.00	3283350.00	19500.00	3510.00	3658590.00
6	9U WALL MOUNT RACK	159	5600.00	1008.00	1050672.00	6500.00	1170.00	1219530.00	3665.00	659.70	687627.30
7	5 FEET OR HIGHER, G1 POLES FOR CAMERAS AND EQUIPMENTS	159	46000.00	8280.00	8630520.00	9400.00	1692.00	1763628.00	6500.00	1170.00	1219530.00
8	CAT 6 CABLES	57240	27.00	4.86	1823666.40	34.00	6.12	2296468.80	20.00	3.60	1350864.00
9	PVC CONDUIT FOR CABLES	57240	60.00	10.80	4052592.00	85.00	15.30	5741172.00	30.00	5.40	2026296.00
10	JB, POWER CABLES, SOCKETS	159	15000.00	2700.00	2814300.00	55550.00	9999.00	10422291.00	730.00	131.40	136962.60
11	REPEATERS	159	1991.00	358.38	373551.42	7500.00	1350.00	1407150.00	1804.00	324.72	338466.48
12	INSTALLATION & COMMISSIONING (LUMPSUM)	1	2595986.00	467277.48	3063263.48	3200000.00	576000.00	3776000.00	14000000.00	2520000.00	16520000.00
13	1 KVA UPS (60MIN BACKUP)	159	23000.00	4140.00	4315260.00	29000.00	5220.00	5440980.00	35887.96	6459.83	6733299.06
Total Amount (Inclusive of GST)					**54660827**			**51914871.80**			**46461705.44**

13	ஏற்கத்தக்க ஒப்ப்ப்புள்ளி அளித்துள்ள நிறுவனம்	***M/s. I - Net Secure Labs Private Limited*** நிறுவனம் குறைந்த ஒப்பபுள்ளி அளித்துள்ளது.
	துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம்	05.04.2022 அன்று நாளிட்ட துறை கடிதத்தை தொடர்ந்து ***M/s. I - Net Secure Labs Private Limited*** நிறுவளம் தனது 07.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டது.

Sl.No	Description of Work	Quantity in No's (A)	M/s. I – Net Secure Labs Private Limited			
			QUOTED RATE			REDUCED RATE
1	5 MP IP CAMERAS	636	9000	1620.00	6754320.00	RATE NOT REDUCED
2	27 INCH MONITOR	159	14900	2682.00	2795538.00	
3	8 CHANNEL NVR	159	6600	1188.00	1238292.00	
4	8 TB HDD (SURVEILLANCE	159	16000	2880.00	3001920.00	

	GRADE)					
5	8 PORT PoE SWITCH	159	19500	3510.00	3658590.00	
6	9U WALL MOUNT RACK	159	3665	659.70	687627.30	
7	5 FEET OR HIGHER, G1 POLES FOR CAMERAS AND EQUIPMENTS	159	6500	1170.00	1219530.00	
8	CAT 6 CABLES	57240	20	3.60	1350864.00	
9	PVC CONDUIT FOR CABLES	57240	30	5.40	2026296.00	
10	JB, POWER CABLES, SOCKETS	159	730	131.40	136962.60	
11	REPEATERS	159	1804	324.72	338466.48	
12	INSTALLATION & COMMISSIONING (LUMPSUM)	1	14000000	2520000.00	16520000.00	
13	1 KVA UPS (60MIN BACKUP)	159	35887.96	6459.83	6733299.06	
Total Amount					**46461705.44**	

M/s. I - Net Secure Labs Private Limited நிறுவனம் அளித்த குறைக்கப்பட்ட ஒப்பப்புள்ளியான ரூ. *4,64,61,705.44 (GST @ 18%* உள்ளிட்டது), துறையின் மதிப்பீட்டு தொகையான ரூ. *5,46,60,827/-* (வரிகள் உள்ளிட்டது) யுடன் ஒப்பீடுகையில் (-) 14.9% குறைவாக உள்ளது. *M/s. I - Net Secure Labs Private Limited* நிறுவனம் தனது 07.04.2022 நாளிட்ட கடிதத்தில் *"we could able to provide final price at estimated value to ensure the quality of our supply products. Due to increase of all raw materials and labour cost we may not be able to reduce further. Kindly consider our quoted price as a final and process to next level"* என தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் நிறுவனம் துறை மதிப்பீட்டு தொகையைவிட *(-) 14.9%* குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம் என கருதப்படுகிறது.

<u>14 ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் 18.04.2022 அன்று நடைப்பெற்ற கூட்டம்</u>

இக்கோப்பு ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பார்வைக்கு 18.04.2022 அன்று நடந்த கூட்டத்தில் வைக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் *M/s. I - Net Secure Labs Private Limited.* நிறுவனத்தின் ஒப்பத்தை மன்றம் ஏற்க ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமம் பரிந்துரை செய்தது.

	<u>பரிந்துரைக்கப்படும் நிறுவனத்தின் விவரம்</u> *M/s. I - Net Secure Labs Private Limited*	
15	செல்லத்தக்க காலம்	90 நாட்கள்
16	சேவை வரிகள்	*GST @ 18%* உள்ளிட்டது
17	கூடுதல் பிணை வைப்புத் தொகை	ரூ.10,93,300/-
18	பிணை வைப்புத் தொகை	ரூ.9,29,234/-
19	பணம் பட்டுவாடா	வழங்கி மற்றும் நிறுவப்பட்டபின் பணம் பட்டுவாடா செய்யப்படும்.
20	செலவினம் பற்று வைத்தல்	நிர்பயா நிதியின் கீழ் மேற்கொள்ளவும்.
21	உடன்படிக்கை	துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட 7 தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும்.

எனவே, ஒப்பங்கள் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) &(2) - ன் படி ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரையின் படி,

அ.	பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் பாதுகாப்பிற்கான கண்காணிப்பு கேமரா *(CCTV)* நிர்பயா நிதியின் கீழ் அமைக்கும் பணிக்காக துறையின் மதிப்பீட்டு தொகையை விட (-) 14.9% குறைந்த ஒப்பப்புள்ளியான ரூ. *4,64,61,705.44/- (GST* உள்ளிட்டது) என அளித்துள்ள *M/s. I – Net Secure Labs Private Limited,* நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும்,
ஆ.	M/s. I–Net Secure Labs Private Limited நிறுவனத்திற்கு மொத்தம் ரூ.*4,64,61,705.44/- (GST @ 18%* உள்ளிட்டது) தொகைக்கு பணி ஆணை வழங்கவும்,
இ.	மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நிர்பயா நிதியின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பே.சா.து.ந.க.எண்.பி1/3457/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.88 **பொருள் எண்: 47**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (Build, Operate & Transfer) என்ற அடிப்படையில் கட்டப்பட்ட 65 நவீன பேருந்து நிழற்குடைகள் பத்து ஆண்டுகள் ஒப்பக் காலம் முடிவடைந்த நிலையில் - மறு ஒப்பம் கோரவும்- பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு பராமரிக்கபடும் துருபிடிக்காத எஃகுலான நவீன 779 நிழற்குடைகளை மேம்படுத்தி ஒப்பக்காலத்திற்கு பின் ஒப்படைக்கவும் - மேலும் 156 இடங்களில் புதிதாக பெருநகர சென்னை மாநகராட்சியால் வரையறுத்த பேருந்து நிழற்குடைகள் வடிவமைப்பின்படி கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் ஒப்பம் கோரியதற்கு பின்னேற்பு அனுமதி.

சென்னை மாநகரில் உலகதரத்திற்கு ஒப்பாகவும் சென்னை மாநகரில் எழில் கூட்டும் வகையிலும் பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டும் கட்டுதல் பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் தனியாரின் பங்களிப்புடன் 637 நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகராட்சியால் 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் பல்வேறு திட்ட நிதியின் கீழ் 779 நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள 779 பேருந்து நிழற்குடைகளையும், மற்றும் தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டு ஒப்பகாலம் முடிவடைந்த நிலையில் உள்ள 65 பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து (மொத்தம் 844 எண்ணிக்கை) - பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (Operate & Transfer) முறையில் மேம்படுத்தலாம். மேலும், 156 பேருந்து நிழற்குடைகள் பேருந்து பயணிகள் நலனுக்காக நவீன பேருந்து நிழற்குடைகள் இல்லாத மற்றும் தேவைப்படும் இடங்களில் சென்னை மாநகராட்சியால் வரையறுத்த நிழற்குடை வடிவமைப்பின்படி புதிதாக கட்டுதல், பராமரித்தல், பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையிலும் ஆக மொத்தம் 1000 பேருந்து நிழற்குடைகளுக்கு புதிதாக ஒப்பம் கோரலாம் என கருதப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பேருந்து நிழற்குடைகளை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்பம் கோரலாம் என நிர்ணயிக்கப்படுகிறது.

1. ஒப்பக்காலம் 10 ஆண்டுகள் முடியும் நிலையில் உள்ள 65 பேருந்து நிழற்குடைகளுக்கு, ஒரு நிழற்குடைக்கு ஓர் ஆண்டிற்கு பராமரித்து விளம்பர செய்ய கட்டணமாக ரூ.4,50,000/- மேலும் பேருந்து நிழற்குடைகளுக்கு விளம்பர வரி கட்டணமாக ஓர் ஆண்டிற்கு ரூ.1,02,000/- செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 65 பேருந்து நிழற்குடைகளுக்கு மொத்த சலுகை கட்டணமாக (Concessionaire Fee) ரூ.5,52,000/- எனவும் , இதற்கு GST 18% எனவும், பேருந்து நிழற்குடையில் மேற்கொள்ள இருக்கும் விளம்பரங்களுக்கான உரிம கட்டணம் சேர்த்து மொத்தம் ரூ. 4,23,38,400/- எனவும்,
2. மாநகராட்சியில் பல்வேறு திட்ட நிதியின் மூலம் 779 பேருந்து நிழற்குடைகளுக்கு, ஒரு நிழற்குடைக்கு ஓர் ஆண்டிற்கு பராமரித்து விளம்பர செய்ய கட்டணமாக ரூ.3,50,000/- மேலும், பேருந்து நிழற்குடைகளுக்கு விளம்பர வரி கட்டணமாக ஓர் ஆண்டிற்கு ரூ.1,02,000/- செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 779 பேருந்து நிழற்குடைகளுக்கு மொத்த சலுகை கட்டணமாக (Concessionaire Fee) ரூ.4,52,000/- எனவும். இதற்கு GST 18% எனவும், பேருந்து நிழற்குடையில் மேற்கொள்ள இருக்கும் விளம்பரங்களுக்கான உரிம கட்டணம் சேர்த்து ரூ. 41,54,87,440/- எனவும்,
3. மாநகராட்சி பகுதிகளில் புதியதாக தேவைக்கேற்ப தேவைப்படும் 156 இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் வரையறுக்கப்பட்ட பேருந்து நிழற்குடைகளில் வடிவமைப்பின் படி கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் கட்டிய பின் தடையின்மை சான்று பெற்ற நாளிலிருந்து மாநகராட்சிக்கு விளம்பர

கட்டணமாக ஆண்டு ஒன்றிக்கு ஒரு பேருந்து நிழற்குடைக்கு ரூ. 2,50,000/- எனவும் மேலும், பேருந்து நிழற்குடைகளுக்கு விளம்பர வரி கட்டணமாக ஓர் ஆண்டிற்கு ரூ.1,02,000/- செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 156 பேருந்து நிழற்குடைகளுக்கு மொத்த சலுகை கட்டணமாக ரூ. 3,52,000/- எனவும், பேருந்து நிழற்குடையில் மேற்கொள்ள இருக்கும் விளம்பரங்களுக்கான உரிம கட்டணம் சேர்த்து ரூ. 6,47,96,160 /- எனவும்,

வ.எண்	பேருந்து நிழற்குடைகளின் எண்ணிக்கை	ஒரு பேருந்து நிழற்குடைக்கு சலுகை கட்டணம்	மொத்த சலுகை கட்டணம் ஒரு ஆண்டிற்கு	ஒரு பேருந்து நிழற்குடைக்கு இரண்டு அரையாண்டு உரிம கட்டணம்	மொத்த உரிம கட்டணம் ஓர் ஆண்டிற்கு	மொத்த சலுகை கட்டணம் (ம) உரிமகட்டணம்	GST 18%	மொத்த சலுகைக் கட்டணம் விளம்பரங்களுக்கான உரிம கட்டணம் GSTயுடன் சேர்த்து
		ரூ. இலட்சத்தில்						
	(அ)	(ஆ)	(அ*ஆ)= இ)	ஈ	(அ+ஈ)= உ	(இ+உ)= ஊ	(ஊ*18%) =எ	(ஊ+எ)=ஏ
1	65	4.5	292.5	1.02	66.3	358.8	64.584	423.38
2	779	3.5	2727	1.02	794.58	3521.08	633.79	4154.87
3	156	2.5	390	1.02	159.12	549.12	98.84	647.96
மொத்தம்	1000		3409	3.06	1020	4429	797.22	5226.22

மேற்கண்ட இனங்களுக்கு சலுகை கட்டணம் (Concessionaire Fee) ஒவ்வொரு ஆண்டிற்கும் இறுதி செய்யப்பட்ட தொகைக்கு கூடுதலாக 7% சேர்த்து வசூலிக்கலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட 1000 பேருந்து நிழற்குடைகளுக்கான பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற முறையில் ஒப்பத்துக்கு முன்வைப்புத் தொகையாக (EMD) ரூ.1,00,00,000/-(ஒரு கோடி ரூபாய்) ஆக நிர்ணயிக்கலாம். இந்த ஒப்பந்ததில் பங்கு பெறும் நிறுவனங்கள் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ள 844 நவீன பேருந்து நிழற்குடைகளில் தற்போது அமைந்துள்ள இடங்களிலேயே மேம்படுத்தி பராமரித்து பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையிலும், 156 பேருந்து நிழற்குடைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தேவைகேற்ப மாநகராட்சி எல்லைக்குள் பேருந்து சாலைகளில் கட்டுதல், பராமரித்தல், பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் அதில் பெறப்படும் வருவாயை (Concessionaire Fee) பெருநகர சென்னை மாநகராட்சியிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பம் கோரலாம்.

இந்த ஒப்பங்கள் அனைத்தும் இந்தியா அளவிலான ஒப்பங்களாக கோரலாம். இந்த ஒப்ப அழைப்பில் ஆர்வம் உள்ள தேசிய / முன்னோடி நிறுவனங்கள் கலந்து கொள்ளலாம் என கருதப்படுகிறது. இதற்கு முதன்மை செயலாளர்/ ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. 3 இனங்களையும் சேர்த்து 1000 பேருந்து நிழற்குடைகளுக்கு ஒரே ஒப்பமாக கோரியதற்கும்,
2. சலுகை காலம் (Concessionaire Period) 10ஆண்டு காலமாக நிர்ணயிக்கவும்,
3. ஒப்ப முன்வைப்புத் தொகை (EMD) ரூ. 1.00 கோடி (ஒரு கோடி) என நிர்ணயிக்கவும்,
4. இந்த ஒப்பம், தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் உள்ளவர்கள் கலந்துக்கொள்ளும் ஒப்ப அழைப்பாக கோரியதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.2.ந.க.எண்.எச்2/722/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.89 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 2 (மணலி) கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து 18-04-2022 முதல் 17-04-2023 வரை ஓராண்டு காலத்திற்கு 80 தற்காலிக மலேரியா தூர்வாரும் பணியாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 2 (மணலி) கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 32261 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொசு மருந்து தெளிக்கவும், புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழு மற்றும் கொசு மருந்து தெளிக்கப்பட்டு, கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைகால் மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்த கீழ்கண்ட அட்டவணையின்படி நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர், தற்போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக ஒவ்வொரு கோட்டத்தில் உள்ள வீடுகளுக்கு ஏற்றார் போல் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை ஆகும் ,தற்போது கூடுதலாக கோட்டம்--22 மண்டலம்-2 (மணலி)யில் சேர்க்கப்பட்டது, எனவே, சுய உதவி குழுக்கள் மூலம் நியமித்து பணிகளை மேற்கொள்ளவும்.

வ,எண்	வார்டு	தேவைப்படும் மொத்தம் பணியாளர்கள்	தற்போது பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள்	கூடுதலாக தேவைப்படும் பணியளார்கள்
1	15	13	2	11
2	16	13	1	12
3	17	9	-	9
4	18	16	4	12
5	19	19	7	12
6	20	10	2	8
7	21	10	2	8
8	22	6	-	6
		96	18	78

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2ல் மலேரியா தூர்வாரும் பணியாளர்கள் மொத்த எண்ணிக்கை -90 ஆகும், **தற்போது கூடுதலாக கோட்டம்-22 மணலி மண்டலத்தில் சேர்க்கப்பட்டதால் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் 6 ஆக மொத்தம் 96 ஆகும்**, தற்போது நிரந்தர பணியாளர்கள் மொத்தம் 18 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்கள், மேற்கண்ட பணிகளை செய்ய போதுமான நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டு 72 தற்காலிக மலேரியா பணியாளர்களை ஆணையரின் ஆணை எண் H2/619/2021 நாள்: 24-02-2021- ன் படி ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது, அவர்களின் பணிக்காலம் 17.04.2022 அன்றுடன் முடிவடைகின்றது, எனவே, இப்பணி தொய்வின்றி நடைபெற மேலும் 18.04.2022 முதல் 17.04.2023 வரை ஓராண்டுக்கு 78 தற்காலிக மலேரியா தூர்வாரும் பணியாளர்கள் பணியை மேற்கொள்ளவும்.

இத்தொழிலாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14-07-2021 நாளிட்ட செயல் முறை ஆணை எண் C2/16317/2021 உறுதி செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் தினக்கூலி ரூ.410/- என்ற அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடு கணக்கிடப்பட்டது.

வ.எண்	பணி விவரம்	தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை	ஒப்பந்தம் முடிவுறும் காலம்	தினக்கூலி	மதிப்பீடு (ரூபாய்) (ஓர் ஆண்டிற்கு)
1	கொசுப்புழு தடுப்பு பணி, மருந்து தெளிக்கும் பணி, புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப்பணி	78	17.04.2022	ரூ.410/-	ரூ,1,16,72,700/-

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண் 358 /2021 நாள்; 26-02-2021ன்படி மண்டலம் - 2 (மணலி)ல் ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban LivelihoodMission - NULM) குழுக்கள் அமைத்து, அதன் மூலம் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1.	மண்டலம்-2 க்கு அனுமதி அளிக்கப்பட 78 பணியாளர்கள் மண்டலம்-2க்கு பூச்சித்தடுப்பு பிரிவிற்கு (தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM) 18.04.2022 முதல் ஓராண்டுக்கு பணியமர்த்தவும்,
2.	கொசு ஒழிப்பு பணிக்கான தொழிலாளர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்டஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.410 /- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3.	இப்பணிகளுக்கு செலவீனத்தொகை 78 X 410 X 365 (நாட்கள்) = 1,16,72,700/- (ஒரு கோடியே பதினாறு இ லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) மண்டலம் - 2 பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் NULM குழுக்களுக்கு வழங்க குறியீட்டு எண் 30-32-02. கணக்கு தலைப்பு எண்210-10-06-02 தலைப்பில் ஒதுக்கீடு செய்து மண்டல அளவில் தொடர்ந்து பணியினை மேற் கொள்ளவும்,
4.	தற்போது கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டின் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.410/- வழங்கப்பட்டு வருகிறது அடுத்த ஆண்டு 2022-2023 ஆம் ஆண்டிற்கான சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யும் தொகையை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.4.ந.க.எண்.சி2 / 1669 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.90 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை துப்புரவு பணி - போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் - தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் கீழ் 01.04.2022 முதல் 30.09.2022 வரையிலான ஆறுமாதத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 1008 எண்ணிக்கையிலான தினக்கூலி பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.

மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு தெருக்களில் சுத்தம் செய்வதும், குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளுக்காக 2011-ஆம் ஆண்டு இவ்வார்டுகளில் உள்ள பொது மக்கள் தொகையினை கணக்கிட்டு மற்றும் இதர முக்கியமான அலுவலகங்களை கணக்கில் கொண்டு தினந்தோறும் கொட்டப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு மொத்தம் 1714 பணியாளர்கள் என்று திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் வரையறுக்கப்பட்டது.

மண்டலம்-4ல் துப்புரவு பணி 767 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள், போதுமான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 947 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை மன்றத்தின் அனுமதி பெற்று 01.04.2021 முதல் ஒரு வருட காலத்திற்கு 31.03.2022 வரை பணி செய்ய பணியமர்த்தப்பட்டார்கள். இந்த ஆணை 31.03.2022 அன்று காலாவதியாகிறது. 947 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை 01.04.2021 முதல் 31.03.2022 வரை துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது 43 நிரந்தர பணியாளர்கள் 31.03.2022 அன்று பணி ஒய்வு பெற்றுள்ளனர், 16 எண்ணிக்கையிலான பணியாளர்கள் இறந்து விட்டனர். மேலும் பதவி உயர்வினால் 1 நபரும் பணியிடம் மாற்றமும், தன் விருப்ப ஒய்வில் 1 நபரும் இதர பணியாளர்களின் பணியிடங்களும் ஆக மொத்தம் 61 பணியிடங்கள் காலியாக உள்ளது.

மண்டலம்-4க்குற்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற முக்கிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65கி.மீ நீளமுள்ள 2,846 உட்புறச் சாலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம், முல்லைநகர் பேருந்து நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் இலவச பொதுக் கழிப்பிடங்கள் (சுலாப்) மற்றும் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணி ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள 706 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 947 NULM பணியாளர்களை மட்டுமே கொண்டு துப்புரவு பணி/ய செவ்வனே செய்ய இயலாத நிலை இருப்பதால் துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை மட்டும் எட்டும் வகையில் 1008 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்களின் (NULM) மூலம் பணியமர்த்த அவசியமாகிறது.

மரியாதைக்குரிய மேயர் அவர்களின் குறிப்பில் மாமன்றத்திற்கு ரூபாய் பத்து கோடி வரை தான் அனுமதி வழங்கும் அதிகாரம் உள்ளது. இக்கோப்பின் மொத்த ரூ.15,46,87,680/- ஆகும் பத்து

கோடி ரூபாய்க்கு மேல் இப்பணி உள்ளதால் அனுமதி வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. எனவே திருத்திய குறிப்பு அனுப்ப குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பொருட்களின் அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு *(01.04.2022* முதல் *30.09.2022* வரை*) 1008* தற்காலிக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்களின் *(NULM)* ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு *410 x 1008 x 183* = ரூ. *7,56,30,240/-* ஒதுக்கீடு செய்வதற்கு தங்களின் மேலான அனுமதி வேண்டப்படுகின்றது.

துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு :-

ஆணையர் மற்றும் துணை ஆணையர் அவர்களால் ஒப்பளிக்கப்பட்ட வார்டு வாரியான தூய்மை பணியாளர்கள் எண்ணிக்கை பட்டியல்

SL. NO	WARD	TOTAL COMPLEMENT	PERMANENT EMPLOYEES	NULM EMPLOYEES	VACANT (4) + (5) - (3) =	TOTAL REQUIREMENT
(1)	(2)	(3)	(4)	(5)	(7)	(8)
1	34	165	35	115	15	130
2	35	175	58	102	15	117
3	36	150	31	115	4	119
4	37	158	32	122	4	126
5	38	111	46	62	3	65
6	39	87	44	40	3	43
7	40	93	54	38	1	39
8	41	103	78	21	4	25
9	42	68	58	9	1	10
10	43	103	37	66	0	66
11	44	86	29	57	0	57
12	45	105	36	69	0	69
13	46	74	22	52	0	52
14	47	88	45	42	1	43
15	48	84	73	10	1	11
16	KDG	64	28	27	9	36
TOTAL		1714	706	947	61	1008

1. மண்டலம்-*04*க்கு துப்புரவு பணிக்கு ஒதுக்கிடப்பட்ட துப்புரவு பணியாளர்கள் = *1714*

2. தற்போதுள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் = *706*

3. தேவைப்படும் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் *(1714-706)* = *1008*

ஆக மொத்தம் = *1008* நபர்கள்

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.*Roc/சி2/16317/2021*, நாள்:-*14.07.2021*ன் படி இணைக்கப்பட்டுள்ள அட்டவணை வ.எண்.*64*ன் படி *2021-2022* ஆம் ஆண்டிற்கு துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.*410/-* என ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது வெளியிடப்பட்ட ஊதிய பட்டியலில் துப்பரவு பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ரூ.*410/-* என நாள் ஒன்றிற்கு குறைந்த பட்ச ஊதியமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதையேற்று *1008* பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு *410/-* வீதம் *183* நாட்களுக்கு ரூ. *7,56,30,240/-* தேவைப்படுகிறது.

மேலும், மண்டலம்-*4*ல் பணிபுரியும் தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு *(NULM)* நலப்பொருட்கள் வாங்கி வழங்குவதற்கு மன்றத்தீர்மானம் எண்.*304/2020*ல் ஆணை பெறப்பட்டதின் அடிப்படையில் ஒப்பந்தம் மூலம் வட்டார துணை ஆணையர் *(*வடக்கு*)* அவர்களின் ஆணை பெற்று நலப்பொருட்கள் வார்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு மாதத்திற்கு தேவையான நலப்பொருட்கள் கையிருப்பாக உள்ளது.

எனவே,

1 மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை (1.4.2022 முதல் 30.09.2022 வரை) துப்புரவு பணிகளை மேற்கொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) கீழ் 1008 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்த நிர்வாக அனுமதி மற்றும் பணியாளர்களுக்கு ஆறு மாதத்திற்கு ஊதியம் வழங்க செலவினத் தொகை ரூ.7,56,30,240/- யை 2022-23 ஆம் நிதி ஆண்டில் தலைப்பு எண்.40-41-03 Payment to Casual Staff Conservancy Works கணக்கு குறியீடு 210-100-601 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்வதற்கும்,

2. மேற்கண்ட 1008 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணி அமர்த்தியதற்கும்,

3 தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) மூலம் மண்டல அலுவலர் – 4 அவர்கள் மூலமாக பணி அமர்த்தியதற்கும்,

4 நிதி ஆலோசகர் மூலமாக ரூ.7,56,30,240/- (தலைப்பு எண்.40-41-03 Payment to Casual Staff Conservancy Works கணக்கு குறியீடு 210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.

*** * * * * ***

ம.அ7ந.க.எண்.எஸ்3/379/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.91 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2022 உடன் முடிவடைவது - அதே 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.04..2022 முதல் 15.10.2022 வரை பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 18, வார்டு – 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதி-18,19,20ல் 79 முதல் 93 வரையிலான 15 வார்டுகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 18ல் (வார்டு – 79 முதல் 81 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited* அவர்களுக்கு** ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் *2* வார்டுகள், *82 & 83* இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, ஆனால் தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

1.	பகுதி-18ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	*156*
2.	பகுதி-18ல் *NULM* திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை	*413*
	மொத்தம்	*569*

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 798 /2021, நாள்.25.10.2021ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 79, 80, 81ல் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2021 முதல் 15.04.2022 வரை 182 நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.04.2022 ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 18 ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 156 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-18க்கு தேவை என கணக்கிட்டு அவசியம் கருதி 16.04.2022 முதல் 15.10.2022 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	18	413	413 x 410 x 183 (நாட்கள்) = ரூ 3,09,87,390/-
		மொத்தம்	ரூ. 3,09,87,390/-/-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 413 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,09,87,390/- (ரூபாய் மூன்று கோடியே ஒன்பது இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து முந்நூற்றி தொண்ணூறு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி-18ல் 16.04.2022 முதல் 15.10.2022 வரை உள்ள 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 3 வார்டுகளை எடுத்து (Take Over) செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is earlier) என்ற அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்.

2) மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ. 3,09,87,390/- (ரூபாய் மூன்று கோடியே ஒன்பது இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து முந்நூற்றி தொண்ணூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 – 100 - 601 கீழ் மேற்கொள்ளவும்,

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

As may br given subject to following conditions:

I. On Privitasation of any of the activities mentioned from Sl. 1 to Sl.10. the services of such persons will be immediately stopped.

II. NULM workers to be used only for the purpose for which they are hired.

III. Zonal Officers to do thorough check of availability and capability of existing workers(age, etc.) & report in 15 days" **தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண் I முதல் III வரை உள்ள நிபந்தனைகளுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ7ந.க.எண்.எஸ்2/00253/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.92 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19 - விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2022 உடன் முடிவடைவது - அதே 475 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.04.2022 முதல் 15.10.2022 வரை பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 19, வார்டு – 84 முதல் வார்டு – 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி – 19ன் கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி – 19 ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84 முதல் 88 – வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது, மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணிஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் வார்டு 85 இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மீதமுள்ள 4 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ் கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

1) பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை - 87
2) பகுதி – 19, ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை - 475

மொத்தம் - 562

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.799/2021- நாள்.25.10.2021ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 84,86,87 மற்றும் 88-இல் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2021முதல் 15.04.2022 வரை 182

நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.04.2022 – ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 562 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 87 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 475 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7 பகுதி -19க்கு தேவை என கணக்கிட்டு 16.04.2022 முதல் 15.10.2022 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்	பகுதி எண்	NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	19	475	ரூ.410x475x183(நாட்கள்)=ரூ.3,56,39,250/-
மொத்தம்			ரூ.3,56,39,250/-

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 475 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,56,39,250/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி-19 ல் 16.04.2022 முதல் 15.10.2022 வரை 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை எடுத்து (Take Over) செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும்தோராய செலவு ரூ.3,56,39,250/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 – 10 – 06 – 01 கீழ் மேற்கொள்ளவும்,

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

As may br given subject to following conditions:

I. On Privitasation of any of the activities mentioned from Sl. 1 to Sl.10, the services of such persons will be immediately stopped.

II. NULM workers to be used only for the purpose for which they are hired.

III. Zonal Officers to do thorough check of availability and capability of existing workers(age, etc.) & report in 15 days" **தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண் I முதல் III வரை உள்ள நிபந்தனைகளுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ7ந.க.எண்.எஸ்1/ 0213/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.93 **பொருள் எண்.52**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15..04.2022 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.04.2022 முதல் 15.10.2022 வரை (183 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,4,38 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் NULM பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது. மேலும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை 16.04.2022 முதல் 15.10..2022 வரை (183 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி **- 20** ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக NULM பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.800/2021 நாள்.25.10.2021ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2021 முதல் 15.04.2022 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.04.2022ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 20ல். NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 183 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு, தேவை என கணக்கிட்டு 16.04.2022 முதல் 15.10..2022 வரை (183நாட்களுக்கு) ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	20	569	ரூ.410 x 569 x 183 (நாட்கள்) = ரூ.4,26,92,070/-
		மொத்தம்	**ரூ.4,26,92,070/-**

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 569 பணியாளர்களுக்கு 16.04.2022 முதல் 15.10..2022 வரை (183 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.4,26,92,070/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரத்து எழுபது மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி **- 20**ல்,

1. 16.04.2022 முதல் 15.10..2022 வரை (183 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro private Limited மூலம் 5 வார்டுகளை எடுத்து (Takeover) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் அதே 569 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2. மேற்கண்ட 569 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம், 16.04.2022 முதல் 15.10..2022 வரை 183 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.4,26,92,070/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரத்து எழுபது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 –100 - 601 கீழ் மேற்கொள்ளவும்,

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

As may br given subject to following conditions:

I. On Privitasation of any of the activities mentioned from Sl. 1 to Sl.10. the services of such persons will be immediately stopped.

II. NULM workers to be used only for the purpose for which they are hired.

III. Zonal Officers to do thorough check of availability and capability of existing workers(age, etc.) & report in 15 days" **தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 25.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண் I முதல் III வரை உள்ள நிபந்தனைகளுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.7.ம.ந.அ.7.ந.க.எண்.எச்2/2450/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.94 **பொருள் எண்.53**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 7- பொதுசுகாதாரத்துறை- பகுதி-18, 19 மற்றும் 20ற்குட்பட்ட கோட்டம் -- 79 முதல் 93 வரைக்கான பகுதிகளில் NULM திட்டத்தின் கீழ் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 220 கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலம் 05.05.2022 அன்று முடிவு பெறுவதால் 06.05.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-7ல் (அம்பத்தூர்) 41.32 ச.கி.மீ. பரப்பளவுள்ள 15 வார்டுகள் (கோட்டம்-79 முதல் 93 வரை) உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் 86 கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 113.00 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாயும், 27 கி.மீ. நீளமுள்ள நீர்வழித்தடமும் உள்ளது. மேலும், ஐந்து இலட்சம் மக்கட்தொகை கொண்டு இம்மண்டலத்தில் 87699 வீடுகளும், 1819 அடுக்குமாடி வீடுகளும் இதில் 181481 குடியிருப்புகளும் உள்ளது. இம்மண்டலத்தின் நடுவே சுமார் 1200 ஏக்கர் பரப்பளவில் சுமார் 5900 உற்பத்தி மற்றும் சிறு குறு தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இம்மண்டலத்தில் வாகனம் மூலம் புகை பரப்பும் பணிக்கென 4 இயந்திரங்கள், 21 கைப்புகை போக்கிகளும், மருந்து தெளிக்க 45 கைத்தெளிப்பான்களும் மற்றும் 11 பவர் தெளிப்பான்கள் *(Power Sprayers)* உள்ளது. மேலும், புதிய கட்டுமானங்கள் கட்டப்பட்டு வளர்ச்சி அடைந்து வரும் மண்டலமாக உள்ளது.

இம்மண்டலத்திலுள்ள பக்கவாட்டு கால்வாய்களில் கழிவு நீர் தேங்காதவாறு பராமரிக்கவும், மழைநீர் கால்வாய்களில் நீர் தேக்கம் ஏற்படாதவாறும், குளங்கள், ஏரிகள் மற்றும் நீர் வழித்தடங்கள் ஆகாய தாமரை செடிகளை அப்புறப்படுத்தி கொசு உற்பத்தியை தடுப்பதற்கான பணியினை மேற்கொள்வதற்காக 78 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மாற்று பணி அடிப்படையில் மலேரியா பணியாளர்களாகவும் மற்றும் 19 நிரந்தர மலேரியா பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

பல்வேறு நாளிட்ட மன்றத்தீர்மானங்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ற்குட்பட்ட கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள பகுதிகளில் பொது சுகாதாரப் பணியை மேற்கொள்ள ஒரு சிறு வட்டத்திற்கு *(Sector)* ஒரு தொழிலாளர் என ஒரு நாளைக்கு 80 வீடுகள் மற்றும் 1 வாரத்திற்கு 500 வீடுகள் என பிரிக்கப்பட்டு கொசு ஒழிப்பு பணியில் *220 NULM* தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் செக்டாரில் உள்ள வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தீவிர பணியால் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

மண்டலம்-7ல் கொசுவினால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து அடிக்கும் பணியை மேற்கொள்ளவும், கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும் நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக கூடுதலாக தற்காலிக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கடந்த 2016 முதல் 03.05.2019 வரை கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தக் காலம் 03.05.2019 அன்றுடன் முடிவு பெற்ற நிலையில், மண்டலங்களில் ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்பட்டு வரும் தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் *(National Urban Livelihood Mission-NULM)* குழுக்கள் அமைத்து அதன் மூலம் கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்படுத்திக்கொள்ளலாம் எனவும், அவ்வாறு ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் ஊதியத்தை தினக்கூலி அடிப்படையில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி வழங்கலாம் எனவும், தற்பொழுது கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு

வரும் தொழிலாளர்களை தவிர, புதிய நபர்களை பணியில் ஈடுபடுத்த துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும் எனவும், கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், கொசு ஒழிப்பு தொழிலாளர்கள் பணி செய்த நாட்களுக்கு அந்தந்த மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கலாம் எனவும், ஊதியத் தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து தொகுதி வாரியான குழுக்களுக்கு செலுத்தி அதன் மூலம் ஊதியத்தை தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தவும், அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் தலைமையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர்/சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும், இப்பணிக்கான செலவின தொகையை அந்தந்த மண்டலத்தில் உள்ள பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் *NULM* குழுக்களுக்கு குறியீட்டு எண்.30-*32*-02, கணக்கு தலைப்பு எண். 210-*10-06*-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும், சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2019 நாள் *07.03.2019*'ன்படி அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து, மண்டலம்-*7* அம்பத்தூர் பொது சுகாதாரத்துறை கோட்டம்-79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் சுகாதாரப் பணிக்கான 220 ஒப்பந்த அடிப்படை தொழிலாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை சுகாதாரப்பணிக்கு பணியமர்த்தவும், 220 பணியாளர்கள் *NULM* மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுப்படுத்தவும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 250/2019 நாள் 06.05.2019 நாளிட்ட மன்றத்தீர்மானத்தின் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். *464/2021* நாள்.*07.05.2021*ன்படி 06.05.2021 முதல் ஓராண்டிற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து அதன் மூலம் மண்டலம்-7, சுகாதாரப்பிரிவில் கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தீவிர பணியால் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு பணிபுரிந்து வரும் 220 *NULM* தற்காலிக தொழிலாளர்கள் பணிக்காலம் 05.05.2022 அன்றுடன் முடிவடையும் நிலையில், 06.05.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்வதற்கு கீழ்வரும் இனங்களின் மீது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-7க்கு அனுமதி அளிக்கப்பட்ட 220 *NULM* பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணியினை 06.05.2022 முதல் ஓராண்டுக்கு மேற்கொள்ள அனுமதியும்,
2. மன்றத்தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மேற்சொன்ன 220 பணியாளர்கள் *NULM* மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுப்படுத்தவும்,
3. தொழிலாளர்களின் ஊதியத்தினை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2021-22ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ. 410/ஐ *(220x410x365=32923000)* வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும், *2022*-23ம் ஆண்டிற்கான நடவடிக்கையில் பின்னர் தெரிவிக்கப்படும் தினக்கூலி தொகையினை வழங்கவும்,

4. இப்பணிக்கான செலவின தொகையை (220x410x365=32923000) அந்தந்த மண்டலத்தில் உள்ள பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் NULM குழுக்களுக்கு வழங்கிட குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

***"We may continue existing manpower for 2 months & decide on rationalisation in the meanwhile. RDC may weed out absentees at their level"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.8.ந.க.எண்.சி1/2454/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.95 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிபுரியும் 252 இரவு நேர தூய்மை பணியாளர்களுக்கு (BOV ஓட்டுநர்கள்) 07.05.2022 முதல் 02.11.2022 வரை பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 07.10.2021 நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் மன்ற தீர்மானஎண்.786/2021, நாள். 11.10.2021ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரை அமையப்பெற்ற இடங்களில் இரவு நேர தூய்மை பணிகள் (BOV ஓட்டுநர்கள்) மேற்கொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 08.11.2021 முதல் 252 எண்ணிக்கை தற்காலிக தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்திட அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் 252 நபர்கள் கடந்த 08.11.2021 முதல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் மண்டலம்-8ற்குட்பட்ட கோட்டங்களில் இரவு நேர தூய்மை பணிகள் (BOV ஓட்டுநர்கள்) மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலமாக நடைபெற்று வரும் இரவு நேர தூய்மை (BOV ஓட்டுநர்கள்) பணிக்கான மன்ற அனுமதி 06.05.2022 அன்றுடன் நிறைவடைகிறது. மேலும், தூய்மை பணியின் அவசியம் கருதி 07.05.2022 முதல் 02.11.2022 வரைக்கான 180 நாட்களுக்கு தொடர்ச்சியாக பணியமர்த்த வேண்டியுள்ளது.

முதன்மை செயலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண். அ3/ 13876 / 2021) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- என்ற அடிப்படையில் 180 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 410 x 180 = 1,85,97,600/-ஐ (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூறு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 - 41 - 03, கணக்கு தலைப்பு கணக்கு தலைப்பு எண்.210 - 100 - 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது.

எனவே,

1) மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் இரவு நேர தூய்மை பணி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 252 தூய்மை பணியாளர்களை கொண்டு 07.05.2022 முதல் 02.11.2022 வரை 180 நாட்களுக்கு பணியமர்த்தியமைக்கும்,
2) இப்பணிக்கு தேவையான தோராய செலவினம் 252 x 410 x 180 = 1,85,97,600/-ஐ கணக்கு குறியீட்டு எண்.40 - 41 - 03, கணக்கு தலைப்பு எண்.210 - 100 - 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.11.பொ.சு.து.ந.க.எண்.எச்2/383/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.96 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11 -பொதுசுகாதாரத்துறை கோட்டம்-143 முதல் 155 வரை - கொசு ஒழிப்பு பணியினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் மூலம் பணியமர்த்தப்பட்ட 237 (தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் 05.05.2022 உடன் முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு நீடிக்கவும் - 233 தற்காலிக பணியாளர்கள் National Urban Livelihood Mission (NULM) (தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம்) மூலம் பணியமர்த்தவும் நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வளசரவாக்கம் பகுதியானது 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3121 சாலைகள்/ தெருக்கள், 65,686 வீடுகளும் சுமார் 4.33 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும்.

மண்டலம்-11ல் கூவம் ஆறு, புவனேஸ்வரி கால்வாய், நொளம்பூர் கால்வாய், வாரந்தோறும் கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்கவும், மேலும் 132.4கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாயில் சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணிகள் மேற்கொள்ளவும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 25.02.2021 நாளிட்ட அனுமதியின்படி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.366/2021, நாள்.26.02.2021ன் அடிப்படையிலும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் மூலம் பணியமர்த்தப்பட்ட தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் மண்டலம்-11க்கு 06.05.2021 முதல் ஒரு ஒரு வருட காலத்திற்கு 237 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் நாளொன்றிற்கு ரூ.391/ வீதம் ஊதியம் நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிக்காலம் வரும் 05.05.2022 அன்று முடிவடைகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி விவரப்பட்டியல் வரிசை எண்.64ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்காலிக மலேரியா பணியாளர்களுக்கு ஊதியம் 01.04.2021 முதல் ரூ.391/-லிருந்து ரூ.410/- ஆக உயர்த்த முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, அந்தந்த மண்டலத்திலேயே உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 1 முதல் 15 மண்டல அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

05.03.2022 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் வார்டு வரையரைக்கான ஆணையின்படி கோட்டங்களுக்கிடையே சில பகுதிகள் மாற்றம் பெற்றுள்ளதால் அதன்படி மண்டலம்-11ல் பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட கோட்டங்களான 143 முதல் 155 வரை தேவையான கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிகள் 233 தற்காலிக மலேரியா பணியாளர்களை National Urban Livelihood Mission (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் மூலம் மலேரியா பணியாளர்கள் தேவைப்படுகிறது அதன் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை - I

S.No	மண்டலம்-11ல் கோட்டவாரியாக பொதுவான விவர பட்டியல்														Total
	Division:	143	144	145	146	147	148	149	150	151	152	153	154	155	
1	Total No of Parks	18	3	0	0	4	0	7	7	5	4	4	2	6	60
2	Total No of Government Building	10	7	1	1	7	5	5	6	9	6	8	9	3	77

3	Total No of Govt. Schools	1	4	1	0	2	1	0	2	2	1	2	0	2	18
4	Total No of Private Schools	6	2	9	7	7	6	3	9	5	3	3	4	10	74
5	Total No of Hostels	2	3	2	2	4	0	2	15	16	2	9	24	10	91
6	Total No of Church	6	5	6	2	1	5	1	3	2	2	3	5	3	44
7	Total No of Temples	7	10	12	4	9	16	9	10	9	8	3	8	15	120
8	Total No of New Construction Sites	80	85	32	62	92	60	41	28	36	43	52	57	38	706
9	Amma Unavagam	2	2	2	2	2	2	2	2	2	2	2	1	3	26
TOTAL		**132**	**121**	**65**	**80**	**128**	**95**	**70**	**82**	**86**	**71**	**86**	**110**	**90**	**1216**

மண்டலம்-11, கோட்டம்-143 முதல் 155 வரையுள்ள 13 கோட்டங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களின் விவரப்பட்டியல்

அட்டவணை-II

விவரம்	143	144	145	146	147	148	149	150	151	152	153	154	155	மொத்தம்
மொத்த வீடுகளின் எண்ணிக்கை	4591	5158	4684	6055	6258	5232	4302	6664	4307	4292	4354	3831	5958	65686
குடியிருப்புகளின் எண்ணிக்கை (House Hold)	15939	12244	10918	14732	12536	12889	13287	12643	14228	14276	9497	8014	12416	163619
அட்டவணை-1ல் குறிப்பிட்டபடி பொதுமக்கள் கூடும் இடங்கள்	132	121	65	80	128	95	70	82	86	71	86	110	90	1216
செக்டார்களின் எண்ணிக்கை	15	13	12	14	16	13	13	15	11	11	13	11	13	170
மழைநீர் கால்வாய்/ பக்கவாட்ட கால்வாய் நீளம் (km)	17	9	24	22	15	26	16	20	24	9	20	8	10	220
கொசு மருத்து தெளிக்கும் பணி/ மழைநீர் கால்வாய்/ தூர் வாரும் பணிகள்	2	2	4	3	2	2	2	3	4	2	4	2	2	34
புகை பரப்பும் பணி	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	1	13
வாகனம் மூலம் புகை பரப்பும் பணி	1	0	0	1	1	0	1	0	1	0	0	1	0	6
விருகம்பாக்கம் கால்வாய் / கூவம் ஆறு தூர் வாரும் பணி	2	2	0	2	0	1	0	0	0	0	0	0	0	7
மாடு பிடிக்கும் பணி	0	1	0	0	1	1	0	0	0	0	0	0	0	3
பிறப்பு (ம) இறப்பு பணி	0	1	0	0	0	0	0	2	0	0	0	0	0	3
அம்மா உணவக பணி	0	0	1	0	0	0	0	0	0	0	0	1	0	2
மற்ற பணிகள்	1	1	2	1	2	0	2	1	1	1	0	1	2	15
மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை	22	21	20	22	23	18	19	22	18	15	18	17	18	253
நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	4	2	2	2	3	1	1	1	2	0	1	1	0	20
NULM பணியாளர்களின் எண்ணிக்கை	18	19	18	20	20	17	18	21	16	15	17	16	18	233

நீண்ட காலமாக பணிக்கு வராத நிரந்தர பணியாளர்கள் *(Long Absent)*	0	1	1	1	1	0	1	0	0	0	0	1	0	6

எனவே,

அ	அட்டவணை-2ன்படி மண்டலம்-11, பகுதி-32, 33 மற்றும் 34-க்குட்பட்ட கோட்டங்களான 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களிலும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிக்காக தற்காலிக மலேரியா பணியாளர்களை நாளொன்றிற்கு ரூ.410/-வீதம் 1 வருட காலத்திற்கு 233 தற்காலிக மலேரியா பணியாளர்களை ஓராண்டிற்கு *National Urban Livelihood Mission (NULM)* (தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம்) மூலம் 09.05.2022 முதல் 08.05.2023 வரை (12 மாதங்கள்) பணியில் ஈடுபடுத்தவும்,
ஆ	இப்பணிக்கான செலவினம் *233x365x410=3,48,68,450/-* (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) நிர்வாக அனுமதிக்கும்
இ	இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-*32*-02 மற்றும் கணக்கு குறியீடு 210-*10-06*-02 நிரந்தர மற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பின் 2022-2023 நிதியாண்டில் ரூ.3,48,*68,450/-* (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும்
ஈ	இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-*32*-02 மற்றும் கணக்கு குறியீடு 210-*10-06*-02 நிரந்தரமற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்

துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

***"Existing strength may be continued for 2 months & we may decide rationalisation within that time. RDC's may weed out absentees at their level"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ13.பொ.சு.து.ந.க.எண்.எச்2/0329/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.97 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13 - பகுதி-38, 39, 40 மற்றும் 40 (A) - கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 267 மலேரியா பணியாளர்களின் பணிக்காலம் 16.04.2022 அன்றுடன் முடிவடைவது - மீண்டும் 17.04.2022 முதல் 16.04.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 267 பணியாளர்கள் மற்றும் புதிதாக வரையறைக்கப்பட்ட பகுதிகளுக்கு கூடுதலாக மூன்று பணியாளர்களுடன் மொத்தம்-270 தற்காலிக மலேரியா பணியாளர்களை பணியமர்த்தி பணிமேற்கொள்ள அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-13, (அடையார்), பகுதி-38, 39, 40 மற்றும் 40A, கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) 13 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக வரையறைக்கப்பட்டுள்ளபடி, இந்த மண்டலத்தில் தோராயமாக 2978 சாலைகள் / தெருக்கள், 91221 வீடுகளும், சுமார் 5.00 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், அடையாறு ஆறு, பக்கிங்காம் கால்வாய், வீராங்கல் ஓடை, நேரு நகர் கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகிய நீர்வழிப்பாதைகள் செல்கின்றன மற்றும் 107 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால் கால்வாய் கொண்ட பகுதியாகும். இவைகளில் வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி, கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டதை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணி, சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி, கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மண்டலம்-13, கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) பொதுசுகாதாரத்துறை மலேரிய பிரிவில் நிரந்தர மலேரியா பணியாளர்கள் தற்போது 96 நபர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும் திரு.குப்புசாமி, மற்றும் திரு.பெருமாள் ஆகிய இரண்டு மயான உதவியாளர்களுக்கும் மாற்றுப்பணி அடிப்படையில் மலேரியா பிரிவில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, 96 நிரந்தர மலேரியா பணியாளர்கள் மற்றும் 2 மயான உதவியாளர்கள் என மொத்தம்-98 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இதில் செக்டார் பணியாளர்கள்- 12, மழைநீர் வடிகால்வாய் -10, வீடுகளில் மருந்து தெளிக்கும் பணிக்கு -7 பேர், விஜபி பகுதியில் மருந்து தெளிக்கும் பணிக்கு -2 பேர், கை புகைப்பரம் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள-9 பேர், வாகன புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள -6 பேர், கால்வாய் பணிக்கு -9 பேர், அடையாறு ஆறு -9பேர், மேற்பார்வையாளர் பணிக்கு -3 பேர், அம்மா உணவக பணிக்கு -1 நபர், நீண்ட கால விடுப்பு -4, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரிபவர்கள் -8, மற்ற மண்டலங்களில் மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரிபவர்கள் எண்ணிக்கை-14, மற்றும் மண்டலம்-13ல் தபால் பணிக்கு 2 பணியாளர்களும் என 96 நிரந்தர மலேரியா பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

மேலும், மேற்கண்ட நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 267 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள செக்டார் பணியாளர்கள்- 184, மழைநீர் வடிகால்வாய் -20, வீடுகளில் மருந்து தெளிக்கும் பணிக்கு-9 பேர், கை புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள-10 பேர், கால்வாய் பணிக்கு -19 பேர், அடையாறு ஆறு -3பேர், மேற்பார்வையாளர் பணிக்கு -10பேர், PGR மற்றும் காலிமனையில் மருந்து தெளிக்கும் பணிக்கு -2 பேர், DEO-12 பேர், அம்மா உணவக பணிக்கு -2 நபர், வட்டார துணை ஆணையர் (தெற்கு) -2 பேர், கூடுதல் மாநகர நல அலுவலர்

(தலைமையிடம்) -01, மண்டல நல அலுவலர்-13 -01, மண்டலம்-13 Wireless Duty-01 என 276 நபர்கள் தேவைப்படுகிறது. தற்போது 267 தற்காலிக பணியாளர்கள் உள்ளனர். மேலும், இதில் 9 பணியாளர்கள் கூடுதலாக தேவைப்படுகிறார்கள். இதில் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளும் 10 பணியாளர்களில், 5 பணியாளர்களை செக்டார் பணிக்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது. மீதமுள்ள 3 கூடுதல் பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி பணிமேற்கொள்ள வேண்டியுள்ளது.

மண்டலம்-13 கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) பணிபுரியும் NULM பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தற்காலிக தினக்கூலி பணியாளர்களுக்கு நாளொன்றிக்கு ஊதியம் ரூ.410/- என்று வழங்கப்பட்டு மண்டலம்-13, கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் கொசு ஒழிப்பு தடுப்பு பணி தற்காலிக பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-13, கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 267 பணியாளர்களை பணியமர்த்தி நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பணியானது வரும் 16.04.2022 முதல் முடிவடைவதால், மீண்டும் ஒருவருட காலத்திற்கு (365 நாட்கள்) தற்போது புதிதாக வரையறை செய்யப்பட்டதின்படி, கூடுதலாக 3 பணியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே 267 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொசு ஒழிப்பு தடுப்பு பணி மேற்கொண்டு வரும் நிலையில் கூடுதலாக 3 பணியாளர்களையும் புதிதாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் நியமனம் செய்து மொத்தம் 270 தற்காலிக மலேரியா பணியாளர்களை நியமனம் செய்து கொசு ஒழிப்பு மற்றும் நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ)	மண்டலம்-13, புதிதாக வரையறை செய்யப்பட்ட கோட்டத்தின் படி கூடுதலாக 3 நபர்களை (திருமதி.I.தமிழ் அரசி, பிரசாந்த் மற்றும் சந்துரு) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொசு ஒழிப்பு தடுப்பு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,
ஆ)	மண்டலம்-13, பகுதி-38,39,40 மற்றும் 40A, கோட்டம்-168 முதல் 180 வரை (பழைய கோட்டம்-170 முதல் 182 வரை) 270 தற்காலிக மலேரியா பணியாளர்களை 17.04.2022 முதல் 16.04.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொசு ஒழிப்பு தடுப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
இ)	மேற்கண்ட 270 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2021-2022ம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாளொன்றிக்கு ஊதியம் ரூ.410/- வீதம் (270 நபர்கள் X 365 நாட்கள் X ரூ.410/-) ரூ.4,04,05,500/- (ரூபாய் நான்கு கோடியே நான்கு இலட்சத்தி ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) ஊதியம் வழங்கும் செலவீனம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
ஈ)	தற்போது சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2021-2022ம் ஆம் நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.410/- யை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு வழங்குவதற்கும், பின்னர் 2022-2023 ஆம் நிதியாண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும்,
உ)	மேற்படி செலவீனத்திற்கு பிரிவு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 (payment to casual health works) என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,

ஊ)	கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட மண்டல நல அலுவலர் மூலம் சம்மந்தப்பட்ட பணியாளரை குழுவிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அதற்கு பதிலாக புதிய நபரை பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியும்,
எ)	இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையில் இருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கும் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 19.04.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி **"ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட 267 தற்காலிக பணியாளர்கள் புதிய வார்டு வரையறையின்படி மீண்டும் பணிமர்த்தலாம். மேலும், 3 கூடுதல் தற்காலிக பணியாளர்கள் தேவையில்லை" என்ற நிபந்தனையுடன்,** நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.14.பொ.சு.து.ந.க.எண்.எச்2/1193/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.98 **பொருள் எண்.57**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14 - பகுதி-41, 42, மற்றும் 43- கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 185 மலேரியா பணியாளர்களின் பணிக்காலம் 03.05.2022 அன்றுடன் முடிவடைவது - மீண்டும் 04.05.2022 முதல் 03.05.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 185 மலேரியா பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-14, (பெருங்குடி), பகுதி-41, 42, மற்றும் 43, கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) 11 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் 185 NULM பணியாளர்கள் மற்றும் 26 நிரந்தர பணியாளர்கள் மொத்தம் 211 பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக வரையறுக்கப்பட்டுள்ளபடி, இந்த மண்டலத்தில் தோராயமாக 62939 வீடுகளும், சுமார் 3.86 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், பக்கிங்காம் கால்வாய், வீராங்கல் ஓடை, ஆகிய நீர்வழிப்பாதைகள் செல்கின்றன மற்றும் 178.27 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் கொண்ட பகுதியாகும். இவைகளில் வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு புழு கொல்லி மருந்து போடும் பணி, கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டதை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணி, சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி, கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மண்டலம்-14, கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) பொதுசுகாதாரத்துறை மலேரியா பிரிவில் 26 நிரந்த மலேரியா பணியாளர்களில் தற்போது 24 நபர்கள் (நீண்ட நாள் பணிக்கு வராதவர்கள் - 2) பணியாற்றி வருகின்றனர்.

மண்டலம்–14ல் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் 24 பணியாளர்களில், மழைநீர் வடிகால்வாய் மற்றும் கால்வாய்-10, செக்டார் பணிக்கு-6 பேர், வாகனம் மூலம் புகைப்பரப்பும் பணிக்கு-3 பேர் மற்றும் கை புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி – 3 , மண்டல நல அலுவலர் அலுவலகத்தில்-2 பணியாளர் என மொத்தம்-24 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், மேற்கண்ட நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 185 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள செக்டார் பணியாளர்கள்-118, மழைநீர் வடிகால்வாய்-39, வாகனம் மூலம் புகைப்பரப்பும் பணிக்கு-1, கை புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள-8 பேர், B CANAL மற்றும் வீரங்கல் ஓடை-12 பேர், DEO-6 பேர், அம்மா உணவக பணிக்கு-1 நபர், என மொத்தம் 185 நபர்கள் தேவைப்படுகிறது.

மண்டலம்-14, கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) பணிபுரியும் NULM பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தற்காலிக தினக்கூலி பணியாளர்களுக்கு நாளொன்றிக்கு ஊதியம் ரூ.410/- என்று வழங்கப்பட்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் கொசு ஒழிப்பு தடுப்பு பணி தற்காலிக பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-14, கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 185 பணியாளர்களை பணியமர்த்தி நோய்த்

தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பணியானது வரும் 03.05.2022 முதல் முடிவடைவதால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) மொத்தம் 185 தற்காலிக மலேரியா பணியாளர்களை நியமனம் செய்து கொசு ஒழிப்பு மற்றும் நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள,

அ)	மண்டலம்-14, மொத்தம் 185 நபர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொசு ஒழிப்பு தடுப்பு பணி மற்றும் பக்க கால்வாய் சுத்தம் செய்ய அனுமதி வேண்டியும்,
ஆ)	மண்டலம்-14 – பகுதி-41, 42, மற்றும் 43 – கோட்டம்-181 முதல் 191 வரை (பழைய கோட்டம்-168,169,183 முதல் 191 வரை) 185 தற்காலிக மலேரியா பணியாளர்களை 04.05.2022 முதல் 03.05.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தி கொசு ஒழிப்பு தடுப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
இ)	மேற்கண்ட 185 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2021-2022ம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாளொன்றிக்கு ஊதியம் ரூ.410/- வீதம் (185 நபர்கள் X 365 நாட்கள் X ரூ.410/-) ரூ.2,76,85,250/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து ஆறு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) ஊதியம் வழங்கும் செலவீனம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
ஈ)	தற்போது சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2021-2022ம் ஆம் நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.410/-யை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு வழங்குவதற்கும், பின்னர் 2022-2023 ஆம் நிதியாண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும்,
உ)	மேற்படி செலவீனத்திற்கு பிரிவு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 (Payment to Casual Health Works) என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,
ஊ)	கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட மண்டல நல அலுவலர் மூலம் சம்மந்தப்பட்ட பணியாளரை குழுவிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அதற்கு பதிலாக புதிய நபரை பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியும்,
எ)	இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையில் இருந்தும் விலக்கு அளிக்கவும்,

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில்,

***"We may continue existing strength for 2 months & decide on rationalisation within that time. RDC's may weed out absentees at their level"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கும், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 17.05.2022 நாளிட்ட மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன், நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ15.பொ.சு.து.ந.க.எண்.எச்2/0167/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.99 **பொருள் எண்.58**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-15 - பகுதி-44 மற்றும் 45 - கோட்டம்-192 முதல் 200 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட மலேரியா பணியாளர்களின் பணிக்காலம் 26.04.2022 அன்றுடன் முடிவடைகிறது - மீண்டும் 29.04.2022 முதல் 28.04.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 159 தற்காலிக மலேரியா பணியாளர்களை பணியமர்த்தி பணிமேற்கொள்ள அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-15, சோழிங்கநல்லூர், பகுதி-44 மற்றும் 45, கோட்டம் 192 முதல் 200 வரை 9 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலம் தோராயமாக 2463 சாலைகள் / தெருக்கள், 78,403 வீடுகளும், சுமார் 2.53 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், பக்கிங்காம் கால்வாய் நீளம் 9.5 கிலோ மீட்டர் மற்றும் 65.48 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால் கால்வாய் கொண்ட பகுதியாகும். இவைகளில் வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி, கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டதை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணி, சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மற்றும் கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்- 15ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 159 ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்கு 27.04.2021 முதல் 26.04.2022 வரை பணிபுரிய ஆணை பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அதற்குரிய ஒப்பந்த காலம் 26.04.2022 அன்றுடன் முடிவடைகிறது. மேலும், கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ் குறிப்பிட்டுள்ளபடி 159 பணியாளர்களை (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பணியமர்த்த வேண்டியுள்ளது.

182 பணியாளர்களின் பணி விவரம் பின்வருமாறு:

1. வீடுதோறும் கொசுப்புழு கொல்லி மருந்து போடும் பணி (DBC) - 120 பணியாளர்கள்
2. கை புகை மருந்து அடிக்கும் பணி (Fogging work) - 9 பணியாளர்கள்
3. நீர்வழிப் பிரிவு பணி (B- Canal) -8 பணியாளர்கள்
4. வாகனம் மூலம் புகை பரப்பும் பணி (Vehicle Mounted Fogging) - 4 பணியாளர்கள்.
5. கணினி இயக்குபவர் பணி (Data Entry Operator) - 4 பணியாளர்கள்
6. அம்மா உணவகம் பணி - 3 பணியாளர்
7. மூடிய / திறந்த கால்வாய் சுத்தம் செய்யும் பணி (SWD/Side drain) – 25 பணியாளர்கள்
8. மாடு பிடிக்கும் பணி- 3 பணியாளர்கள்.
9. அலுவலகப்பணி (மயான உதவியாளர், பூச்சிக் கொல்லி இருப்பு பராமரிப்பு, அலுவலக உதவியாளர் மற்றும் தபால்) - 6 பணியாளர்கள்.

எனவே,

1. மண்டலம்-15ல் 29.04.2022 முதல் 28.04.2023 வரை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுப்பதற்கு 159 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க குழுக்களின் மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

2. இப்பணியாளர்களுக்கு 29.04.2022 முதல் 28.04.2023 வரை தேவையான செலவினத் தொகை ரூ. 410 x 159 x 365 = ரூ. 2,37,94,350/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்) கணக்கு தலைப்பு எண் 30-32-02 (Anti Mosquito Operation) 210-10-06-02 (Payment to casual staff - Health workers) என்ற தலைப்பில் செலவினங்கள் மேற்கொள்ளவும்,
3. மத்திய அரசின் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் உள்ள குழு உறுப்பினர்களாக இருப்பதால் இவர்களின் ஊதியத்தில் வருமானவரி பிடித்தம் செய்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. மண்டலம்- 15 பொது சுகாதாரத்துறையில் 159 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு கொசு ஒழிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு 29.04.2022 முதல் 28.04.2023 வரை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,
5. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2022 – 2023 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொது.சு.கா. ம.பி.ந.க.எண்.அ2/0128/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.100 **பொருள் எண்.59**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு வரப்படும் தெரு நாய்களை பராமரித்தல் மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 9 நபர்கள் மற்றும் கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் பல்வேறு மையங்களில் கூடுதலாக 12 நபர்கள் ஆக மொத்தம் 21 நபர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் இரண்டு குழுக்களாக 21.05.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு பணிபுரிய ஆணை பெறப்பட்டது - பேசின்பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்திற்கு கூடுதலாக 2 உறுப்பினர்கள் மற்றும் 'ஜி' & 'டி' மாட்டுத் தொழுவங்களுக்கு தலா 2 நபர்கள் வீதம் மொத்தம் 6 உறுப்பினர்களை கூடுதலாக சேர்த்தமைக்கு பின்னேற்பு அனுமதியும்- 27 நபர்களை 21.05.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு பணிபுரிய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு வரப்படும் தெரு நாய்களை பராமரிக்க மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 9 நபர்களும் மற்றும் கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் பல்வேறு மையங்களில் 12 நபர்களும் ஆக மொத்தம் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் 21 உறுப்பினர்கள் 21.05.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.470/2021, நாள்: 08.05.2021ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அவ்வுறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி உதவியாளர் (Attenders) என்ற பணியில் நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.446/- வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

வ. எண்.	பணிபுரியும் இடம்	பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கை
01.	மையம் ஒன்றிற்கு மூன்று நபர்கள் வீதம் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் பணிபுரியும் நபர்கள்	9
02.	பேசின்பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தலா ஒருவர் வீதம் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்க பணியமர்த்தப்பட்டுள்ள நபர்கள்	3
03.	பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள 200-க்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரிக்கும் நபர்கள்	3
04.	புகார்களுக்காக பிரத்யேகமாக பயன் படுத்தப்பட்டு வரும் நாய் வண்டியில் பணிபுரியும் நபர்கள்	4
05	'டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவங்களில் உள்ள மாடுகளை பராமரிக்க கூடுதலாக பணிபுரியும் தற்காலிக நபர்கள்	2
	மொத்தம்	21

முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்கள் பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்தை 09.03.2022 அன்று ஆய்வு செய்த பொழுது அம்மையத்தின் பணிகளை மேலும் தூய்மையாகவும், அறுவை சிகிச்சை பணிக்கு உதவுவதற்காகவும், கூடுதலாக 2 நபர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் நியமித்துக்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். மேலும், 15 மண்டலங்களிலும் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு அதிக அளவில் மாடுகள் பிடிக்கப்பட்டு 'ஜி' & 'டி' மாட்டுத் தொழுவங்களில் பராமரிப்பிற்காக அடைக்கப்பட்டு வருவதால், இரண்டு மாட்டுத் தொழுவங்களிலும் உள்ள மாடுகளுக்கு தீவனம் அளிப்பதற்கும், அவற்றை பராமரிப்பதற்கும் தொழுவம் ஒன்றிற்கு 2 நபர்கள் வீதம் 4 நபர்கள் கூடுதலாக தேவைப்பட்டது.

எனவே, கால்நடை மருத்துவப்பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்படி மையங்களில் 21.05.2021 முதல் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் 2 குழுக்களாக 21 உறுப்பினர்கள் (9 + 12 = 21) பணிபுரிவதற்கு ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பேசின்பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்திற்கு கூடுதலாக தேவைப்படும் 2 உறுப்பினர்கள் மற்றும் 'ஜி' & 'டி' மாட்டுத் தொழுவங்களுக்கு தலா 2 நபர்கள் வீதம் மொத்தம் 6 உறுப்பினர்களை 9 உறுப்பினர்களை கொண்ட குழுவுடன் சேர்த்து ஆக மொத்தம் 15 உறுப்பினர்கள் பணிபுரிவதற்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்ப்பட்டு முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 18.03.2022 நாளிட்ட ஆணையின்படி 19.03.2022 அன்று முதல் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, 21.05.2021 முதல் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் மூலம் 2 குழுக்களாக (9 + 12) 21 நபர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் கூடுதலாக 6 உறுப்பினர்களை சேர்த்தமைக்கு,

1. பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்படி மையங்களில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 21 உறுப்பினர்கள் (12 + 9 = 21) பணிபுரிவதற்கு ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பேசின்பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்திற்கு கூடுதலாக தேவைப்படும் 2 உறுப்பினர்களை சேர்ப்பதற்கும் மற்றும் 15 மண்டலங்களிலும் மாடு பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், 'ஜி' & 'டி' மாட்டுத் தொழுவங்களுக்கு தலா 2 நபர்கள் வீதம் ஆக மொத்தம் 6 உறுப்பினர்களை (ஆக மொத்தம் 27 உறுப்பினர்கள் (15+12)) கூடுதலாக 19.03.2022 முதல் 20.05.2022 வரை சேர்த்தமைக்கு பின்னேற்பு அனுமதியும், இதற்கான செலவினத் தொகைரூ.1,68,588/-க்கு *(6x446x63)* பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்ட பணியில் ஈடுபட்டு வரும் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை நீக்கம் செய்வதற்கும் அவருக்கு பதிலாக வேறு நபரை குழுத்தலைவர் பரிந்துரையின்படி கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியில் ஈடுபடுத்துவதற்கும்,

3. இத்தனியர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு குழுவுக்கு வழங்கியதற்கும்,

4. இச்செலவீன தொகையை பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவில் பிரிவு குறியீடு எண்.40-*43*-02 கணக்கு குறியீட்டு எண்.210-*20-07-03 (Intensive Work and Other)*- என்ற கணக்கு தலைப்பில் மேற்கொண்டதற்கும்,

5. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 2021-2022ஆம் நிதி ஆண்டில் உதவியாளர் (Attenders) என்ற பணியில் நாளொன்றிற்கு நபர் ஒன்றிற்கான தினக்கூலி ரூ.446/- வீதம் 21.05.2022 முதல் ஒரு வருட காலத்திற்கு 27 நபர்களுக்கு ரூ.43,95,330/-ஐ (ரூ.446 x 27 நபர்கள் x 365 நாட்கள்) வழங்குவதற்கும், பின்னர் 2022-2023 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில், உயர்த்தப்படவுள்ள அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு கணக்கிட்டு மேற்கூறிய 27 நபர்களுக்கு வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும் பெற்றதற்கும்,

எனவே, மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

தி.க.மே.து.ந.க.எண்.அ7/1128/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.101 **பொருள் எண்.60**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவுமேலாண்மைதுறை - தூய்மை இந்தியா திட்டம் - U (2.0) - பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த 200 எண்ணிக்கையிலானபரப்புரையாளர்கள் (Animators) 15 எண்ணிக்கையிலான மண்டல மேற்பார்வையாளர்கள் (Zonal Supervisors) மற்றும் ஒரு எண்ணிக்கையிலான ஒருங்கிணைப்பாளர் (Coordinator) ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் பணிக்கான மதிப்பீட்டிற்கு பின்னேற்பு அனுமதி.

இந்திய அரசின் தூய்மை இந்தியா திட்டம் - U(2.0) வழிகாட்டுதல்களின் பிரிவு 8.2.4ல் குறிப்பிட்டுள்ளபடி நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் தூய்மை இந்தியா திட்டம் - U(2.0) நோக்கங்களை ஒவ்வொரு வீடாக சென்று பொதுமக்களிடம் தொடர்ச்சியாக IEC நடவடிக்கைகள் மூலம் செயல்படுத்த ஒவ்வொரு வார்டிற்கும் தனித்தனியாக தன்னார்வலர்கள் பணியில் அமர்த்துவது அவசியமாகிறது என்று தூய்மை இந்தியா திட்டம் - U (2.0) பற்றிய 01.10.2021 நாளிட்ட செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் நகர்புற விட்டு வசதி மற்றும் விவகாரங்களுக்கான அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்டம் - U(2.0)ன்சிறப்பு நோக்கங்களான, நிலையான திடக்கழிவு மேலாண்மை, (Sustainable Solid Waste Management) நிலையான சுகாதாரம், (Sustainable Sanitation) பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி (Waste Water Management) தகவல் கல்வி தொடர்பு (IEC) மூலமாக தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் திறன்மேம்பாடு (Capacity Building) ஆகியவைகளை ஐந்து ஆண்டுகளுக்கு (2021-2026) செல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மூலம் அரசாணை எண்.(MS).No.07, நாள்.11.01.2022 வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்டபடி, 31.01.2022 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டம் - U(2.0) வின் முதலாவது மாநில உயர்மட்ட அதிகாரக்குழுவின் கூட்டத்தில் தூய்மை இந்தியா திட்டம் - U(2.0) நோக்கங்களை IEC நடவடிக்கைகள் மூலம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி செயல்படுத்திட பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்தில் உள்ள 649 ULBகளில் 2855 பரப்புரையாளர்கள், 270 மேற்பார்வையாளர்கள் மற்றும் 21 ஒருங்கிணைப்பாபளர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒப்பந்த 'அடிப்படையில் ஈடுபடுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2022-23ஆம் ஆண்டிற்கான தொகை ரூ.65.04 கோடிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மாநில திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் - U(2,0) / நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் 31.01.2022 அன்று நடைபெற்ற மாநில உயர்மட்ட அதிகாரக்குழுக் கூட்டம் (State High Powered Committee meeting)ல் குறிப்பிட்டுள்ள ஒப்புதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சி பின்வரும் நிபந்தனைகளுடன் ஒப்ப நடைமுறைகளை பின்பற்றி குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தை கொண்டு வெளிநிறுவனங்கள் (Outsourcing Agency) மூலமாகவும் நான்கு வருடகாலத்திற்கு புதிய ஒப்பம் அழைக்குமாறு 24.02.2022. நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்பநடைமுறைகளின் விவரம் பின்வருமாறு;

1) பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாநில உயர்மட்ட அதிகார' குழு கூட்டத்தில் (State High Powered Committee Meeting) நிர்ணயிக்கப்பட்ட மாத சம்பளத்தை நடைமுறையில் உள்ள EPF மற்றும் ESI உட்பட வெளிநிறுவனங்கள்(Outsourcing Agency) மூலம் நேரடியாக செலுத்தப்பட வேண்டும்.

2) பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை வழங்குவதற்கான சேவைக்கட்டணங்கள் வெளிநிறுவனங்களால் *(Outsourcing Agency)* மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

3) பணியின் செயல்பாட்டின் அடிப்படையில் அடுத்தடுத்த ஆண்டிற்கான ஒப்பந்தம் தொடரப்படும்.

மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – *U(2,0)* பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த *200* எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள், *15* எண்ணிக்கையிலான மேற்பார்வையாளர்கள் மற்றும் *1* எண்ணிக்கையில் ஒருங்கிணைப்பாளரை ஒரு வருட காலத்திற்கு *(2022-2023)* கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

Category	No of persons	Base rate fixed by committee as per TWAD SOR 2021-22	ESI @ 3.25% by Employer (in Rs)	EPF (6% EPF + 0.5% EPLi+0.5%Admin)	Service Provider charges @ maximum 7% per month	18% of service charge (column 6)	Remuneration cost per person per day in Rs.	Remuneration cost per person per month in Rs.	Gross budget for one person one year (In Rs).	Remuneration cost for total strength (In Rs.)
1	2	3	4	5	6	7	8		10	11
Animator	200	473	15.37	33.11	33.11	5.96	560.55	16816.50	2,01,798	4,03,59,600.00
Supervisor	15	594	19.31	41.58	41.58	7.48	703.95	21118.50	2,53,422	38,01,330.00
Coordinator	1	659	21.42	46.13	46.13	8.30	780.98	23429.40	2,81,152	2,81,153.00
									Total Cost	4,44,42,083.00

பெருநகர சென்னை மாநகராட்சியில் *200* எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள், *15* எண்ணிக்கையிலான மேற்பார்வையாளர்கள் மற்றும் *1* எண்ணிக்கையில் ஒருங்கிணைப்பாளர் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் கோரி பணியமர்த்த மதிப்பீடுதொகை ரூ.*4,44,42,083/-* (ரூபாய் நான்கு கோடியே நற்பத்தி நான்கு இலட்சத்து நற்பத்தி இரண்டாயிரத்து எண்பத்தி மூன்று மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது. இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மின்னணு ஒப்பம் கோரலாம் என தெரிவித்துக்கொள்ளப்பபடுகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சியில் *200* எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள், *15* எண்ணிக்கையிலான மேற்பார்வையாளர்கள் மற்றும *1* எண்ணிக்கை ஒருங்கிணைப்பாளர் ஒரு வருட காலத்திற்கு *(2022-2023)* ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. *4,44,42,083/-* (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தி நான்கு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து எண்பத்தி மூன்று மட்டும்)க்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2) மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மின்னணு ஒப்பம் கோரியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

3) மேற்கண்ட பணிக்கு தூய்மை இந்தியா திட்ட *(IEC Component)* நிதியில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

சு.து.நக.எண்.பி2/3022/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.102 **பொருள் எண்.61**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை- சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மகப்பேறு மருத்துவனைகள், மாநகராட்சி பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 48 பாதுகாவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.901/2021 நாள்.14.12.2021ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையில் செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 38 பாதுகாவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்த ஆணை பெறப்பட்டு 04.01.2021 அன்று ஒப்பம் கோரப்பட்டது. முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 25.04.2022 நாளிட்ட ஆணையின்படி நிர்வாக காரணங்களால் இந்த ஒப்பம் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 48 பாதுகாவலர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வ.எண்	மண்டலம்	நியமனம் செய்யப்படும் இடம்	காவலர்கள் எண்ணிக்கை
1	1	திருவொற்றியூர் சமுதாய நல மையம்	2
2	2	மணலி சமுதாய நல மையம்	2
3	3	புழல் சமுதாய நல மையம்	2
4	4	மீனாம்பாள் நகர் சமுதாய நல மையம்	2
5	5	சஞ்சீவிராயன் பேட்டை சமுதாய நல மையம்	2
6	5	பெருமாள் பேட்டை மகப்பேறு மருத்துவமனை	2
7	6	திரு.வி.க சமுதாய நல மையம்	2
8	7	அம்பத்தூர் சமுதாய நல மையம்	2
9	8	அயனாவரம் சமுதாய நல மையம்	2
10	8	செனாய் நகர் மகப்பேறு மருத்துவமனை	2
11	9	தேனாம்பேட்டை சமுதாய நல மையம்	2
12	10	வடபழனி சமுதாய நல மையம்	2
13	10	சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமைன	2
14	11	வளசரவாக்கம் சமுதாய நல மையம்	2
15	12	ஆலந்தூர் சமுதாய நல மையம்	2
16	13	அடையார் சமுதாய நல மையம்	2
17	14	பெருங்குடி சமுதாய நல மையம்	2
18	15	ஈஞ்சம்பாக்கம் சமுதாய நல மையம்	2
19	15	கண்ணகி நகர் சமுதாய நல மையம்	2
20	15	செம்மஞ்சேரி மகப்பேறு மருத்துவமனை	2
21	8	ஈ.வே.ரா சாலை பகுப்பாய்வு கூடம்	2
22	9	வள்ளுவர் கோட்டம் பகுப்பாய்வு கூடம்	2
23	10	சிஐடி நகர் பகுப்பாய்வு கூடம்	2
24	6	காசநோய் மருத்துவமனை	2
		மொத்தம்	48

2020-2021 ஆம் ஆண்டிற்கான குறைந்தபட்ட ஊதிய நிர்ணயத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் பாதுகாவலர்களுக்கென தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.370/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் 30x370= ரூ.11,100/-ஆகும். இதனடிப்படையிலேயே மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கு மாத ஊதியமாக ரூ.11,100/-ஆக நிர்ணயம் செய்து வழங்கலாம்.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.560/2020 நாள்.21.08.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) வழங்க அனுமதி அளித்துள்ளது.

Employee's State Insurance		Employee's Provident Fund		GST	Admin Charges
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	Employer Contribution in the salary	Employee Contribution in the salary		
3.25%	0.75%	13%	12.00%	18%	10%

Sl. No	Category of Staff	Basic Salary per Month (Rs)	EPF (13%) (Rs)	ESI (3.25%) (Rs)	Admin Charge (Rs)	GST (18%) (1+2+3+4) (Rs)	Total (1+2+3+4+5) (Rs)	Required Staff	Total 12 months Rs (6x7x12M)
		1	2	3	4	5	6	7	8
1	Security Guards	11100	1443	361	1290	2555	16749	48	96,47,424

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் செயல்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையங்கள், மகப்பேறு மருத்துவனைகள், பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் காசநோய் மருத்துவமனைக்கு தேவையான 48 பாதுகாவலர்களை தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இதற்கான செலவினம் ரூ.96,47,424/- (ரூபாய் தொண்ணூற்றி ஆறு லட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நானூற்றி இருபத்தி நான்கு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரவும்,
4. இதற்கான செலவினம் மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி 96,47,424/- அனுமதித்து பின்னர் செலவினம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

******

ம.அ.6.வ.து.ந.க.எண்.ஆர்2/0215/2018
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.103 **பொருள் எண்.62**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - மண்டலம் -6, பழைய வார்டு 66, புதிய வார்டு 68, ஜவஹர் நகர் முதல் வட்ட சாலையில் அமைந்துள்ள கொளத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஒரு பகுதி கட்டிடத்தில் சுய தொழில் முனைவோருக்கான மையம் அமைத்திட Dhanam Charitable Trust என்ற நிறுவனத்திற்கு குத்தகையை 10/01/2022 முதல் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -6, வார்டு 66, ஜவஹர் நகர் முதல் வட்ட சாலையில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் உள்ள ஒரு பகுதி கட்டிடத்தில் சுய தொழில் முனைவோருக்கான மையத்திற்கு *Dhanam Charitable Trust* என்ற நிறுவனத்தால் வாடகைக்கு இடம் கோரியதன் அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மகளிர் வாழ்வாதாரம் மேம்படும் பொருட்டு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி இந்த இடம் *Dhanam Charitable Trust* என்ற நிறுவனத்திற்கு மூன்று ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மாதம் ரூ. 2500/- என வாடகை நிர்ணயம் செய்து 10.01.2019 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் *Dhanam Charitable Trust* அவர்களின் 11.01.2022 நாளிட்ட கடிதத்தில் குத்தகையை நீட்டித்து 10/01/2022 முதல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03/07/2007 மற்றும் மன்ற தீர்மான எண். 341/2008 நாள். 14/07/2008ன் படி மாநகராட்சி இடங்களை குத்தகைக்கு ஒரு நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு விடப்பட வேண்டும் எனவும் 3 ஆண்டுகளை கொண்ட ஒரு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன் இயல்பாகவே புதுப்பிக்கப்படும் என்றும் இவ்வாறாக 9 ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும் எனவும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் இந்த நிபந்தனை தற்போது குத்தகை அனுபவித்து வரும் குத்தகைதாரருக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று ஏற்கனவே செலுத்தி வரும் வாடகை தொகையில் 15 % உயர்த்தி ரூ. 2875/- என மாத வாடகை நிர்ணயம் செய்து (*GST* தனியே) 10/01/2022 முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகையை நீட்டித்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட இடத்தை தொழில் முனைவோர் மையம் நடத்திட *Dhanam Charitable Trust* க்கு வழங்கலாம் .

1) ஒதுக்கீடுதாரர் தொழில் முனைவோருக்கான பயிற்சி மையம் நடத்திட மாத வாடகை கட்டணம் ரூ. 2875/- வீதம் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு (*GST* தனியே) இக்கட்டணம் 10/01/2022 முதல் கணக்கிடப்படலாம்.
2) ஒதுக்கீடுதாரர் இவ்வாணை கிடைக்கப்பெறற 7 தினங்களுக்குள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் உடன்படிக்கை பத்திரத்தில் கையொப்பமிட்டு அளிக்கப்படவும்.
3) அடையாளம் காட்டுவதற்காக ஒதுக்கீடுதாரர் கடவுச்சீட்டு அளவிலான மூன்று நிழற்படங்கள் அளிக்கவும்,
4) இந்த உரிமமானது 10/01/2022 முதல் மூன்று வருட காலத்திற்கு மட்டுமே உபயோகத்திற்கு உள்ளானது உரிம நீட்டிப்பு வழங்குவது பெருநகர சென்னை மாநகராட்சியின் முடிவுக்குட்பட்டது.
5) ஒதுக்கீடுதாரர் மேற்கண்ட இடத்தின் உரிமத்தை புதுப்பிக்க விரும்பினால் உரிம காலம் முடிவடைவதற்கு 90 நாட்களுக்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்

தவறினால் மேற்கண்ட இடத்தின் உரிம நீட்டிப்பு தேவையில்லை எனக் கருதி மேற்கண்ட இடம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்படும்

6) இவ்விடத்தில் நடைபெறும் சுய தொழில் முனைவோர்க்கான பயிற்சி மையத்தினை வேறு எவருக்கும் பெயர் மாற்றம் ஒப்பந்தம் செய்யக்கூடாது.

7) இவ்விடத்தில் சுய தொழில் முனைவோருக்கான பயிற்சி மையம் நடத்த இயலாத பட்சத்தில் ஒரு மாத காலத்திற்கு முன்னரே தெரிவிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்

8) மின் கட்டணம் மற்றும் தொலைபேசி ஆகியவைகளை ஒதுக்கீடுதாரரே சம்மந்தப்பட்ட சேவை நிறுவனங்களுக்கு நிலுவையின்றி செலுத்த வேண்டும்.

9) பெருநகர சென்னை மாநகராட்சியின் இட ஒதுக்கீடு சம்பந்தமான அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

10) பிரதி மாதம் 5ம் தேதிக்குள் வாடகை தொகையான ரூ.2875/- னை + (GST தனியே) மண்டலம்-6, வருவாய் துறையின், மூலம் மாதம் வாடகை வசூல் செய்யப்படும்.

மேற்கண்டவாறு குத்தகையை 10/01/2022 முதல் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து Dhanam Charitable Trust வழங்க 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 002/2022 நாள். 07/05/2022ல் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின்படி தொழில் முனைவோர் தொழில் பயிற்சி மையம் நடத்திட ஜவஹர் நகர் முதல் வட்ட சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியில் Dhanam Charitable Trust என்ற நிறுவனத்திற்கு 10/01/2019 முதல் மாத வாடகை ரூ. 2500/- என நிர்ணயம் செய்து 3 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தமைக்கு பின்னேற்பு வேண்டியும் 10/01/2022 முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகையை நீட்டித்து ஏற்கனவே செலுத்தி வரும் வாடகையில் 15% உயர்த்தி ரூ. 2875/- என மாத வாடகை நிர்ணயம் செய்து (சேவை வரி தனியே) ஒதுக்கீடு செய்யவும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

R.D.C.No.SUSV/3415/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *10.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.104 **பொருள் எண்.63**

Greater Chennai Corporation – Revenue Department – Selection of Consultant for Preparing Street Vending Plan for Chennai City – Technical and Financial Bid Opened – For Tender Approval.

Tender was called for Selection of Consultants for Preparing Street Vending Plan for Chennai City on 16.03.2022 vide Special Officer, Council Resolution No. 918/2021, dated 16.12.2021.

Six bids were received on the due date 04.04.2022 and Technical Bid was opened on 05.04.2022. The Pre-qualification evaluation was carried out against the Pre-qualification criteria mentioned in the RfP document. The summary of Pre-qualification evaluation is presented below.

#	Name of the Bidder	Compliance to Pre-qualification Criteria
1	Acroventures Pvt. Limited	Qualified
2	All India Institute of Local Self Government	Qualified
3	Atharva Planning and Research Centre	Qualified
4	Prime Meridian Pvt. Limited	Not – Qualified
5	Rudrabhishek Enterprises Pvt. Ltd.	Qualified
6	Sri Mangadu Kamatchiamman Business Corporation	Qualified

In continuation to this, the Revenue Department, GCC has sent email invitation to the following bidders to provide technical presentation (as part of the technical evaluation) to Technical Committee:

1. Acroventures Pvt. Limited
2. All India Institute of Local Self Government
3. Atharva Planning and Research Centre
4. Rudrabhishek Enterprises Pvt. Ltd.
5. Sri Mangadu Kamatchiamman Business Corporation

Subsequently, the technical evaluation results were given as below:

S No.	Bidder Name	Technical Score (out of 100)	Status
1.	Acroventures Pvt. Limited	78.8	Not Qualified
2.	All India Institute of Local Self Government	78.6	Not Qualified
3.	Atharva Planning and Research Centre	94.8	Qualified
4.	Rudrabhishek Enterprises Pvt. Ltd.	92.8	Qualified
5.	Sri Mangadu Kamatchiamman Business Corporation	93.4	Qualified

Based on the technical evaluation, the Technical Committee has approved the opening of the Financial Bid on 27.04.2022.

The Financial Bids were opened on 27.04.2022. The summary of the Financial Bid is presented below.

Name of the Bidder	Office Estimated Amount inclusive of 18% GST	% Quoted (including GST)	Quoted Amount (Rs.) works out to (including 18% GST)
Atharva Planning and Research Centre	15000000	(+)90%	28500000

Sri Mangadu Kamatchiamman Business Corporation	15000000	(+)88%	28320000
Rudrabhishek Enterprises Pvt. Ltd.	15000000	(+)3.33%	15500000

After evaluating the financial bid, it was found that M/s. Rudrabhishek Enterprises Limited has quoted the amount of Rs.1,55,00,000/- which is (+)3.33% higher than the office amount including GST at 18%.

Name of the Bidder	Technical Score	Financial Score	QCBS Score (80-20)	Ranking
Atharva Planning and Research Centre	94.8	54.39	86.72	R2
Sri Mangadu Kamatchiamman Business Corporation	93.4	54.73	85.67	R3
Rudrabhishek Enterprises Pvt. Ltd.	92.8	100	94.24	R1

Subsequently, M/s Rudrabhishek Enterprises Pvt. Ltd. was declared as R1 and invited to attend negotiation meeting on 28.04.2022. The bidder did not reduce the quoted tender amount i.e., vide letter dated 29.04.2022.

The second negotiation was carried out with the bidder on 29.04.2022. The bidder agreed to reduce their quote and revised their quoted tender to Rs.1,50,00,000, vide letter dated 09.05.2022

The bidder has also stated that they are unable to further reduce the quoted tender amount due to the cost of human resources, timeline, and the scope of works.

The final negotiated amount submitted by M/s. Rudrabhishek Enterprises Limited is presented below:

Office Estimated Amount inclusive of 18% GST	% Quoted after negotiation (including GST at 18%)	Quoted Amount after final negotiation (including GST at 18%)
Rs. 1,50,00,000	-	Rs.1,50,00,000/-

Hence, it was recommended to accept the final tender value negotiated by M/s. Rudrabhishek Enterprises Limited.

Subsequently, this was placed before the Tender Scrutiny Committee for approval on 09.05.2022. The Tender Scrutiny Committee recommended the above tender for approval of competent authorities.

Hence,

1) To approve the tender offered by M/s. Rudrabhishek Enterprises Limited which amounts to Rs.1,50,00,000/- (Rupees One Crore Fifty Lakh only) to undertake the proposed Preparation of Street Vending Plan for Chennai city and issue Letter of Acceptance.
2) To approve the tendered amount of Rs.1,50,00,000 to be funded by Chennai Smart City Limited.
3) To refund the EMD amount of Rs.1,50,000 to the unsuccessful bidders viz. M/s. All India Institute of Local Self Government.

Sl.No. 1 to 3 are approval of the Council requested through Standing Committee(Taxation and Finance).

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ6/3013/2021
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *04.04.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.105 **பொருள் எண்.64**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை -தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னை (தெற்கு) மண்டலம் - *9*, பகுதி - *27*, கோட்டம் - *114*ல் எல்லைக்குட்பட்ட திருவல்லிக்கேணி பகுதியில் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கும் புராசாகிப் தெரு -*1 (NA013)*, புராசாகிப் தெரு -*III (NA012)* ஆகிய அமுதம் நியாய விலை அங்காடிகள் அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூட கட்டிடம் *22.12.2021* முதல் மண்டலம் - *9*ன் மூலம் ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் வாடகை நிர்ணயம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி.

துணை ஆட்சியர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னை (தெற்கு) மண்டலம், விநியோகப் பிரிவு, 22.12.2021 நாளிட்ட கடிதத்தில், திருவல்லிக்கேணி பகுதி *(NA031)*சூரப்பா-*1 (NA021)* J.J.கான் மற்றும் (*NA012*) புராசாகிப் தெரு-*III* ஆகிய அமுதம் நியாய விலை அங்காடிகள் திருவல்லிக்கேணி பகுதி தங்கவேல் தெருவில் மாநகராட்சி கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேலும், கனமழையின் காரணமாக அங்காடி செயல்பட்டு வரும் கட்டிடம் மேற்கூரை மற்றும் தரைதளம் பழுதடைந்து உள்ளதால், பொது மக்களுக்கு பொது விநியோக திட்டத்தினால் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது மிகவும் சிரமமாக உள்ளது எனவும், மேலும் கடந்த ஜீன் 2021 மாதத்தில் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அங்காடிகளை ஆய்வு செய்த போது உடனடியாக அங்காடியினை இடம் மாற்றம் செய்து பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்க அறிவுரை வழங்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9 கோட்டம் 114, ஜானி பாஷா சாலையில் கதவு எண்.1ல் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கட்டிடம் கட்டப்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாமல், காலியாக உள்ளதால் அந்த கட்டிடத்தை அங்காடி செயல்படுத்துவதற்கு பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அக்கட்டிடத்தினை பொதுநலன் நோக்கத்துடன் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கோரப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர், மண்டலம் - *9* அவர்களின் 23.12.2021 நாளிட்ட கடிதத்தில், கோட்ட உதவி பொறியாளர் மற்றும் பகுதி உதவி செயற்பொறியாளர் ஆகியோருடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் நலன் கருதியும் இந்நிகழ்வின் அவசியம் கருதியும் போர்கால அடிப்படையில் துரித நடவடிக்கையில் ஜானி பாஷா தெரு கதவு எண்.1 இராயப்பேட்டை, சென்னை - 14 என்ற முகவரியில் மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடம் மேற்குறிப்பிட்ட இரண்டு அங்காடிகள் செயல்பட ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு ஒப்படைப்பு செய்யப்பட்ட அங்காடிக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாதந்திர வாடகை செலுத்தப்பட வேண்டியுள்ளதால், அதற்கான வாடகையினை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளதால், கோட்ட உரிமம் ஆய்வாளரால் கடந்த 16.12.2021 அன்று மேற்கண்ட இடம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்விடம் பின்வருமாறு அளவிடப்பட்டது.

தரை தளம் = 48 *X* 12.6 = 600 சதுர அடிகள்.

மேற்குறிப்பிட்ட அங்காடி தரைதளம் மட்டும் சுமார் 600 சதுர அடிகள் உள்ளன எனவே, மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடம் (ஜானி பாஷா தெரு கதவு எண்.1 இராயப்பேட்டை, சென்னை 14) அங்காடியாக பொதுமக்களின் கோரிக்கை மற்றும் பொதுநலன் கருதி, இந்நிகழ்வின் அவசர அவசியம் கருதி 22.12.2021 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட தரை தளம் சுமார் 600 சதுர அடிக்கு உரிய மாதந்திர

வாடகையினை நிர்ணயம் செய்து அவர்களுக்கான ஒப்பளிப்பு கடிதம் அளித்திட உரிய மேல்நடவடிக்கையின் பொருட்டு மாவட்ட வருவாய் அலுவலர் / நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களுக்கு முழு கோப்பு அனுப்பப்படுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் மற்றும் மாத வாடகை விவரங்களை மண்டலம் 9ற்கு தெரிவிக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட கோட்ட உரிமம் ஆய்வாளர் மூலமாக வாடகை வசூல் பணி மேற்கொள்ள இயலும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மன்றத் தீர்மானம் எண்.689/2013 நாள்.31.10.2013-ன்படி மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5/- என்று நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, இப்பொருளில் கண்டுள்ள கடைக்கு நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைகடைகளுக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரும் கோப்புகளில் சதுர அடிக்கு ரூ. 5/- என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் அதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, கீழ்கண்ட நிபந்தனையின் அடிப்படையில்

1. மண்டலம் - 9, பகுதி - 27, கோட்டம் - 114ல் எல்லைக்குட்பட்ட திருவல்லிக்கேணி ஜானி பாஷா தெரு கதவு எண். 1ல் அமைந்துள்ள உடற்பயிற்சி கூடத்தினை நியாயவிலைக் கடைக்கு நிலப்பரப்பளவு = 48 X 12.6 = 600 சதுர அடிகளுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 5/- வீதம், 600 சதுர அடிக்கு மாதம் ரூ. 3000/- என்றும், 12 மாத வாடகை முன்பணம் ரூ. 36,000/- செலுத்த வேண்டும் என்றும்,
2. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நியாய விலைக்கடைக்காக ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதியும், வாடகை நிர்ணயம் செய்யவும், நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.6.வ.து.ந.க.எண்.ஆர்1/ 0192 /2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.106 **பொருள் எண்.65**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6 - பழைய வார்டு 68, புதிய வார்டு - 67, பகுதி 16- எஸ்.ஆர்.பி கோயில் (வடக்கு), செம்பியம், சென்னை - 600 011 - சமூக நல கூடம் வாடகை மறு நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மன்றத்தின் அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 6, பழைய வார்டு 68, புதிய வார்டு - 67, பகுதி - 16 எஸ்.ஆர்.பி கோயில் (வடக்கு), செம்பியம், சென்னை - 600 011ல் கட்டிடத்துறை மூலம் 14200 ச.அடி கொண்ட மனையில் தரைதளம் 7591 ச.அடி முதல் தளம் 7274 ச.அடி இரண்டாம் தளம் 7274 ச.அடி படியறை மற்றும் மின்தூக்கி 811 ச.அடி கொண்ட கட்டுமானத்தில் உள்ளது. தரைதளத்தில் வாகனம் நிறுத்தும் இடமும் முதல் தளத்தில் சமையல் கூடம் மற்றும் உணவு அருந்தும் கூடம் (300 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்) இரண்டாம் தளத்தில் திருமண நிகழ்ச்சி செய்யும் இடமாகவும் குளிர்சாதன வசதியுடன் உள்ளது (500 பேர் அமரும் வசதியுடன்).

இந்த சமுதாய நல கூடம் சட்டமன்ற உறுப்பினர், ராஜ்ய சபா உறுப்பினர், வட சென்னை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் கட்டப்பட்டுள்ளது. மின்சார இணைப்பு, மின் விளக்கு, கழிவறை, மின் விசிறி, குடிநீர் இணைப்பு மற்றும் சமையல் அறை, போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றுள்ளன. சமுதாய நல கூடத்திற்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்தின் பரப்பளவை கணக்கில் கொண்டு GRS 2018-2019 அடிப்படை தெரு கட்டணம் ரூ. 5.40/- என்ற வீதத்தில் ஒரு நாள் வாடகை ரூ. 38,000/- எனவும் (GST தனியே) அரைநாள் வாடகை ரூ. 19,000/- எனவும் (GST தனியே) முன்வைப்புத் தொகை ரூ. 20,000/- எனவும் நிர்ணயம் செய்ய மன்ற தீர்மான 167/2021 நாள். 15/02/2021 பெறப்பட்டுள்ளது.

அரசாணை எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19/11/2019 ல் சொத்து வரி சீராய்வு (GRS) நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் குறிப்பு நாள். 20/05/2022 மற்றும் மாநகர வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பு நாள் 23.05.2022ல் மண்டலம் - 6னை பொறுத்த வரை இந்த சமுதாய நல கூடம் புதிதாக கட்டப்பட்டுள்ளதால் GRS க்கு முந்தைய அடிப்படை தெருக்கட்டணம் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்படவேண்டும். இந்நிலையில் சொத்து வரி சீராய்விற்கு முந்தைய வணிக பயன்பாட்டிற்கான அடிப்படை தெரு கட்டணமான ரூ.3/- அடிப்படையில் மேற்கண்ட சமுதாய நலக் கூடத்திற்கு வாடகை மறு நிர்ணயம் செய்யலாம் ..

தற்போது மேற்கண்ட சமுதாய நல கூடத்தில் மூலதன நிதியிலிருந்து ரூ. 63.83 இலட்சம் கூடுதல் செலவினத்தில் கூடுதல் கட்டுமானங்கள் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் கட்டுமானங்களை உள்ளடக்கிய மொத்த பரப்பளவின் அடிப்படையில் கீழ்கண்டவாறு வாடகை மற்றும் முன்வைப்புத் தொகை மறுநிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

கணக்கீட்டுவிவரம்

கட்டிடத்தின் விவரம்

	ஏற்கனவே இருந்தது	கூடுதல் கட்டுமானம்	மொத்த பரப்பளவு
தரைதளம்	7591 ச.அடி	442 ச. அடி	8033 ச .அடி
முதல் தளம்	7274 ச.அடி	442 ச .அடி	7716 ச .அடி
இரண்டாம் தளம் (குளிர்சாதன வசதியுடன்)	7274 ச.அடி	No change	7274 ச.அடி
3வது தளம்	-	1421 ச. அடி	1421 ச .அடி

படியறை மற்றும் மின்தூக்கி அறை	811 ச.அடி	No change	811 ச.அடி
மொத்தம்	22,950 ச.அடி	2305 ச .அடி	25,255 ச .அடி

கட்டிடத்தின் மொத்த சதுரடி 25,255 ச.அடி x3x12 =ரூ.22,730/- (அ) ரூ. 23,000/-
ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ.22,730/- (அ) ரூ. 23,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூரூ. 11,500/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

மேற்கண்ட சமுதாய நல கூடத்திற்கு ஒரு நாள் வாடகையாக ரூ. 23,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும் அரைநாள் வாடகையாக ரூ. 11,500/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும் முன்வைப்பு தொகை ரூ. 10,000/- எனவும், மறு நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.001/2022 நாள். 07/05/2022ல் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, மண்டலம் – 6, பழைய வார்டு 68, புதிய வார்டு – 67, பகுதி – 16 எஸ்.ஆர்.பி கோயில் (வடக்கு), செம்பியம், சென்னை – 600 011ல் உள்ள சமுதாய நல கூடத்திற்கு ஒரு நாள் வாடகையாக ரூ. 23,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும் அரைநாள் வாடகையாக ரூ. 11,500/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும் முன்வைப்பு தொகை ரூ. 10,000/- எனவும் மறு நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பூ.து.நக.எண்.பி2/2022-3/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.107 **பொருள் எண்.66**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மண்டலம்-6, கோட்டம்-68, செம்பியம், பல்லவன் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில், அஸ்ட்ரோ ட்ர்ஃப் கால்பந்து திடல், சுற்றுச்சுவர் மற்றும் காலரி அமைக்கும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 24.08.2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தின் போது மாண்புமிகு நகர்புற நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது. "பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால், இக்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகர கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் சிங்கார சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு, இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், வேறு பல திட்டங்களை இணைத்து இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன".

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் *(Project Sanctioning and Monitoring Committee)* கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் *TUFIDCO* அவர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் *(Convener)* ஆவார்கள்.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலமாக மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தும் பணிகள் என *46* எண்ணிக்கையிலான பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் *(TUFIDCO)* கூர்ந்து ஆய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் *(TUFIDCO)*, திட்ட அறிக்கையில் உள்ள மதிப்பீட்டில் உள்ள சரத்துகளை முழுமையாக கூர்ந்து ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் பரிந்துரை செய்யப்பட்டது.

அதன்படி 17.12.2021 மற்றும் 11.01.2022 அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு *(Project Sanctioning and Monitoring Committee)* கூட்ட அறிக்கைகளின்படி *2021-22* ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

Name of the Project	No.of works	Proposed Project Cost by GCC	Appraised Project cost by TUFIDCO	Singara Chennai 2.0 Share FY 2021-22
		(Rupees in Lakhs)		
Green Field (Park) Development / mprovement	28	2767.15	2442.79	2442.79
Play Field Development / Improvement	8	569.25	538.39	538.39
Play Field	10	872.15	718.80	718.80
Total	**46**	**4208.55**	**3699.98**	**3699.98**

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் *46* பணிகளுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, *44* பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு, மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு பணிக்கான ஒப்பத்திற்கு நீதிமன்ற வழக்கு காரணமாக ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 1 பணியான மண்டலம்-6, கோட்டம்-68, செம்பியம், பல்லவன் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில், அஸ்ட்ரோ ட்ர்ப் கால்பந்து திடல், சுற்றுச்சுவர் மற்றும் காலரி அமைக்கும் பணிக்கு இரு உறை முறையில் மின்னணு ஒப்பம் *(e-tender)* திறக்கப்படும் நாள். *01.04.2022* என ஒப்ப அறிவிப்பு *The Times of India*, தீக்கதிர் நாளிதழ்களில் *02.03.2022* அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 03.*03.2022* அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இரு உறை முறை (Two cover system)-ல் ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப இறுதி நாளான 31.03.2022 அன்று 5 ஒப்பங்கள் e-tender மூலமாக பெறப்பட்டு, 01.04.2022 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் (Technical Bid) பரிசீலிக்கப்பட்டது. இதில், திருவாளர்கள். தேசன் இண்டர்நேஷனல் அவர்களின் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் தகுதி பெறாததால், இவருடைய ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் திரு.பாஸ்கர் மற்றும் திருவாளர்கள். அப்லுயன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் மேற்கண்ட பணியில் போதிய முன் அனுபவம் இல்லாத காரணத்தினால் தொழில்நுட்ப ஆவணம் திறப்பதற்கு முன்னதாகவே, இந்த ஒப்பத்திலிருந்து விலகி கொள்வதாக கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். மீதமுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால், இவர்களின் விலைப்புள்ளி (Price Bid) 28.04.2022 அன்று திறக்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு,

(அட்டவணை-I)

வ. எண்	திரு / திருமதி / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ரூ.(ஜி.எஸ்.டி12% சேர்த்து)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. (ஜி.எஸ்.டி12% சேர்த்து)	2020-21 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு
1.	Roadlink Infrastructure	3,17,51,698.46	3,41,52,126.86	(+) 7.56 % அதிகம்
2.	Sri Sivaram & Co.,	3,17,51,698.46	3,46,41,103.02	(+) 9.10 % அதிகம்

இதன் தொடர்ச்சியாக, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் M/s.Roadlink Infrastructure அவர்களிடம் விலைக்குறைப்பு செய்ய கோரி 28.04.2022 அன்று கடிதம் அளிக்கப்பட்டது, அதன்படி ஒப்பந்ததாரர் 29.04.2022 அன்று விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார், விலைக்குறைப்புக்கான ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது,

(அட்டவணை-II)

S. No	File No / PARK.C.No	Name of the Bidder (L1)	Work Value Including GST	Quoted %	% Offered After Negotiation
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	P2/2022-3/ 2021	M/s.Roadlink Infrastructure	3,17,51,698.46	(+) 7.56 %	(+) 7.00 %

இதன் தொடர்ச்சியாக, குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் அவர்களிடம் மேலும், விலைக்குறைப்பு செய்ய கோரி 29.04.2022 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் 02.05.2022 அன்று விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். விலைக் குறைப்புக்கான இறுதி ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது

(அட்டவணை-III)

S. No	File No / PARK. C.No.	Name of the Bidder (L1)	Originally Quoted %	2020-21 (SOR) % Offered After 2nd Negotiation finally quoted %	2020-21 (SOR) % Offered After Negotiation (including 12% GST) (Rs.)	Comparative % of tender with current SOR 2021-22 (in %)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	P2/2022-3/ 2021	M/s.Roadlink Infrastructure	(+) 7.56 %	(+) 4.50 %	3,31,80,524.89	(-) 0.13 %

மேற்கண்டவற்றின் அடிப்படையில், இப்பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்க முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் M/s.Roadlink Infrastructure அவர்களுக்கு ரூ.3,31,80,524.89 (ரூபாய் மூன்று கோடியே முப்பத்து ஒரு லட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்று இருபத்து நான்கு மற்றும் எண்பத்து ஒன்பது பைசா மட்டும்) 2020-21 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி (+)4.50% அதிகம் வழங்கிய ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப் பணியை வழங்கப்பட்டதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

க.து.ந.க.எண்.பி1/0881-05/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.108 **பொருள் எண்.67**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - கட்டடத்துறை - மண்டலம்-4, வார்டு-46, கல்யாணபுரத்தில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி பிளாக் (G+2F) சமையல் அறை, மதிய உணவு மற்றும் ஆய்வக பிளாக் (G+3F) புதுப்பித்தல் மற்றும் இதர அபிவிருத்தி பணிக்காக திருவாளர்கள். Annamalai Construction அவர்களுக்கு அவசரம், அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-4, வார்டு-46, கல்யாணபுரத்தில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி பிளாக் (G+2F) சமையல் அறை , மதிய உணவு மற்றும் ஆய்வக பிளாக் (G+3F) புதுப்பித்தல் மற்றும் இதர அபிவிருத்தி பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிங்கார சென்னை 2.0 கண்காணிப்பு குழுமம் 8வது ஆய்வுக் கூட்ட நாள் 09.03.2022 (Additional Chief Secretary to Government MA & WS Dept)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,43,40,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 1,23,09,831.09
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 3,06,792.56
	(இ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 1,23,098.31
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,23,098.31
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 14,77,179.73
	மொத்தம்	**ரூ. 1,43,40,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 31.03.2022 2. DECCAN CHRONICLE 31.03.2022
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	20.04.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு, (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2021-2022 (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Annamalai Construction	1,23,09,766.22	1,16,95,508.89	(-) 04.99% குறைவு
2	G.Venkatesan	1,23,09,766.22	1,16,95,508.89	(-)04.99% குறைவு

மேற்கண்ட ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 20.04.2022 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பம் 21.04.2022 அன்று திறக்கப்பட்டன. இப்பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பங்களும் ஒரே விலைப்புள்ளியாக உள்ளதால் இரு ஒப்பந்ததாரருக்கும் விலைகுறைப்பு செய்ய கடிதம் 22.04.2022 அன்று கோரப்பட்டது. இதில் திரு.G.Venkatesan அவர்கள் மேலும் விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 25.04.2022 அன்று கடிதம் அளித்துள்ளார். திருவாளர் Annamalai Construction அவர்கள் (-)04.99% உடன் கூடுதலாக (-)0.01% சேர்த்து மொத்தம் (-)5.00% என விலைகுறைப்பு செய்து *25.04.2022* அன்று கடிதம் அளித்துள்ளார்.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் Annamalai Construction அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.1,23,09,766.22விட (-)5.00% குறைவாகும். மேலும், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். அண்ணாமலை கன்ஸ்ட்ரக் ஷன் அவர்கள் கூடுதல் பிணை வைப்பு தொகையான ரூ.2,48,000/- செலுத்தியுள்ளார், என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அதன் விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	மதிப்பீட்டில் பணியின் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
அண்ணாமலை கன்ஸ்ட்ரக் ஷன்	1,23,09,766.22	*(-)05.00%* குறை வு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Annamalai Construction அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.1,16,94,277.90 (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து இறுநூற்று எழுபத்தி ஏழு மற்றும் தொண்ணூறு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)05.00% குறைவாக உள்ளது, மேலும் 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.14,03,313.34 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,30,97,591.25 க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்று மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்) மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர்கள். Annamalai Construction அவர்களுக்கு ஒப்புதல் வழங்கலாம் என கருதப்படுகிறது.

MCMC ACT, 1919 பிரிவு 80-ன் படி ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு ஒப்பம் வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-4, வார்டு-46, கல்யாணபுரத்தில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி பிளாக் (G+2F) சமையல் அறை, மதிய உணவு மற்றும் ஆய்வக பிளாக் (G+3F) புதுப்பித்தல் மற்றும் இதர அபிவிருத்தி பணிக்கு திருவாளர்.*Annamalai Constrction* அவர்களுக்கு 2021-2022 அலுவலக மதிப்பீட்டை விட (-)5.00% குறைவான தொகையான ரூ.1,16,94,277.90 மற்றும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.14,03,313.34 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,30,97,591.25 க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்று மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்) ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி1/0881-08/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.109 **பொருள் எண்.68**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - கட்டடத்துறை .. மண்டலம்-6, வார்டு-64, கொளத்தூரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணிக்காக திருவாளர். V.Karuthiruman அவர்களுக்கு அவசரம், அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-6, வார்டு-64, கொளத்தூரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிங்கார சென்னை 2.0 கண்காணிப்பு குழுவின் 8வது ஆய்வுக் கூட்ட நாள்.09.03.2022. (Additional Chief Secretary to Government MA & WS Dept)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,13,60,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 97,51,086.00
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 2,43,761.82
	(இ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 97,510.86
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 97,511.00
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 11,70,130.32
	மொத்தம்	**ரூ. 1,13,60,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 31.03.2022 2. DECCAN CHRONICLE 31.03.2022 3. தி இந்து 31.03.2022
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	20.04.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	நான்கு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2021-2022 (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Vesalam Construction	97,51,081.77	96,63,322.04	(-) 0.90% குறைவு
2	Aravind Construction	97,51,081.77	95,46,309.06	(-)2.10% குறைவு
3	S.Valli	97,51,081.77	97,41,330.69	(-)0.10% குறைவு
4	V.Karuthiruman	97,51,081.77	92,64,502.79	(-)04.99% குறைவு

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 20.04.2022 அன்று நான்கு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. இந்த நான்கு ஒப்பங்களும் 21.04.2022 அன்று திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் V.Karuthiruman அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.97,51,081.77 யைவிட (-)04.99% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.92,64,502.79 ஆகும். இதன்படி ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 22.04.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது. இதனைத் தொடர்ந்து மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 25.04.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்.

அதன் விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	மதிப்பீட்டில் பணியின் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
Th. V.Karuthiruman	97,51,081.77	*(-)04.99%* குறை வு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்.V.Karuthiruman அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.92,64,502.79 (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐநூற்று இரண்டு மற்றும் எழுபத்து ஒன்பது பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)04.99% குறைவாக உள்ளது. மேலும் 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.11,11,740.34ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,03,76,243.13க்கு (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று நாற்பத்து மூன்று மற்றும் பதிமூன்று பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர். V.Karuthiruman அவர்களுக்கு ஒப்புதல் வழங்கலாம் என கருதப்படுகிறது.

MCMC ACT, 1919 பிரிவு 80-ன் படி ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து, நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-6, வார்டு-64, கொளத்தூரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணிக்கு கீழ்கண்ட குறைந்த ஒப்ப புள்ளி அளித்த திருவாளர்.V.Karuthiruman அவர்களுக்கு 2021-2022 அலுவலக மதிப்பீட்டை விட (-)04.99% குறைவான தொகையான ரூ.92,64,502.79 மற்றும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.11,11,740.34 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,03,76,243.13 க்கு (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று நாற்பத்து மூன்று மற்றும் பதிமூன்று பைசா மட்டும்)க்கு பணி ஆணை வழங்கியதற்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி1/0881-10 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.110 **பொருள் எண்.69**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - கட்டடத்துறை .. மண்டலம்-9, வார்டு-123, தேனாம்பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணிக்காக திருவாளர்கள். G. வெங்கடேசன் அவர்களுக்கு அவசரம், அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-9, வார்டு-123, தேனாம்பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிங்கார சென்னை 2.0 கண்காணிப்பு குழுவின் 8வது ஆய்வுக் கூட்ட நாள் 09.03.2022 (Additional Chief Secretary to Government MA & WS Dept)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,34,66,500.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 1,15,59,297.34
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 2,88,901.04
	(இ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 1,15,592.97
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,15,592.97
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 13,87,115.68
	மொத்தம்	ரூ. **1,34,66,500.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 31.03.2022 2. DECCAN CHRONICLE, நாள் 31.03.2022 3. தி இந்து , நாள்31.03.2022
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	20.04.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்கார சென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (e-Tender) ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின்வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2021-2022 (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	M/s J.P Construction	1,15,59,331.11	1,22,52,890.97	(+) 06.00% அதிகம்
2	M/s.Raj Developers	1,15,59,331.11	1,18,48,314.38	(+)2.50% அதிகம்
3	G.Venkatesan	1,15,59,331.11	1,09,82,520.48	(-)04.99% குறைவு

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 20.04.2022 அன்று மூன்று ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. இந்த மூனறு ஒப்பங்களும் 21.04.2022 அன்று திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் G.Venkatesan அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.1,15,59,331.11/- யைவிட (-)04.99% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,09,82,520.48/- ஆகும். இதன்படி ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய 22.04.2022 அன்று கடிதம் அனுப்பபட்டது. இதனை தொடர்ந்து மேலும், விலை குறைப்பு செய்ய சம்மதம் இல்லை என 25.04.2022 அன்று கடிதம் அளித்துள்ளார்.

அதன் விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	மதிப்பீட்டில் பணியின் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை	2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்
M/s.G.Venkatesan	1,15,59,331.11	*(-)04.99%* குறை வு

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர் G.Venkatesan அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.1,09,82,520.48 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று இருபது மற்றும் நாற்பத்து எட்டு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலை ஒப்பிடுகையில் (-)04.99% குறைவாக உள்ளது, மேலும் 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ.13,17,902.46 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,23,00,422.94 க்கு (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து நானூற்று இருபத்து இரண்டு மற்றும் தொண்ணூற்று நான்கு பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திருவாளர் G.Venkatesan அவர்களுக்கு ஒப்புதல் வழங்கலாம் என கருதப்படுகிறது .

MCMC ACT, 1919 பிரிவு 80-ன் படி ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது. மேலும், இந்த பணிக்கு சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்-9, வார்டு-123, தேனாம்பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளியினை புதுப்பிக்கும் பணிக்கு கீழ்கண்ட குறைந்த ஒப்ப புள்ளி அளித்த திருவாளர்.G.Venkatesan அவர்களுக்கு, 2021-2022 ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீட்டை விட (-)04.99% குறைவான தொகையான ரூ.1,09,82,520.48/- மற்றும் 12% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.13,17,902.46 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,23,00,422.94க்கு (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து நானூற்று இருபத்து இரண்டு மற்றும் தொண்ணூற்று நான்கு பைசா மட்டும்)க்கு பணி ஆணை வழங்கியதற்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி1/0881-13 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.111 **பொருள் எண்.70**

பெருநகர சென்னை மாநகராட்சி – ஒப்பம் - கட்டடத்துறை .. மண்டலம்-13,வார்டு-182, திருவான்மியூர், பாரதிதாசன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளியினை புதுப்பிக்கும் பணிக்காக திருவாளர்கள். ராஜ்டெவலப்பர்ஸ் அவர்களுக்கு அவசரம் அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-13,வார்டு-182, திருவான்மியூர், பாரதிதாசன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளியினை புதுப்பித்தல் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிங்கார சென்னை 2.0 கண்காணிப்பு குழுவின் 8வது ஆய்வுக் கூட்ட நாள் 09.03.2022 (Additional Chief Secretary to Government MA & WS Dept)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ.1,92,66,646.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 1,65,37,894.36
	(ஆ) எதிர்பாரா செலவு	ரூ. 4,13,447.36
	(இ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 1,65,378.94
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,65,378.94
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 19,84,547.32
	மொத்தம்	**ரூ. 1,92,66,646.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 31.03.2022 2. DECCAN CHRONICLE 31.03.2022 3. தி இந்து 31.03.2022
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	20.04.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	சிங்காரசென்னை 2.0
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	நான்கு (e-Tender)இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின்வருமாறு

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01 நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஆய்வு வாகன பணிமனையில் உள்ள பராமரிக்கபடும் பெட்ரோல் வழங்கும் நிலையத்திற்கு தோராயமாக ஒரு மாதத்திற்கு 12500 லிட்டர் பெட்ரோல் தேவைப்படுமென கணக்கிடப்பட்டு ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை 12 மாத காலத்திற்கு 150KL பெட்ரோல் எரிபொருள் ரூ, 1,59,32,250/- செலவினத்தில் கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி எதிர்நேக்கி

ஆணை பெறப்பட்டுள்ளது. கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டுவருகிறது,

இந்நிலையில் தற்பொழுது இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மாநகராட்சிக்கு அளித்த மொத்த பெட்ரோல் *(Bulk Price)* கொள்முதல் விலையானது வெளிச்சந்தை சில்லறை விலையை *(Retail Price)* விட லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.51 *(112.36 – 110.85 =1.51)* அதிகமாக உள்ளது. இந்நிலையில் இந்த விலை வேறுபாட்டினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதமென்றிற்கு ரூ.18,875/- (ரூபாய் பதினெட்டாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஐந்து மட்டும்) இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனை தவிர்க்க நேரடியாக மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து மொத்த கொள்முதல் விலையில் கொள்முதல் செய்வதை தவிர்த்து இந்நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சந்தை விலைக்கு கொள்முதல் செய்யலாம் என கருதப்படுகிறது. அரசு போக்குவரத்து கழகங்களும் இதே போன்ற நடைமுறையை பின்பற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருதாக அறிய வருகிறது.

இந்நிலையில், மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போதைய விலை ஏற்றத்தினை கருத்தில் கொண்டு ஆயில் நிறுவனங்களிடமிருந்து டீசல் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மாற்றாக இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப கொள்முதல் செய்திட மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி முதன்மை செயலர் /ஆணையர் அவர்களின் 22.03.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது. மேலும் இந்த நடைமுறையினை மொத்த கொள்முதல் விலையானது சில்லறை விற்பனை விலையை விட குறையும் வரை மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதே நடைமுறையை பின்பற்றி ஆய்வு வாகன பணிமனையில் பெட்ரோல் வழங்படும் மையத்திற்கு தேவையான பெட்ரோல் எரிபொருளை மத்திய அரசின் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லரை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவித்துகொள்ளப்படுகிறது,

எனவே,

1. ஆய்வு வாகனப் பணிமனையில் பெட்ரோலில் இயங்கும் வாகனங்கள் மற்றும் மண்டலம்- *1* முதல் *15* வரை கொசு மருந்து புகை பரப்பு இயந்திர வாகனங்கள் ஆகியவற்றிற்கு தேவைப்படும் பெட்ரோலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வரும் நிலையில் ஆயில் நிறுவனங்கள் மொத்த கொள்முதல் விலையினை சில்லறை விற்பனை விலையினைவிட அதிகரித்துள்ளதால் இந்தியன் ஆயில் கார்பரேசன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதை தவிர்த்து இந்நிலையில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் தேவைக்கேற்ப ஆய்வு வாகன பணிமனை மூலம் கொள்முதல் செய்திட அனுமதி வேண்டியும்,
2. ஆய்வு வாகன பணிமனையை *2022-2023* நிதி ஆண்டில் நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் பெட்ரோல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் ஏற்படும் நிதி இதுப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் மூலம் மத்திய அரசின் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்பரேசன் நிறுவனத்தின் அங்கிகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விலையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,

3. இந்நடைமுறையினை (சில்லறை விலையில் கொள்முதல் செய்தல்) பெட்ரோல் எரிபொருளை மொத்த நேரடி கொள்முதல் விலை சில்லறை விலையினைவிட குறையும் வரை மேற்கொள்ளவும்,

4. மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சில்லறை விற்பனை விலைக்கே இந்நிறுவனங்களால் அங்கிகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் வழங்க முடியும் என்பதால் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து தேவைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்பணம் வழங்கி நேரடியாக சில்லறை விலைக்கு கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ. து.ந.க.எண்.எம்1/2556/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.119 பொருள் எண்.**78**

ஒப்பம்- பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை- மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழித் தடங்களை சுத்தம் செய்யும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரண எண் *TN04 AS 5547*-ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு விலைபுள்ளி அளித்துள்ள ஒரே நிறுவனமான திருவாளர்கள் *Varman Equipment Services (Authorized dealer of Kaiser Lichtenstein, Original Equipment Manufacturer for South India)* மூலம் 3 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மத்திய வட்டார பகுதிகளில் உள்ள 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழித்தடங்களை சுத்தம் செய்யும் பணிக்கென 2015 ஆண்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் *Robotic Multi PurposeExcavator* உபகரண எண் *TN04 AS 5547* நான்கு வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்யப்பட்டது. இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 09.07.2021 அன்றுடன் முடிவடைந்த நிலையில், இவ்வகை உபகரணங்கள் அதிக தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணம் என்பதாலும் மற்றும் இவ்வுபகரணத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் உபகரண உற்பத்தியாளர் மூலமே பெற இயலும் என்பதாலும் இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை உபகரண தயாரிப்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் 18.12.2021 நாளிட்ட அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்925/2021 நாள்.24.12.2021 மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

ஒரு எண்ணிக்கையிலான *Robotic Multi PurposeExcavator* உபகரண எண் *TN04 AS 5547*-ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 29.12.2021 நாளிட்ட ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாளேடு, ஆங்கில நாளேடு மற்றும் மாநில ஒப்பந்த புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்ப ஆவணங்கள் இலவச இறக்கம் செய்யும் பொருட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஒப்ப திறப்பு நாள் 11.02.2022 என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் உள்ளாட்சி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதால், தேர்தல் நடத்தை விதி அமல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, 25.02.2022 அன்றிற்கு ஒப்பத் திறப்பு நாள் ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், ஒப்பந்ததாரரின் கோரிக்கைக்கிணங்க ஒப்ப திறப்பு நாள் 11.03.2022 க்கு ஒத்தி வைக்கப்பட்டது,

ஒப்பம் 11.03,2022 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் திருவாளர்கள் *Varman Equipment Services (M/s Kaiser, Lichtenstein,* நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பபட்ட தென்இந்தியாவிற்கான முகவர்) நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டு ஒப்ப வைப்புத் தொகையினை *online* மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தார் இவ்வொப்பத்திற்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பித்திருந்த நிலையில் அனைத்து தொழில்நுட்ப தகுதிகளையும் பெற்றிருந்ததுடன் ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரண உற்பத்தியாளரான திருவாளர்கள் *KAISER* நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் என்பதால் இந்நிறுவனத்தாரின் ஒப்பம் ஏற்கப்பட்டு இந்நிறுவனத்தின் நிதி ஒப்பம்05.04.2022 அன்று திறக்கப்பட்டது.

திருவாளர்கள் *Varman Equipment Services* நிறுவனத்தார் ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்தினை 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு விலைபுள்ளி வழங்கியுள்ளனர்.

Operation (A)

Sl.No	Description	Operation Cost per hour Exclu. GST Rs.	Total Amount per dayof 8 hours Exclu.GST@18% Rs.	Total Amount per year of 300 days (Exclu.GST) Rs.
01.	Operation Cost for 1st year	516/-	4,128/-	12,38,400/-
02	Operation Cost 2nd year	566/	4,528/-	13,58,400/-
03	Operation Cost 3rd year	622/-	4,976/-	14,92,800/-
Total Operation Cost for 3 years Exclu GST				40,89,600/-

MaintenanceCost-(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST (in Rs)	Total Amount per year of 300 days(in.Rs)
01.	Maintenance Cost for 1st year	27,998/-	83,99,400/-
02	Maintenance Cost 2nd year	30,797/-	92,39,100/-
03	Maintenance Cost 3rd year	33,876	1,01,62,800/-
Total Maintenance Cost Exclu.GST			2,78,01,300

மேற்கண்ட அட்டவணையின்படி, ,திருவாளர்கள் *Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் *Robotic Multi Purpose Excavator* உபகரண எண் *TN04 AS 5547* -ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள மொத்த தொகையாக ரூ.3,18,90,900/- *(Exclu.GST@18%) (40,89,600+2,78,01,300)* வழங்கியுள்ளனர்.

எனவே, இந்நிறுவனத்தாரை 05.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக விலை குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. திருவாளர்கள்.*Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் தங்களது 05.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 1st Negotiation -(A)

Sl.No	Description	Operation Cost per hour Exclu. GST (in.Rs)		Final Amount per dayof 8 hours Exclu. GST@18% After Negotiation (in.Rs)	Total Amount per year of 300 days Exclu. GST @18% (inRs.)	Total Discounted amount after negotiation (in.Rs)
		Before Negotiation (a)	After negotiation (b)			
01.	Operation Cost for 1st year	516/-	509/-	4,072/-	12,21,600/-	16,800/-
02	Operation Cost 2nd year	566/-	559/-	4,472/-	13,41,600/-	16,800/-
03	Operation Cost 3rd year	622/-	615/-	4,920/-	14,76,000/-	16,800/-
Total Operation Cost for 3 years Exclu.GST@18%					40,39,200/-	50,400/-

Maintenance Cost after 1st Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST		Final Amount per dayof 8 hours Exclu. GST@18% After Negotiation	Total Amount per year of 300 days Exclu. GST @18%	Total Discounted amount after negotiation
		Before Negotiation	After negotiation			
01.	Maintenance Cost for 1st year	27,998/-	27,998/-	27,998/-	83,99,400/-	Nil
02	Maintenance Cost 2nd year	30,797/-	30,797/-	30,797/-	92,39,100/-	Nil
03	MaintenanceCost 3rd year	33,876/-	33,876/-	33,876/-	1,01,62,800/-	Nil
Total Maintenance Cost for 3 years Exclu.GST@18%					2,78,01,300/-	

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் இயக்குதல் பணியில் மட்டும் 3 வருட காலத்திற்கு மொத்தம் ரூ.50,400/- விலை குறைப்பு செய்து *Robotic Multi Purpose Excavator* உபகரண எண் *TN04 AS 5547* -ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள இறுதி தொகையாக ரூ.3,18,40,500/- *(Exclu.GST@18%) ((40,39,200+2,78,01,300)* வழங்கியுள்ளனர்.

எனவே இந்நிறுவனத்தாரை மேலும் விலைகுறைப்பு வழங்குமாறு 06.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. திருவாளர்கள் *Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் தங்களது 07.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு மேலும் விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

Operation Cost after 2nd Negotiation:

Sl.No	Description	Operation Cost per hour Exclu. GST Rs.		Final Amount per dayof 8 hours Exclu. GST@18% After Negotiation Rs.	Total Amount per year of 300 days Exclu. GST @18% Rs.	Total Discounted amount after 2nd Negotiation Rs.
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Operation Cost for 1st year	509/-	509	4072/-	12,21,600/-	Nil
02	Operation Cost 2nd year	559/-	559/-	4472	13,41,600	Nil
03	Operation Cost 3rd year	615/-	615/-	4920/-	14,76,000/-	Nil
Total Operation Cost for 3 years Exclu.GST@18%					40,39,200/-	

Maintenance Cost after 2nd Negotiation -(B)

Sl.No	Description	Maintenance Cost per Day Exclu. GST Rs.		Final Amount per dayof 8 hours Exclu. GST@18% After Negotiation Rs.	Total Amount per year of 300 days Exclu. GST @18% Rs.	Tottal Discounted amount after 2nd Negotiation Rs.
		Before 2nd Negotiation	After 2nd negotiation			
01.	Maintenance Cost for 1st year	27,998/-	27718/-	27718/-	8315400/-	84,000/-

02	Maintenance Cost 2nd year	30,797/-	30489/-	30,489/-	91,46,700/-	92,400/-
03	MaintenanceCost 3rd year	33,876	33,537	33,537/-	1,00,61,100/--	1,01,700/-
Total Maintenance for 3 years Exclu.GST@18%					2,75,23,200/-	2,78,100/-

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள்.*Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் தங்களது இரண்டாவது விலைகுறைப்பு கடிதத்தில், 3 வருடங்களுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகையில் ரூ...2,78,100/- விலைக்குறைப்பு செய்து *Robotic Multi Purpose Excavator* உபகரண எண் *TN04 AS 5547* -ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள இறுதி தொகையாக ரூ.3,15,62,400/- (*Exclu.GST@18%*) ((40,39,200+2,75,23,200) வழங்கியுள்ளனர்.

TN04 AS 5547 என்கின்ற பதிவு எண் கொண்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கான 3 வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கென நிர்வாக அனுமதி பெறும் நேரத்தில் இப்பணிக்கான தோராய மதிப்பீடானது, ஜி.எஸ்டி விகிதாசாரம் அவ்வப்பொழுது மாறக்கூடியது என்பதால் ஜி.எஸ்.டி நீங்கலாக கணக்கிடப்பட்டது. எனவே, திருவாளர்கள்*Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியானது ஜி.எஸ்.டி நீங்கலாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு தோராய மதிப்புடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள *TN04 AS 5547* என்கின்ற பதிவு எண் கொண்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கான 3 வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.3,15,62,400/-(*Exclu.GST@18%*) ஆனது தோரய மதிப்பீடான ரூ.3,19,00,000/-ஐ விட1.06% குறைவாகும். எனவே, அந்நிறுவனத்தார் மூலம் *TN04 AS 5547* என்கின்ற பதிவு எண் கொண்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கான 3 வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புபணியினை மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுவின் 22.04.2022 அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, ஒப்ப சீராய்வு குழுவின் பரிந்துரையின்படி, திருவாளர்கள்*Varman Equipment (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தார் மூலம் *TN04 AS 5547* என்கின்ற பதிவு எண் கொண்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்திற்கான 3 வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை ரூ.3,15,62,400/- (ரூபாய் மூன்று கோடியே பதினைந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நானூறு மட்டும்) (ஜிஎஸ்.டி நீங்கலாக) தோராய செலவீனத்தில் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட இப்பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 ல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ல் 2022-23, 2023-24, மற்றும் 2024-25 ஆம் நிதி ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மத்திய வட்டாரத்திற்குட்பபட்ட பகுதிகளில் உள்ள 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழித் தடங்களை சுத்தம் செய்யும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட *TN04 AS 5547* என்கின்ற பதிவு எண் கொண்ட ரோபோடிக் மல்டி பர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணத்தினை 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ள கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு விலைபுள்ளி வழங்கியுள்ள ஒரே நிறுவனமான திருவாளர்கள்.*Varman*

Equipment Services(Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India) வழங்கியுள்ள கீழ்கண்ட விலையை ஏற்கவும்,

Description	Operation & Comprehensive maintenance for 1 Nof Robotic Multi Purpose Excavatot Equipment No TN04 AS 5547		
	1st Year Rs.	2nd Year Rs.	3rd year Rs.
Operation Cost per Hour (Exclu.GST)	509/-	559-	615/-
Maintenance Cost per day of 8 hours (Exclu.GST)	27718/-	30489/-	33,537/-

2. மேற்கண்ட விலைவிகிதத்தில் *Robotic Multi Purpose Excavator* உபகரண எண் *TN04 AS 5547* -ஐ 3 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ளவதற்கான கீழ்கண்ட தோராய செலவீனமான ரூ.3,15,62,400/-(*Exclu.GST@18%*) (ரூபாய் மூன்று கோடியே பதினைந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நானூறு மட்டும்) ஐ ஏற்கவும்,

Operation Cost

Description	**1st Year**	**2nd year**	**3rd year**	**Remarks**
Operation Cost per Hour (Exclu.GST)	509/-	559-	615/-	GST Extra (Prevailing at the time of payment

Maintenance Cost

Description	1st Year	2nd year	3rd year	Remarks
Maintenance Cost per day (Exclu.GST)	27718/-	30489/-	33,537/-	GST Extra (Prevailing at the time of payment

3. இனம்-1 மற்றும் 2 ஏற்பின் திருவாளர்கள் *Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser for South India)* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கவும்,
4. திருவாளர்கள் *Varman Equipment Services (Authorized dealer of Original Equipment Manufacturer M/s Kaiser,Lichtestein, for South India)* நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2% பாதுகாப்பு தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
5. இவ்வுபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான பட்டி தீர்வு செய்யும் நேரத்தில் நடப்பில் உள்ள *GST* விழுக்காட்டினை *(Prevailing GST Percentage at the time of Payment)* இந்நிறுவனத்திற்கு சேர்த்து வழங்கவும்,
6. இதற்கான செலவீனத்தினை 2022-23, 2023-24, மற்றும் 2024-25 ஆம் நிதி ஆண்டுகளில், ஆய்வுவாகனப் பணிமனை பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

******

இ.பொ.து.ந.க.எண்.எம்1/2138A/2020

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.120 பொருள் எண்.**79**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை- நிர்பயா திட்ட நிதி- பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்த பெண்களின் பயன்பாட்டிற்கென 15 எண்ணிக்கையில் டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுதி பெறப்பட்டு முதலில் கோரப்பட்ட ஒப்பத்தில் ஒப்பந்ததாரர்கள் எவரும் தொழில்நுட்ப தகுதியில் தேர்ச்சி பெறாததால் ஒப்பம் இரத்து செய்யப்பட்டு மறு மின்னணு ஒப்பம் கோரப்பட்டது- ஒப்பத்தில் குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள் *Bhutani International Pvt Ltd* நிறுவனத்திடமிருந்து 15 எண்ணிக்கையில் டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி.

அரசாணை எண்: 86 , நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை நாள்:20.11.2018ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான பணிகளை ரூ.425.06 கோடி மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு (60%) மாநில பங்களிப்பு (40%)) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் முக்கியமான ஒன்று *She- - Toilet (e-Toilet)* ஆகும்.

இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகர காவல் ஆணையாளர்(சட்டம்(ம) ஒழுங்கு) ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் *e- Toilet*கள் அதிக அளவில் உள்ளதாகவும் இவற்றினை பயன்படுத்துவோர் மிக குறைந்த அளவிலேயே உள்ளதாகவும், இவை அனைத்தும் *Steering Committe* கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவும், எனவே இதற்கு மாற்றாக நடமாடும் கழிவறைகளை கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், அதன் தொடர்ச்சியாக மாநில அளவிலான அபெக்ஸ் கமிட்டியானது, பொது இடங்களில் பெண்கள் பயன்பாட்டிற்கான 500 எண்ணிக்கையிலான *e-Toilet* க்கு மாற்றாக 65 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் மற்றும் பந்தோபஸ்து பணியில் ஈடுபடும் பெண் காவலர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் பயன்பாட்டிற்கென கொள்முதல் செய்யப்படவுள்ள 30 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளுக்கு மாற்றாக 10 எண்ணிக்கையிலும் என மொத்தம் 75 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் ரூ.27.77 கோடி மதிப்பீட்டில் நிர்பயாதிட்டத்தின் கீழ் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 15 எண்ணிக்கையில் வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் ரூ.5.4 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி(மன்றம்) மன்றத் தீர்மான எண் 037/2021 நாள் 18.01.2021ன் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ,ஒப்பத் திறப்பு நாள் 25.02.2021 என தெரிவித்த 20.01.2021 நாளிட்ட ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், ஒப்பப் படிவங்கள் இலவச இறக்கம் செய்யும் பொருட்டு கணினியில் ஏற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டதால், தேர்தல் நடத்தை விதியின் காரணமாகவும் மற்றும் கொரோனா நோய் தொற்றின் காரணமாகவும், ஒப்பந்ததாரரின் கோரிக்கைக்கிணங்கவும் ஒப்பத் திறப்பு நாள்10.08.2021 அன்றிற்கு ஒத்திவைக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஒப்பம் 10.08.2021 அன்று திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்ப வைப்புத் தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. *M/s. G.S. Body Builders (PVT) Limited*
2. *M/s. Sri Sakthi Corporation*
3. *M/s. Vaishnavi Motors.*

மேற்கண்ட 3 நிறுவனங்களும் இவ்வொப்ப தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத நிலையில் இம்மூன்று நிறுவனங்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டு இவ்வொப்பம் இரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மறு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு 01.01.2022 அன்று ஆங்கில நாளேடு, தமிழ்நாளேடு மற்றும் 06.01.2022 அன்றைய மாநில ஒப்பந்த புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் வெளியிடப்பட்டது. இந்நிலையில் தமிழக உள்ளாட்சி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதால் தேர்தல் நடத்தை விதியின் காரணமாகவும் மற்றும் ஒப்பந்ததாரரின் கோரிக்கைக்கிணங்கவும் ஒப்பம் 11.03.2022 அன்றிற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம் 11.03.2022 அன்று திறக்கப்பட்டது . இவ்வொப்பத்தில் கீழ்கண்ட 4 நிறுவனங்கள் ஒப்ப வைப்புத் தொகையினை இணையதளம் மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. *M/s Sara Plast Private Limited*
2. *M/s G.S.Body Builders (PVT) Limited*
3. *M/s Vaishnavi Motors*
4. *M/s Bhutani International Private Limited*

மேற்கண்ட 4 நிறுவனங்களில் திருவாளர்கள் *Sara Plast Private Limited* நிறுவனத்தார் மட்டும் இவ்வொப்பத்தின் தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத நிலையில் இந்நிறுவனத்தின் ஒப்பம் தகுதியற்றதாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டது. திருவாளர்கள் *G.S.Body Builders Pvt Limited, M/s Vaishnavi Motors* மற்றும் திருவாளர்கள் *Bhutani International Private limited* ஆகிய 3 நிறுவனங்களும் இவ்வொப்ப தொழில்நுட்ப தகுதிக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்திருந்ததால் இந்நிறுவனங்களின் ஒப்பங்கள் ஏற்கப்பட்டு, இந்நிறுவனங்களின் நிதி ஒப்பங்கள் 20.04.2022 அன்று திறக்கப்பட்டது.

மேற்கண்ட இம்மூன்று நிறுவனங்களும் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

Sl.No	***Description***	***Quantity***	***M/s G.S. Body Builders Pvt Ltd***	***M/s Bhutani International Pvt Ltd***	***M/s Vaishnavi Motors***
01	*Chassis Cost per vehicle Rs.*	*15 Nos*	*10,93,750/-*	***11,97,000/-***	*11,25,000/-*
02	*GST@28% per Vehicle Rs.*		*3,06,250/-*	***3,35,160/-***	*3,15,000/-*
03	*Total Chasis Cost including GST per Vehicle Rs.*		*14,00,000/-*	***15.32.160/-***	*14,40,000/-*
04	*Cost of fabrication & Mounting of Mobile Toilet unit with necessary attachment as per the Specification Rs.*		*1409,830.51*	***11,70,000/-***	*17,38,983/-*
05	*GST@18% per fabrication work for Mobile toilet Rs.*		*2,53,769.49*	***2,10,600/-***	*3,13,016.94*
06	*Total Amount for Fabrication of mobile Toilet unit with necessay attachment as per the specification Inclu.GST Per Fabrication work.*		*16,63,600/-*	***13,80,600/-***	*20,51,999.94*

07	Total Amount per Truck Mounted Mobile Toilet Rs.		30,63,600	**29,12,760/-**	34,91,999.94
08	Total Amount for 15 Nos of Trucke Mounted Mobile Toilet Rs.		4,59,54,000/-	**4,36,91,400/-**	5,23,79,999.10

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். Bhutani International private Limited நிறுவனத்தார் குறைந்த விலைபுள்ளி வழங்கியுள்ள நிலையில், 20.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக மேலும் விலைகுறைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், திருவாளர்கள் G.S. Body Builders Pvt Limited மற்றும் திருவாளர்கள் Vaishnavi Motors ஆகிய இரு நிறுவனத்தாரும் Chassis விலையில் குறைந்த விலை புள்ளி வழங்கியிருந்த நிலையில் திருவாளர்கள் Bhutani International private Limited நிறுவனத்தாரை ,அவ்விரு நிறுவனங்களின் விலைப்புள்ளிக்கு இணையாக Chassis விலையில் விலைகுறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது

திருவாளர்கள். Bhutani International Private Limited நிறுவனத்தார் தங்களது 22.04.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக தற்போதைய சந்தை விலை அதிகரித்துள்ளதால், தாங்கள் மேலும் விலைகுறைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், Faridabad மற்றும் Hariyana ஆகிய இடங்களில் நடமாடும் கழிவறையில் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதாகவும், அங்கிருந்து நடமாடும் கழிவறைகளை சென்னைக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் அதற்கான Transportation Charges, Transit Insurance, Registration Charges, Insurance charges,Toll Charges, & State Permit ஆகியவற்றிற்கான செலவீனங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவற்றினையும் கணக்கில் கொண்டே, Chassis கான விலைபுள்ளியினை கணக்கீடு செய்ததாகவும், மேலும், சேஸிஸ் மீது நடமாடும் கழிவறைகளை கட்டமைப்பு செய்வதற்கான விலைப்புள்ளியினை குறைவாகவே வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், இக்கொள்முதலுக்கான ஒப்பந்த பணியானது சேஸிஸ் கொள்முதல் மற்றும் அதன்மீது நடமாடும் கழிவறைகளை கட்டமைப்பு செய்தல் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரே கூட்டுப் பணியாகும் மற்றும் ஒப்பவிதி 3.20.1ன்படிகுறைந்த விலைபுள்ளிக்கான கணக்கீடானது, சேஸிஸிற்கான தொகை, நடமாடும் கழிவறைகள் வடிவமைப்பதற்கான தொகை மற்றும், அதனை சேஸிஸின் மீது கட்டமைப்பு செய்வதற்கான தொகை ஆகியவற்றின் கூட்டுத் தொகையினை கொண்டே கணக்கிடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, வாகன அடிச்சட்டத்தின்மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்க ஒப்ப ம்திப்பீட்டினைக் காட்டிலும் 19.09% குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதாகவும், எனவே ஏற்கனவே வழங்கியுள்ள விலைபுள்ளியினை ஏற்குமாறும் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, திருவாளர்கள். Bhutani International Private Limited நிறுவனத்தார் 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைபுள்ளி விவரம் பின்வருமாறு

Sl.No	Description	Quantity	Before Negotiation	After Negotiation	Total Amount for 15 Nos of Vehicle Inclu GST	Total Final Negotiated Amount
1.	Total Chasis Cost including GST Per Vehicle Rs.	15 Nos	15,32,160/-	15,32,160/-	2,29,82,400/-	Nil
2	Cost of fabrication & Mounting of Mobile Toilet unit with necessary attachment as per the Specification Rs.		13,80,600/-	13,80,600	2,07,09,000/-	Nil
		Total Amount	29,12,760/-	29,12,760/-	4,36,91,400/-	

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள் *Bhutani International Private Limited* நிறுவனத்தார் 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்க இறுதி விலைப்புள்ளியாக ஒரு எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைக்கு ரூ.29,12,760/- வீதம், 15 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளுக்கு ரூ.4,36,91,400/- என வழங்கியுள்ளனர். இந் நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.4,36,91,400/- ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.5,40,00,000/- ஐ விட 19.09% குறைவாகும். எனவே, திருவாளர்கள். *Bhutani International Private Limited* வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியினை ஏற்று, இந்நிறுவனத்தாரிடமிருந்து வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் 15 எண்ணிக்கையில் ரூ.4,36,91,400/-*(Inclu.GST)* மதிப்பீட்டில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உயர்மட்ட ஒப்ப சீராய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்ப சீராய்வு குழுமத்தின் 05.05.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது. அதன்படி, திருவளர்கள். *Bhutani International Private Limited* நிறுவனத்தாரிடமிருந்து விலைப்புள்ளியாக ஒரு எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைக்கு ரூ.29,12,760/- வீதம், 15 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளை ரூ.4,36,91,400/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நானூறு மட்டும்) *(Inclu.GST)* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இந்நிறுவனத்தார், வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்க தெரிவித்துள்ள இறுதி விலைப்புள்ளியானது தோராய மதிப்பீட்டினைக் காட்டிலும் 19.09% குறைவு என்பதால் ஒப்ப விதிகளின்படி 19.09% ற்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் இறுதி விலைப்புள்ளிக்கான வித்தியாசத் தொகையில் 50% தொகையினை கூடுதல் பாதுகாப்புத் தொகையாக இந்நிறுவனத்திடமிருந்து பெறப்படல் வேண்டும்.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையக பிரிவு குறியீட் டு எண்40-*41*-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-*40-23*-05 நிர்பயா நிதி யின் கீழ் 2022-23 ன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பொது இடங்களில் பெண்கள் பயன்பாட்டிற்கென 65 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் மற்றும் பந்தோபஸ்து பணியில் ஈடுபடும் பெண் காவலர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 10 எண்ணிக்கையிலும் என மொத்தம் 75 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் ரூ.27.77 கோடி மதிப்பீட்டில் நிர்பயாதிட்டத்தின் கீழ் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக 15 எண்ணிக்கையில் வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்ய கோரப்பட்ட மறுமின்னணு ஒப்பத்தில் குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள் *Bhutani International Pvt Ltd* நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறை ஒன்றின் விலை ரூ.29,12,760/- வீதம் 15 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளை மொத்த தொகையான ரூ.4,36,91,400/-(ரூபாய் நான்கு கோடியே முப்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நானூறு மட்டும்) *(Inclu.GST)* ஐ ஏற்று திருவாளர்கள் *Bhutani International Private Limited* நிறுவனத்தாரிடமிருந்து15 எண்ணிக்கையில் வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்யவும்,
2. இனம்-1 ஏற்பின், திருவாளர்கள் *Bhutani International Private Limited* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கவும்,

3. ஒப்பந்ததாரரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 3% தொகையினை பாதுகாப்புத் தொகையாகவும் மற்றும் இறுதி விலைப்புள்ளியானது தோராய மதிப்பீட்டினைக் காட்டிலும் 19.09% குறைவு என்பதால் ஒப்ப விதிகளின்படி, மதிப்பீட்டுத் தொகை மற்றும் இறுதி விலைப்புள்ளிக்கான வித்தியாசத் தொகையில் 50 % தொகையினை கூடுதல் பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
4. ஒப்பந்ததாரருக்கு வாகன சேஸிஸ்க்கான 100% தொகையினை, சேஸிஸ் தயாரிப்பாளர்களிடமிருந்தோ அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்தோ பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ஒப்பந்ததாரரின் தொழிற்சாலையில் பெறப்பட்டவுடன், உரிய பணப்பட்டிகளை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் வழங்கியவுடன் ஒப்பந்ததாரர்களின் பெயரில் 100% தொகையினை முன்பணமாக விடுவிக்கவும்.
5. நடமாடும் கழிவறைகளுக்கான 90% தொகையினை 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின்மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் நிரந்தர பதிவு செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி வசம் பெறப்பட்டவுடன், மூன்றாம் நபர் ஆய்வறிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களின் ஆய்வறிக்கை மற்றும் உரிய அலுவலர்களிடமிருந்து நல்ல முறையில் பெறப்பட்டதற்கான சான்றறிக்கை ஆகியவற்றை பெற்றவுடன் 30 நாட்களுக்குள் வழங்கவும்,
6. மீதமுள்ள 10% தொகையினை 15 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் நல்ல முறையில் இயங்குவதற்கான சான்றறிக்கை பெறப்பட்டவுடன் 30 நாட்களுக்குள் வழங்கவும்,
7. 15 எண்ணிக்கையிலான வாகனஅடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகளுக்கான நிரந்தர பதிவு மற்றும் காப்பீட்டினை ஒப்பந்ததாரரே மேற்கொண்டபின், அதற்கான உரிய செலவு சீட்டினை சமர்ப்பித்த பின் அத் தொகையினை ஒப்பந்ததாரருக்கு மீள வழங்கவும்,
8. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையக பிரிவு குறியீட் டு எண்40-41-01 மற்றும் கணக்கு தலைப்பு எண் 410-40-23-05 நிர்பயா நிதி 2022-23 ன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ந.க.எண். எம்1/619 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் **23.05.2022** நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.121 பொருள் எண்.**80**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப்பொறியியல் துறை - வடக்கு, மத்தியம், தெற்கு வட்டாரங்கள், ஆய்வு வாகன பணிமனை மற்றும் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் மற்றும் இதர பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றிற்கு டீசல் கொள்முதல் செய்தல் - தற்போது மத்திய அரசின் ஆயில் கம்பெனிகள் டீசல் வழங்குவதில் இரட்டை விலை விகிதங்கள் - மொத்த கொள்முதல் (Bulk consumer price) ரூ.117.34 எனவும் சில்லரை விற்பனை விலை (Retail price) ரூ.91.43 எனவும் நிர்ணயித்துள்ளன - இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்க ஆயில் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்ய அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

இயந்திர பொறியியல் துறையில் வடக்கு (228 வாகனங்கள்), மத்தியம் (264 வாகனங்கள்), தெற்கு வட்டாரங்கள் (100 வாகனங்கள்), ஆய்வு வாகன பணிமனை (203 வாகனங்கள்), சிறப்பு உபகரணங்கள்(9), மற்றும் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் ஆகிய பகுதிகளில் உள்ள வாகனங்கள் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு பணி, துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் மற்றும் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை சமன் செய்யும் பணிகளுக்காகவும் தோராயமாக 864 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான கனரக / இலகுரக காம்பாக்டர் வாகனங்கள், டிப்பர் லாரிகள், தண்ணீர் லாரி, லோடர், புல்டோசர், எஸ்கவேட்டர் ஆய்வு வாகனங்கள் மற்றும் இதர வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட *864* வாகனங்களுக்கு தேவையான எரிபொருட்கள் (டீசல் மற்றும் பெட்ரோல்) கீழ்கண்ட லாரி நிலையங்கள் மற்றும் வட்டார பணிமனைகளில் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் வழங்கும் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

வ.எண்	மண்டல லாரி நிலையம்/ பிரதான பணிமனை	எரி பொருள் நிரப்பும் வாகன விவரம்	நாளொன்றிற்கு தோராயமாக வழங்கப்படும் எரிபொருளின் மொத்த அளவு
01	வடக்கு வட்டார பணிமனை	மண்டலங்கள் 1, 2 மற்றும் மண்டலம் 5 சார்ந்தவாகனங்கள்	4500 லிட்டர்
02	மண்டலம் -4 லாரி நிலையம் (பெரம்பூர்)	மண்டலங்கள் 3மற்றும் ஐ சார்ந்த வாகனங்கள்	2500 லிட்டர்
03,	மண்டலம்-6 லாரி நிலையம்	மண்டலம் -6 ஐ சார்ந்த வாகனங்கள்	3500 லிட்டர்
04,	மண்டலம்-8 லாரி நிலையம் செனாய் நகர்	மண்டல் -7,8,9 மற்றும் 10- ஐ சார்ந்த வாகங்கள்	7500 லிட்டர்
05.	மண்டலம் 13 லாரி நிலையம் சைதாப்பேட்டை	மண்டலம் 11 முதல் 15 வரை பெருங்குடி குப்பை கிடங்கை சார்ந்த வாகனங்கள் மற்றும வட்டார அலுவலகங்கள்	4000 லிட்டர்
06,	ஆய்வு வாக பணிமனை	ஆய்வு வாகனங்கள் மற்றும் மண்டலம்9 மற்றும் 10	2500 லிட்டர்
		மொத்தம்	24500 லிட்டர்

மேலும், இவை தவிர, ரிப்பன் வளாக அனைத்து துறை அலுவலக அதிகாரிகள் மற்றும் மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள அதிகாரிகளுக்கான ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் பணிகளுக்கான வாகனங்கள் , அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகள் பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் மழைக்காலங்களில் நீர் இறைக்கும் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான எரிபொருட்கள் மேற்கண்ட நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

டீசல் கொள்முதல் செய்ய, மன்றத்தீர்மான எண்.92/2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, டீசல் கொள்முதல் தொடர்பான அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (மா.ந.1) அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள்.07.08.2000, -ல் , இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோலை இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளலாம் என அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் சம்மந்தப்பட்ட வட்டார பணிமனை மூலம் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல் மற்றும் பெட்ரோலினை சம்மந்தப்பட்ட மத்திய எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் வாங்கப்பட்டு வருகிறது.

வடக்கு, மத்தியம், தெற்கு வட்டாரங்கள், ஆய்வு வாகன பணிமனை, சிறப்பு உபகரணங்கள் மற்றும் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்கள், 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் , கொசு மருந்து தெளிக்கும் பணி மற்றும் இதர துறை சார்ந்த பணிகளுக்கும் மேற்கண்ட அட்டவணையின்படி நாளொன்றிற்கு தோராயமாக 25,000 லிட்டர் டீசல் தேவைப்படும் என கணக்கிடப்பட்டு அரசு ஆயில் நிறுவனங்கள் மூலம் தற்போது வரை மொத்த கொள்முதல் விலையில் நேரடியாக எரிபொருள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.943/2021, 944/2021 நாள்.30.12.2021, சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.092/2022, 093/2022 நாள்.21.01.2022, தெற்கு வட்டார ஆணையரின் குறிப்பு மற்றும் ஆய்வு வாகன பணிமனையின் குறிப்பின் படி, 2022-2023ம் ஆண்டிற்கான எரிபொருட்களை மொத்த கொள்முதல் விலைக்கு அந்தந்த மத்திய எண்ணெய் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதியும் மன்றத் தீர்மானம் மூலம் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்பொழுது ஆயில் நிறுவனங்கள் டீசல் மொத்த கொள்முதல் விலையினை ரூ,117.34 ஆக நிர்ணயித்துள்ளன. இது சந்தை விலையினைக் (ரூ.91,43) காட்டிலும் ரூ. 25.91 கூடுதலாகும். இவ்விலை ஏற்றத்தின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி நேரடியாக மத்திய ஆயில் நிறுவனங்கள் மூலம் மொத்த கொள்முதல் விலையில் டீசல் வாங்கும் பட்சத்தில் நாளொன்றுக்கு சுமார் 24,500 லிட்டர் கொள்முதல் செய்ய கூடுதலாக ரூ6,47,750/- வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.2,00,80,250/- செலவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்நிதி இழப்பினை தவிர்க்க நேரடியாக மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து மொத்த கொள்முதல் விலையில் கொள்முதல் செய்வதை தவித்து இந்நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சந்தை விலையில் கொள்முதல் செய்யலாம் என கருதப்படுகிறது.. அரசு போக்குவரத்து கழகங்களும் இதே போன்ற நடைமுறையை பின்பற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிய வருகிறது.

எனவே, மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போதைய விலை ஏற்றத்தினை கருத்தில் கொண்டு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவதற்கு

மாற்றாக இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப அந்தந்த வட்டார பணிமனை மற்றும் ஆய்வு வாகன பணி மனை மூலம் கொள்முதல் செய்து நிதி இழப்பினை தவிர்க்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், *2021*-2022 நிதி ஆண்டிற்கு தேவையான எரிபொருள் கொள்முதலுக்குத் தேவையான முன்பணம் ஏற்கனவே பெறப்பட்டு சம்மந்தப்பட்ட ஆயில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போதைய விலை ஏற்றத்தின் காரணமாக அந்நிறுவனங்களிடமிருந்து டீசல் கொள்முதல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போதைய எரிபொருள் தேவையினை தீர்வு செய்ய கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தோராயமாக நாளொன்றிற்கு 24,500 லிட்டர் வீதம் 9 நாட்களுக்கு 2,20,500 லிட்டர் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகையான ரூ.2,02,86,000./-(2,20,500 லி *x 92/-*) ஐ தற்போதைய நிதி ஆண்டில் (2021-22) முன்பணமாக பெற்று இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப அந்தந்த வட்டார பணிமனை மற்றும் ஆய்வு வாகன பணி மனை மூலம் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு முன்பணம் வழங்கி கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி முன்பணம் பெற்று சில்லறை விலையில் ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் *22.03.2022* நாளிட்ட ஆணை மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் 22.03.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

வ.எண்	மண்டல லாரி நிலையம்/ பிரதான பணிமனை	எரி பொருள் நிரப்பும் வாகன விவரம்	நாளொன்றிற்கு தோராயமாக வழங்கப்படும் டீசலின் மொத்த அளவு	தற்போதைய நிதி ஆண்டில் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகை
01	வடக்கு வட்டார பணிமனை	மண்டலங்கள் 1, 2 மற்றும் மண்டலம் 5 சார்ந்த வாகனங்கள்	4500 லிட்டர்	*37,26,000/-*
02	மண்டலம் -4 லாரி நிலையம் (பெரம்பூர்)	மண்டலங்கள் 3 மற்றும் 4 ஐ சார்ந்த வாகனங்கள்	2500 லிட்டர்	*20,70,000/-*
03,	மண்டலம்-6 லாரி நிலையம்	மண்டலம் -6 ஐ சார்ந்த வாகனங்கள்	3500 லிட்டர்	*28,98,000/-*
04,	மண்டலம்-8 லாரி நிலையம் செனாய் நகர்	மண்டல் -*7,8,9* மற்றும் 10- ஐ சார்ந்த வாகங்கள்	7500 லிட்டர்	*62,10,000/-*
05.	மண்டலம் 13 லாரி நிலையம் சைதாப்பேட்டை	மண்டலம் 11 முதல் 15 வரை பெருங்குடி குப்பை கிடங்கை சார்ந்த வாகனங்கள் மற்றும வட்டார அலுவலகங்கள்	4000 லிட்டர்	*33,12,000/-*
06,	ஆய்வு வாக பணிமனை	ஆய்வு வாகனங்கள் மற்றும் மண்டலம்9 மற்றும் 10	2500 லிட்டர்	*20,70,000/-*
		மொத்தம்	24500 லிட்டர்	*2,02,86,000*

எனவே,

1 வடக்கு, மத்தியம், தெற்கு வட்டாரங்கள், ஆய்வு வாகன பணிமனை, சிறப்பு உபகரணங்கள் மற்றும் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்கள், மண்டலம் 1 முதல் 15 வரை ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் ,கொசு மருந்து தெளிக்கும் பணி மற்றும் இதர துறை சார்ந்த பணிகளுக்கும் தேவைப்படும் டீசலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வரும் நிலையில் ஆயில் நிறுவங்கள் மொத்த கொள்முதல் விலையினை சில்லறை விற்பனை விலையினைவிட அதிகரித்துள்ளதால் இந்நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதை தவிர்த்து, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி இந்நிறுவனங்களால் அங்கிகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் தேவைக்கேற்ப அந்தந்த வட்டார பணிமனை மற்றும் ஆய்வு வாகன பணிமனை மூலம் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

2 வட்டார பணிமனைகள் மற்றும் ஆய்வு வாகன பணிமனை ஆகியவை 2021-22 மற்றும் 2022-2023 நிதி ஆண்டில் நேரடியாக மொத்த கொள்முதல் விலையில் டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியின் மூலம் மத்திய அரசின் ஆயில் நிறுவனங்களால் அங்கிகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விலையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3 இந்நடைமுறையினை (சில்லறை விலையில் கொள்முதல் செய்தல்) மொத்த நேரடி கொள்முதல் விலை, சில்லறை விலையினைவிட குறையும் வரை மேற்கொள்ளவும்,

4 2021-2022 நிதி ஆண்டிற்கு தேவையான டீசல் கொள்முதலுக்குத் தேவையான முன்பணம் ஏற்கனவே பெறப்பட்டு சம்மந்தப்பட்ட ஆயில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போதைய விலை ஏற்றத்தின் காரணமாக அந்நிறுவனங்களிடமிருந்து எரிபொருள் கொள்முதல் செய்ய இயலாத நிலையில், தற்போதைய எரிபொருள் தேவையினை தீர்வு செய்ய தோராயமாக நாளொன்றிற்கு 24,500 லிட்டர் வீதம் 9 நாட்களுக்கு 2,20,500 லிட்டர் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகையான ரூ.2,02,86,000/- (2,20,500 லிx92/-)ஐ தற்போதைய நிதி ஆண்டில் (2021-22) கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு முன்பணமாக பெற்று இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு தேவைக்கேற்ப அந்தந்த வட்டார பணிமனை மற்றும் ஆய்வு வாகன பணி மனை மூலம் முன்பணம் வழங்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

வ.எண்	மண்டல லாரி நிலையம்/ பிரதான பணிமனை	எரி பொருள் நிரப்பும் வாகன விவரம்	நாளொன்றிற்கு தோராயமாக வழங்கப்படும் டீசலின் மொத்த அளவு	த்ற்போதைய நிதி ஆண்டில் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகை
01	வடக்கு வட்டார பணிமனை	மண்டலங்கள் 1, 2 மற்றும் மண்டலம் 5 சார்ந்த வாகனங்கள்	4500 லிட்டர்	37,26,000/-
02	மண்டலம் -4 லாரி நிலையம் (பெரம்பூர்)	மண்டலங்கள் 3மற்றும் 4 ஐ சார்ந்த வாகனங்கள்	2500 லிட்டர்	20,70,000/-
03,	மண்டலம்-6 லாரி நிலையம்	மண்டலம் -6 ஐ சார்ந்த வாகனங்கள்	3500 லிட்டர்	28,98,000/-

04,	மண்டலம்-8 லாரி நிலையம் செனாய் நகர்	மண்டல் -7,8,9 மற்றும் 10-ஐ சார்ந்த வாகங்கள்	7500 லிட்டர்	62,10,000/-
05.	மண்டலம் 13 லாரி நிலையம் சைதாப்பேட்டை	மண்டலம் 11 முதல் 15 வரை பெருங்குடி குப்பை கிடங்கை சார்ந்த வாகனங்கள் மற்றும வட்டார அலுவலகங்கள்	4000 லிட்டர்	33,12,000/-
06,	ஆய்வு வாக பணிமனை	ஆய்வு வாகனங்கள் மற்றும் மண்டலம்9 மற்றும் 10	2500 லிட்டர்	20,70,000/-
		மொத்தம்	24500 லிட்டர்	2,02,86,000/

5 மத்திய அரசு ஆயில் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள முன்பணத் தொகையினை மீளப்பெற கால தாமதம் ஏற்படும் என்பதால் அதற்கான நடவடிக்கையினை சம்மந்தப்பட்ட வாட்டார பணிமனை மூலம் தனித் தனியே நடவடிக்கை மேற்கொள்ளவும்,

6 மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் சில்லறை விற்பனை விலைக்கே இந்நிறுவனங்களால் அங்கிகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் வழங்க முடியும் என்பதால் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, தேவைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்பணம் வழங்கி நேரடியாக சில்லறை விலைக்கு கொள்முதல் செய்ய மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.2.ந.க.எண்.சி1/739 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.122 **பொருள் எண்.81**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 2 (மணலி)- பகுதி -4 மற்றும் 5க்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (NULM) பணிபுரியும் சாலை பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2022 உடன் முடிவடைவுள்ளது. இந்த பணியாளர்களின் பணிகாலத்தினை கூடுதலாக ஆறு மாத காலம் 01.04.2022 முதல் 30.09.2022 வரை பணிநீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மண்டலம் -2 ல் பகுதி 4 மற்றும் 5, வார்டு-15 முதல் 21 வரை 42.33 சதுர கி.மீ பரப்பளவுள்ள 7 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1045 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்05.03.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லை விரிவாக்க நிர்ணயத்தில் அடிப்படையில், மண்டலம்-3க்கு உட்பட்ட கோட்டம் -29, தற்போது மண்டலம்-2 கோட்டம்-22 ஆக புதியதாக இணைக்கப்பட்டுள்ளது. மண்டலம்-3 கோட்டம்-29ல் பணிபுரியும் 8 எண்ணிக்கை NULM சாலைப்பணியாளர்கள் மண்டலம்-2, கோட்டம்-22ன் சாலைப்பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அப்பணியாளர்களின் ஊதியமும் மண்டலம்-2ல் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, புதியதாக இணைக்கப்பட்டுள்ள வார்டு-22ன் சாலைப்பணிகளை மேற்கொள்ளவிருக்கும் 8 NULM சாலைப்பணியாளர்கள் மண்டலம்-2ல் பணிபுரியவும் அப்பணியாளர்களுக்கு மண்டலம்-2ல் ஊதிய ம் வழங்கவும் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

மண்டலம்-2 ல் நிரந்தர சாலை பணியாளர்கள் 19 நபர்கள் அதில் 5 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். மண்டலம்-2ல் பணிபுரியும் சாலைப்பணியாளர்களின் அன்றாட பணிகளை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

1. *Road Patch work / pot hole attended*
2. *Removal of Debris*
3. *Clearing of unauthorized encroachment*
4. *Strom water Drain Silt catch pit cleaning & Chute pipe Cleaning*
5. *Water table cleaning*
6. *Filling of Road cut made by service department*
7. *Road Sectioning*
8. *Desilting of SWD & open Canal*
9. *Removing the storm water*
10. *Clearing the tree branches on the road to prevent the traffic block*
11. *Clearing the tree branches on the road tree pruning & branches cutting*
    Fallen tree removing

All other related road works

1. *Hot mix patch attended.*
2. *CC patch work attended*
3. *Cold mix patch attended*

12. *In Rainy Season*

1. *Diesel pump operation*
2. *Food distribution work*
3. *Relief centre work etc.*

13. *Election work*

1. *Defacing*
2. *Flag removing*
3. *Poster & Banners removing.*
4. *Flag post & Flag pole removing etc..*

Municipal Administration and Water Süpply *G.O. No.95* நாள் 14.10.2012 ன்படி ஒரு வார்டுக்கு 8 சாலைப்பணியாளர்கள் என பணியாளர்கள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டலம்-2 வார்டு-15 முதல் 22 வரை உட்பட்ட பகுதிகளில் 19 சாலைப்பணியாளர்களில் 5 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி தலைமையிடத்தில் பணிபுரிகிறார்கள். மீதமுள்ள 14 சாலைப்பணியாளர்களை மட்டுமே கொண்டு மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதால், பணிகளில் தொய்வு ஏற்படும் நிலையுள்ளது. மண்டலம்-2ற்கு ஒரு வார்டுக்கு 8 நபர்கள் வீதம் 7 வார்டுற்கு 56 நபர்கள் என்ற கணக்கீட்டின்படி, மண்டல அலுவலர் 25.05.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-2ல் பணிபுரியும் சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை 16 நபர்கள் போக மீதம் 40 நபர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* மூலம் பணிபுரிய அனுமதி வேண்டி கோப்பு அனுப்பப்பட்டது. அதில் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 01.06.2020 நாளிட்ட குறிப்பில், ஏற்கனவே பெறப்பட்ட மன்றதீர்மான 410/2020 நாள் 20.06.2020ன் அடிப்படையிலேலே 25 நபர்களாக குறைத்து அனுப்ப கோப்பு திருப்பி அனுப்பப்பட்டது.

எனவே, அதன் அடிப்படையிலேயே மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 21 வரை உட்பட்ட பகுதிகளில் சாலைப்பணிகளை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* மூலம் 25 நபர்கள் கொண்டு 01.12.2021 முதல் 31.03.2022 வரை பணிகள் மேற்கொள்ள, சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண் 044/2022 நாள்.19.01.2022ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணி 31.03.2022 அன்றுடன் முடிவடைவுள்ளது. மேலும், முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்05.03.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லை விரிவாக்க நிர்ணயத்தில் அடிப்படையில், மண்டலம்-3க்கு உட்பட்ட கோட்டம் -29, தற்போது மண்டலம்-2 கோட்டம்-22 ஆக புதியதாக இணைக்கப்பட்டுள்ளது. மண்டலம்-3 கோட்டம்-29ல் பணிபுரியும் 8 எண்ணிக்கை *NULM* சாலைப்பணியாளர்கள் மண்டலம்-2, கோட்டம்-22ன் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வார்டு வாரியாக மண்டலம்-2ல் பணிபுரியும் *NULM* பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு அட்டவணையிடப்படுகிறது.

வார்டு எண்.	மொத்த தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்தர சாலை பணியாளர் எண்ணிக்கை	காலிப்பணியிடம்	தற்போது பணிநீட்டிப்பு செய்ய	குறிப்பு
15	8	2	6	4	திரு.ஆர்.அந்தோணி சாலைப்பணியாளர், கோட்டம்-15 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதவர்
16	8	1	7	4	
17	8	1	7	4	

18	8	1	7	4	
19	8	7	1	-	2. T.J ஜெகநாதன் சாலைப்பணியாளர் , கோட்டம்-19 மாற்று பணி அடிப்படையில் துணைஆணையர் (கல்வி) அலுவலகத்தில் பணி
20	8	5	3	3	3. திரு.B. நரசிம்மராவ், சாலைப்பணியாளர் கோட்டம் 20 மாற்று பணி அடிப்படையில் ஆணையர் அலுவலகத்தில் பணி. 4. திரு. C.A கல்யாண்குமார், சாலைப்பணியாளர் கோட்டம்- 20 மாற்று ணி அடிப்படையில் பாலங்கள் துறையி ல் பணி 5,. திருமதி.N. மோனிகா, சாலைப்பணியாளர் கோட்டம்-20 மாற்று பணி அடிப்படையில் பாலங்கள் துறையில் பணி
21	8	2	6	6	6. செல்வி. A. நிவேதித்தா சாலைப்பணியாளர் கோட்டம்-21 மாற்று பணி அடிப்படையில் பேருந்து சாலை துறையில் பணி
22 (புதியதாக இணைக்கப்பட் டுள்ள கோட்டம்)	8	-	8	8	
மொத்தம்	64	19	45	33	

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 2021-22ஆம் ஆண்டிற்கான தற்காலிக பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.410/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 01.04.2022 முதல் 30.09.2022 வரை 6 மாத காலத்திற்கு ரூ.24,75,990/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) (33நபர்கள்Xரூ.410X183நாட்கள்) ஆகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணிக்காண கணக்கு குறியீட்டு எண். 20-21-07 கணக்கு தலைப்பு 210-100-603 கீழ் நடப்பு ஆண்டில் (2021 - 2022) ரூ.35,73,000/- மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பிப்ரவரி-2022 வரை 29,55,970/- செலவு செய்யப்பட்டு மீதம் ரூ.6,18,030/- இருப்பில் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. Municipal Administration and Water Supply G.O. No.95 நாள் 14.10.2012 ன்படி மண்டலம்-2ற்கு ஒரு வார்டுக்கு 8 நபர்கள் வீதம் 8 வார்டுக்கு (புதியதாக இணைக்கப்பட்ட வார்டு-22 சேர்த்து) 64 நபர்கள் என்ற பணியாளர்களின் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், மேற்குறிப்பிட்ட பணிக்காக மண்டலம் -2 (மணலி), பகுதி 4 மற்றும் 5 க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பணி மேற்கொள்ள அவசரம் மற்றும் அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரியும் NULM 25 சாலைப்பணியாளர்கள் மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட கோட்டம்-22ல் பணிபுரிய வேண்டிய NULM சாலைப்பணியாளர்கள் 8 நபர்கள் மொத்தம் 33 சாலைப்பணியாளர்கள் 01.04.2022 முதல் 30.09.2022 வரை 6 மாத காலத்திற்கு (183 நாட்கள்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் (NULM) பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவு தொகை ரூ.24,75,990/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) நிதிஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கிடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இச்செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்20-21-07கணக்கு தலைப்பு எண் 210-100-603 கீழ் மேற்கொள்ளவும்,
4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- என்பது 2021 – 2022 ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.

* * * * * *

பே.சா.து.ந.க.எண்.பி4/1868/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.04.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.123 **பொருள் எண்.82**

பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - தற்போது பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (Build, Operate & Transfer) என்ற அடிப்படையில் தனியாரின் பங்களிப்புடன் 637 மற்றும் மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள 779 எண்ணிக்கையில் பயன்பாட்டில் உள்ளது - மேலும் ஆறு இடங்களில் உள்ள தொடர் பேருந்து நிறுத்தங்களுக்கு பராமரிப்புடன் விளம்பரம் செய்ய ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி.

மன்ற அனுமதி எண்: தீர்மான எண்.137/2012, நாள் 11/06/2012. 171/2012 நாள் ; 12.06.2012 , 194/2012 நாள் ; 19.06.2012 மற்றும் 165/2014, 152/2014 08.02.2014 175/2014 19.02.2014ன்படி சென்னை மாநகரில் உலகதரத்திற்கு ஒப்பாகவும் சென்னை மாநகரில் எழில் கூட்டும் வகையிலும் பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டும் கட்டுதல் பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் தனியாரின் பங்களிப்புடன் 637 நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சியால் 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் பல்வேறு திட்ட நிதியின் கீழ் 779 நவீன பேருந்து நிழற்குடைகள் கட்டப்பட்டுள்ளது.

மாநகர போக்குவரத்து கழகத்தால் 1. தாடாண்டர் நகர் புதிய பேருந்து நிலையம் - 230 சதுர மீட்டர் 2. மறைமலை அடிகளார் பாலம் பழைய பேருந்து நிலையம் - 185 சதுர மீட்டர் 3. வேளச்சேரி பேருந்து நிலையம் (விஜய நகர்) – 150 சதுர மீட்டர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தொடர் பேருந்து நிலையங்களில் விளம்பரம் செய்ய 12 ஆண்டு கால ஒப்பம் முடிவடைந்துள்ளது. மேலும், மூன்று தொடர் பேருந்து நிலையங்களான புதிதாக 1. கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை பேருந்து நிறுத்தம் - 60 சதுர மீட்டர் , 2. 100 அடி சாலை (ஈகாட்டுதாங்கல்) - 175 சதுர மீட்டர் , காமராஜர் சாலை (அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தம்) – 130 சதுர மீட்டர் ஆகியவை காலியாக உள்ளன.

தற்சமயம் மேற்கண்ட ஆறு எண்ணிக்கையிலான தொடர் பேருந்து நிலையங்கள் தனியார் பங்களிப்புடன் மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் விளம்பரம் செய்தல் என்ற அடிப்படையில் ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒப்பம் கோர உள்ள இடங்கள் மற்றும் அளவுகளின் அட்டவணை பின்வருமாறு,

வ.எண்	தொடர் பேருந்து நிறுத்தம்	அனுமதிக்கப்பட்ட விளம்பர பரப்பு (ச.மீ)	குறிப்பு
1.	தாடாண்டர் நகர் (புதிய பேருந்து நிலையம்)	230	வ,எண் 1 முதல் 3 வரை போக்குவரத்து கழகத்தின் வசம் இருந்த அளவு 565 (ச.மீ)
2.	மறைமலை அடிகளார் பாலம் (பழைய பேருந்து நிலையம்)	185	
3.	வேளச்சேரி பேருந்து நிலையம் (விஜய நகர்)	150	
4.	கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை பேருந்து நிறுத்தம்	60	
5.	100 அடி சாலை (ஈக்காட்டுதாங்கல்)	175	
6.	காமராஜர் சாலை (அண்ணா சதுக்கம் பேருந்து நிறுத்தம்)	130	
	மொத்தம்	930	

தற்பொழுது மேம்படுத்துதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (Repair, Operate & Transfer) முறையில் மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் மொத்தம் 930 சதுர மீட்டருக்கு விளம்பரம் செய்ய புதிதாக ஒப்பம் கோரலாம் என கருதப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பேருந்து நிலையங்களில் பராமரித்து விளம்பர செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்பம் கோரலாம் என நிர்ணயிக்கப்படுகிறது.

1. மாநகர போக்குவரத்து கழகத்தின் மூன்று இடங்களில் ஒப்பக்காலம் முடிவடைந்த நிலையில் உள்ள 565 சதுர மீட்டருடன் புதிதாக அமைக்கப்பட்ட 365 சதுர மீட்டர் ஆக மொத்தம் 930 சதுர மீட்டருக்கு ஒரு சதுர மீட்டருக்கு ஓர் ஆண்டிற்கு பராமரித்து விளம்பர செய்ய கட்டணமாக ரூ. 30,000/- எனவும் மேலும் பேருந்து நிலையத்தில் விளம்பர வரி கட்டணமாக ஓர் ஆண்டிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.6,000/- செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 930 சதுர மீட்டருக்கு மொத்த சலுகை கட்டணமாக (Concessionaire Fee) ரூ.2,79,00,000/- எனவும், பேருந்து நிலையங்களில் மேற்கொள்ள இருக்கும் விளம்பரங்களுக்கான உரிம கட்டணம் ரூ. 55,80,000/- என இவை இரண்டும் சேர்த்து ரூ.3,34,80,000 எனவும் இதற்கு GST 18% ரூ.60,26,400/- எனவும் , ஆக மொத்தம் ரூ.3,95,06,400 (மூன்று கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சத்து ஆராயிரத்து நானூறு) எனவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கணக்கீடு விவரம்

வ. எண்	தொடர் பேருந்து நிழற் குடைகள் மற்றும் நடை மேம் பாலங்களில் விளம்பர பரப்பளவு (ச.மீ)	விளம்பர கட்டணம் (ஒரு ச.மீ க்கு)	மொத்த சலுகை கட்டணம் ஒரு ஆண்டிற்கு	இரண்டு அரை யாண்டு உரிம கட்டணம் (ஒரு ச.மீ க்கு)	மொத்த உரிம கட்டணம் ஓர் ஆண்டிற்கு	மொத்த சலுகை கட்டணம் (ம) உரிம கட்டணம் ஓர் ஆண்டிற்கு	GST 18%	மொத்த சலுகைக் கட்டணம் விளம்பரங் களுக்கான உரிம கட்டணம் GSTயுடன் சேர்த்து
		ரூ. இலட்சத்தில்						
	(அ)	(ஆ)	(அ+ஆ)=இ)	ஈ	(அ+ஈ)=உ	(இ+உ)= ஊ	(ஊ*18%) =எ	(ஊ+எ)=ஏ
1	930	0.3	279	0.06	55.8	334.8	60.264	395.064

மேற்கண்ட இனங்களுக்கு சலுகை கட்டணம் (Concessionaire Fee) ஒவ்வொரு ஆண்டிற்கும் இறுதி செய்யப்பட்ட தொகைக்கு கூடுதலாக 7% சேர்த்து வசூலிக்கலாம் என கருதப்படுகிறது.

2. மேற்கண்ட 930 சதுர மீட்டருக்கு தொடர் பேருந்து நிலையங்களில் மேம்படுத்துதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற முறையில் ஒப்பத்துக்கு முன்வைப்புத் தொகையாக (EMD) ரூ.10,00,000 /- (ஒரு பத்து இலட்சம்) ஆக நிர்ணயிக்கலாம். இந்த ஒப்பந்ததில் பங்கு பெறும் நிறுவனங்கள் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ள தொடர் பேருந்து நிலையங்களில் தற்போது அமைந்துள்ள இடங்களிலேயே மேம்படுத்தி பராமரித்து பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையிலும், 930 சதுர மீட்டருக்கு மேம்படுத்துதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் அதில் பெறப்படும் வருவாயின் அடிப்படையில் மாநகராட்சிக்கு (Concessionaire Fee & License Fee) செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பம் கோரலாம்

இந்த ஒப்பங்கள் அனைத்தும் இந்தியா அளவிலான ஒப்பங்களாக கோரலாம். இந்த ஒப்ப அழைப்பில் ஆர்வம் உள்ள தேசிய / முன்னோடி நிறுவனங்கள் கலந்து கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மேற்கூறிய கருத்துகளின் அடிப்படையில்,

1. 930 சதுர மீட்டருக்கு 6 பேருந்து நிலையங்கள் சேர்த்து ஒரே ஒப்பமாக கோரியதற்கு,
2. ஒரு சதுர மீட்டருக்கு ஓர் ஆண்டிற்கு பராமரித்து விளம்பர செய்ய கட்டணமாக ரூ. 30,000/- எனவும் மேலும் பேருந்து நிலையத்தில் விளம்பர வரி கட்டணமாக ஓர் ஆண்டிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.6,000/- செலுத்த வேண்டும் எனவும்.
3. சலுகை கட்டணம் (Concessionaire Fee & License Fee) ஒவ்வொரு ஆண்டிற்கும் இறுதி செய்யப்பட்ட தொகைக்கு கூடுதலாக 7% சேர்த்து வசூலிக்கவும்.
4. சலுகை காலம் (Concessionaire Period) 5 ஆண்டு காலமாக நிர்ணயிக்கவும்.
5. ஒப்ப முன்வைப்புத் தொகை (EMD) ரூ. 10 இலட்சம் என நிர்ணயிக்கவும்.
6. இந்த ஒப்பம், தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் உள்ளவர்கள் கலந்துக் கொள்ளும் ஒப்ப அழைப்பாக கோரப்பட்டதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

Br.D.C.No.B3/1005/2018

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *25.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.124 **பொருள் எண்.83**

Greater Chennai Corporation - Bridges Department – Construction of Skywalk with Escalators from Mambalam Railway station to T.Nagar Bus Terminus in Div – 136, Zone – X – Work is in progress – Work delayed due to Covid-19 pandemic situation & shifting of utilities - Prohibition of Oxygen supply to infra projects during April to June 2021– Monsoon heavy rain during November & December 2021 - Extension of time period – For Approval.

The work of construction of Skywalk with Escalators from Mambalam Railway station to T.Nagar Bus Terminus in Div – 136, Zone – X under the smart city scheme was entrusted to the contractor M/s.Chendur Infrastructures Pvt. Limited JV with M/s. P & C Projects Pvt. Ltd. Letter of Acceptance was issued to the contractor on 27.01.2020 and work is in progress.

The work was commenced on 05.03.2020. The contract period is 15 months and work to be completed on 04.06.2021. The period of contract was extended upto 04.12.2021 vide Special Officer (Council) Resolution no.525/2021 dated 26.06.2021, due to lock down during covid-19 pandemic situation in March to April 2020, delay in shifting of TANGEDCO Cables, BSNL Cables and CMWSSB water lines and also work could be carried out only during night time.

The period of contract was extended upto 30.04.2022 vide Special Officer (Council) Resolution no.144/2022 dated 01.02.2022due to following Reasons.

1. The Ministry of Home affairs, GOI prohibited the supply of Oxygen for Industrial purposes by manufactures and suppliers from 22.04.2021 till further orders due to pre-requisite for managing rapid rise in Covid-19 cases.
2. Ministry of Home affairs, (Disaster Management Division) GOI allowed supply of Oxygen to Infra structure projects on temporary basis subject to ensuring adequate supply to Hospitals and other medical purposes vide memorandum dated 31.05.2021. The Oxygen supply is not available for more than 55 days.
3. During rainy days welding works could not be carried out. The welding works held up due to frequent rains from 28.06.2021 to 12.12.2021 for 64 days.

The contractor letter dated.28.04.2022, has requested for extension of contract period up to 31.08.2022 citing the following Reasons.

1) The Traffic police had given permission to work only during night time, leads to delay in achieving the target.
2) As the work site is situated in CBD area, work is being carried out in the thickly congested market area without restricting the pedestrian as well as vehicle movement.
3) The welding and fabrication work could be carried out only 3hours during night times.
4) During the Hon'ble Deputy Mayor's site visit in March 2022, initiated two more lifts for pedestrians which required 3 months time right from foundation and manufacturing of mechanical items.

The superstructure of the skywalk is entirely of structural steels with full of welding. During rainy days welding works could not be carried out. The Traffic police had given permission to work only during night time and the work site is situated in CBD area, work is being carried out in the thickly congested market area without restricting the pedestrian as well as vehicle movement leads to delay.

During the Hon'ble Deputy Mayor's site visit in March 2022, advised to provide two more lifts for pedestrians at entry and exit points of skywalk to the benefit of disabled persons which requires minimum 3 months time. Also, a Writ Petition was filed by the adjacent shop owner, praying to avoid staircase foundation and pillar in front of his shop. Providing lift on this location will also avoid the litigation.

Considering the reasons mentioned above, the time period required for completion of this project in all respects is up to 31.08.2022.

Hence, approval of the Council is requested through Standing Committee(Works), Standing Committee (Taxation and Finance), to extend the contract period up to 31.08.2022 so as to complete the project in all respects.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.3.ந.க.எண்.2289/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.125 பொருள் எண்.**84**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 (மாதவரம்) - வார்டுகள் 25, 28, 29, 31 மற்றும் 32ல் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடங்கள், வார்டு-26 மற்றும் 30ல் உள்ள பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அகற்றியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்), பொது மக்களின் நேரடி புகார்களின்படியும், 2nd State High Powered Committee for Swachh Bharat Urban 2.0 26.02.2022 நாளிட்ட கூட்ட நடவடிக்கை மற்றும் State level Apex Committee for Nirbhaya Fund 13.02.2022 நாளிட்ட கூட்ட நடவடிக்கைகளின்படியும், புதிய கழிப்பிடக் கட்டிடங்கள் கட்ட இருப்பதாலும், வார்டுகள் 25, 28, 29, 31 மற்றும் 32 பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களை இடித்துவிட்டு புதியதாக Conventional Toilet மண்டலம்-3 மூலம் SBM நிர்பயா நிதியில் பணி மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.03.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளவாறு பணி நடைபெற்று வருவதாலும், வார்டு-26 ஸ்ரீநிவாச பெருமாள் கோயில் தெரு மற்றும் வார்டு-30 வில்லிவாக்கம் சாலை, விநாயகபுரம் ஆகிய இடங்களில் உள்ள மிகவும் பழுதடைந்த உபயோகமில்லாத கட்டிடங்களை இடித்துவிட்டு முறையே சுகாதார நல மையம் மற்றும் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இக்கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 716.43 சதுர மீட்டர் ஆகும்.

பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடங்களின் விவரம், பரப்பளவு, கட்டப்பட்ட ஆண்டு மற்றும் புத்தக மதிப்பு ஆகியவை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. எண்	கோட்டம்	பொதுக்கழிப்பிடம் / கட்டிடத்தின் இருப்பிடம்	பரப்பளவு (ச.மீ)	கட்டப்பட்ட ஆண்டு	தற்போதைய புத்தக மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) (2021-22)	குறிப்பு
1	25	CMDA Truck Terminal - 1	23.10	1992	0.56	புதிய பொதுக் கழிப்பிடம்
2	25	CMDA Truck Terminal - 2	23.10	1992	0.58	
3	25	மாதவரம் பேருந்து நிலையம்	34.38	2005	0.48	
4	28	அம்பேத்கர் 2வது பிரதான சாலை	20.86	2001	0.80	
5	28	ஜாங்கிரி ஷாப் ரோடு	29.58	2001	0.78	
6	28	மா.பொ.வேதா தெரு	16.10	1997	0.40	
7	28	முத்துமாரியம்மன் கோயில் தெரு	96.57	2001	0.60	
8	28	பாண்டியன் தெரு	49.92	2003	0.85	
9	28	பெரியார் நகர் பிரதான சாலை	94.67	2001	0.72	

10	29	நேதாஜி பிரதான சாலை	29.29	1988	0	புதிய பொதுக் கழிப்பிடம்
11	31	அண்ணா தெரு	50.58	2003	1.00	
12	32	திருவள்ளுவர் தெரு	63.00	1991	0.68	
13	26	ஸ்ரீநிவாச பெருமாள் கோயில் தெரு (பழுதடைந்த கட்டிடம்)	93.28	1987	0	சுகாதார நல மையம்
14	30	வில்லிவாக்கம் சாலை, விநாயகபுரம் (அங்கன்வாடி)	92.00	1982	0	புதிய அங்கன்வாடி மையம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் அப்போதைய மாதவரம் நகராட்சி காலகட்டடங்களில் கட்டப்பட்டதாலும், கட்டிடங்கள் இயற்கை சீற்றங்களால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாலும் இவற்றினை ஆய்வு செய்து இடிக்கலாம் என கருதப்படுகிறது. மேலும், முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்கள் கழிவறைக்குள் சூரிய வெளிச்சம் படும்படியாகவும் மற்றும் காற்றோட்டம் உள்ளவையாகவும் கட்டப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே மண்டலம்-3 (மாதவரம்) எல்லைக்குட்பட்ட மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள உபயோகமில்லாமல் மற்றும் பாழடைந்த நிலையில் உள்ள கட்டிடங்களின் சுவர்களில் விரிசல் விழுந்து அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் பொது மக்கள் நலன் மற்றும் இப்பணிகளின் அவசர அவசியம் கருதி உடனடியாக புதிய கழிப்பறைகள் கட்டுவதற்கும், சுகாதார நல மையம் அமைக்கவும், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் பழைய அட்டவைணையில் கண்ட பொது கழிப்பிட கட்டிடங்கள் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அகற்றியமைக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.4.ந.க.எண்.பி3/ 38.15/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ***23.05.2022*** நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.126 பொருள் எண்.**85**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - *4* - பகுதி - *09* - வார்டு - *36* - உள்ள இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 4, பகுதி – 09, வார்டு -36ல் உள்ள இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் உள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்.	மண்டலம் - *4*	வார்டு எண். 36
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் உள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம்.
2	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	*1990*
3	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	*42.44* ச.மீ.
4	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	*16976/-*
5	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
6	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	மிகவும் பழுதடைந்து மற்றும் புதிதாக நகர்ப்புற சுகாதார நல மையம் (*Urban Health Wellness Center)* கட்டுவதற்கு
7	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிதாக நகர்ப்புற சுகாதார நல மையம் *(Urban Health Wellness Center)* கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது
8	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது	மண்டல அலுவலர்-*4*
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்:	எண்.23, நாள் : 10.05.2022

எனவே, மண்டலம்-4, வார்டு-36ல் இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. ஆகையால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.4.ந.க.எண்.பி3/3818/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.127 பொருள் எண்.**86**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, வார்டு - 36 புது நகர் 8வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 4, பகுதி – 09, வார்டு -36ல் உள்ள புது நகர் 8வது தெருவில் உள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்.	மண்டலம் - 4	வார்டு எண். 36
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	புது நகர் 8வது தெருவில் உள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம்
2	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	1995
3	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	37.8ச.மீ.
4	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	15120/-
5	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	இல்லை
6	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	மிகவும் பழுதடைந்து மற்றும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால்.
7	அந்த பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது
8	பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது	மண்டல அலுவலர்-4
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்:	எண்.23, நாள் : 10.05.2022

எனவே, மண்டலம்-4, வார்டு-36, புது நகர் 8வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளதாலும், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும், அக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.4ந.க.எண்.பி3/3816 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ***23.05.2022*** நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.128 பொருள் எண்.**87**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - *4*, வார்டு - *36* இந்திரா காந்தி நகர் *1*வது தெருவில் அமைந்துள்ள பழைய அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 4, பகுதி – 09, வார்டு -36ல் உள்ள இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்.	மண்டலம் - *4*	வார்டு எண். 36
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் உள்ள பழைய அங்கன்வாடி கட்டிடம்
2	அந்த பழைய அங்கன்வாடி கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	*2003*
3	அந்த பழைய அங்கன்வாடி கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	76.86 ச.மீ.
4	பழைய அங்கன்வாடி கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	*30744/-*
5	அந்த பழைய அங்கன்வாடி கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?ள	இல்லை
6	பழைய அங்கன்வாடி கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	மிகவும் பழுதடைந்து மற்றும் வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு
7	அந்த பழைய அங்கன்வாடி கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது
8	பழைய அங்கன்வாடி கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது	மண்டல அலுவலர்-*4*
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்:	எண்.23, நாள் : 10.05.2022

எனவே, மண்டலம்-4, வார்டு-36, இந்திரா காந்தி நகர் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளதாலும், . பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.11ந.எண்.3259/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.129 **பொருள் எண்.88**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, கோட்டம் - 150, காரம்பாக்கம் காந்தி நகர் பிரதான சாலையில் உள்ள உரம் தயாரிக்கும் நிலையத்தினை இடித்து அகற்றியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 17.07.2021 நாளிட்ட கடிதத்தில், பகுதி - 34, வார்டு -150, மண்டலம் - 11 காரம்பாக்கம் காந்தி நகர் பிரதான சாலையில் ஏற்கனவே உள்ள உரம் தயாரிக்கும் நிலையத்தினை அகற்றிவிட்டு அவ்விடத்தில், அப்பகுதி மக்களின் தேவைக்காக LPG எரியூட்டு தகன மேடை அமைத்து தர கோரியுள்ளார்கள்.

இந்த உரம் தயாரிக்கும் நிலையம் உள்ள இடமானது மயான பூமியாக ஏற்கனவே இருந்த காரம்பாக்கம் பஞ்சாயத்தில் 2011 வரை இருந்தது. அதன் பின்னர் 2011 முதல் 2016 வரை பெருநகர சென்னை மாநகராட்சியால் மயான பூமியாக பயன்படுத்தப்பட்டது இடைப்பட்ட காலத்தில் இப்பகுதி மக்கள் போரூர் மின்சார தகன மேடையை பயன்படுத்தி வந்ததால் காந்தி நகர் மயான பூமி உரம் தயாரிக்கும் நிலையமாக மாற்றப்பட்டது.

முதல் உரம் தயாரிக்கும் நிலையம் 2017 லும் மற்றும் 2ம் உரம் தயாரிக்கும் நிலையம் 2020 லும் அமைக்கப்பட்டது.

வ.எண்	கட்டிடங்களின் விவரம்	அளவீடுகள்	கட்டப்பட்ட ஆண்டு	புத்தக மதிப்பு
1.	உரம் தயாரிக்கும் நிலையம் I	14mx8m=112m^2	2017	11,93,254.00
2.	உரம் தயாரிக்கும் நிலையம் II	14mx9.30m=130.20m^2	2020	9,50,794.00

பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக இப்பகுதியில் சுமார் 17,000 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியின் அருகாமையில் அமைந்துள்ள வார்டு-149 பிருந்தாவனம் நகர் சுடுகாடு 6 கிலோ மீட்டர் தூரத்திலும் மற்றொரு சுடுகாடு வார்டு - 151 ஆற்காடு சாலையில் உள்ள சுடுகாடு சுமார் 3.50 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது.

மேலும், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளினையும் கருத்திற்கொண்டு, காரம்பாக்கம் காந்தி நகரில் ஏற்கனவே உள்ள உரம் தயாரிக்கும் நிலையத்தினை அகற்றிவிட்டு அவ்விடத்தில் LPG எரியூட்டு தகன மேடை அமைக்க வேண்டியுள்ளது.

இவ்விடத்தில் உள்ள உரம் தயாரிக்கும் நிலையத்தை அகற்றுவதற்கு முதன்மை செயலாளர் ஆணையர் அவர்களின் அனுமதி 08/01/2022 அன்று பெறப்பட்டது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம் - 11, வார்டு - 150, காரம்பாக்கம் காந்தி நகர் பிரதான சாலையில் ஏற்கனவே உள்ள உரம் தயாரிக்கும் நிலையத்தை இடித்து அகற்றியதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.அ.13.ந.க.எண்.சி1/1696 /2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.130 **பொருள் எண்.89**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, பழைய வார்டு-173, 178, 180 மற்றும் 182 வரையில் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பள்ளி கட்டிடம், மேடை, கழிவறை, சத்துணவுக்கூடம், சமையல் இருப்பு அறை மற்றும் மழலையர் பள்ளி கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பழைய வார்டு-173, 178, 180 மற்றும் 182 வரையில் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பள்ளி கட்டிடம், மேடை, கழிவறை, சத்துணவுக்கூடம், சமையல் இருப்பு அறை மற்றும் மழலையர் பள்ளி கட்டிடங்களை இடித்து, அவ்விடத்தில் மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது. ஆதன் விவரம் பின் வருமாறு:-

வ. எண்.	பழைய வார்டு எண்.	இடிக்கப்பட உள்ள கட்டிடத்தின் விவரம்	கட்டிடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	கட்டிடம் இடத்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது
1	173	பார்க் வியூ சாலை, நாராயண சாமி தோட்டத்தில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி	974.06 ச.மீ.	3873757.49	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது
2	178	வேளச்சேரி சென்னை ஆரம்ப பள்ளி கட்டிடம்	1025.03 ச.மீ.	1650228.00	இல்லை	
3	180	தரமணி சென்னை மேல்நிலைப் பள்ளியின் மேடை மற்றும் கழிவறை கட்டிடம்	639.60 ச.மீ.	625000.00	ஆம்	
4	180	தரமணி சென்னை ஆரம்ப பள்ளியின் சத்துணவுக் கூட கட்டிடம்	76.47 ச.மீ.	84000.00	ஆம்	
5	182	திருவான்மியூர் சென்னை ஆரம்ப பள்ளியின் சமையல் இருப்பு அறை கட்டிடம்	75.88 ச.மீ.	91000.00	ஆம்	
6	182	திருவான்மியூர் சென்னை ஆரம்ப பள்ளியின் மழலையர் பள்ளி கட்டிடம்	145.32 ச.மீ.	8000.00	ஆம்	

7	182	திருவான்மியூர் சென்னை மேல்நிலைப் பள்ளியின் சமையல் இருப்பு அறை கட்டிடம்	53.18 ச.மீ.	54000.00	ஆம்	மீண்டும் புதியதாக கட்டிடம் கட்டப்பட உள்ளது

மேற்காண் பள்ளி கட்டிடம், மேடை, கழிவறை, சத்துணவுக்கூடம், சமையல் இருப்பு அறை மற்றும் மழலையர் பள்ளி கட்டிடங்களை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்ததாரர்கள் மூலம் இடித்து அகற்றிய பின்னர் புதியதாக அவ்விடத்தில் கட்டிடங்கள் கட்டப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம்-13, பழைய வார்டு-173, 178, 180 மற்றும் 182 வரையில் உள்ள மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பள்ளி கட்டிடம், மேடை, கழிவறை, சத்துணவுக்கூடம், சமையல் இருப்பு அறை மற்றும் மழலையர் பள்ளி கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.டி.1/SD/WDCN15/0205/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.131 **பொருள் எண்.90**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல் The Executive Engineer and Administrative Officer, Besant Nagar Division, Tamil Nadu Housing Board அவர்கள் S.No.642/1 part of Sholinganallur Village-ல் அமைந்துள்ள இடத்திற்கு மனைப்பிரிவு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் D1/LA/SD/WDCN15/00205/2022 நாள்:25.03.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். இதில் அவர்கள் மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக School Road சாலை அமைய பெற்றுள்ளது. மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 1450.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 411.69 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மனையின் அணுகு சாலை விரிவாக்கத்திற்கான 17.47ச.மீ நிலமும் மற்றும் மனைஉட்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் 394.22ச.மீ நிலத்தினையும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் The Executive Engineer and Administrative Officer, Besant Nagar Division, Tamil Nadu Housing Board அவர்களிடம் S.No.642/1 part of Sholinganallur Village இடத்தில் அமைந்துள்ள மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 1450.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 411.69 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மனையின் அணுகு சாலை விரிவாக்கத்திற்கான 17.47ச.மீ நிலமும் மற்றும் மனைஉட்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் 394.22ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN03/00333/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *20.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.132 **பொருள் எண்.91**

தானப்பத்திரம்

மண்டலம்-3ல் Mrs. Manorama C. Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் Redhills Road, S.No.4/14 & 3/13 of Kathivedu Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN03/ 00333/2022 நாள்:11.05.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான Mrs. Manorama C. Kothari and Mr. Raveen C. Kothari மனைப்பிரிவில் சாலைக்கென மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

(அ) Mrs. Manorama C. Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி சாலைக்கென 2150.86 சதுர மீட்டர் நிலம் TANGEDCO பொது பயன்பாட்டிற்கென 46.8 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 46.8 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mrs. Manorama C. Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, துணை வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 24.00 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mrs. Manorama C. Kothari and Mr. Raveen C. Kothari அவர்கள் அதற்கேற்றவாறு 46.8ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 46.8 ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mrs. Manorama C. Kothari மற்றும் Mr. Raveen C. Kothari அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 2150.86 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 46.8 சதுர மீட்டர் நிலமும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

அதே போல் TANGEDCO விற்கு ஒதுக்கப்பட்டுள்ள 46.8ச.மீ பொது பயன்பாட்டிற்கென உள்ள நிலத்தை அவர்களிடம் பதிவு செய்து வழங்க விண்ணப்பதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, Redhills Road, S.No.4/14 & 3/13 of Kathirvedu Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 2150.86 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 46.8 சதுர மீட்டர் நிலத்தினையும் Mrs. Manorama C. Kothari and Mr. Raveen C. Kothari ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN03/00130/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *23.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.133 **பொருள் எண்.92**

தானப்பத்திரம்

மண்டலம்-3ல் Mrs. Sujatha Raveen Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் S.No.4/13 & 3/12 of Kathivedu Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN3/00130/2022 நாள்:04.03.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான Mrs. Sujatha Raveen Kothari and Mr. Raveen C. Kothari மனைப்பிரிவில் சாலைக்கென மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Mrs. Sujatha Raveen Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி சாலைக்கென 2257.11 சதுர மீட்டர் நிலம் TANGEDCO பொது பயன்பாட்டிற்கென 46.3 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 46.3 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mrs. Sujatha Raveen Kothari மற்றும் Mr. Raveen C. Kothari ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, துணை வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 24.00 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்களாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mrs. Sujatha Raveen Kothari and Mr. Raveen C. Kothari அவர்கள் அதற்கேற்றவாறு 46.3 ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 46.3 ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்..

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mrs. Sujatha Raveen Kothari மற்றும் Mr. Raveen C. Kothari அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 2257.11 சதுர மீட்டர் நிலம் சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான 46.3 சதுர மீட்டர் நிலமும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

அதே போல் TANGEDCO விற்கு ஒதுக்கப்பட்டுள்ள 46.3ச.மீ பொது பயன்பாட்டிற்கென உள்ள நிலத்தை அவர்களிடம் பதிவு செய்து வழங்க விண்ணப்பதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, S.No.4/13 & 3/12 of Kathirvedu Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 2257.11 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 46.3 சதுர மீட்டர் நிலத்தினையும் Mrs. Sujatha Raveen Kothari and Mr. Raveen C. Kothari ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.டி1/SD/WDCN14/00219/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.134 **பொருள் எண்.93**

தானப்பத்திரம்

மண்டலம்-14ல் M/s. KMA Finished Leathers (P) Ltd அவர்கள் Veeramani Salai 4th Street, (Paulraj Nagar Main Road), Old S.No.123/1B (part), New S.No.123/1B1C & 123/56 பாலவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு மனைப்பிரிவு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் விண்ணப்பித்தார்கள். மனைப்பிரிவு எண்.LA/WDCN14/00025/2021 நாள் 25.11.2021மூலம் இந்த இடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

தற்பொழுது மனைஉட்பிரிவு விண்ணப்பம் எண் D1/SD/WDCN14/00219/2022 நாள்:30.03.2022ன்படி மனைஉட்பிரிவில் மனை எண்.13-ல் கூடுதலாக சாலை அமைக்க வேண்டி, விண்ணப்பித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

திட்ட வரைபடத்தில் சாலைக்கென 75.70 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் காட்டப்பட்டுள்ளது இந்த நிலத்தினை தானமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிப்பதற்கு இசைவு தெரிவித்து தானப் பத்திரத்தினை விண்ணப்பதாரர் அளித்துள்ளார்.

சாலைக்கென காட்டப்பட்டுள்ள 75.70 சதுர மீட்டர் நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது.

எனவே, மனை உரிமையாளர் M/s. KMA Finished Leathers (P) Ltd அவர்களிடம் Veeramani Salai 4th Street, (Paulraj Nagar Main Road), Old S.No.123/1B (part), New S.No.123/1B1C & 123/56 பாலவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திலிருந்து திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் 75.70 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN15/00030/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *20.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.135 **பொருள் எண்.94**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல் (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif ஆகியோர் S.No.44/2A2, 44/2A3, 44/2A4 and 44/2A5 Neelangarai Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/00030/2022 நாள்:24.01.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif மனைப்பிரிவில் சாலைக்கென மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி சாலைக்கென 2009.69 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்கென TANGEDCO விற்கு 38.0 சதுர மீட்டர் நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான 38.0 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகல மனைப்பிரிவு சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 220.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif அவர்கள் அதற்கேற்றவாறு 38.0 ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 38.0 ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்..

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 2009.69 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான 38.0 சதுர மீட்டர் நிலத்தினையும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

அதே போல் TANGEDCO விற்கு ஒதுக்கப்பட்டுள்ள 38.0ச.மீ பொது பயன்பாட்டிற்கென உள்ள நிலத்தை அவர்களிடம் பதிவு செய்து வழங்க விண்ணப்பதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே, S.No.44/2A2, 44/2A3, 44/2A4 and 44/2A5 Neelangarai Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 2009.69 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 38.0 சதுர மீட்டர் நிலமும் (1) Mrs. Nasreen Habib (2) Mrs. Almas Habib (3) Mrs. Heena Habib Puzail (4) Mrs. Kausar Habib (5) Mrs. Taybah Habib (6) Mrs. Zeba Habib (1 to 6) rep by their Power Agent Mr. Mohammed Farhan (7) Mr. Mohammed Farhan (8) Mrs. Nishat Akhtar Rangoon Wala (9) Mrs. Naseem Feroz (10) Mrs. Mariam Ismail Rep by her Power Agent Mr. Imtiaz Abdul Latif அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN15/00131/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *25.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.136 **பொருள் எண்.95**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல் M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr.V.P. Shiravan ஆகியோர் S.No.445/1, 445/2A1, 445/3A1A, 445/4A1A, 446/1A1A சோழிங்நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN15/00131/2022 நாள்:04.03.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரான M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P. Shiravan மனைப்பிரிவில் சாலைக்கென மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P. Shiravan ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி சாலைக்கென 2040.72 சதுர மீட்டர் நிலம் TANGEDCO பொது பயன்பாட்டிற்கென 31.9 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 31.9 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P. Shiravan ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, துணை வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO-விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P.Shiravan அவர்கள் அதற்கேற்றவாறு 31.90 ச.மீ பரப்பளவு பெருநகர

சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 31.90ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P. Shiravan அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 2040.72 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 31.90 சதுர மீட்டர் நிலமும் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, S.No.445/1, 445/2A1, 445/3A1A. 445/4A1A, 446/1A1A சோழிங்நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 2040.72 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கென 31.90 சதுர மீட்டர் நிலத்தினையும் M/s. Saravana Store (Gold Palace) rep by its Patner Mr. V.P. Shiravan ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ப.து.ந.க.எண்.டி1/*SD/WDCN15/00354/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *25.05.2022* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.137 **பொருள் எண்.96**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல் M/s. Proteck Machinery Pvt., Ltd., அவர்கள் Old No.189 & New No.155, Medavakkam Road, S.No.602/5B2, Sholinganallur Village ல் அமைந்துள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் D1/SD/WDCN15/00354/2022 நாள்:18.05.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். இதில் அவர்கள் மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பாரத் நகர் மேடவாக்கம் சாலை அமைய பெற்றுள்ளது. விண்ணப்பதாரர் திட்ட வரைபடத்தின்படி தங்களுக்கு சொந்தமான மேற்படி நிலத்தில் சாலைக்கென 324.15 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்து காட்டியுள்ளார்கள். அந்நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் தானமாக வழங்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

M/s. Proteck Machinery Pvt Ltd அவர்கள் நிலத்தினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். விண்ணப்பதாரர் நிலத்திற்கான பட்டாவினை வட்டாட்சியர், சோழிங்நல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் M/s. Proteck Machinery Pvt., Ltd., அவர்களிடம் இருந்து Old No.189 & New No.155, Medavakkam Road, S.No.602/5B2, Sholinganallur Village ல் அமைந்துள்ள நிலத்தில் திட்ட வரைபடத்தின்படி, சாலைக்கென ஒதுக்கப்பட்ட 324.15 சதுர மீட்டர் நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1072/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.138 **பொருள் எண்.97**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - சென்னை மாவட்டம் - மயிலாப்பூர் வட்டம் - கலங்கரை விளக்கம் அருகில் உள்ள மகாத்மா காந்தி அவர்களின் சிலையை இடம் மாற்றம் செய்து அவ்வை சண்முகம் சாலைக்கு எதிரே உள்ள ஔவையார் சிலைக்கு அருகில் நிருவுவதற்கு தடையின்மை சான்று கோரப்பட்டது - அவசர அவசியம் கருதி பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு) துறை, அரசு முதன்மை செயலாளரின் 09.05.2022 நாளிட்ட கடிதத்தில், Light House மெட்ரோ இரயில் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தினில் அமைந்துள்ள காந்தி சிலையினை இடமாற்றம் செய்து மீண்டும் நிறுவுவது (Relocation and Reinstatement of Gandhi Statue at proposed Light House Station) தொடர்பான துறைகளுக்கிடையேயான சிக்கல்களை களைவது சம்பந்தமாக தலைமை செயலாளரின் கலந்தாய்வுக் கூட்டரங்களில் 19.05.2022 அன்று மாலை 5.00 மணிக்கு அரசு தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள கலந்தாய்வுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட 17.05.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக (திட்டம்-2) கலங்கரை விளக்கம் அருகில் உள்ள மகாத்மா காந்தி அவர்களின் சிலையை இடமாற்றம் செய்து மறு இடம் தேர்வு செய்து மீண்டும் நிறுவுவதற்கு அறிக்கை அனுப்புமாறு, அரசுச் செயலாளர், தெரிவித்ததின் அடிப்படையில், வட்டாட்சியர், மைலாப்பூர் அவர்களின் அறிக்கையில் சிலையை இடமாற்றம் செய்து மறு இடம் தேர்வு செய்து மீண்டும் நிறுவுவதற்கு கோரும் புலமானது நிரந்தர நிலப்பதிவேட்டில் கீழ்க்கண்டவாறு பதிவாகியுள்ளது.

கிராமம்	:	மயிலாப்பூர்
பிளாக் எண்	:	102
புல எண்	:	7574/1
வகைபாடு	:	சர்க்கார் புறம்போக்கு
விஸ்தீரணம்	:	1.94.99.5. ச.மீ.
உரிமையாளர்	:	தமிழக அரசு வருவாய்த்துறை

மேற்காணும் நிலத்தின் நான்கு எல்லைகள் கீழ்க்கண்டவாறு அமைய பெற்றுள்ளது.

வடக்கு : புல எண். 7574 /1pt

கிழக்கு : புல எண். Bay of Bengal

தெற்கு : புல எண். 7574 / Pt

மேற்கு : புல எண். 789 / 1காமராஜர் சாலை.

தற்போது உள்ள காந்நி சிலையானது D.G.P அலுவலகம் மற்றும் ராதாகிருஷ்ணன் சாலைக்கு எதிரே உள்ள சிக்னலுக்கு அருகில் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளதாகவும், மேற்படி சிலையை இடமாற்றம் செய்து மீண்டும் நிறுவ தேர்வு செய்யப்பட்ட இடமானது அவ்வை சண்முகம் சாலைக்கு எதிரே உள்ள ஔவையார் சிலைக்கு அருகில் வடக்கு பகுதியில் அதே புல எண்.7574/1-இல் அமைந்துள்ளதாக மயிலாப்பூர் வட்டாட்சியர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அரசு கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி நகர்மன்ற தீர்மானம் குறித்து தடையின்மை சான்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முதன்மை செயலாளர் / ஆணையர் அவர்களின் 18.05.2022 நாளிட்ட குறிப்பு மூலம், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக (திட்டம்-2) கலங்கரை விளக்கம் அருகில் உள்ள மகாத்மா காந்தி அவர்களின் சிலையை இடம் மாற்றம் செய்து அவ்வை சண்முகம் சாலைக்கு எதிரே உள்ள ஔவையார் சிலைக்கு அருகில் நிறுவுவதற்கும் மற்றும் மெட்ரோ இரயில் பணிகள் முடிந்தவுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே மேற்படி இடமாற்றம் செய்யப்படும் காந்தி சிலையை ஏற்கனவே இருந்த கலங்கரை விளக்கம் அருகில் மீண்டும் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அவசர அவசியம் கருதி சிலை இடமாற்றம் செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, சென்னை மாவட்ட ஆட்சியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மைச் சான்று (NOC) வழங்கப்பட்டது.

எனவே, இந்நேர்வில், அவசர அவசியம் கருதி மேற்படி சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்காக (திட்டம்-2) கலங்கரை விளக்கம் அருகில் உள்ள மகாத்மா காந்தி அவர்களின் சிலையை இடம் மாற்றம் செய்து அவ்வை சண்முகம் சாலைக்கு எதிரே உள்ள ஔவையார் சிலைக்கு அருகில் நிறுவுவதற்கும் மற்றும் மெட்ரோ இரயில் பணிகள் முடிந்தவுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே மேற்படி இடமாற்றம் செய்யப்படும் காந்தி சிலையை ஏற்கனவே இருந்த கலங்கரை விளக்கம் அருகில் மீண்டும் அமைக்க சென்னை மாவட்ட ஆட்சியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மைச் சான்று (NOC) வழங்கப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

சு.துநக.எண். பி2 /2351/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.139 **பொருள் எண்.98**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை -கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் டெங்கு போன்ற இதர தொற்றுநோய் பணிகள் மேற்கொள்ளவும் - பயிற்சி பெற்ற 100 சுகாதார ஆய்வாளர்களை ஆறுமாத காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பம் கோரி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரியது- இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. SR Enterprises, மற்றும் M/s.Janishree Corporate Services Pvt Ltd நிறுவனங்களுக்கு தலா 50 சுகாதார ஆய்வாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த பணியாணை வழங்க மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் ஒரு கோட்டத்திற்கு ஒரு சுகாதார ஆய்வாளர் என்ற வீதத்தில் 200 கோட்டத்திற்கு 200 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர்கள் (Birth and Death Registrars) 30 மொத்தம் 230 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 95 சுகாதார ஆய்வாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 125 காலிப்பணியிடங்கள் உள்ளன.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.560/2020 நாள்.21.08.2020 மற்றும் சிறப்புஅதிகாரி/மன்றத்தீர்மான எண்.747/2021 நாள்.27.09.2021ன்படி கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் டெங்கு போன்ற இதர நோய்களின் தடுப்பு பணிகளை மேற்கொள்ள 1 முதல் 15 மண்டலங்களில் கோட்டத்திற்கு ஒன்று வீதம் பயிற்சி பெற்ற 110 சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 1 முதல் 7 வரையிலான மண்டலங்களில் 55 சுகாதார ஆய்வாளர்கள் M/s.Monisha Security Agency நிறுவனத்தினர் மூலமும், 8 முதல் 15 வரையிலான மண்டலங்களில் 55 சுகாதார ஆய்வாளர்கள் M/s.Green Agro Environment Services நிறுவனத்தினர் மூலமும் 10.11.2021 முதல் 09.05.2022 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கொரோனா, டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்களை கட்டுப்படுத்த சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது. சுகாதார ஆய்வாளர்கள் பணி நியமனம் குறித்து பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே நிரந்தர சுகாதார ஆய்வாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப இயலாத சூழ்நிலை உள்ளது.

ஏற்கெனவே பணிபுரிந்து வரும் 110 ஒப்பந்த சுகாதார ஆய்வாளர்களுக்கு (மாத ஊதியம் ரூ.20,000/த்துடன் உணவு, வாகன செலவினம் மற்றும் தங்குமிடத்திற்கான படியாக (allowance) ரூ.5,000/) மாதம் ரூ.25,000/ வழங்கப்பட்டு வந்தது. தற்போது கோவிட் குறைந்து வரும் நிலையிலும், அனைத்து கட்டுப்பாடுகளும் தளர்வு செய்துள்ள நிலையிலும் சுகாதார ஆய்வாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.20,000/ மட்டும் வழங்கலாம்.

மேலும், கொரோனா நோய் தொற்று தற்போது சற்றே குறைந்திருப்பினும், மீண்டும் நான்காவது அலை வரும் என எதிர்நோக்கும் நிலையில் கொரோனா தடுப்பு பணியானது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், டெங்கு போன்ற மற்ற நோய்த்தடுப்பு நடடிவக்கைகளுக்கும் சுகாதார ஆய்வாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதால், 110 சுகாதார ஆய்வாளர்களை ஒரு வருட காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கலாம்.

Qualification of Sanitary Inspector As per GCC Bye-Laws

Sl.No	Category of Staff	Qualification
1	Sanitary Inspector /Birth and Death Registrar	1. B.Sc. Degree with Chemistry in main subject. 2. Post Graduate Diploma in Sanitary Inspector Course conducted by Government and Institutions recognized by the Government 3. Any Certification in Computer Courses. 4. Preference will be given to those who worked in Covid-19 control activities

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், *(Employee's State Insurance)* மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி *(Employee's Provident Fund)*, சரக்கு மற்றும் சேவைக்கட்டணம்(*GST)* மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் *(Administrative Charges)* கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.*560/2020* நாள். 21.08.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% *(Salary+ESI+EPF)* வழங்க அனுமதி அளித்துள்ளது.

Employee's State Insurance (Salary upto Rs.21000)		Employee's Provident Fund(Salary upto Rs.15000)		GST
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	Employer Contribution in the salary	Employee Contribution in the salary	
3.25%	0.75%	13%	12.00%	18%

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

Office Workable Rate

Sl.No	Name of the Post	Salary per Month (Rs)	EPF (13%) (Rs)	ESI (3.25 %) (Rs)	Admin Charges	GST (18%) (3+4)	Total (1+2+3+ 4+5)	Required Number	Total one year Rs (6x7x12m)
		1	2	3	4	5	6	7	8
1	Sanitary Inspector	20000	0	650	2065	4089	26804	110	35381280

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் டெங்கு போன்ற இதர நோய்களின் தடுப்பு பணிகளை மேற்கொள்ள 1 முதல் 15 மண்டலங்களில் பயிற்சி பெற்ற 110 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 20,000/- வீதம் ஊதியத்தில் ஒரு வருட காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் அனுமதி கோரி கோப்பு சமர்பிக்கப்பட்டதில் துணை ஆணையர்(வமநி)அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பு அளித்துள்ளார்.

Total Strength : 200

Permanent in Position : 105
Suspension : 2
HQ(Birth and Death) : 1
Amma Unvagam : 1
Long Leave : 1
We may allow 100 people for 6 Months.

மேற்கண்ட குறிப்பின்படி 100 சுகாதார ஆய்வாளர்களை ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்த முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 26.04.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

துணை ஆணையர்(வமநி) அவர்களின் 25.04.2022 மேற்குறிப்பின்படி 100 பயிற்சிபெற்ற சுகாதார ஆய்வாளர்களை 6 மாத காலத்திற்கு பணியமர்த்த மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி உரிய நிலைக்குழு மூலம் பின்னேற்பு ஒப்புதல் பெற மாண்புமிகு மேயர் அவர்களால் 02.05.2022 தேதியில் அனுமதி பெறப்பட்டது.

பொது சுகாதாரத்துறைக்கு தேவையான 100 எண்ணிக்கையிலான சுகாதார ஆய்வாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு பணியமர்த்த குறுகியகால மின்னணு ஒப்பம் *(E-Tender) 02.05.2022*-ல் கோரப்பட்டது. 11.05.2022 அன்று ஆவணம் திறக்கப்பட்டதில் அதில் 3 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர்.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	தொழில்நுட்ப ஒப்பத்தில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ள விவரம்.	பரிந்துரை
1	M/s.SR Enterprises, No.18,Old well street, Thiruvottiyur, Chennai-600019	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது.	ஒப்பம் ஏற்கப்பட்டது
2	M/s. Janishree Corporate Services Pvt Ltd.No.121,TTK Road, Royapettah, Chennai-14	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது.	ஒப்பம் ஏற்கப்பட்டது
3	M/s.Mirifical Careers Pvt Ltd ,No.12, T.V.Nagar, RNPuram, Coibatore, -641045	ஆவணங்கள் அளிக்கப்படவில்லை.	ஒப்பம் நிராகரிக்கப்பட்டது

இதில் வரிசை எண் 1 மற்றும் 2 ல் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே போதிய ஆவணம் அளித்திருந்த காரணத்தினால் அவர்களின் ஒப்பங்கள் ஏற்கப்பட்டு நிதி ஒப்பம் 14.05.2022 அன்று திறக்கப்பட்டது.

Rate Quoted by the Bidders for providing 100 Sanitary Inspectors

Sl. No	Name of the Agency	Salary per Month (Rs)	EPF (13%) (Rs)	ESI (3.25 %) (Rs)	Admin Charges	GST (18%) (3+4)	Total (1+2+3+4+5)	Required Number	Total Six Months Rs (6x7x6)
		1	4	5	6	7	8	9	10
1	M/s.SR Enterprises (L1)	20000	0	650	413	3791	24854	100	14912400
2	M/s.Janishree Corporate Services pvt ltd (L1)	20000	0	650	413	3791	24854	100	14912400

இப்பணிக்கென அலுவலக மதிப்பீடானது கீழ்க்கண்டவாறு நிர்ணம் செய்யப்பட்டுள்ளது.

Office Workable Rate

Sl. No	Name of the Post	Salary per Month (Rs)	EPF (13%) (Rs)	ESI (3.25 %) (Rs)	Admin Charges	GST (18%) (3+4)	Total (1+2+3+4+5)	Required Number	Total Six Months Rs (6x7x6)
		1	4	5	6	7	8	9	10
1	Sanitary Inspector	20000	0	650	2065	4089	26804	100	16082400

ஒப்பந்ததாரர்கள் இருவரும் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. 1,49,12,400/- யானது அலுவலக மதிப்பீட்டுடன் ரூ.1,60,82,400/- ஒப்பிடுகையில் *(-)7.28% (lower)* குறைவாக உள்ளது.

சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்த கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மாதந்தோறும் பட்டியில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி சதவீதத்தினை விட (அதாவது 2%) குறைந்த ஒப்பத்தொகை அளிக்கும் ஒப்பந்ததாரரின் ஒப்பம் நிராகரிக்கப்படும் என நிதி ஒப்ப நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒப்பந்ததாரனின் குறைந்தபட்ட நிர்வாக கட்டணம் ஒரு நபருக்கு ஒருமாதத்திற்கு ரூ. 413/- ஆகும்.

Sl. No	Name of the Agency	Salary per Month (Rs)	EPF (13 %) (Rs)	ESI (3.25 %) (Rs)	Admin Charges	GST (18 %)	Total Amount	Number of posts	Total 6 months Rs (6x8x6months) (Excluding GST)	TDS 2%	Admin Charge to be quoted per person/ month
		1	4	5	6	7	8	9	10	11	12
1	Sanitary Inspector	20000	0	650			20650	100	12390000	41300	413

மேற்கண்ட ஒப்பந்தத்தில் *M/s. S R Enterprises* மற்றும் *M/s.Janishree Corporate Services pvt ltd* நிறுவனத்தினர் *L-1* ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இரு நிறுவனத்தினருமே குறைந்த ஒப்பப்புள்ளியாக ரூ.*413/-* அளித்துள்ளனர்.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி அளித்திருக்கும்பட்சத்தில் இரண்டு ஒப்பந்தாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

TAMIL NADU TRANSSPARANCY IN TENDERS ACT 1998

Sec 10. Evaluation and Acceptance of Tender.

(5) In case where two or more tenders quoted the same price, the Tender Accepting Authority shall split the procurement among such tenderers taking into consideration the experience and credentials of such tenders. Where such splitting is not possible or could not be done equally, (the said authority) shall record reasons for the same.

எனவே, 100 சுகாதார ஆய்வாளர்களை ஒப்பந்த அடிப்படையில் M/s.SR Enterprises நிறுவனத்தின் மூலம் 50 சுகாதார ஆய்வாளர்களும் M/s.Janishree Corporate Services pvt ltd நிறுவனத்தின் மூலம் 50 சுகாதார ஆய்வாளர்களும் பணியமர்த்தும் பணியாணையினை இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து வழங்கலாம்.

Sl.No	Name of the Agency	Salary per Month (Rs)	EPF (13 %) (Rs)	ESI (3.25 %) (Rs)	Admin Charges	GST (18%) (3+4)	Total (1+2+3+4+5)	Required Number	Total Six Months Rs (6x7x6)
		1	4	5	6	7	8	9	10
1	M/s.SR Enterprises (L1)	20000	0	650	413	3791	24854	50	7456200
2	M/s.Janishree Corporate Services pvt ltd (L1)	20000	0	650	413	3791	24854	50	7456200

எனவே இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 16.05.2022 அன்று கூடி "மேற்கண்ட ஒப்பந்தத்தில் *M/s.SR Enterprises* மற்றும் *M/s.Janishree Corporate Services pvt ltd* நிறுவனத்தினர் *L-1* ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டு,. இரு நிறுவனத்தினருமே குறைந்தபட்ச ஒப்பப்புள்ளியாக ரூ.*413* அளித்துள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி அளித்திருக்கும்பட்சத்தில் இரண்டு ஒப்பந்தாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என்ற விதியின்படி 100 துப்புரவு ஆய்வாளர்களை பணியமர்த்தும் பணியாணையினை இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து ஒப்பந்தகூர்ந்தாய்வு குழு வழங்க பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் டெங்கு போன்ற இதர தொற்றுநோய் பணிகள் மேற்கொள்ளவும், பயிற்சி பெற்ற 100 சுகாதார ஆய்வாளர்களை ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 20,000/- வீதம் ஊதியத்தில் ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்த மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரியதில், தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததார்களும், ஒரே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காரணத்தினால் *M/s.SR Enterprises (L1)* நிறுவனத்தின் மூலமாக 50 சுகாதார ஆய்வாளர்கள் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடும் பணிக்கு ஒப்பத்தொகை ரூ. 74,56,200/- (ரூபாய் எழுபத்தி நான்கு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து இருநூறு மட்டும்) க்கு பணியாணை வழங்கவும் மற்றும் *M/s.Janishree Corporate Services pvt ltd* நிறுவனத்தின் மூலமாக 50 சுகாதார ஆய்வாளர்கள் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடும் பணிக்கு ஒப்பத்தொகை ரூ. 74,56,200/- (ரூபாய் எழுபத்தி நான்கு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து இருநூறு மட்டும்)க்கு பணியாணை வழங்க அனுமதிக்கும்,
2. மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த தொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் செய்ய அனுமதிக்கும், பணி முடிந்து பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
3. இதற்கான செலவினம் சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு *30-31-01* கணக்கு குறியீடு *230-70-12-03* என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், ,
4. ஒப்பந்தத்தில் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் முன்வைப்பு தொகையினை சம்பந்தபட்ட நிறுவனங்களுக்கு திரும்ப வழங்க அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

சு.து.ந.க.எண். சி1/11522/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.140 **பொருள் எண்.99**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - சென்னை மாநகர மருத்துவமனைகளின் சேவைகளின் தரத்தினை உறுதிபடுத்துதல் மற்றும் செயல்திட்டத்தினை செயல்படுத்த மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியானது பொதுமக்களுக்கு நல்ல தரமான மருத்துவ சேவைகளை வழங்க உறுதிபூண்டுள்ளது.

மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளை மேம்படுத்த ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்து அளித்துள்ளார்கள்.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட வேண்டும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், தொற்று நோய்கள், தொற்றா நோய்களுக்கு சிகிச்சை கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகள் போன்ற மருத்துவ சிகிச்சைகள் ஒரே குடையின் கீழ் அளிக்கப்படுகின்றன. 5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையம் என மண்டலத்திற்கு குறைந்தது ஒரு நிலையம் வீதம் (படுக்கைகள் மற்றும் மேற்படுத்தப்பட்ட பகுப்பாய்வு கூட வசதியுடன்) தற்போது 16 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்கள் செயல்படுமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு சிறந்த முறையில் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளின் மூலம் தினந்தோறும் சுமார் 32,000 பயானாளிகள் பயனடைந்து வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியில் 6 இடங்களில் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஒரு நாளைக்கு சுமார் 100 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும் இந்த ஆண்டு 3 இடங்களில் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் திறக்கப்பட உள்ளன.

மருத்துவ சேவைகளின் தரத்தினை உயர்த்தி, இந்த எண்ணிக்கையினை மேலும் 10 சதவீதம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ சேவைகளின் தரத்தினை (Quality of Care-QoC) உறுதிபடுத்தும் திட்டத்தினை வகுத்தல் மற்றும் செயல்படுத்துதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி மக்களை மையமாக கொண்ட பாதுகாப்பான காலத்தே வழங்கக்கூடிய ஒரு முழுமையான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை வழங்க உறுதிபூண்டுள்ளது. இது நம் மாநிலத்தின் சேவைகள் தரத்தின் வரையறையினை (Definition) ஒத்துள்ளது.

சென்னை பாட்னர்ஷிப் திட்டத்தின் கீழ் (Chennai Partnership programme) உலக வங்கி உதவியுடன் மருத்துவ சேவைகளின் தரத்தினை மேம்படுத்த செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது சுகாதார கட்டமைப்பு நன்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மக்களின் நலனினை கருத்தில் கொண்டு இங்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு

1. **தர உறுதிக்கான குழுக்களை ஏற்படுத்துதல்:** பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளின் சேவைகளின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்க பல்வேறு நிலைகளில் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

   முதல்நிலைக்குழு மருத்துவமனை அளவிலும், இரண்டாம் நிலை குழு வழிகாட்டுதல் குழுவாகவும், மூன்றாம் நிலை குழு மண்டல அளவிலும், நான்காம் நிலை குழு மாநகர அளவிலும் தரஉறுதி குழுக்கள் அமைக்கப்படும். இவைகள் மட்டுமின்றி சமுதாய அளவிலும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு குழுக்கள் தரமான சேவைகள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும் மற்றும் கண்காணிக்கப்படும்.
2. மக்கள் பிரதிநிதிகளான பாரளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று தர மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3. பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்கள் வழிகாட்டிகளாக (Mentor) நியமிக்கப்படுவார்கள். இதற்கென 90 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு மருத்துவமனைகள் அளிக்கப்படும். இவர்கள் வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மருத்துவமனைகளின் சேவையின் தரத்தினை ஆய்வு செய்து குறைபாடுகள் இருப்பின், அக்குறைகளை களைய மருத்துவ பணியாளர்களை வழிநடத்துவார்கள்.(Mentorship Programme)
4. தரமான சேவைகள் வழங்குதற்காக தேவைப்படும் பணியாளர்களை பணியமர்த்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
5. மருத்துவமனைகளின் ஒவ்வொரு செயல்பாடும் நிலைப்படுத்தப்படும். (Standardization) ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஒரு நிலையான வழிகாட்டி செயல்முறைகள் (SoP) வகுக்கப்பட்டு ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தரமான சேவைகள் வழங்க பொறுப்புகள் வழங்கப்படும்.
6. குறிப்பிட்ட கால இடைவெளியில் அனைத்து பணியாளர்களுக்கும் பயிற்சி மற்றும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்படும்.
7. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பணிபுரிந்த பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும்.
8. இதர துறைகளுடன் இணைந்து மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு மேம்பாடுகள், சமூக செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
9. தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருத்துவசேவைகள் தரக்கட்டுபாடுடன் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
10. தொற்றுநோய் கட்டுப்பாடு, உயிர் மருத்துவ கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இவை மிகச்சிறந்த அளவில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் செயல்படுத்தப்படும்.
11. நோய் கிருமிகளின் மருத்து எதிர்ப்பு திறனை கண்காணிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.(AMR)
12. பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட கால இடை வெளியில் (Calibration) அளவு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஆய்வக முடிவுகள் தரமாக இருப்பது உறுதி செய்யப்படும்.
13. ஒவ்வொரு சேவைக்கும் அளவீடுகள் ஏற்படுத்தப்பட்டு, சேவைகளின் ஒவ்வொரு அளவீடுகளும் தனித்தனியே மதிப்பிடப்படும் இதன்மூலம் சேவைகள் செவ்வனே செயல்படுத்த வழிவகை செய்யப்படும்.

14. இந்த சேவைகள் வழங்குவதை முறையாக கண்காணிக்க ஒரே மாதிரியான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் வடிவமைக்கப்படும்.

15. அனைத்து பதிவேடுகளும் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

16. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மருத்துவமனைகள் தேசிய தர உறுதி சான்றிதழ் பெற இலக்கு நிர்ணயம் செய்யப்படும்.

17. பயனாளிகளின் சேவை அனுபவத்தை மேம்படுத்த மருத்துவமனையின் அனைத்து நிலைகளிலும், நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இவை குறிப்பிட்ட கால அளவில் மதிப்பீடு செய்யப்படும்.

இதற்கான விரிவான புத்தகம் அலுவலகத்தில் உள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர மருத்துவமனைகளின் சேவைகளின் தரத்தினை உறுதிபடுத்துதல் மற்றும் செயல்திட்டத்தினை மேற்கண்டவாறு செயல்படுத்த, நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ1.ந.க.எண்.பி1/001864/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.141 **பொருள் எண்.100**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகம் - பணிபுரியும் 15 எண்ணிக்கையிலான புள்ளிவிவர குறிப்பாளர்கள் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் (01.11.2021 முதல் 30..04.2022 வரை) நிர்வாக அனுமதி பெறப்பட்டது- 30.04.2022ல் பணிக்காலம் முடிவடைகிறது - 01.05.2022 முதல் 31.10.2022 வரை தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

மண்டலம்-1ல் வார்டு எண் 1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1,2,3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் (உதவியாளர்கள்) பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது 23.02.2021ல் ENVRO Solution தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் (Building plan permission) மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கொரோனா தொற்று நோய் (Covid-19) தொடர்பான தடுப்பு பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்தல் புள்ளிவிவர குறிப்புகள் அனுப்புதல் போன்ற பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 01.12.2021 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.883/2021, நாள்.06.12.2021ன்படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் , மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.11.2021 முதல் 30..04.2022 வரை ஆறு மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.470/- வீதம் 181 நாட்களுக்கு (Data Entry Operator) (ரூ.470 X 15 X 181 = ரூ.1276050) ரூ1276050/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

மேற்படி மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை பணிபுரியும் தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 30..04.2022 அன்று பணி முடிவடையும் நிலையில் 01.05.2022 முதல் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 14.07.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு (Data Entry Operator) நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.470/- என விலைவிவர பட்டியலின்படி (வ.எண் 85)ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது..

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 2022 ஆம் ஆண்டு பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operators) தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.05.2022 முதல் 31.10.2022. வரை 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.470/- வீதம் (ரூ.470 X 15 X 184 = ரூ.1297200/-) ரூ.1297200/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூறு மட்டும்)க்கு பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மண்டலம் 1க்கு 2022-23 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பிரிவு எண் 20-21-06, கணக்கு குறியீட்டு எண் 220-110-314ல் /- பட்டிகள் தீர்வு செய்திட ரூ.1297200/-ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
3. மண்டலம் 1ல் மேற்குறிப்பிட்ட பணிக்கு 01.05.2022 முதல் 31.10.2022 தற்காலிகபுள்ளிவிவர குறிப்பாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

மநீ.வ.து.ந.க.எண்.பி1/0966/2022
முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.05.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.142 **பொருள் எண்.101**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை மாநில வெள்ள நிவாரண நிதியின் கீழ் மண்டலம் 4, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத்தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 11 சிப்பங்களுக்கு மறு ஒப்பம் கோரப்பட்டது -- குறைந்த விலைப்புள்ளி அளித்த 6 சிப்பகளுக்கான ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி.

08.03.2022 அன்று கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க *Advisory Committee* மூலம் பரிந்துரைக்கப்பட்ட பணிகளை அரசுக்கு பரிந்துரைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளின் பணிகளை செயல்படுத்த 23.03.2022 அன்று நடந்த கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிகளை செயல்படுத்த அறிவிப்பினை வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பினை தொடர்ந்து, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *04.04.2022* நாளிட்ட குறிப்பில் *Advisory Committee* பரிந்துரையின் அடிப்படையில் அவசரம் அத்தியாவசியம் கருதி பணிகள் செயல்படுத்துவதற்கு மாநில வெள்ள நிவாரண நிதியின் கீழ் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளினை துவங்குவதற்கு மாநில வெள்ள நிவாரண நிதி திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி , மழைநீர் வடிகால் துறையின் மூலமாக மண்டலம் 4, 5, 6, 7, 8, 9, 10, 11 12. மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால்களை இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழை நீர்வடிகால் அமைக்கும் பணிக்காக 44 சிப்பங்களாக ரூ.291.36 கோடி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 04.04.2022 அன்று 44 சிப்பங்களுக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது.

இவ்வொப்பந்தப்புள்ளி 05.04.2022 அன்று ஆங்கில செய்தித் தாளான "தி டைம்ஸ் ஆப் இந்தியா", தமிழ் செய்தித்தாளான "தினகரன், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், 44 சிப்பங்களுக்கு ஒப்பந்த புள்ளிகள் 39 சிப்பங்களாக 08.04.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "தினகரன் மற்றும் ஆங்கில செய்தித் தாளான "தி இந்து" ஆகிய செய்தித்தாள்களில் திருத்திய *(Errata)* ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 28.04.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 39 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. அதில் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர் மற்றும் சிப்பம் 3,4,12,19,27,36 மற்றும் 39 ஆகிய ஒப்பங்களில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துக்கொள்ளவில்லை. மேலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் திறக்கப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த 30 சிப்பங்களின் ஒப்பந்ததாரர்களுக்கு 18.05.2022 அன்று ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது .

மேலும், சிப்பம் 3,4,12,19,27,36,39,40,41,42 மற்றும் 43 ஆகிய ஒப்பங்களுக்கு யாரும் கலந்துக் கொள்ளாத மற்றும் தகுதி பெறாத காரணத்தினால் 30.04.2022 அன்று மறு ஒப்பம் கோரப்பட்டது. 03.05.2022 அன்று தமிழ் செய்தித்தாளான "முரசொலி மற்றும் ஆங்கில செய்தித் தாளான "தி இந்து" ஆகிய செய்தித்தாள்களில் மறு ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனை

தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 12.05.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 11 சிப்பங்களுக்கான ஒப்பங்கள், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. சிப்பம் 4,19,41,42 மற்றும் 43 ஆகிய ஒப்பங்களில் ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்துக்கொள்ளவில்லை மற்றும் சிப்பம்-2,16 ஆகியவை மறு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. அதில் சிப்பம்-3,12,27,36,39 மற்றும் 40 ஆகிய சிப்பங்களின் ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர் மேலும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் நிதி ஆவணம் 23.05.2022 அன்று திறக்கப்பட்டது .

அதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

(அட்டவணை-I)

வ. எண்	கோப்புஎண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் **(L1)**	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GSTசேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	குறைவான விலைப் புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	ம.நீ.வ.து.பி1//0966/2022 சிப்பம்- 3	வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	33116048.27	38414615.99	(+)16.00%	(+)4.02%
2	ம.நீ.வ.து.பி1/0975/2022 சிப்பம்-12	பிரதீபா எண்டர்பிரைசஸ்	40431764.30	தகுதி பெறவில்லை		
		சன் அண்டு ப்ளாக் ஃப்ளவர்ஸ்		46294370.12	(+)14.50%	(+)1.60%
		எஸ்.பி.பில்டர்ஸ்		46698687.77	(+)15.50%	(+)2.49%
3	ம.நீ.வ.து.பி1//0990/2022 சிப்பம்-27	ஜீனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	90417022.64	105878333.51	(+)17.10%	(+)4.86%
4	ம.நீ.வ.து.பி1/0999/2022 சிப்பம்-36	D.ரங்கநாதன் அண்டு கோ	77986083.03	90456057.71	(+) 15.99%	(+)1.23%
		K.சுந்தராஜன்		தகுதி பெறவில்லை		
5	ம.நீ.வ.து.பி1//01002/2022 சிப்பம்-39	அஃப்லயன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	51748158.03	தகுதி பெறவில்லை		
		P.பாஸ்கர் ஒர்க்ஸ் கான்ட்ரக்டர்		58992900.15	(+)14.00%	(-)0.97%
6	ம.நீ.வ.து.பி1/1391 /2022 சிப்பம்-40	மார்டன் இன்ஜீனியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ ஆப்ரேடிவ் சொசைட்டி லிட்	32684034.35	38567160.53	(+)18.00%	(+)5.54%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2020-21 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள் மற்றும் திருவாளர்கள். வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலவில்லை எனத் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள விலைக்குறைப்பு ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-II)

வ. எண்	கோப்பு எண்.	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GSTசேர்த்து) (ரூபாய்)	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2020-21 அலுவலக விலைபடி	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர்அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலைபடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	ம.நீ.வ.து.பி1//0966/2022 சிப்பம்- 3	வள்ளி சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	33116048.27	38414615.99	(+)16.00%	(+)4.02%
					விலைக்குறைப்பு செய்யவில்லை	
2	ம.நீ.வ.து.பி1/0975/2022 சிப்பம்-12	சன் அண்டு ப்ளாக் ப்ளவர்ஸ்	40431764.30	46253938.38	(+)14.40%	(+)1.52%
3	ம.நீ.வ.து.பி1//0990/2022 சிப்பம்-27	ஜீனிதா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	90417022.64	104702912.21	(+)15.80%	(+)3.70%
4	ம.நீ.வ.து.பி1/0999/2022 சிப்பம்-36	D.ரங்கநாதன் அண்டு கோ	77986083.03	90034932.86	(+)15.45%	(+)0.76%
5	ம.நீ.வ.து.பி1//01002/2022 சிப்பம்-39	P.பாஸ்கர் ஒர்க்ஸ் கான்ட்ரக்டர்	51748158.03	58967026.08	(+)13.95%	(-)1.01%
6	ம.நீ.வ.து.பி1/1391 /2022 சிப்பம்-40	மார்டன் இன்ஜீனியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ ஆப்ரேடிவ் சொசைட்டி லிட்	32684034.35	38158610.10	(+)16.75%	(+)4.42%

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்க 26.05.2022 அன்று உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

எனவே,

1) மாநில வெள்ள நிவாரண நிதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள மண்டலம் 4, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க பழைய மழைநீர் வடிகால் இடித்து மற்றும் கூடுதலாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக 6 சிப்பங்களுக்கு அட்டவணை-IIன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பம் ஒப்புதலும்,

2) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியவுடன் பணி தொடங்க அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***